ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஸ்ரீலோககுரவே நம:.

ப்ரபந்நஜநகூடஸ்தராம்ஶரான நம்பிள்ளை திருவடிக
ளாகிய வடக்குத் திருவீதிப்பிள்ளை குமாரராய்,
ப்ரணதார்த்திஹராம்ஶஜராய்,
ஸகலஶாஸ்த்ர நிபுணராய்,
ஸகல சேதநோஜ்ஜீவநகாமரான

பிள்ளை லோகாசார்யர்

திருவாய்மலர்ந்தருளிய

அஷ்டாதஶ ரஹஸ்யம்

இவை

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி
பெருமாள்கோவில் அழகிய மணவாள
ராமாநுஜஜீயர் ஸ்வாமி நியமநம் பெற்று
ஸ்ரீமதித்யாதி புதுப்பேர்
இளையவில்லி ராமாநுஜாசார்யர் ஸ்வாமியினுடைய
விஶேஷகடாக்ஷ பாத்ரபூதரான
திருவயோத்யை ராமாநுஜ ஜீயரென்கிற
ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்வாமியால்
அநேக தாளபத்ரகோஶங்களைக்கொண்டு
டிப்பணியுடனும், ப்ரமாணத்திரட்டுடனும்
பரிஶோதிப்பித்துப் படங்களுடன்
ஸ்ரீமதித்யாதி, கோ. க. அண்ணன் ஸ்வாமி
திருவடி ஸம்பந்தியான,

கா. வெ. திருக்கச்சிநம்பி தாஸரால்,

ஆநந்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

1911.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஸ்ரீமல்லோககுரவே நம:.

ஸ்ரீமத்வரவரமுநயே நம:.

அவதாரிகை.

—:o:—

பரமகாருணிகனான ஸர்வேஶ்வரனாலே மயர்வறமதிநலமருள் பெற்று, தத்ஸ்வரூபரூபகுணவிபூதிகளை கையிலங்கு நெல்லிக்கனிபோலே விஶத விஶததர விஶததமமாக ப்ரத்யக்ஷீகரித்திருக்கும் பொய்கை பூதம் பேயார் புகழ்மழிசை அய்யன் சேரலர்கோன் துய்ய பட்டநாதன் அன்பர்தாள்தூளி நற்பாணன் நற்கலியன் முதலான திவ்யஸூரிகளுக்கு அவயவிபூதரான மாறனுடைய புநரவதாரபூதரான நம்பிள்ளையினுடைய திருவடிகளாகிய வள்ளல் வடக்குத்திருவீதிப்பிள்ளைக்கு 'ப்ரணதார்த்திஹராம்ஶாய ப்ரக்ருஷ்டகுணஶாலிநே। லீலயோத்ருதலோகாய லோகார்யகுரவே நம:' என்று ஜீயர் நாயனார் அருளிச்செய்தபடியே ஆர்த்திஹரபரிஜ்ஞாநதீக்ஷிதனான பேரருளாளன் கலி(௪௩௦௭) க்ரோதந வர்ஷத்தில் துலாமாதத்தில் ஶ்ரவண நக்ஷத்திரத்தில், ஶுக்லபக்ஷநவமீதியியில் திங்கள்கிழமை திநம் கோயிலில் புத்ரனாய் அவதரித்து நாதயாமுநயதிவராதியாசார்ய பரம்பராப்ராப்தார்த்த விஶேஷங்களை ஸகலசேதநர்களுமறிந்து உஜ்ஜீவிக்கைக்காக அநேக ரஹஸ்யார்த்தீய ப்ரபந்தமுகேந ப்ரகாஶிப்பித்தருளினான்.

அவற்றில் இப்பொழுது அகப்பட்ட ரஹஸ்ய க்ரந்தங்களாவன.—

(௧) முமுக்ஷுப்படி,
(௨) தத்த்வத்ரயம்,
(௩) அர்த்தபஞ்சகம்,
(௪) ஸ்ரீவசநபூஷணம்,
(௫) அர்ச்சிராதி,
(௬) ப்ரமேயஶேகரம்,
(௭) ப்ரபந்நபரித்ராணம்,
(௮) ஸாரஸங்க்ரஹம்,
(௯) ஸம்ஸாரஸாம்ராஜ்யம்,
(௧௦) நவரத்நமாலை,
(௧௧) நவவிதஸம்பந்தம்,
(௧௨) யாத்ருச்சிகப்படி,
(௧௩) பரந்தபடி,
(௧௪) ஸ்ரிய:பதிப்படி,
(௧௫) தத்த்வஶேகரம்,
(௧௬) தநித்வயம்,
(௧௭) தநிசரமம்,
(௧௮) தநிப்ரணவம், மத்யத்ரய வ்யாக்யாநம்,

முதலானவை. தத்த்வத்ரயவ்யாவீயாநத்தால் தத்தவத்ரயம் மூன்றுபடியிருப்பதாகவும் தெறியவருகிறது. தத்த்வவிவேகம் என்கிறஸம்ஸ்க்ருதகிரந்தம் இவர் அருளிச்செய்ததாகவும் பெரியதிருமுடியடைவிலிருக்கிறது [அந்த கிரந்தம் எழும்பூர் லைப்ரரியிலிருக்கிறது.] இதாநீமவைகாண வில்லை. இந்தவஷ்டாதசரஹஸ்யங்கள் முன்பு பல பேர்களாலும் பலவியமாக அச்சிட்டு வெளிப்படுத்தியிருந்த போதிலும், அவைகள் ப்ராசீநதாளகோசங்களுக்கு அநுகுணமாக யில்லாமையாலும், பலவியப்பிழைகளுடனுமிருப்பதாலும், இவற்றை பரிசோயித்துத் தரவேணுமென்று கா. வெ. திருக்கச்சிநம்பிதாஸருடைய ப்ரார்த்தனையால்,ஸ்ரீபரமஹம் ஸேத்யாதி பெருமாள்கோயில். அழகிய மணவாளராமாநுஜ ஜீயர்ஸ்வாமி தாள கோசங்களைத்தந்து நன்றாக பரிசோதிக்கநியமிக்க, அந்த நியமநத்தாலும், அநேக ஸாதுவதர்களுடைய ப்ரார்த்தனையாலும் டிப்பணிகளுடனும் ப்ரமாணாகரத்தினுடனும் யயாமதி, ஸ்ரீபெரும்பூதூர் பரமஹம் ஸேத்யாதி வாயலெகுலதிலகமஹாசார்யசரணாரவிந்தஸமாஸ்ரித ஸ்ரீசைலலக்ஷ்மணமுநீந்த்ர (எம்பார்ஸ்வாமி) சரணாரவிந்தச்சாயாஸதரான புதுப்பேர் இளையவில்லி ராமாநுஜாசார்யஸ்வாமிகளுடைய பரமக்ருபாபாத்ர ஸதரான திருவயோயயை ராமாநுஜஜீயராலே பரிசோயிக்கப்பட்டது.

தாளகோசங்களை உபகரித்த ஸ்வாமிகள் திருநாமம்.

(க) ஸ்ரீபரமஹம் ஸேத்யாதி பெருமாள்கோயில் அழகிய மணவாளராமாநுஜஜீயர் ஸ்வாமிகள். (புஸ்தகம். ௩.)

(உ) திருவல்லிக்கேணி பத்தராவி ஸ்ரீநிவாஸாச்சார்ஸ்வாமிகள், தநிதீவயம், தநிசரமம், தநிரப்ணவம், பரந்தபடி, தத்த்வசேவரம்.

(௩.) ஸ்ரீரங்கம் நம்மாழ்வார் ஸந்நியி கோவிந்தாசார் ஸ்வாமிகள். (கஅ-ரஹஸ்ய. க)

(௪) ஸ்ரீபெரும்பூதூர் மோமடம். முத்தப்பங்கார் ஸ்வாமிகள். (தநிசரமகோசம்-க.)

(ரு) ஸ்ரீபரமஹம் ஸேத்யாதி திருநாராயணபுரம் யதிராஜ நாராயணஜீயர் ஸ்வாமிகள். [தாளகோசங்களைக்கொண்டு பரிசோயித்த வச்சுகோசம் க.]

(௬) ஸ்ரீபரமஹம்ஸேத்யாதிஸாகேதராமாநுஜஜீயர் ஸ்வாமிகள் [கஅ-ரஹஸ்ய. க.]

அட்டவணை.

			பக்கம்.
(க)	முமுக்ஷுப்படி.	க-ப்ரகரணம்.	க.
		உ-ப்ர.	எ.
		௩-ப்ர.	௯.
(உ)	தத்த்வத்ரயம்.	க-ப்ர.	க௪.
		உ-ப்ர.	கஎ.
		௩-ப்ர.	உ௦.
(௩)	அர்யபஞ்சகம்.		உ௪.
(௪)	ஸ்ரீவசநபூஷணம்.	க-ப்ர.	௩௩.
		உ-ப்ர.	௩௬.
		௩-ப்ர.	௩அ.
		௪-ப்ர.	௪எ.
		௫-ப்ர.	௪௯.
		௬-ப்ர.	௫உ.
(௫)	அர்சிராதி.		௫௪.
(௬)	ப்ரமேய சேகரம்		௬அ.
(எ)	ப்ரபந்நபரித்ராணம்.		எ௰.
(அ)	ஸாரஸங்கிரஹம்.		எஉ.
(௯)	ஸம்ஸாரஸாம்ம்ராஜ்யம்.		எ௪.
(க௦)	நவரத்நமாலை.		எ௬.
(கக)	நவவிதஸம்பந்தம்.		எஎ.
(கஉ)	யாதிருச்சிகப்படி.	க-ப்ர.	அஉ.
		உ-ப்ர.	அ௩.
		௩-ப்ர.	,,
(க௩)	பரந்தபடி.	க-ப்ர.	அ௯.
		உ-ப்ர.	கக௪.
		௩-ப்ர	க௪௪.
(க௪)	ஸ்ரியப்பதிப்படி.	க-ப்ர.	கஎ௩.
		உ-ப்ர.	கஅ௩.
		௩-ப்ர.	கஅ௯.
(க௫)	தத்த்வசேகரம்.	க-ப்ர.	க௯௬.
		உ-ப்ர.	உ௪க.
		௩-ப்ர.	உ௬௦.
		௪-ப்ர.	உ௬௯.
		௫-ப்ர.	உஎ௩.
(க௬)	தநிதீவயம்.		உஅ௦.
(கஎ)	தநிசரமம்.		௩உஉ.
(கஅ)	தநிப்ரணவம்.		௩௫௦.

—:o:—

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧	௨௫	ஸ-ம்யி	ஸங்யி
௫	௨௮	ஶயஶ்	ஶஶ்
௭	௧0	ஆரார்	ஆசார்
௮	௨௫	முலேயியில	முலேயிலே
௯	௧௭	ஸர்ஶேஷி	ஸர்வஶேஷி
௧௧	௧0	மத்தைச்யொ	மத்தையொ
௧௩	௫	ருசு	ருசி
௧௬	௨௮	இடையும்	ஏடையும்
௧௭	௬	ஏகமாயிக்க	ஏகமாயிருக்க
,,	௮	அஜஂமாய், ஆநந்ஐரூப மாயி	அஜஂமாயி
௨0	௧0	அஹங்காராதிகளில்	அஹங்காராதிகளிலில்
௨௩	௧௯	ஜ்ஞாநப்ரயாக	தத்வஜ்ஞாநப்ரஜாந
,,	௨௨	திர்யக்த்வம் பேரலே	திர்யக்த்வம் ஸ்யாவரத்வம்
,,	௩௮	ஶாபம்வ்யாஜம், அவதாரம் ஐச்சிகமெ	ஶாபம் வ்யாஜம் அவதாரம் ஐச்சிககம்' எ
௨௪	௧0	ஜநகத்வமும், அஶேஷ	ஜநகத்வமும், ஶ-ஹாஶ்ரயத்வமும், அஶேஷ
௨௭	௧௫	தஜேவ	தயைவ
,,	௨௮	ஹவம் ஸங்ம	ஹவம் அஸங்ம
௨௮	௧௯	நிதேரய	நிஶ்ரேய
௩௭	௧	௧-வது	௨-வது
௩௯	௧	௧-வது	௩-வது
,,	௨௨	சேருமோவென்னில், அது	சேருமோவென்னில், அதுக்கடி-ப்ராவண்யம். அது
௪௧	,,	௨-வது	௩-வது
௪௨	௩	ரமவத	ஹாமவத
௪௩	௧	௨-வது	௩-வது
௪௪	௧௬	த்ருதீயப்ரகரணம்||௩||	[எடுத்துவிடுக].
௪௭	௧	௩-வது	௪-வது
௪௮	௫	யுவதம	யுவதயஃ
௪௯	௧	௩-வது	௫-வது
,,	௧௨	ஸ்வஜோஷ	†ஸ்வஜோஷ
,,	௨௬	ஸங்யாநம்	ஸங்யாநம்
௫0	௪	௩௭0	௩௮0

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫௦	௬	௩௭௧.	௩௮௧
,,	,,	௩௭௨.	௩௮௨
,,	௭	சதுர்யப்ரகரணம் த்ரிபாத் விஹூதிப்ரகரணம்]	[எடுத்துவிடுக]
௫௧	௩௮	யாஹேது,	ஹயஹேது,
,,	௧	௩-வது,	௫-வது
௫௨	௪௦	ங்கொலைங்,	யங்கொலைங்
௫௩	௧	௩-வது	௫-வது
,,	௨௪	உபாயங்	உபாயாங்
௫௪	௬	ப்ரயம	ப்ரயம
,,	௧௪	†ப்ரயம	[௫௫-ம்பக்கத்தில்-௩௮-ம் வரியிலிருக்கும் டிப்பணியை ௫௪.ம் ப-௧௪ம் வரிக்குச் சேர்த்துக்கொள்க]
,,	௨௧	ஸ்ரீ	ஶ்ரி
,,	௨௬	வாஜிநா	வாஜிநஃ
,,	௩௪	தலைமகள்	தலைமகன்
௫௫	௪	எதஜி	ஏதஜீ
,,	௩௪	உச்ஷி	உச்ஷி
,,	௩௮	மநுஸந்தா	மநுஸந்யாதா
,,	,,	ஸவீ	ஸள
௫௬	௩௩	மாநஃ	மானைஃ
,,	௩௪	பரஸ்யாம	பரஸ்யாம்
௫௭	௩௦	ஸாரயீ யும்	ஸாரயீ யம்
௬௧	௩௨	பணிசெய்துன்	பணிசெய்துன
௬௪	௨௩	ஶ ஶோஹிதம்	ஶோஹிதம்
,,	௩௮	நித்தமுக்த	நித்யமுக்த
௬௫	௩௫	சிருற்போ	சிறுற்போ
௬௮	௧௪	மஹமந்ந	அஹமந்ந
,,	௧௫	ஒண்டொடியான்	ஒண்டொடியாள்
௭௦	௪	ஷீரா	ஹீரா
௭௨	௧௯	விரும்புநம்	விரும்புமந
௭௭	௩௩	மகாாத்	மகாரத்
௯௧	௩௨	ப்ரவ்யூஹ	பரவ்யூஹ
௯௯	௧௫	ஜீயைவ	ஜீயயைவ
௧௦௧	௨௯	ப்ரயமா	ப்ராயமா
,,	௩௮	ப்ரணவார்த்	ப்ரணவார்யத்
௧௦௩	௧	ரஸஜ்ஞாஃ	ரஸஜ்ஞஃ
௧௦௫	௨௯	ஹோமய	ஹோதிய
௧௦௭	௧௫	விஷ்யாந்யத்வாமாவ	விஷயாந்யத்வாஹாவ
௧௧௮	௩௧	வந்மா	வந்ம

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ககக	ஙங	நாகர்மண	நகர்மணா
கஉ௫	உங	ப்மேலகா	ஶ்லோகா
கஙO	சு	ஸாயநந்	ஸாயநாந்
கசஅ	கக	அபாசா	அபசா
க௫அ	உஅ	தலேயெடுத்நு	தலேயெடுத்நு
களக	க௫	சொல்லுகிறாப	சொல்லுகிறாப
களங	௫	உபாயய் வாயவஸக்	உபாயாய் யவஸா
,,	ஙஉ	விபரீதபாக	விபரீதமாக
கஅக	க	கைங்கர்யத்துக்துக்கு	கைங்கர்யத்துக்கு
கஅச	உO	ப்ரதந்த்ர	பரதந்த்ர
,,	உக	பாதரந்	பாரதந்
ககசு	கO	அர்யபஞ்சச	அர்யஞ்சக
,,	ஙஉ	பாயந்தம்	பர்யந்தம்
கககூ	சஉ	ஷீஹ்மே	ஷீரஹ்மே
உOச	கஉ	ஷிஙம்	ஷிஜ்யம்
உOசு	கசு	நிரஸார்ய	நிராஸார்ய
உஉஉ	க	ரங்யிo	ரங்யிஃ
,,	உசு	ஏகோயயேதஃ	ஏகோய் யேயஃ
உஉங	உ௫	உன்று	என்று
உஉகூ	கூ	அயிகாரஶ்	அயிகாராஶ்
உஙஉ	ச	ருரஜ்	ருஜ்ர
உங௬	உசு	ஶரீராவஸாநத்தாலே	ஶரீராவஸாநத்திலே
உஙஅ	உ	ஸாமந்ய	ஸாமாந்ய
உசO	உ	ய்யோ	ய்யேயோ
உசசு	உ	ப்ரதிபத்கியும்	ப்ரதிபத்தியுமி
உசள	உகூ	தஸமி	தஸ்மி
உசஅ	கஉ	ப்ரக்ய	ப்ருயக்
,,	க௫	ஜஞாந	ஜஞாந
,,	ஙசு	ஜo	ஜடம்
உசகூ	சக	ஒர்ஶ்யதி	ஒர்ஶயதி
உ௫உ	உ	தோயேந ம்யாம்	தோயே ஜீவாந் வ்யஸஸர்ஜ ஸஹம்யாம்
,,	கக	ஸேஒகம்	ஸஷேகம்
உசுக	ஙஅ	ப்ரதிஷோத்ய	ப்ரதிஷேயாத்
உசுசு	கள	மூலஸஹதாஜ	மூலஸஹதாஜ்
உசுள	கசு	ஶரீரங்கூடும்	ஶரீரங்கூடும்.
,,	ஙO	தச்ஸ	தச்ஸ
உளO	ள	ஶருதீதிஹஸ	ஶ்ருதீதிஹாஸ
உளக	சு	அநருத	அந்ருத
,,	ள	ஏதம	ஏதம்
,,	உக	பத்தயா	பத்யா

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௨௭௨	௧0	ஸத்யம் த்யம்	ஸத்யம்ஸத்யம்
,,	௨௪	ஊ-ரதயயா	ஊ-ரத்யயா
,,	௩௩	ஶருத	ஶ்ருத
௨௭௩	௫	புருஷார்யஸ்வரூப	விரோயிஸ்வரூப
௨௭௪	௧௧	க ளுக்கு	களுக்கு
௨௭௭	௩0	யாசிறது	யாகிறது
௨௮௪	௨௨	பாலயத்ஸ	பாலயத்
௨௮௫	௧௭	தன்னேற்றம். செ	தன்னேற்றம்செ
,,	,,	(ஸக்ர்மநா-துடங்கிபோ ந்திராமையாலே' என் கிறபர்யந்தமயிகம். [௧௭,௧௮,௧௯,௨௦ வரிகள்)	
௨௮௭	௩௩	ஊரெளபஜியும்	ஜீரெளபஜியும்
௨௮௮	௩௭	மநந்தவித	மநந்வித
௨௯0	௧௭	பொறித்தால்	பொறித்தாய்
௨௯௧	௨௩	ககப்போனேன்	கப்போனேன்
௨௯௪	௫	ப்ாாப்தன்	ப்ராப்தன்
,,	௯	நிர்வந்யமுண்டு	நிர்வந்யுமுண்டு
௨௯௬	௨0	ருசிவிஶ	ருசிவிஶ்
௨௯௮	௨௧	ஹமவத	ஹமவத்
௩0௧	௧௭	செர்க்க	சேர்க்க
௩0௩	௧0	ஸஜீரூஶ	ஸஜீருஶ
௩0௪	௧௨	இவைத்தின னுடை	இவைத்தினுடை
,,	௨௬	விஷ்யத்தில்	விஷயத்தில்
,,	௩௫	அபக்ருஷ்ட ராடு	அபக்ருஷ்டரோடு
௩0௮	௧௪	நியியில	நியியி
,,	௨௩	அழித்து	அழைத்து
௩௧0	௨	புருஷ்	புருஷ
,,	௫	விதிரஹத்தையும்	விதிரஹமும்
,,	௩0	ஸ்த	ஸ்வ
௩௧௨	௫	பரமக்	பரமஹக்
௩௧௪	௬	இற்வறில்	இவற்றில்
,,	௨௫	ஜியயா	ஜியி
௩௨0	௧௬	அச்சிாஜி	அர்ச்சிராஜி
௩௨௧	௩௭	ச்மேத்	ச்ஹேத்
௩௨௨	௮	நிவரரண	நிவாரண
௩௨௩	,,	ஸௌஉ	உஸௌ
௩௨௪	௫	ல்லுகையாலே	ல்லுகையாலே.
,,	௨௭	காம்ரூ	காம்யரூ
௩௨௫	௬	யஶ	யஶ
௩௨௬	௧௪	தஸ்மை) (தநீ௦	தஸ்மை, தநீ•

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩௨௮	௭	ஶேரா	ஶ்ரோ
௩௩௦	௰௭	ஷி ரஹ்மா	ஷி ரஹ்ம
௩௩௧	௭	இதில்	இதி
,,	௩௮	ஶாய	ஸாய
௩௩௩	௧௪	யொலுகிற	சொல்லுகிற
௩௩௫	௩௪	பிராட்டியை	பிராட்டி
௩௩௬	௧௭	ம௱ணரூயாம	ம௱ணபாஊ [பாடாந்தரம்]

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில்:— 1867-ம் வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது உட்பிரிவின்படி கனம் பொருந்திய இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டத்திற்கிணங்க இந்நூலை பிறர் அச்சிடாதபடி காபிரைட்ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

இந்நூலுக்குடையவராகிய என் உத்தரவின்றி இந்நூலையாவது இந்நூலிலுள்ள பாகங்கள் எதையாவது, பிறர் அச்சிடலாகாது.

இதைக்கவனியாது அச்சிடத்துணிவரேல் அதனாலுண்டாகும் நஷ்டத்திற்கும், கவர்ன்மெண்ட் சட்டத்திற்கும் உட்படுவரென்று அறிவிக்கின்றனன்.

இங்ஙனம்,

☞ கா. வெ. திருக்கச்சி நம்பிதாஸர்,

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலை.

திருவல்லிக்கேணி



ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜ காசார்யராய் எழுந்தருளி
யிருக்கும் அயோத்யா ராமானுஜ ஜீயரென்கிற
ஸ்ரீரங்கநாரா்பணஜீயர்.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீலோககுரவே நம:

முமுக்ஷுப்படி.

தனியன்.

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே।
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:॥

[மணவாளமாமுனிகளருளிச்செய்தது.]

லோககுரும் குருபிஸ்ஸஹ பூர்வை: கூரகுலோத்தமதாஸமுதாரம்।
ஸ்ரீநகபத்யபிராமவரேசௌ * தீப்ரசயாநகுரும்ச பஜேऽஹம்॥

கோதிலுலகாசரியன் கூரகுலோத்தமதாதர்
தீதில்திருமலையாழ்வார் செழுங்குரவைமணவாளர்
ஓதரியபுகழ் † த்திருநா வீறுடையபிரான்தாதருடன்
போதமணவாளமுனி பொன்னடிகள்போற்றுவனே. ‡

வாழியுலகாசிரியன் வாழியவன்மன்னுகுலம்
வாழிமுடும்பையென்னும் மாநகரம்
வாழிமனஞ்சூழ்ந்தபேரின்பம் மல்குமிகுநல்லார்
இனஞ்சூழ்ந்திருக்கு மிருப்பு.

ஓதுமுடும்பை யுலகாசிரியனருள்
ஏதுமறவாத வெம்பெருமான்
நீதிவழுவாச்சிறுநல்லூர் மாமறையோன்
பாதம்தொழுவார்க்கு வாராதுயர்.

உலகாசிரியன் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

---

* தீப்ரசயம் வரயோகிநமீடே 'என்று மணவாளமாமுனிகளையுஞ்சேர்த்து ப்ரதிவாதிபயங்கரர் அண்ணவது ஸாதிக்கும்படி.

† புகழ்நாவீறுடையபிரான் என்றிருப்பின் செப்பலோசைமிகாது. சில ஸ்ரீகோசங்களிலும் இப்படியிருக்கின்றன.

‡ இப்பாட்டு புராதந கோசங்களிலும், பெரியோர்க ளநுஸந்தாநமுமில்லை. 'வாழியுலகாசிரியன்' என்கிறபாட்டும், 'ஓதுமுடும்பை' என்கிறபாட்டுமே அநுஸந்தாநமாகக்கடவது. இதுவே ஸத்ஸம்ப்ரதாயம்.

திருமந்த்ரப்ரகரணம் ॥ க ॥

—[உபோத்காதம்.]—

முமுக்ஷுவுக் கறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று. (க). அதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம். (௨). திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப்போரும் படி ப்ரேமத்தோடே பேணி யநுஸந்திக்கவேணும். (௩). மந்த்ரத்திலும், மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும், மந்த்ரப்ரதனான வாசார்யன் பக்கலி லும், ப்ரேமங் கனக்க வுண்டானால் கார்யகரமாவது. (௪). ஸம்ஸாரிகள்-தங்க ளையும் ஈஶ்வரனையும் மறந்து, ஈஶ்வரகைங்கர்யத்தையுமிழந்து, 'இழந்தோ மெ'ன்கிற இழவுமின்றிக்கே, ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலேவிழுந்து நோவு பட, ஸர்வேஶ்வரன் - தன் க்ருபையாலே, இவர்கள் தன்னையறிந்து கரை மரஞ்சேரும்படி, தானே ஶிஷ்யனுமாய், ஆசார்யனுமாய் நின்று திருமந்த் ரத்தை வெளியிட்டருளினன். (௫). ஶிஷ்யனாய் நின்றது - ஶிஷ்யனிருக்கு மிருப்பு நாட்டாரறியாமையாலே அத்தை யறிவிக்கைக்காக. (௬). ஸகல ஶாஸ்த்ரங்களாலும் பிறக்கும் ஜ்ஞானம் - ஸ்வயமார்ஜிதம்போலே, திருமந்த் ரத்தாற் பிறக்கும் ஜ்ஞானம்-பைத்ருக தநம்போலே. (௭). பகவந்மந்த்ரங்கள் தான் அநேகங்கள். (௮). அவைதான் - வ்யாபகங்களென்றும், அவ்யாபகங்க ளென்று மிரண்டுவர்கம். (௯). அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ஶ்ரேஷ்டங்கள். (௧௦). இவைமூன்றிலும் வைத்துக்கொண்டு பெரியதிருமந்த் ரம் ப்ரதாநம். (௧௧). மற்றையவை யிரண்டுக்கும் - அப்ரஸித்த பரிக்ரஹமும், அபூர்த்தியுமுண்டு. (௧௨). இத்தை-வேதங்களும், ருஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விரும்பினர்கள். (௧௩). வாச்யப்ரபாவம்போலன்று வாசகப்ர பாவம். (௧௪). அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டிநின்றுதவும். (௧௫). த் ரௌபதிக்கு ஆபத்திலே புடவைசுரந்தது திருநாமமிறே. (௧௬). சொல்லுங் க்ரமமொழியச் சொன்னாலுந் தன்ஸ்வரூபங்கெட நில்லாது. (௧௭). இதுதான் (குலந்தரு) மென்கிறபடியே எல்லா வபேக்ஷிதங்களையுங் கொடுக்கும். (௧௮). ஐஶ்வர்ய-கைவல்ய-பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக் கொடுக்கும். (௧௯). கர்ம-ஜ்ஞாந - பக்திகளிலே யிழிந்தவர்களுக்கு விரோதி யைப்போக்கி அவற்றைத் தலைக்கட்டிக் கொடுக்கும். (௨௦). ப்ரபத்தியிலே- யிழிந்தவர்களுக்கு ஸ்வரூபஜ்ஞாநத்தைப் பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும். (௨௧). (மற்றெல்லாம்பேசிலும்) என் கிறபடியே, அறியவேண்டும் அர்தமெல்லாமிதுக்குள்ளேயுண்டு. (௨௨). அதா வது - அஞ்சர்தம். (௨௩). பூர்வாசார்யர்கள் இதில் அர்த மறிவதற்குமுன்பு தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள்; இதிலர்தஜ்ஞாநம் பிறந்த பின்பு (பிறந்தபின் மறந்திலேன்) என்கிறபடியே இத்தையொழிய வேறொன் றால் காலக்ஷேபம்பண்ணி யறியார்கள். (௨௪). வாசகத்திற் காட்டில் வாச்யத்திலே ஊன்றுகைக்கடி 'ஈஶ்வரனே உபாயோபேய' மென்று நினைத் திருக்கை. (௨௫).

—[வாக்கியார்தாக்ஷரவிபாகாதிகள்.]—

இது தன்னிற்சொல்லுகிறவர்தம் - ஸ்வரூபமும், ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும்; ஸ்வரூபமும், உபாயமும், பலமுமென்னவுமாம். (௨௬). பல

மிருக்கும்படி-ப்ரமேயசேகரத்திலும், அர்ச்சிராதிகதியிலுஞ் சொன்னோம். (௨௭). இதுதான் - எட்டுத்திருவக்ஷரமாய், மூன்றுபதமாயிருக்கும். (௨௮). மூன்றுபதமும் மூன்றர்த்தத்தைச் சொல்லுகிறது. (௨௯). அதாவது - சேஷத்வமும், பாரதந்த்ர்யமும், கைங்கர்யமும். (௩௦). இதில் முதற்பதம் ப்ரணவம். (௩௧). இது, அ - என்றும், உ - என்றும், ம - என்றும், மூன்று திருவக்ஷரம். (௩௨). மூன்றுதாழியிலே தயிரை நிறைத்துக்கடைந்து வெண்ணெய் திரட்டுமாப்போலே மூன்றுவேதத்திலும், மூன்றக்ஷரத்தையு மெடுத்தது (௩௩) ஆகையாலிது ஸகலவேதஸாரம். (௩௪).

—[அகாரார்த்தம்.]—

இதில் அகாரம் - ஸகலஶப்தத்துக்கும் காரணமாய், நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமா யிருக்கையாலே, ஸகலஜகத்துக்குங் காரணமாய், ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது. (௩௫) ரக்ஷிக்கையாவது - விரோதியைப்போக்குகையும், அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும். (௩௬). இவை யிரண்டும் - சேதநர் நின்றநின்ற அளவுக்கீடாயிருக்கும். (௩௭). ஸம்ஸாரிகளுக்கு விரோதி - ஶத்ருபீடாதிகள், அபேக்ஷிதம் - அந்நபாநாதிகள்; முமுக்ஷுக்களுக்கு விரோதி - ஸம்ஸார ஸம்பந்தம், அபேக்ஷிதம்-பரமபதப்ராப்தி. முக்தர்க்கும் - நித்யர்க்கும், விரோதி - கைங்கர்யஹாநி, அபேக்ஷிதம் - கைங்கர்யவ்ருத்தி. (௩௮). ஈஶ்வரனை யொழிந்தவர்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம் ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம். (௩௯). ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நிதிவேண்டுகையாலே, இதிலே * ஸ்ரீஸம்பந்தமு மநுஸந்தேயம். (௪௦). அத்ர பகவத்ஸேநாபதி மிஶ்ரர்வாக்யம் - அவன்மார்பைவிட்டுப்பிரியி லிவ்வக்ஷரம்விட்டுப்பிரிவது. (௪௧). பர்த்தாவினுடைய படுக்கையையும், ப்ரஜையினுடைய தொட்டிலையும், விடாதே யிருக்கும் மாதாவைப்போலே ப்ரதமசரம பதங்களைவிடாதே யிருக்குமிருப்பு. (௪௨). ஸ்ரீநந்தகோபரையுங், க்ருஷ்ணனையும் விடாத யஶோதைப் பிராட்டியைப்போலே. (௪௩). ஒருவனடிமை கொள்ளும்போது, ஸ்ரீருஹணிக்கென்றன்றே ஆவணையோலை யெழுதுவது, ஆகிலும் பணிசெய்வதுஸ்ரீருஹணிக்கிறே; அதுபோலே - நாம் பிராட்டிக்கடிமையா யிருக்கும்படி. (௪௪). ஆகப்பிரித்து நிலையில்லை. (௪௫). ப்ரபையையும் - ப்ரபாவானையும், புஷ்பத்தையும் - மணத்தையும்போலே. (௪௬). ஆகவிச்சேர்த்தி யுக்திதேஶ்யமாய்விட்டது. (௪௭). [அகாரார்த்தம் முற்றிற்று.]

—[லுப்தவிபக்த்யர்த்தம்.]—

இதிலே சதுர்த்தியேறிக்கழியும். (௪௮). சதுர்த்தியேறினபடி யென்னென்னில். (௪௯). நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே. (௫௦). இத்தால் ஈஶ்வரனுக்கு சேஷமென்கிறது. (௫௧). சேஷத்வம் ஸ்வரூபமாகவன்றோ நாட்டில் காண்கிறதென்னில். (௫௨) அந்த நியமமில்லை, உகந்த விஷயத்துக்கு சேஷமாயிருக்கு மிருப்பு ஸ்வமாகக் காண்கையாலே. (௫௩). அகாரத்திலே கல்யாணகுணங்களைச் சொல்லுகையாலே இந்த சேஷத்வ

* ஸ்ரீஸம்பந்தம் - என்று பாடஞ்சொல்லுவார்கள் அது வியாக்யாந விருத்தம்.

மூங் மாணத்தாலே வந்தது. (ருச). ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம். (ருரு). ஶேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லை. (ருசு). ஆத்மாபஹாரமாவது - 'ஸ்வதந்த்ர' மென்கிற நினைவு; ஸ்வதந்த்ரமாம்போது - இல்லையாய் விடும். (ருஎ). [லுப்த சதுர்த்யர்த்தம் முற்றிற்று.]

—[உகாரார்த்தம்.]—

ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரமவதாரணார்த்தம். (ருஅ). இத்தாற் பிறர்க்கு ஶேஷமன்றென்கிறது. (ருகூ). 'பெரியபிராட்டியார்க்கு ஶேஷ மென்கிற' தென்றுஞ் சொல்லுவர்கள். (சூ0). அதிலும் அந்யஶேஷத்வங் கழிகையே ப்ரதாநம். (சூக). தேவர்களுக்கு ஶேஷமான புரோடாஶத்தை நாய்க்கிடுமாப்போலே ஈஶ்வரஶேஷமான ஆத்மவஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு ஶேஷமாக்குகை. (சூஉ). ஶைவச்சேஷத்வத்திலும் அந்யஶேஷத்வங் கழிகையே ப்ரதாநம். (சூங). (மறந்தும்புறந்தொழாமாந்தர்) என்கையாலே. (சூச). இத்தால் - தனக்கும் பிறர்க்கு முரித்தன் றென்கிறது. (சூரு). [உகாரார்த்தம் முற்றிற்று.]

—[மகாரார்த்தம்.]—

மகாரம் - இருபத்தஞ்சாமக்ஷரமாய், ஜ்ஞானவாசியுமா யிருக்கையாலே, ஆத்மாவைச் சொல்லுகிறது. (சூசூ). இதுதான் ஸமஷ்டிவாசகம். (சூஎ). ஜாத்யேகவசனம். (சூஅ). இத்தால் - ஆத்மாஜ்ஞாதாவென்று தேஹத்தில் வ்யாவ்ருத்தி சொல்லித்தாயிற்று. (சூகூ). தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வஶேவரத்திலே சொன்னோம். (எ0) மணத்தையும், ஒளியையுங்கொண்டு - பூவையும், ரத்நத்தையும் விரும்புமாபோலே, ஶேஷமென்று ஆத்மாவை யாதரிக்கிறது; அல்லாதபோது (உயிரினாற்குறைவிலம்) என்கிறபடியே த்யாஜ்யம்; அது தோன்ற ஶேஷத்வத்தைச்சொல்லி பின்னை ஆத்மாவைச் சொல்லுகிறது. (எக). [மகாரார்த்தம் முற்றிற்று.]

—[பதத்ரயஸமுதாயார்த்தம்.]—

ஆகப்ரணவத்தால் (கண்ணபுரமொன்றுடையானுக்கடியே னொருவர்க்குரியேனோ) என்கிறபடியே ஜீவபர ஸம்பந்தஞ்சொல்லிற்று. (எஉ). இத்தால் (தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு) என்றதாயிற்று. (எங) அகாரத்தாலும்-மகாரத்தாலும், ரக்ஷகனையம் ரக்ஷ்யத்தையுஞ் சொல்லிற்று, சதுர்த்தியாலும், உகாரத்தாலும்-ரக்ஷணஹேதுவான ப்ராப்தியையும், ஃபலத்தையுஞ் சொல்லிற்று. (எச).

—[விவரணவிதானம்.]—

இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது. (எரு). உகாரத்தை விவரிக்கிறது - நமஸ்ஸு. அகாரத்தை விவரிக்கிறது-நாராயணபதம், மகாரத்தை விவரிக்கிறது - சதுர்த்தி, நாரபதமென்றுஞ் சொல்லுவர்கள். (எசூ). அடைவே விவரியாதொழிகிறது - விரோதிபோ யநுபவிக்கவேண்டுகையாலே. (எஎ).

—[நமஶ்ஶப்தார்த்தம்.]—

நமஸ்ஸு - ந - என்றும், மஃ - என்றும், இரண்டுபதம். (எஅ). மஃ - என்கிற வித்தால் தனக்குரியனென்கிறது. ந - என்று அத்தைத் தவிர்க்

கிறது. (எகூ). ஆக நமः என்கிற வித்தால் - தனக்குரிய னன்றென்கிறது. (அ0). பிறர்குரியனுன வன்று தன் வைலக்ஷண்யத்தைக் காட்டி மீட்கலாம், தனக்கென்று மன்று யோக்யதையுங்கூட * அழியும் (அக). இத்தால் விரோயியைக் கழிக்கிறது. (அஉ). விரோயி தான் மூன்று. (அங). அதாவது - ஸ்வரூபவிரோயியும், உபாயவிரோயியும், ப்ராப்யவிரோயியும். (அச). ஸ்வரூபவிரோயி கழிகையாவது:— (யானேநீ யென்னுடைமையும் நீயே) என்றிருக்கை; உபாயவிரோயி கழிகையாவது:— (களைவாய்துன்பங் களையாதொழிவாய்களைகண்மற்றிலேன்) என்றிருக்கை; ப்ராப்யவிரோயிகழிகையாவது:— (மற்றைநங்காமங்கள்மாற்று) என்றிருக்கை. (அரு). மः-என்கை ஸ்வரூபநாஶம்; நமः - என்கை ஸ்வரூபோஜ்ஜீவனம். (அசு). இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், ஃலத்தையுங்காட்டும். (அஎ). (தொலைவில்லிமங்கலந்தொழும்) என்கையாலே ஸ்வரூபஞ்சொல்லிற்று; (வேங்கடத்துறைவார்க்குநம) என்கையாலே உபாயஞ்சொல்லிற்று; (அந்திதொழுஞ் சொல்லு) என்கையாலே ஃலஞ்சொல்லிற்று. (அஅ). (உற்றதுமுன்னடியார்க் கடிமை) என்கிறபடியே † யிதிலே பாகவத ஶேஷத்வமும் அநுஸந்தேயம். (அகூ). இது அகாரத்திலே யென்றுஞ் சொல்லுவர்கள்; உகாரத்திலே யென்றுஞ் சொல்லுவர்கள். (கூ0). ஈஶ்வரன் தனக்கேயாயிருக்கும், அசித்துப் பிறர்க்கேயாயிருக்கும், ஆத்மா தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருக்கும் என்று முற்பட்டநினைவு; அங்ஙன்னறிக்கே அசித்துப்போலே * தனக்கேயாகவெனைக் கொள்ளவேணுமென்கிறது நமஸ்ஸால். (கூக). அதாவது:— ஹோமதசையில் ஈஶ்வரனழிக்கும்போது 'நோக்கவேணு'மென்று அழியாதொழிகை. (கூஉ). அழிக்கைக்கு ஹேதுகீழேசொல்லிற்று; மேலுஞ்சொல்லும். (கூங). இந்நினைவு பிறந்தபோதே க்ருதக்ருத்யன்; இந்நினைவில்லாதபோது எல்லாஸுக்ருதங்களுங் க்ருதம்; இந்நினைவிலேயெல்லா ஸுக்ருதங்களுமுண்டு; இதன்றிக்கே யிருக்கப்பண்ணும்-யஜ்ஞாதிகளும், ப்ராயஶ்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள்; இது தன்னாலே எல்லாபாபங்களும் போம். எல்லா ஃலங்களுமுண்டாம். (கூச).

[நமஶ்ஶப்தவிசாரம் முற்றிற்று.]

—[நாராயணபதவிசாரம்.]—

நாராயண னென்றது - நாரங்களுக்கயனமென்றபடி. (கூரு). நாரங்களாவன - நித்ய வஸ்துக்களினுடைய திரள். (கூசு). அவையாவன - ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞாநஶக்த்யாதிகளும், வாத்ஸல்ய ஸௌஶீல்யாதிகளும், திருமேனியும், காந்திஸௌகுமார்யாதிகளும், திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும், நித்யஸூரிகளும், சத்ர சாமராதிகளும், திருவாசல் காக்கும் முதலிகளும், கணிகைமாரும், முக்தரும், பரமாகாஶமும், ப்ரக்ருதியும், பத்தாத்மாக்

* ஒழியுமென்றும் - பாடாந்தரம்.

† என்கையாலே என்கிறபாடாந்தரம் வ்யாக்கியானத்திலில்லை.

களும், காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்குட்பட்ட தேவாதிபதார்த்தங்களும். (கூஎ). [சாரவதார்த்தம் முற்றிற்று.]

—[அயநவதார்த்தம்.]—

அயனமென்றது - இவற்றுக்காஸ்ரயமென்றபடி. (கூஅ). அங்ஙனன்றிக்கே யிவைதன்னையாஸ்ரயமாகவுடைய னென்னவுமாம். (கூகூ). இவையிரண்டாலும் பலித்தது-பரத்வ ஸௌலப்யங்கள். (க00). அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம். (க0க). (எம்பிரானெந்தை) என்கையாலே, ஈஸ்வரனே யெல்லாவுறவும் முறையுமென்று சொல்லும். (க0உ). நாம்பிறர்க்கானவன்றும் அவன் நமக்காயிருக்கும். (க0ங). இரா மடமூட்டுவாரைப்போலே உள்ளேபதிகிடந்து, ஸத்தையேபிடித்து நோக்கிக்கொண்டு போரும். (க0ச). [அயநபதார்த்தம்முற்றிற்று.]

—[வ்யக்தசதுர்த்யர்த்தம்.]—

ஆயவென்கிற வித்தால் (சென்றாற்குடையாம்) என்கிறபடியே யெல்லாவடிமைகளுஞ் செய்யவேணுமென் றபேக்ஷிக்கிறது. (க0ரு). நமஸ்ஸாலே தன்னோடுறவில்லையென்று வைத்து கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக்கூடுமோவென்னில். (க0சு). (படியாய்க்கிடந்துன் பவளவாய்காண்பேனே) என்கிறபடியே கைங்கர்யப்ரார்த்தனை வங்தேறியன்று, ஸ்வரூப ப்ரயுக்தம். (க0எ). ஆகையால் (வழுவிலாவடிமை செய்யவேண்டு நாம்) என்கிற ப்ரார்த்தனையைக் காட்டுகிறது. (க0அ). (கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்குமுண்டோ கண்கள்துஞ்சுதல்) † என்னுமாப்போலே காண்பதற்குமுன்புறக்கமில்லை; கண்டால் * ஸதாபஸ்யந்தியாகையாலே உறக்கமில்லை. (க0கூ). (பழுதேபலபகலும்போயின) என்று இழந்தநாளுக்குக் கூப்பிடுகிறவனுக் குறங்கவிரகில்லை. (கக0). (அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்) என்று நின்றார்களிறே. (ககக). இவ்வடிமைதான் - (ஒழிவில்காலமெல்லாமுடனாய் மன்னி) என்கிறபடியே ஸர்வதேஶ - ஸர்வகால - ஸர்வாவஸ்தைகளிலும் அநுவர்த்திக்கும். (ககஉ.) எட்டிழையாய், மூன்று சரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம்போலே திருமந்த்ரம். (ககங). இத்தாலீஸ்வரன் ஆத்மாக்களுக்குப் பதியாய்நின்று ரக்ஷிக்குமென்கிறது. (ககச). [வ்யக்தசதுர்த்யர்த்தம் முற்றிற்று.]

—[மந்த்ரஸமுதாயார்த்தம்.]—

ஆகத் திருமந்த்ரத்தால் - எம்பெருமானுக்கே யுரியேனான நான், எனக்குரியனன்றிக்கே யொழியவேணும், ஸர்வஶேஷியான நாராயணனுக்கே யெல்லாவடிமைகளுஞ் செய்யப்பெறுவேனாக வேணுமென்றதாயிற்று. (ககரு).

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளேஶரணம்.

ஜீயர் திருவடிகளேஶரணம்.

க - வது ப்ரகரணம் முற்றிற்று.

---

† என்கிறபடியே - என்கிறபாடாந்தரம் வ்யாக்யானத்திலில்லை.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:.

முமுக்ஷுப்படி

த்வயப்ரகரணம். " உ "

—[உபோத்காதம்.]—

புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும், பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும், இருக்கும்நாளுகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணாநுபவ கைங்கர்யங்களே பொழுது போக்காகையும், இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்றமறிந் துகந்திருக்கையும், திருமந்த்ரத்திலும் - த்வயத்திலும் - நியதனாகையும், ஆசார்ய ப்ரேமங் கநத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் - எம்பெருமான் பக்கலிலுங் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞாநமும், விரக்தியும், சாந்தியும் உடையனா யிருக்கும் பரமஸாத்விகனோடே ஸஹவாஸம் பண்ணுகையும், வைஷ்ணவாதிகாரிக்கு அவஶ்யாபேக்ஷிதம். (க). இந்தவதிகாரிக்கு ரஹஸ்யத்ரயமு மநுஸந்தேயம். (உ). எல்லா ப்ரமாணங்களிலும் தேஹத்தாலே பேறென்கிறது; திருமந்த்ரத்தில் ஆத்மாவாலே பேறென்கிறது; சரமஶ்லோகத்தில் ஈஶ்வரனாலே பேறென்கிறது; த்வயத்தில் பெரிய பிராட்டியாராலே பேறென்கிறது. (ங). பெரிய பிராட்டியாராலே பேறுகையாவது :—இவள் புருஷகாரமானாலல்லது ஈஶ்வரன் கார்யஞ்செய்யானென்கை. (ச). த்வயத்துக்கதிகாரி - ஆகிஞ்சந்யமும், அநந்ய கதித்வமும் உடையவன். (ரு). இவையிரண்டும் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம். (சு).

—[வாக்யார்த்தம்.]—

இதில் முற்கூற்றால் - பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈஶ்வரன் திருவடிகளை உபாயமாகப்பற்றுகிறது; பிற்கூற்றால் - அச்சேர்த்தியிலே யடிமையை யிரக்கிறது. (எ)

—[ஸ்ரீஶப்தார்த்தம்.]—

[ஸ்ரீ] - என்று பெரியபிராட்டியாருக்குத் திருநாமம். (அ). ஸ்ரீயதே, ஸ்ரயதெ. (கூ). இதுக்கர்த்தம்:—எல்லார்க்கு மிவளைப்பற்றி ஸ்வரூபலாபமாய், இவள் தனக்கும் அவனைப்பற்றி ஸ்வரூபலாபமாயிருக்கும்-என்று. (க0). இப்போதிவளைச் சொல்லுகிறது-புருஷகாரமாக. (கக). நீரிலே நெருப்புக் கிளருமாப்போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பதிவளுக்காக. (கஉ). இவள் தாயாய் இவர்கள் க்லேஶம் பொறுக்கமாட்டாதே அவனுக்குப் பத்நியாய் இனியவிஷயமா யிருக்கையாலே, கண்ணழிவற்ற புருஷகாரம். (கங). திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன்சொல் வழிவருமவனைப் பொறுப்பிக்கச் சொல்லவேண்டாவிறே. (கச).

—[மதுப்பினர்த்தம்.]—

மதுப்பாலே இருவர்சேர்த்தியும் நித்யமென்கிறது. (கரு). இவளோடே கூடியே வஸ்துவினுடைய வுண்மை. (கசு). ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்தையும்,

சேதனனுடைய வபராதத்தையும், கண்டகலமாட்டாள். (கஎ). சேதநனுக்கிவை யிரண்டையும் நினைத்தஞ்சவேண்டா. (கஅ). இத்தால் - ஆஶ்ரயிக்கைக்கு ருசியே வேண்டுவது, காலம் பார்க்கவேண்டாவென்கிறது. (ககூ). இவள் ஸந்நிதியாலே காகந்தலைபெற்றது ; அதில்லாமையாலே ராவணன் முடிந்தான். (உ0).

—[நாராயணஶப்தார்த்தம்.]—

புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ர்யந் தலைசாய்ந்தால் தலையெடுக்குங்குணங்களைச் சொல்லுகிறது - [நாராயணபதம்]. (உக). அவையாவன :— வாத்ஸல்யமும், ஸ்வாமித்வமும், ஸௌஶீல்யமும், ஸௌலப்யமும், ஜ்ஞாநமும், ஶக்தியும். (உஉ). குற்றங்கண்டு வெருவாமைக்கு-வாத்ஸல்யம், கார்யஞ்செய்யுமென்று துணிகைக்கு - ஸ்வாமித்வம், ஸ்வாமித்வங்கண்டகலாமைக்கு - ஸௌஶீல்யம், கண்டுபற்றுகைக்கு-ஸௌலப்யம், விரோதியைப்போக்கித் தன்னைக்கொடுக்கைக்கு - ஜ்ஞாநஶக்திகள். (உங). இங்குச் சொல்லுகிற ஸௌலப்யத்துக் கெல்லைநிலம் அர்சாவதாரம். (உச). இதுதான் பரவ்யூஹ விபவங்கள்போலன்றிக்கே கண்ணாலே காணலாம்படியிருக்கும். (உரு). இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம். (உசு). திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும், வைத்தஞ்சலென்றகையும், கவித்தமுடியும், முகமும் முறுவலும், ஆஸநபத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம். (உஎ). ரக்ஷகத்வ போக்யத்வங்களிரண்டும் திருமேனியிலே தோற்றும். (உஅ).

—[சரணஶப்தார்த்தம்]—

[சரணௌ]-திருவடிகளை. (உகூ). இத்தால்-சேர்த்தியழகையும், உபாயபூர்த்தியையுஞ் சொல்லுகிறது. (ஙo). பிராட்டியும் அவனும் விடிலும், திருவடிகள் விடாது ; * திண்கழலாயிருக்கும். (ஙக). ஶேஷிபக்கல் ஶேஷபூதனிழியுந் துறை - ப்ரஜை முலையிலே வாய்வைக்குமாப்போலே. (ஙஉ). இத்தாற்-பிராட்டிக் கிருப்பிடமாய், குணப்ரகாஶகமுமாய், ஶிஶுபாலனையுமகப்படத் திருத்திச்சேர்த்துக்கொள்ளுந் திருமேனியை நினைக்கிறது. (ஙங).

—[ஶரணஶப்தார்த்தம்.]—

[ஶரணம்] - இஷ்டப்ராப்திக்கும், அநிஷ்ட நிவாரணத்துக்குந் தப்பாதவுபாயமாக. (ஙச). இத்தால் - ப்ராப்யந்தானே ப்ராபகமென்கிறது. (ஙரு). கீழ்ச்சொன்ன மூன்றும் ப்ராப்யமிறே. (ஙசு). இவன்செயலறுதியாலே உபாயமாக்குகிறானித்தனை. (ஙஎ) [சரணௌ ஶரணம்] - என்கையாலே உபாயாந்தர வ்யாவ்ருத்தமான உபாயமென்கிறது. (ஙஅ).

—[ப்ரபத்யே ஶப்தார்த்தம்]—

[ப்ரபத்யே]-பற்றுகிறேன். (ஙகூ). வாசிகமாகவும், காயிகமாகவும், பற்றினலும் பேற்றுக்கழிவில்லை. * ஜ்ஞாநாந்மோக்ஷமாகையாலே மாநஸமாகக்கடவது. (ச0). உபாயமவனுகையாலும், இவை நேரே யுபாயமல்லாமையாலும், இம்மூன்றும் வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. (சக). வர்த்தமாந நிர்தேஶம் - ஸத்வந்தலையெடுத் தஞ்சினபோதநுஸந்திக்கைக்காக. (சஉ). உபா

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ। அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:॥



யாந்தரங்களில் நெஞ்சு செல்லாமைக்கும், காலக்ஷேபத்துக்கும் இனிமையாலே விடவொண்ணாமையாலும், நடக்கும். (௪௩). பேற்றுக்குப்பலகாலும் வேணுமென்று நினைக்கில் உபாயம் நழுவும். (௪௪). [பூர்வவண்டார்த்தம் முற்றிற்று.]

— [உத்தரவண்டார்த்தம்.] —

உத்தரவாக்யத்தாலே ப்ராப்யஞ் சொல்லுகிறது. (௪௫). ப்ராப்யாந்தரத்துக்கன்றென்கை. (௪௬). உபாயாந்தரங்களை விட்டுச் சரமோபாயத்தைப் பற்றினாப்போலே உபேயாந்தரமானவைஶ்வர்ய கைவல்யங்களை விட்டு எல்லையான ப்ராப்யத்தை யர்த்திக்கிறது. (௪௭). இவனர்த்திக்க வேணுமோ, ஸர்வஜ்ஞன் இவன்நினைவறியானோ வென்னில். (௪௮) இவன்பாசுரங் கேட்டவாறே திருவுள்ளமுகக்கும். (௪௯). [ஸ்ரீமதே]-பெரியபிராட்டியாரோடே கூடியிருந்துள்ளவனுக்கு. (௫0). அவனுபாயமாமிடத்தில் தான் புருஷகாரமாயிருக்கும்; அவன் ப்ராப்யனாமிடத்தில் தான் ப்ராப்யையுமாய், கைங்கர்ய வர்த்தகையுமாயிருக்கும் (௫௧). இதிலே திருமந்த்ரத்திற் சொன்ன ப்ராப்யத்தை விஶதமாக வநுஸந்திக்கிறது. (௫௨). இளையபெருமாளைப்போலே யிருவருமான சேர்த்தியிலே யடிமைசெய்கைமுறை. (௫௩). *அடிமைதான் வர்த்திப்பதும், ரஸிப்பதும், அச்சேர்த்தியிலே. (௫௪). [நாராயணாய]-ஸர்வஶேஷியா யுள்ளவனுக்கு. (௫௫). இதிலே திருமேனியையும், குணங்களையுஞ்சொல்லும். (௫௬). ஶேஷித்வத்திலே நோக்கு. (௫௭). ப்ராப்தவிஷயத்தில் கைங்கர்யமிறே ரஸிப்பது. (௫௮). இந்த சதுர்த்தி-கைங்கர்யத்தை ப்ரகாஶிப்பிக்கிறது. (௫௯). கைங்கர்யந்தான் நித்யம். (௬0). நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவேணும். (௬௧). ஶேஷிக்கதிசயத்தை விளைக்கை ஶேஷபூதனுக்கு ஸ்வரூபலாபமும் ப்ராப்யமும். (௬௨). [நம:]-கைங்கர்யத்தில் களையறுக்கிறது. (௬௩). களையாவது:-தனக்கென்னப்பண்ணுமது. (௬௪) இதிலே அவித்யாதிகளுங் கழியுண்ணும். (௬௫). (உனக்கேநாமாட்செய்வோம்) என்னும்படியே யாகவேணும். (௬௬). ஸௌந்தர்ய மந்த்ராயம்; கீழ்ச்சொன்ன கைங்கர்யமு மப்படியே. (௬௭). கைங்கர்யப்ரார்த்தனைபோலே யிப்பதத்தில் ப்ரார்த்தனையு மென்றுமுண்டு. (௬௮). (மருந்தேநங்கள் போகமகிழ்ச்சிக்கு)என்னாநின்றதிறே. (௬௯).

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

௨-வது ப்ரகரணம் முற்றிற்று.

முமுக்ஷுப்படி

சரமஶ்லோக ப்ரகரணம். "௩"

—[உபோத்காதம்.]—

கீழே சில உபாயவிஶேஷங்களை யுபதேஶிக்க, அவை துஶ்ஶகங்களென்றும், ஸ்வரூபவிரோதிகளென்றும் நினைத்து, ஶோகாவிஷ்டனான வர்ஜுநனைக்குறித்து அவனுடைய ஶோகநிவர்த்யர்த்தமாக இனி யிதுக் கவ்வரு

* இவ்வடிமைதான் - என்கிறபாடம் வ்யாக்யாநத்திலில்லை.

இல்லை *யென்னும்படியான சரமோபாயத்தை யருளிச்செய்கையாலே, 'சரம ஶ்லோக' மென்று இதுக்குப் பேராயிருக்கிறது. (௧). இதில் பூர்வார்யத்தாலே அயிகாரி க்ருத்யத்தை யருளிச் செய்கிறான், உத்தரார்யத்தாலே உபாய க்ருத்யத்தை அருளிச் செய்கிறான். (௨). அயிகாரிக்கு க்ருத்யமாவது - உபாய பரிக்ரஹம் (௩). அத்தை ஸாங்கமாக வியிக்கிறான். (௪). ராகப்ராப்தமான வுபாயந்தானே வையமானால் கடுகப்பரிக்ரஹிக்கைக் குடலாயிருக்குமிறே. (௫). இதில் பூர்வார்ய மாறுபதம். (௬).

—[ஸர்வயர்மஶப்தார்த்தம்.]—

[ஸர்வயர்மாந்] - எல்லா யர்மங்களையும். (௭). யர்மமாவது - ஃபலஸாயநமாயிருக்குமது. (௮). இங்குச்சொல்லுகிற யர்மஶப்தம் - த்ருஷ்டஃபல ஸாயநங்களைச் சொல்லுகையன்றிக்கே மோக்ஷஃபலஸாயநங்களைச் சொல்லுகிறது. (௯) அவைதான் - ஶ்ருதி ஸ்ம்ருதி விஹிதங்களாய்ப் பலவாயிருக்கையாலே, பஹுவசந ப்ரயோகம் பண்ணுகிறது. (௧௦). அவையாவன - கர்ம - ஜ்ஞாந-பக்தியோகங்களும், அவதாரரஹஸ்யஜ்ஞாநம், புருஷோத்தம வித்யை, தேஶவாஸம், திருநாமஸங்கீர்த்தநம், திருவிளக்கெரிக்கை, திருமாலையெடுக்கை, தொடக்கமான உபாயபுத்யா செய்யுமவையும். (௧௧). ஸர்வஶப்தத்தாலே-அவ்வோஸாயந விஶேஷங்களை யநுஷ்டிக்குமிடத்தில் அவற்றுக்கு யோக்யதாபாதகங்களான நித்யகர்மங்களைச் சொல்லுகிறது. (௧௨). ஆக-ஶ்ருதி ஸ்ம்ருதி சோதிதங்களாய், நித்யநைமித்திகாதி ரூபங்களான கர்மயோகாத்யுபாயங்களை யென்றபடி. (௧௩). இவற்றை யர்மமென்கிறது - ஸ்ரீமித்தவர்ஜுநன் கருத்தாலே. (௧௪).

[பரித்யஜ்யபதார்த்தம்.]—

[பரித்யஜ்ய] - த்யாகமாவது-உக்தோபாயங்களை யநுஸரித்து, ஶுக்தி கையிலே ரஜதபுத்தி பண்ணுவாரைப்போலேயும், விபரீத தேஶாகமநம் பண்ணுவாரைப்போலேயும், 'அநுபாயங்களிலே யுபாயபுத்தி பண்ணினோ' மென்கிற புத்திவிஶேஷத்தோடே † த்யஜிக்கை. (௧௫). [பரி] - என்கிற

* என்னலாம்படியான - என்கிற பாடம் வ்யா—இல்லை.

† இந்த ஸூத்ரத்தால், ஸவஸர்ம பரித்யாகமாவது - ஸ்வரூபத்யாகமே என்றதாயிற்று. புத்தித்யாகமாகில் - த்ருஷ்டாந்த ஸங்கதமாம், 'புத்திவிஶேஷத்தோடே' என்கிறத்ருதீயைக்கு அந்விதத்வமும் வந்துவிடும். மேல்சொல்லுகிற பாதகாதித்ருஷ்டாந்தத்யாகத்திலு மப்படிச்சொல்லவேண்டிவரும். 'சசால' வென்கிற வித்ருவுமஸங்கதமாம். 'ஸர்வயர்மங்களையு' மித்யாதி பூர்வபக்ஷமு முதியாது. தனிசரமத்தில் இவர்தாமே ஸ்வத்யாக புத்தித்யாகங்களைத்தள்ளி, 'ஸ்வரூபத்யாகமாகக்கடவது' என்றருளிச்செய்திருக்கையாலும், பரந்தபடி முதலானவைகளில் அருளிச்செய்த ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரம த்ருஷ்டாந்தத்தாலும் ஸ்வரூபத்யாகமே லோகதேஶிகஸித்தாந்தம். பரந்தபடியில் புத்தித்யாக பரமாகவுங்காண்கிறதே என்னில் - அங்குமிப்படியே கொள்ளக்கடவது. அந்யதா பரஸ்பரவிரோதம் வரும். அவ்விடத்தில் புத்தித்யாகவசநம் - ஸ்வரூபத்யாகஶேஷஸூத ஸ்ராந்தித்யாகாவஶ்யகத்வ மாத்ரபரம். 'நீர்நுமதென்றிவை' என்று ஸ்ராந்தித்யாகாவஶ்யகதையை அருளிச்செய்தாரிறே. உபாயாந்தரங்களுக் குபாயத்வ ப்ர

உபஸர்கத்தாலே பாதகாதிகளை விடுமாப்போலே ருசிவாஸனைகளோடும், லஜ்ஜையோடுங்கூட மறுவலிடாதபடி விடவேணுமென்கிறது. (கச). ல்யப்பாலே-(ஸ்நாத்வா பு⁴ஞ்ஜீத) என்னுமாப்போலே உபாயாந்தரங்களைவிட்டே பற்றவேணுமென்கிறது. (கரு).(சசால சாபஞ்ச முமோச வீர:) என்கிறபடியே இவை யநுபாயங்களான மாத்ரமன்றிக்கே கால்கட்டென்கிறது. (கசா). சக்ரவர்த்தியைப்போலே யிழக்கைக்குறுப்பு. (கஎ). 'ஸர்வதர்மங்களையும் விட்டெ'ன்று சொல்லுகையாலே சிலர் அதர்மங்கள் புகுருமென்றார்கள். (கஅ). அதுகூடாது, 'அதர்மங்களைச்செய்' என்று சொல்லாமையாலே. (ககூ). தன்னடையே சொல்லிற்றாகாதோ வென்னில். (௨௦). ஆகாது, தர்மஸாபேக்ஷம்-அதர்ம நிவர்த்தியைக் காட்டாமையாலே. (உக). காட்டினாலுமத்தைச்சொழிந்தவற்றைச் சொல்லிற்றுமித்தனை. (உஉ). தன்னையும், ஈஶ்வரனையும், ஃபலத்தையும் பார்த்தா லவைபுகுர வழியில்லை. (உங).

—[மாமிநர்த²ம்]—

[மாம்] - ஸர்வரக்ஷகனாய், உனக்குக் கையாளாய், உன்னிசைவுபார்த்து, உன்தோஷங்களை ஹேயமாகக்கொண்டு, உனக்குப்புகலாய், நீர்சுடுமாப்போலே, சேர்ப்பாரே பிரிக்கும்போதும், விடமாட்டாதே ரக்ஷிக்கிறவென்னை. (உச). இத்தால் - பரவ்யூஹங்களையுந், தேவதாந்தர்யாமித்வத்தையுந் தவிர்க்கிறது. (உரு). தர்மஸம்ஸ்தா²பநம் பண்ணப் பிறந்தவன்தானே 'ஸர்வதர்மங்களையும் விட்டென்னைப்பற்றெ'ன்கையாலே, ஸாக்ஷாத்³தர்மந் தானே யென்கிறது. (உசா). இத்தால் - விட்டஸாத⁴நங்களி லேற்றஞ் சொல்லுகிறது. (உஎ). அதாவது-ஸித்³த⁴மாய், பரமசேதநமாய், ஸர்வஶக்தியாய், நிரபாயமாய், ப்ராப்தமாய், ஸஹாயாந்தர நிரபேக்ஷமா யிருக்கை. (உஅ). மற்றவுபாயங்கள் ஸாத்⁴யங்களாகையாலே ஸ்வரூபஸித்³தி⁴யில் சேதநனை அபேக்ஷித்திருக்கும்; அசேதநங்களுமாய், அஶக்தங்களுமா யிருக்கையாலே கார்யஸித்³தி⁴யில் ஈஶ்வரனையபேக்ஷித்திருக்கும்; இந்தவுபாயம் அவற்றுக்கெதிர்த்தட்டா யிருக்கையாலே யிதரநிரபேக்ஷமாயிருக்கும். (உகூ). இதிலே வாத்ஸல்ய-ஸ்வாமித்வ - ஸௌஶீல்ய - ஸௌலப்⁴யங்களாகிற கு³ணவிஶேஷங்கள் நேராக ப்ரகாஶிக்கிறது. (ங௦). கையு முழவுகோலும், பிடித்த சிறுவாய்க்கயிறும், ஸேநாதூ⁴ளி தூ⁴ஸரிதமான திருக்குழலும், தேருக்குக்கீழேநாற்றின திருவடிகளுமாய் நிற்கிறஸாரத்²யவேஷத்தை 'மாமெ'ன்று காட்டுகிறான். (ஙக).

மம் - ஹ்ராந்தியிறே. இவ்வர்த²ம் 'ஶாக்திகையிலே' இத்யாதி³ த்³ருஷ்டாந்தத்³வயத்தாலும் ஸித்³த⁴ம். தென்னாசார்யர்களில்தாமே சிலர் வைதீ⁴யித்யாக³மென்றும், ஹாநிவத்யாக³மென்றும் விவாத³பட³வியில் ப்ரவேஶித்தார்கள். ஸ்வரூபத்யாக³வசநத்துக்குப் பண்ணுகிற பரிஷ்காரமும் ஹேத்யாக³த்தில் பர்யவஸாந மாகையாலே ஸுஸங்க³தம். பிள்ளைலோகாசாரியர் ஸித்³தா⁴ந்தத்துக்கு விபரீதமாகச் சொல்லுவதும் அஸம்ப்ரதா³யமாகும். த்யாக³ஶப்³தா³ர்த²டிப்பணியில் அஸ்மத்பரமாசார்யரான எம்பார்ஸ்வாமி இவ்விஷயமாக விஸ்தரேணவருளிச்செய் திருக்கிறு ராகையாலே அங்கே கண்டுகொள்வது.

—[ஏகஶப்தார்த்தம்]—

[ஏகம்]. இந்த ஏகஶப்தம் ஸ்தாந ப்ரமாணத்தாலே அவதாரணார்த்தத்தைக் காட்டுகிறது. (௩௪). (மாமேவ யே ப்ரபத்யந்தே.) (தமேவசாத்யம்.) (த்வமேவோபாயபூதோ மே பவ.) (ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்) என்றுஞ் சொல்லுகிறபடியே. (௩௫). இத்தால் - 'வ்ரஜ' என்கிற ஸ்வீகாரத்தி லுபாயபாவத்தைத் தவிர்க்கிறது. (௩௬). ஸ்வீகாரந்தானும வனாலேவந்தது. (௩௭). ஸ்ருஷ்ட்யவதாராதிமுகத்தாலே பண்ணின க்ருஷிபலம். (௩௮). (அதுவுமவனதின்னருளே). (௩௯). இத்தையொழியவுந் தானே கார்யஞ்செய்யு மென்று நினைக்கக் கடவன். (௪௦). அல்லாதபோது உபாயநைரபேக்ஷ்யஞ் ஜீவியாது. (௪௧). இது - ஸர்வமுக்தி ப்ரஸங்கபரிஹாரார்த்தம், புத்திஸமாதாநார்த்தம், சைதந்யகார்யம், ராகப்ராப்தம், ஸ்வரூபநிஷ்டம், அப்ரதிஷேதத்யோதகம். (௪௨). கீழ்த்தானும் பிறருமான நிலையைக்கொலைத்தான்; இங்குத்தானு மவனுமான நிலையைக் கொலைக்கிறான். (௪௩). அவனை யிவன்பற்றும் பற்று-அஹங்காரகர்ப்பம், அவத்யகரம். (௪௪). அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம். (௪௫). மற்ற வுபாயங்களுக்கு நிவ்ருத்தி தோஷம்; இதுக்கு ப்ரவ்ருத்திதோஷம். (௪௬). (சிற்றவேண்டா). (௪௭). நிவ்ருத்தி கீழேசொல்லிற்று. (௪௮). உபகாரஸ்ம்ருதியுஞ் சைதந்யத்தாலே வந்தது, உபாயத்தி லந்தர்ப்பவியாது. (௪௯).

—[ஶரணஶப்தார்த்தம்]—

[ஶரணம்] - உபாயமாக. (௫௦). இந்த ஶரணஶப்தம் - ரக்ஷிதாவையும், க்ருஹத்தையும், உபாயத்தையுங் காட்டக்கடவதே யாகிலும் இவ்விடத்தி லுபாயத்தையே காட்டுகிறது, கீழோடே சேரவேண்டுகையாலே. (௫௧).

—[வ்ரஜஶப்தார்த்தம்]—

[வ்ரஜ] - புத்திபண்ணு. (௫௨). கத்யர்த்தமாவது - புத்த்யர்த்தமாய், அத்யவஸியென்றபடி. (௫௩). வாசிக காயிகங்களும் இதுக்கு அபேக்ஷிதங்களாயிருக்கச்செய்தேயும் * ஜ்ஞாநாந்மோக்ஷமாகையாலே மாநஸமான வநுஷ்டாநத்தைச் சொல்லுகிறது. (௫௪). ஆக - த்யாஜ்யத்தைச்சொல்லி, த்யாகப்ரகாரத்தைச் சொல்லி, பற்றப்படு முபாயத்தைச்சொல்லி, உபாயநைரபேக்ஷ்யஞ்சொல்லி, உபாயத்வஞ்சொல்லி, உபாயஸ்வீகாரஞ்சொல்லுகிறது. (௫௫).

—[அஹம்பதார்த்தம்]—

[அஹம்]. ஸ்வக்ருத்யத்தை யருளிச்செய்கிறான். (௫௬). ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியாய், ப்ராப்தனான நான். (௫௭). கீழ்நின்ற நிலையும், மேற்போக்கடி யறிகைக்கும், அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கும், ஏகாந்தமான குணவிஶேஷங்களையும், தன்பேறாகச்செய்து தலைக்கட்டுகைக்கீடான ஸம்பந்த விஶேஷத்தையுங் காட்டுகிறது. (௫௮). தனக்காகக்கொண்ட ஸாரத்யவேஷத்தை அவனையிட்டுப் பாராதே தன்னையிட்டுப் பார்த்தஞ்சின வச்சந்தீரத் தானானதன்மையை 'அஹம்' என்று காட்டுகிறான். (௫௯). கீழிற்பாரதந்த்ர்யமும் இந்த ஸ்வாதந்த்ர்யத்தினுடைய எல்லைநிலமிறே. (௬௦).

—[த்வாவினர்த்தம்]—

[த்வா] - அஜ்ஞனாய், அஶக்தனாய், அப்ராப்தனாய், என்னையே யுபாயமாகப் பற்றியிருக்கிற வுன்னை. (௬௧).

— [ஸர்வபாபஶப்தார்த்தம்.] —

[ஸர்வபாபேப்ய:] 'மத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்களை' என்று யாவை யாவை சிலபாபங்களைக்குறித்தஞ்சுகிறாய், அவ்வோபாபங்களெல்லாவற்றில் நின்றும். (௬௨). (பொய்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும்) என்கிறபடியே அவித்யா-கர்ம-வாஸநா-ருசி-ப்ரக்ருதிஸம்பந்தங்களைச் சொல்லுகிறது. (௬௩). த்ருணச்சேதகண்டூயநாதிகளைப்போலே ப்ரக்ருதி வாஸனையாலே அநுவர்த்திக்குமவையென்ன, லோகாபவாதபீதியாலும், கருணையாலும், கலக்கத்தாலும் செய்யுமவையென்ன, இவை எல்லாவற்றையும் நினைக்கிறது. (௬௪). உன்மத்தப்ரவ்ருத்திக்கு ஸ்ரீராம ப்ராப்திபோலே த்யஜித்த வுபாயங்களிலே யிவை யந்விதங்களாமோவென்று நினைக்கவேண்டா. (௬௫). கலங்கியுபாயபுத்த்யா பண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடொக்கும். (௬௬).

— [மோக்ஷயிஷ்யாமியினர்த்தம்] —

[மோக்ஷயிஷ்யாமி] - முக்தனாம்படி பண்ணக்கடவேன். (௬௭). ணிச்சாலே - 'நானும்வேண்டா, நீயும்வேண்டா, அவை தன்னடையேவிட்டுப்போங்காணெ'ன்கிறான். (௬௮). என்னுடைய நிக்ரஹபலமாய் வந்தவை நானிரங்கினால் கிடக்குமோவென்கை. (௬௯). அநாதிகாலம் பாபங்களைக்கண்டு நீபட்டபாட்டை அவைதான் படும்படி பண்ணுகிறேன். (௭௦). இனி யுன்கையிலு முன்னைக் காட்டித்தாரேன். (௭௧). என்னுடம்பி லழுக்கை நானே போக்கிக்கொள்ளேனோ. (௭௨).

— [மாஶுசவினர்த்தம்.] —

[மாஶுச:] - 'நீயுன் கார்யத்திலே அதிகரியாமையாலும், நானுன்காரியத்திலே அதிகரித்துக்கொண்டுபோருகையாலும், உனக்கு ஶோகநிமித்த மில்லைகாணெ'ன்று அவனுடைய ஶோகநிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுக்கிறான். (௭௩). நிவர்த்தக ஸ்வரூபத்தைச்சொல்லி, நிவர்த்யங்களுன்னைவந்து மேலிடாதென்று சொல்லி, உனக்கு ஶோகநிமித்த மில்லைகாணென்கிறான். (௭௪). (எத்தினை யிடர்க்கடல் கிடத்தியேழை நெஞ்சமே) என்கிறான். (௭௫). பாபங்களை நான்பொறுத்து புண்யமென்று நினைப்படாநிற்க நீஶோகிக்கக்கடவையோ. (௭௬).

—[உபயுக்தார்த்தம்.]—

உய்யக்கொண்டார் விஷயமாக உடையவ ரருளிச்செய்தவார்த்தையை ஸ்மரிப்பது. (௭௭). இதுக்கு ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கு. (௭௮). (இதுதான் அநுவாதகோடியிலே) என்று வாங்கிப்புரத்து நம்பி வார்த்தை. (௭௯). அர்ஜுநன் க்ருஷ்ணனுடைய ஆனைத்தொழில்களாலும், ருஷிகள் வாக்யங்களாலும், க்ருஷ்ணன் தன் கார்யத்திலே அதிகரித்துக்கொண்டு போருகையாலும் 'இவனே நமக்குத் தஞ்ச' மென்று துணிந்தபின்பு தன்னைப்பறச் சொல்லுகையாலே. (௮௦). புறம்பு * பரந்தவையெல்லா மிவன்நெஞ்சை ஶோதிக்கைக்காக. (௮௧). வேதபுருஷ னுபாயாந்தரங்களை விதித்தது-கொண்

* பிறந்ததெல்லாம் - (பா).

டிப்பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப்போலே அஹங்கார மமகாரங்களால் வந்த களிப்பற்று ஸ்வரூபஜ்ஞாநம் *பிறக்கைக்காக. (அஉ). ஸந்யாஸி முன்புள்ளவற்றை விடுமாப்போலே, யிவ்வளவு பிறந்தவனிவற்றைவிட்டால் குற்றம்வராது. (அங). இவன்தா னிவைதன்னை நேராகவிட்டிலன். (அச). கர்மம் - கைங்கர்யத்திலே புகும்; ஜ்ஞாநம் - ஸ்வரூபப்ரகாஶத்திலே புகும்; பக்தி - ப்ராப்ய ருசியிலே புகும்; ப்ரபத்தி - ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநத்திலே புகும். (அரு). ஒரு ஶலத்துக்கரிய வழியையும், எளியவழியையும் உபதேஶிக்கையாலே யிவையிரண்டுமொழிய பகவத்ப்ரஸாதமே யுபாயமாகக்கடவது. (அசா). பேற்றுக்கு வேண்டுவது - விலக்காமையும், இரப்பும். (அஎ). சக்ரவர்த்தித் திருமகன் பாபத்தோடேவரிலு மமையுமென்றான்; இவன் புண்யத்தைப் போகட்டு வரவேணுமென்றான். (அஅ). (ஆஸ்திகனாய் இவ்வர்த்தத்தில் ருசிவிஶ்வாஸங்களுடையனாய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனாய் நஶித்தலொழிய நடுவில் நிலையில்லை) என்று பட்டர்க்கெம்பாரருளிச் செய்த வார்த்தை. (அகூ). வ்யவஸாய மில்லாதவனுக்கு இதிலந்வயம்-ஆமத்தில் போஜநம்போலே. (கூ0). (விட்டு சித்தர்கேட்டிருப்பர்) என்கிறபடியே அதிகாரிகள் நியதர். (கூக). (வார்த்தையறிபவர்) என்கிறபாட்டும், (அத்தனாகி) என்கிறபாட்டும், இதுக்கர்த்தமாக வநுஸந்தேயம். (கூஉ).

(ஆகமொத்தம்ஸூத்திரம் - உஎசா.)

உலகாசாரியர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

முமுக்ஷுப்படி முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

† தத்வத்ரயம்.

சித்ப்ரகரணம் ॥ க ॥

முமுக்ஷுவான சேதநனுக்கு மோக்ஷமுண்டாம்போது தத்வத்ரயஜ்ஞாந முண்டாகவேணும். (க). தத்வத்ரயமாவது - சித்தும், அசித்தும், ஈஶ்வரனும். (உ). சித்தென்கிறது - ஆத்மாவை. (ங). ஆத்மஸ்வரூபம் - (சென்றுசென்று பரம்பரமாய்) என்கிறபடியே தேஹேந்த்ரிய-மந:- ப்ராண - புத்தி விலக்ஷணமாய், அஜடமாய், ஆநந்தரூபமாய், நித்யமாய், அணுவாய் அவ்யக்தமாய், அசிந்த்யமாய், நிரவயவமாய், நிர்விகாரமாய், ஜ்ஞாநாஶ்ரயமாய், ஈஶ்வரனுக்கு நியாம்யமாய், தார்யமாய், ஶேஷமாயிருக்கும். (ச). ஆத்மஸ்வரூபம் - தேஹாதி விலக்ஷணமானபடி யென்னென்னில் (ரு). தேஹாதிகள் 'என்னுடையதேஹாதிகளெ'ன்று ஆத்மாவில் வேறுபட்டுத் தோற்றுகையாலும், 'இதமெ'ன்றுதோற்றுகையாலும், ஆத்மா 'நானெ'ன்று தோற்று

---

* பிறப்பிக்கைக்காக - (பா).

† திருமந்த்ரார்த்தத்தை விஶதீகரிக்கிறது - இந்த தத்வத்ரயம். அதாவது - ப்ரணவத்திற்சொன்ன தத்வத்ரயத்தையும் ஸ்பஷ்டமாச் சொல்லுகிறது.

றுகயாலும், இவை - யொருக்கால் தோற்றி ஒருக்கால் தோற்ருமையாலும், ஆத்மா-எப்போதுந் தோற்றுகையாலும், இவை - பலவாகையாலும், ஆத்மா ஒருவனுகையாலும், ஆத்மா இவற்றில் விலக்ஷணனென்று கொள்ளவேணும். (சு). இந்த யுக்திகளுக்குக்கண்ணழிவுண்டேயாகிலும், ஶாஸ்த்ர பலத்தாலே ஆத்மா தேஹாதி விலக்ஷணனுகக்கடவன். (எ). அஜடமாகையாவது - ஜ்ஞானத்தை யொழியவுந்தானேதோற்றுகை. (அ). ஆநந்தரூபமாகையாவது - ஸுகரூபமாயிருக்கை. (கூ). உணர்ந்தவன் 'ஸுகமாக உறங்கினே' னென்கையாலே ஸுகரூபமாகக்கடவது. (௧௦). நித்யமாகையாவது - எப்போதுமுண்டாகை. (கக) எப்போது முண்டாகில், ஜந்மமரணங்களுண்டாகிறபடி யென்னென்னில், ஜன்மமாவது - தேஹஸம்பந்தம். மரணமாவது - தேஹவியோகம் (கஉ). அணுவானபடி யென்னென்னில்(கங) ஹ்ருதய ப்ரதேஶத்தில்நின்றும் உத்க்ரமித்துப்போவது வருவதாமென்று ஶாஸ்த்ரஞ் சொல்லுகையாலே ஆத்மா அணுவாகக்கடவது. (கச). அணுவாய் ஹ்ருதயத்தளவிலேயிற்குமாகில் ஶரீரமெங்கு மொக்க ஸுகது:கங்களை ஹுஜிக்கிறபடி யென்னென்னில். (கரு). மணித்யுமணி தீபாதிகளோரிடத்திலேயிருக்க, ப்ரபையெங்குமொக்க வ்யாபிக்கிமாப்போலே, ஜ்ஞானமெங்குமொக்க வ்யாபிக்கையாலே அவற்றைஹுஜிக்கத்தட்டில்லை. (கசு). ஒருவன் ஏககாலத்திலே அநேக தேஹங்களைப் ப்ரிதிரஹிக்கிறதும், ஜ்ஞாநவ்யாப்தியாலே. (கஎ). அவ்யக்த மாகையாவது- வடிபடாதிகளை திரஹிக்கிறசக்ஷுராதிகளால் தோற்ருதிருக்கை. (கஅ). அசிந்த்ய மாகையாவது - அசித்தோடு ஸஜாதீயமென்று நினைக்கவொண்ணுதிருக்கை. (ககூ). நிரவயவமாகையாவது - அவயவஸமுதாய மின்றிக்கேயிருக்கை. (௨௦). நிர்விகார மாகையாவது - அசித்துப்போலே விகரிக்கையன்றிக்கே ஒருபடிப்பட்டிருக்கை. (உக). இப்படி யிருக்கையாலே - ஶஸ்த்ரம், அக்நி, ஜலம், வாதம், ஆதபந்தொடக்கமானவற்ருல் சேதித்தல், தஹித்தல், நனைத்தல், ஶோஷிப்பித்தல், செய்கைக்கு அயோக்யமாயிருக்கும். (உஉ). ஆர்ஹதர்-ஆத்மாவை தேஹபரிமாண மென்ருர்கள். (உங). அது ஶ்ருதிவிருத்தம். (உச). அநேக தேஹங்களைப் பரிக்ரஹிக்கிறயோகிகள் ஸ்வரூபத்துக்கு. * ஶைதில்யமவரும். (உரு). ஜ்ஞானாஶ்ரயமாகையாவது-ஜ்ஞானத்துக்கிருப்பிடமின்றிக்கே கிருப்பிடமாயிருக்கை. (உசு) ஆத்மா ஜ்ஞானத்துக் கிருப்பிடமாயிருக்கை. (உஎ). 'நானறிவே'ன்று சொல்லவேணும், 'நானறியாநின்றே' னென்னக்கூடாது. (உஅ). ஜ்ஞாதா வென்றபோதே-கர்த்தா, போக்தா என்னுமிடஞ் சொல்லிற்ருயிற்று. (உகூ). கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் ஜ்ஞானாவஸ்தா விஶேஷங்க ளாகையாலே. (ங௦). சிலர் குணங்களுக்கேகர்த்ருத்வமுள்ளது, ஆத்மாவுக் கில்லையென்ருர்கள்.(ஙக). அப்போது இவனுக்குஶாஸ்த்ரவஶ்யதையும், போக்த்ருத்வமுங்கொலையும். (ஙஉ). ஸாம்ஸாரிக ப்ரவ்ருத்திகளில் கர்த்ருத்வம் ஸ்வரூப ப்ரயுக்தமன்று. (ஙங). குணஸம்ஸர்கக்ருதம். (ஙச). கர்த்ருத்வந்தான் ஈஶ்வராயத்தம். (ஙரு). ஜ்ஞானாஶ்ரயமாகில ஶாஸ்த்ரங்களிலே யிவனை 'ஜ்ஞானமெ'ன்று சொல்லுவா னென்னென்னில். (ஙசு). ஜ்ஞானத்தை யொழியவுந் தன்னை யறிகையாலும், ஜ்ஞா

---

* 'ஶைதில்யமும்வரும்' என்றும் பாடாந்தரங்காண்கின்றன.

நம் ஸாரஹிதகுணமாய் நிரூபக தர்மமாயிருக்கையாலும் சொல்லிற்று. (௩௭). நியாம்யமாகையாவது - ஈஶ்வரபுத்த்யதீநமாக எல்லா வ்யாபாரங்களுமுண்டாம்படி யிருக்கை. (௩௮). தார்யமாகையாவது - அவனுடைய ஸ்வரூப ஸங்கல்பங்களை யொழிந்தபோது தன் ஸத்தை யில்லையாம்படி யிருக்கை. (௩௯). ஶேஷமாகையாவது - சந்தந குஸும தாம்பூலாதிகளைப்போலே அவனுக்கு இஷ்டவிநியோகார்ஹமாயிருக்கை. (௪௦). இதுதான் - தேஹ க்ஷேத்ர புத்ர களத்ராதிகளைப்போலே *ப்ருதக் ஸ்திதியாதிகளுக்கு யோக்யமாம்படி யிருக்கையன்றிக்கே ஶரீரம்போலே அவற்றுக் கயோக்யமாயிருக்கை. (௪௧). ஆத்மஸ்வரூபந்தான் - பத்த, முக்த, நித்ய ரூபேண மூன்றுபடிபட்டிருக்கும். (௪௨) பத்தரென்கிறது - ஸம்ஸாரிகளை. (௪௩) முக்தரென்கிறது - ஸம்ஸாரஸம்பந்த மற்றவர்களை. (௪௪). நித்யரென்கிறது - ஒருநாளும் ஸம்ஸரியாத ஶேஷ ஶேஷாஶநாதிகளை. (௪௫). ஜலத்துக் கக்நிஸம்ஸ்ருஷ்ட ஸ்தாலீ ஸம்ஸர்கத்தாலே ஔஷ்ண்யஶப்தாதிகளுண்டாகிறாப்போலே ஆத்மாவுக்கு அசித் ஸம்பந்தத்தாலே அவித்யா கர்ம வாஸநா ருசிகளுண்டாகிறன. (௪௬). அசித்துக்கழிந்தவாறே அவித்யாதிகள் கழியுமென்பர்கள். (௪௭). இம்மூன்றுந் தனித்தனியே அநந்தமாயிருக்கும். (௪௮). சிலர் ஆத்மபேதமில்லை ஏகாத்மாவேயுள்ள தென்றார்கள். (௪௯). அந்தபக்ஷத்தில் ஒருவன் ஸுகிக்கிறகாலத்திலே வேறேயொருவன் து:கிக்கக் கூடாது. (௫௦). அதுதேஹ பேதத்தாலே யென்னில். (௫௧) ஸௌபரி ஶரீரத்திலுமதுகாணவேணும். (௫௨). ஒருவன் ஸம்ஸரிக்கையும், ஒருவன் முக்தனாகையும், ஒருவன் ஶிஷ்யனாகையும், ஒருவனாசார்யனாகையும் கூடாது. (௫௩). விஷம ஸ்ருஷ்டியுங் கூடாது. (௫௪). ஆத்மபேதஞ் சொல்லுகிறஶ்ருதியோடும் விரோதிக்கும். (௫௫). ஶ்ருதி ஔபாதிகபேதத்தைச் சொல்லுகிறதென்னவொண்ணாது. (௫௬). மோக்ஷதசையிலும்பேதம் உண்டாகையாலே. (௫௭). அப்போது தேவமநுஷ்யாதிபேதமும், காமக்ரோதாதி பேதமும் கழிந்து, ஆத்மாக்கள் ஸ்வரூபம் - அத்யந்தம் ஸமமாய், ஒருபடியாலும் பேதஞ்சொல்லவொண்ணாதபடி யிருந்ததேயாகிலும். (௫௮). பரிமாணமும், இடையும், ஆகாரமும் ஒத்திருக்கிற - பொற்குடங்கள், ரத்நங்கள், வ்ரீஹிகள் தொடக்கமானவற்றிற்கு பேதமுண்டாகிறாப்போலே ஸ்வரூப பேதமும்ஸித்தம். (௫௯). ஆகையால் ஆத்மபேதங்கொள்ளவேணும். (௬௦). இப்போது இவர்களுக்கு லக்ஷணம் ஶேஷத்வத்தோடே கூடின ஜ்ஞாத்ருத்வம். (௬௧). இவர்களுடைய ஜ்ஞாநந்தான்-ஸ்வரூபம்போலே நித்ய-த்ரவ்யமாய், அஜடமாய், ஆநந்தரூபமா யிருக்கும். (௬௨). ஆனால் ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்கும் வாசியென்னென்னில். (௬௩). ஸ்வரூபம் - தர்மியாய், ஸங்கோச விகாஸங்களுக்கு அயோக்யமாய், தன்னை யொழிந்தவற்றை ப்ரகாஶிப்பியாமலே தனக்குத்தான் ப்ரகாஶிக்கக்கடவதாய், அணுவாயிருக்கும்; ஜ்ஞாநம் - தர்மமாய், ஸங்கோச விகாஸங்களுக்கு யோக்யமாய், தன்னையொழிந்தவற்றை ப்ரகாஶிப்பிக்கக்கடவதாய், தனக்குத்தான் ப்ரகாஶியாதே ஆத்மாவுக்கு ப்ரகாஶிக்கக்கடவதாய், விபுவாயிருக்கும். (௬௪). அதில் ஶிலருடைய ஜ்ஞாநம்-

* 'ப்ருதக்ஸித்தியாதிகளுக்கு' என்றும்பா.

எப்போதும் விஶதமாயிருக்கும்; சிலருடைய ஜ்ஞாநம் - எப்போதும் அவிஶதமாயிருக்கும்; சிலருடைய ஜ்ஞாநம் - ஒருக்கால் அவிஶதமாய், ஒருக்கால் விஶதமாயிருக்கும். (௬௫). ஜ்ஞாநம் - நித்யமாகில் 'எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது, நஶித்தது' என்கிறபடி யென்னென்னில், (௬௬). இந்த்ரிய த்வாரா ப்ரஸரித்து விஷயங்களை க்ரஹிப்பது, மீளுவதாகையாலே அப்படி சொல்லக்குறையில்லை. (௬௭). இதுதான் ஏகமா யிக்கச்செய்தே நாநாவாய்த் தோற்றுகிறது - ப்ரஸரணபேதத்தாலே. (௬௮). த்ரவ்யமானபடி யென்னென்னில், (௬௯). க்ரியாகுணங்களுக் காஶ்ரயமாய், அஜடமாய், ஆநந்தரூபமாயிருக்கையாலே, த்ரவ்யமாகக்கடவது. (௭0). அஜடமாகில் ஸுஷுப்தி மூர்ச்சாதிகளில் தோற்றவேண்டாவோ வென்னில், (௭௧). ப்ரஸரண மில்லாமையாலே தோற்றாது. (௭௨). ஆநந்தரூபமாகையாவது — ஜ்ஞாநம் ப்ரகாஶிக்கும்போது அநுகூலமாயிருக்கை. (௭௩). விஷஶஸ்த்ராதிகளைக் காட்டும்போது ப்ரதிகூலமாயிருக்கைக்கடி-தேஹாத்ம ப்ரமாதிகள். (௭௪). ஈஶ்வராத்மகமாகையாலே எல்லாப் பதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம்; ப்ராதிகூல்யம் வந்தேறி. (௭௫). மற்றை ஆநுகூல்யம் ஸ்வாபாவிகமாகில், ஒருவனுக்கொருக்கால் ஓரிடத்திலே அநுகூலங்களான சந்தநகுஸுமாதிகள், தேஶாந்தரே காலாந்தரே-இவன்றனக்கும், அத்தேஶத்திலே அக்காலத்திலே வேறேயொருவனுக்கும் ப்ரதிகூலங்களாகக் கூடாது. (௭௬).

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

தத்வத்ரயம்.

அசித்ப்ரகரணம் "உ"

அசித்து - ஜ்ஞாநஶூந்யமாய், விகாராஸ்பதமா யிருக்கும். (௧). இது ஶுத்த ஸத்வமென்றும், மிஶ்ரஸத்வ மென்றும், ஸத்வஶூந்ய மென்றும், த்ரிவிதம். (௨). இதில் ஶுத்த ஸத்வமாவது - ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாதே கேவல ஸத்வமாய், நித்யமாய், ஜ்ஞாநாநந்தஜநகமாய், கர்மத்தாலன்றிக்கே கேவல பகவதிச்சையாலே விமாந, கோபுர, மண்டப, ப்ராஸாதாதி ரூபேண பரிணமிக்கக்கடவதாய், நிரவதிக தேஜோரூபமாய், நித்ய முக்தராலும் ஈஶ்வரனாலும் பரிச்சேதிக்கவரிதாய், அத்யத்புதமா யிருப்பதொன்று. (௩). இத்தைச்சிலர்-ஜடமென்றார்கள்; சிலர்-அஜடமென்றார்கள். (௪). அஜடமானபோது-நித்யர்க்கும், முக்தர்க்கும், ஈஶ்வரனுக்கும், ஜ்ஞாநத்தை யொழியவுந் தோற்றும். (௫). ஸம்ஸாரிகளுக்குத் தோற்றாது. (௬). ஆத்மாவிலும், ஜ்ஞாநத்திலும் பின்னமானபடி யென்னென்னில், (௭). 'நான்' என்று தோற்றாமையாலும், ஶரீரங்களாய்ப் பரிணமிக்கையாலும், விஷயங்களை யொழிய

வும் தானே தோற்றுகையாலும், ஶப்த ஸ்பர்ஶாதிக ளுண்டாகையாலும் ஸிந்நமாகக்கடவது. (அ). மிஶ்ர ஸத்வமாவது - ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள் மூன்றோடுங்கூடி பத்தவேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்குத் திரோதாயகமாய், விபரீதஜ்ஞாந ஜநகமாய், நித்யமாய், ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய், ப்ரதேஶபேதத்தாலும், காலபேதத்தாலும் ஸத்ருஶமாயும், விஸத்ருஶமாயு மிருக்கும் விகாரங்களை உண்டாக்கக் கடவதாய், 'ப்ரக்ருதி-அவித்யை - மாயை' என்கிற பேர்களை உடைத்தா யிருக்கும் அசித்விஶேஷம். (௯). ப்ரக்ருதியென்கிறது - விகாரங்களைப் பிறப்பிக்கையாலே; அவித்யையென்கிறது - ஜ்ஞாநவிரோதியாகையாலே; மாயை யென்கிறது - விசித்ர ஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே. (௧0). இதுதான் (பொங்கைம்புலனும் பொறியைந்துங் கருமேந்திரிய மைம்பூதம் இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்காரமனங்களே) என்கிறபடியே, இருபத்துநாலு தத்வமாயிருக்கும். (௧௧). இதில் ப்ரதமதத்வம் - ப்ரக்ருதி. (௧௨). இது-அவிபக்த தமஸ்ஸென்றும், விபக்த தமஸ்ஸென்றும், அக்ஷரமென்றும் சில அவஸ்தைகளை உடைத்தா யிருக்கும். (௧௩). இதில் நின்றும் குணவைஷம்யத்தாலே மஹதாதி விகாரங்கள் பிறக்கும். (௧௪). குணங்களாகிறன - ஸத்வ-ரஜஸ் - தமஸ்ஸுக்கள். (௧௫). இவை ப்ரக்ருதிக்கு ஸ்வரூபாநுபந்திகளான ஸ்வபாவங்களாய், ப்ரக்ருத்யவஸ்தையில்-அநுத்பூதங்களாய், விகாரதஶையில்-உத்பூதங்களா யிருக்கும். (௧௬). ஸத்வம் - ஜ்ஞாந ஸுகங்களையும், உபய ஸங்கத்தையும் பிறப்பிக்கும். (௧௭). ரஜஸ்ஸு - ராக த்ருஷ்ணா ஸங்கங்களையும், கர்ம ஸங்கத்தையும் பிறப்பிக்கும். (௧அ). தமஸ்ஸு - விபரீதஜ்ஞாநத்தையும், அநவதாநத்தையும், ஆலஸ்யத்தையும், நித்ரையையும் பிறப்பிக்கும். (௧௯). இவை ஸமங்களானபோது - விகாரங்கள் ஸமங்களுமாய், அஸ்பஷ்டங்களுமாய் இருக்கும்; விஷமங்களானபோது - விகாரங்கள் விஷமங்களுமாய், ஸ்பஷ்டங்களுமாய் இருக்கும். (௨0). விஷம விகாரங்களில் ப்ரதம விகாரம் - மஹாந். (௨௧). இது-ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று த்ரிவிதமாய், அத்யவஸாய ஜநகமாய் இருக்கும். (௨௨). இதில் நின்றும்-வைகாரிகம், தைஜஸம், பூதாதி என்று த்ரிவிதமான அஹங்காரம் பிறக்கும். (௨௩). அஹங்காரம் - அபிமாந ஹேதுவா யிருக்கும். (௨௪). இதில் - வைகாரிகத்தில் நின்றும் 'ஶ்ரோத்ர த்வக் சக்ஷுர் ஜிஹ்வாக்ராணங்க'ளென்கிற ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும் 'வாக் பாணி பாத பாயூபஸ்தங்க' ளென்கிற கர்மேந்த்ரியங்களைந்தும், மநஸ்ஸும், ஆகிற பதினொரு இந்த்ரியங்களும் பிறக்கும். (௨௫). பூதாதியில் நின்றும், ஶப்ததந்மாத்ரை பிறக்கும்; இதில் நின்றும் - ஆகாஶமும், ஸ்பர்ஶ தந்மாத்ரையும் பிறக்கும்; இதில் நின்றும் வாயுவும், ரூபதந்மாத்ரையும் பிறக்கும்; இதில் நின்றும் - தேஜஸ்ஸும், ரஸ தந்மாத்ரையும் பிறக்கும்; இதில் நின்றும் - அப்பும், கந்த தந்மாத்ரையும் பிறக்கும்; இதில் நின்றும் - ப்ருதிவி பிறக்கும். (௨௬). ஸ்பர்ஶ தந்மாத்ரை தொடக்கமான நாலு தந்மாத்ரைகளும் - ஆகாஶம் தொடக்கமான நாலு பூதங்களுக்கும் கார்யமாய், வாயுதொடக்கமான நாலு பூதங்களுக்கும் காரணமாய் இருக்கு மென்றுஞ் சொல்லுவர்கள். (௨௭). தந்மாத்ரங்களா

வன - பூதங்களினுடைய ஸூக்ஷ்மாவஸ்தைகள். (௨௮). மற்றையிரண்டஹங்காரமும்-ஸ்வகார்யங்களைப் பிறப்பிக்கும்போது, ராஜஸாஹங்காரம் - ஸஹகாரியாயிருக்கும். (௨௯). ஸாத்விகாஹங்காரம் - ஶப்ததந்மாத்ராதி பஞ்சகத்தையும் அடைவே ஸஹகாரியாய்க்கொண்டு, ஶ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தையும் ஸ்ருஷ்டிக்கும்; தத்ஸஹக்ருதமாய்க் கொண்டு வாகாதி கர்மேந்த்ரியங்களைந்தையும் ஸ்ருஷ்டிக்கும்; இவற்றையொழியத் தானே மநஸ்ஸை ஸ்ருஷ்டிக்குமென்றுஞ் சொல்லுவர்கள். (௩௦). சிலர் - இந்த்ரியங்களிலே சிலவற்றை பூதகார்யமென்றார்கள். (௩௧). அது ஶாஸ்த்ரவிருத்தம். (௩௨). பூதங்கள் ஆப்யாயகங்களித்தனை. (௩௩). இவை கூடினாலல்லது கார்யகரமல்லாமையாலே, மண்ணையும்-மணலையும்-நீரையுஞ் சேர்த்தொரு த்ரவ்யமாக்கிச் சுவரிடுவாரைப்போலே, ஈஶ்வரன்-இவற்றையெல்லாம் தன்னிலே சேர்த்தொரு அண்டமாக்கி, அதுக்குள்ளே சதுர்முகனை ஸ்ருஷ்டித்தருளும். (௩௪). அண்டத்தையும், அண்டகாரணங்களையும் தானே யுண்டாக்கும்; அண்டத்துக்குட்பட்ட வஸ்துக்களைச் சேதநர்க்கந்தர்யாமியாய் நின்றுண்டாக்கும். (௩௫). அண்டங்கள்தான் - அநேகங்களாய், பதினாலு லோகங்களோடேகூடி ஒன்றுக்கொன்று பதிற்றுமடங்கான ஏழாவரணங்களாலுஞ் சூழப்பட்டு, ஈஶ்வரனுக்கு க்ரீடாகந்துகஸ்தாநீயங்களாய், ஜலபுத்புதம்போலே ஏககாலத்திலே ஸ்ருஷ்டங்களாயிருக்கும். (௩௬). பூதங்களில் ஆகாஶம் - அவகாஶஹேது, வாயு-வஹநாதிஹேது, தேஜஸ்ஸு - பசநாதிஹேது, ஜலம்-ஸேசந பிண்டீகரணாதிஹேது, ப்ருதிவி-தாரணாதி ஹேது என்பர்கள். (௩௭). ஶ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்துக்கும்-அடைவே ஶப்தாதிகளைந்தையும் க்ரஹிக்கை தொழில்; வாகாதி கர்மேந்த்ரியங்களைந்துக்கும், விஸர்க - ஶில்ப-கதி - உக்திகள் - தொழில்; மநஸ்ஸு - இவையித்தனைக்கும் பொது. (௩௮). ஆகாஶாதி பூதங்களுக்கு-அடைவே ஶப்தாதிகள் குணங்களாயிருக்கும். (௩௯). குணவிநிமயம் - பஞ்சீகரணத்தாலே. (௪௦). ஆகாஶம் கறுத்துத்தோற்றுகிறதும்-அத்தாலே. (௪௧). முன்புற்றை தந்மாத்ரைகளோடே கூடிக்கொண்டு, உத்தரோத்தர தந்மாத்ரைகள் - ஸ்வவிஶேஷங்களைப் பிறப்பிக்கையாலே, குணாதிக்யமுண்டாயிற்றென்றுஞ் சொல்லுவர்கள். (௪௨). ஸத்வஶூந்யமாவது-காலம். (௪௩). இது, ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாய், கலாகாஷ்டாதி ரூபேண பரிணமிக்கக்கடவதாய், நித்யமாய், ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய், ஶரீரபூதமாயிருக்கும். (௪௪). மற்றையிரண்டசித்தும் - ஈஶ்வரனுக்கும், ஆத்மாவுக்கும், போக்ய போகோபகரண போகஸ்தாநங்களாயிருக்கும். (௪௫). போக்யங்களாகிறன - விஷயங்கள்; போகோபகரணங்களாகிறன - சக்ஷுராதி கரணங்கள்; போகஸ்தாநங்களாகிறன-சதுர்தஶ புவநங்களும், ஸமஸ்த தேஹங்களும். † (௪௬). இதில் முற்பட்ட அசித்துக்கு - கீழெல்லையுண்டாய், சுற்றும் மேலும் எல்லையின்றிக்கே யிருக்கும்; நடுவில் அசித்துக்கு - சுற்றுங் கீழு மெல்லையின்றிக்கே

† சதுர்தஶபுவநமும், ஸமஸ்ததேஹமும், என்கிறபா—வ்யா—இல்லை. பஹுவசநபாடமே வ்யா—தோற்றுகின்றன.

மேலெல்லையுண்டாயிருக்கும்; காலம்-எங்குமொக்கவுண்டாயிருக்கும். (சஎ). காலந்தான் - பரமபதத்திலே நித்யம்; இங்கு அநித்யமென்றுஞ் சொல்லுவர்கள். (சஅ). சிலர்-காலத்தை இல்லையென்றார்கள். (சகூ). ப்ரத்யக்ஷத்தாலும், ஆகமத்தாலும் விரோதிக்கையாலே அது சொல்லவொண்ணாது. (ருO). பலரும் திக்கென்று தனியே ஒருத்ரவ்யம் உண்டென்றார்கள். (ருக). பலஹேதுக்களாலும், ஆகாசாதிகளிலே அந்தர்பூதமாகையாலே அதுவுஞ் சேராது. (ருஉ). சிலர் - ஆவரணாபாவம் ஆகாசமென்றார்கள். (ருங). பாவரூபேண தோற்றுகையாலே அதுவுஞ்சேராது. (ருச). வேறே சிலர், இதுதன்னை - நித்யம், நிரவயவம், விபு, அப்ரத்யக்ஷ மென்றார்கள். (ருரு). பூதாதியிலே பிறக்கையாலும், அஹங்காராதிக ளில்லாமையாலும், கண்ணுக்கு விஷயமாகையாலும்,அவை நாலுஞ் சேராது.(ருகூ). த்வகிந்த்ரியத்தாலே தோற்றுகையாலே, வாயு அப்ரத்யக்ஷ மென்கிறவதுவுஞ் சேராது. (ருஎ) தேஜஸ்ஸு-பௌமாதிபேதத்தாலே பஹுவிதம். (ருஅ). அதில் ஆதித்யாதி தேஜஸ்ஸு - ஸ்திரம், தீபாதி தேஜஸ்ஸு - அஸ்திரம். (ருகூ). தேஜஸ்ஸுக்கு நிறம்-சிவப்பு, ஸ்பர்சம்-ஔஷ்ண்யம். (கூO). ஜலத்துக்குநிறம் - வெளுப்பு, ஸ்பர்சம் - சைத்யம், ரஸம் - மாதுர்யம். (கூக) பூமிக்கு - நிறமும், ரஸமும், பஹுவிதம். (கூஉ). ஸ்பர்சம் - இதுக்கும், வாயுவுக்கும், அநுஷ்ணாசீதம். (கூங). இப்படி அசித்து மூன்றுபடிப் பட்டிருக்கும். (கூச).

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேசரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

தத்வத்ரயம்.

ஈச்வர ப்ரகரணம் ॥ ங ॥

ஈச்வரன் - அகிலஹேய ப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய், ஜ்ஞாந சக்த்யாதி கல்யாண குண கணபூஷிதனாய், ஸகலஜகத் ஸர்க ஸ்திதி ஸம்ஹாரகர்த்தாவாய், (ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ) - என்கிற † சதுர்வித புருஷர்களுக்கு மாச்ரயணீயனாய், தர்மார்த்தகாம மோக்ஷாக்ய சதுர்விதபலப்ரதனாய், விலக்ஷண விக்ரஹயுக்தனாய், லக்ஷ்மீ பூமி நீளா நாயகனாயிருக்கும். (க) அகிலஹேயப்ரத்யநீகனாகையாவது - தமஸ்ஸுக்குத் தேஜஸ்ஸு போலேயும், ஸர்ப்பத்துக்கு கருடனைப்போலேயும், விகாராதிதோஷங்களுக்கு ப்ரதிபடனாயிருக்கை. (உ). அநந்தனாகையாவது-நித்யனாய், சேதநாசேதநங்களுக்கு வ்யாபகனாய், அந்தர்யாமியாய் இருக்கை. (ங). அந்தர்யாமியானால் தோஷங்கள் வாராதோவென்னில், (ச). சரீரகதங்களான பால்யாதிகள்-ஜீவாத்மாவுக்கு வாராதாப்போலே, த்ரிவிதசேதநாசேதநதோ

† சதுர்வித புருஷர்களுக்காச்ரயணீயனாய் - என்றும் பாடாந்தரம்.

ஷமும் ஈஶ்வரனுக்கு வாராது. (௫). ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாகையாவது-ஆநந்தரூப ஜ்ஞாநனாயிருக்கை. (௬). அதாவது-கட்டடங்க அநுகூலமாய், ப்ரகாஶமுமாயிருக்கை. (௭). இவனுடைய ஜ்ஞாந ஶக்த்யாதி கல்யாணகுணங்கள் - நித்யங்களாய், நிஸ்ஸீமங்களாய், நிஸ்ஸங்க்யங்களாய், நிருபாதிகங்களாய், நிர்தோஷங்களாய், ஸமாநாதிகரஹிதங்களா யிருக்கும். (௮). இவற்றில் வாத்ஸல்யாதிகளுக்குவிஷயம்-அநுகூலர்; ஶௌர்யாதிகளுக்குவிஷயம்-ப்ரதிகூலர்; இவற்றுக்குக் காரணமான ஜ்ஞாந ஶக்த்யாதிகளுக்கு-எல்லாரும் விஷயம். (௯). ஜ்ஞாநம்-அஜ்ஞர்க்கு; ஶக்தி-அஶக்தர்க்கு; க்ஷமை-ஸாபராதர்க்கு; க்ருபை-து:கிகளுக்கு; வாத்ஸல்யம்-ஸதோஷர்க்கு; ஶீலம்-மந்தர்க்கு; ஆர்ஜவம்-குடிலர்க்கு; ஸௌஹார்தம் - துஷ்ட ஹ்ருதயர்க்கு; மார்தவம் - விஶ்லேஷ பீருக்களுக்கு; ஸௌலப்யம்-காண ஆசைப்பட்டவர்களுக்கு; இப்படி யெங்குங் கண்டுகொள்வது. (௧௦). இப்படி, ஈஶ்வரன்-கல்யாணகுணங்களோடே கூடியிருக்கையாலே, பிறர் நோவுகண்டால் 'ஐயோ' வென்றிரங்கி, அவர்களுக்கெப்போதுமொக்க நன்மையைச் சிந்தித்து, தனக்கேயாயிருத்தல், தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருத்தல் செய்யாதே, நிலா, தென்றல், சந்தநம், தண்ணீர்போலே பிறர்க்கேயாய், தன்னை ஆஶ்ரயித்தவர்கள்பக்கல் ஜந்ம ஜ்ஞாந வ்ருத்தங்களாலுண்டான நிகர்ஷம் பாராதே, தாங்களும் பிறருந் தஞ்சமல்லாதபோது தான் தஞ்சமாய், ஸாந்தீபநீபுத்ரனையும், வைதிகன் புத்ரர்களையும் மீட்டுக்கொண்டு வந்தாற்போலே அரியனசெய்தும், அவர்கள் அபேக்ஷிதங்களைத் தலைக்கட்டியும், அவர்களுக்கு த்ருவபதம்போலே பண்டில்லாதவற்றையும் உண்டாக்கியும், தந்தாம் ஸ்வம் தாந்தாம் விநியோகங் கொண்டாற்போலேயிருக்கத் தன்னையும் தன்னுடைமையையும் வழங்கி, அவர்கள் கார்யந் தலைக்கட்டினால் தான் க்ருதக்ருத்யனாய், தான் செய்தநன்மைகளொன்றையும் நினையாதே அவர்கள் செய்த ஸுக்ருத லவத்தையே நினைத்து, அநாதிகாலம் வாஸிதங்களான ரஸங்களை மறக்கும்படி எல்லா தஶையிலும் இனியனாய், பார்யாபுத்ரர்கள் குற்றங்களைக் காணுக்கண்ணிட்டிருக்கும் புருஷ[illegible]ப் போலே அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தால் நினையாதே, குற்றங்க[illegible]ப் பெரியபிராட்டியார் காட்டினாலும் அவளோடே மறுதலைத்துத் திண்ணியனாய் நின்று ரக்ஷித்து, காமிநியுடைய அழுக்குகக்கும் காமுகனைப்போலே, அவர்கள் தோஷங்களை போக்யமாகக்கொண்டு, அவர்கள்பக்கல் கரணத்ரயத்தாலும் செவ்வியனாய், பிரிந்தால் - அவர்கள் வ்யஸநம் குளப்படி யென்னும்படி தானீடுபட்டு, அவர்களுக்குப் பாங்காகத் தன்னைத் தாழவிட்டு, அவர்களுக்குக் கட்டவும் அடிக்கவுமாம்படி எளியனாய், அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்கி முன்னணை கன்றையும், புல்லிட வந்தவர்களையும் கொம்பிலுங் குளம்பிலும் ஏற்குமாபோலே பெரியபிராட்டியாரையும், ஸூரிகளையும் விட்டு ஸ்நேஹித்துக்கொண்டு போரும். (௧௧). இவனே - ஸகல ஜகத்துக்கும் காரணபூதன். (௧௨). சிலர் பரமாணுவைக் காரணமென்றார்கள். (௧௩). பரமாணுவில் - ப்ரமாணமில்லாமையாலும், ஶ்ருதிவிரோதத்தாலும் அது சேராது. (௧௪). காபிலர் - ப்ரதாநம் காரணமென்றார்கள். (௧௫). ப்ரதாநம்-அசேதநமாகையாலும், ஈஶ்வரன்-அதிஷ்டியாதபோது பரிணமிக்க மாட்டாமையா

லும், ஸ்ருஷ்டி - ஸம்ஹார வ்யவஸ்தையை கூடாமையாலும், அதுவுஞ்சேராது. (கசு) சேதநனுங் காரணமாகமாட்டான். (கஎ). கர்ம பரதந்த்ரனுமாய், து:கியுமாயிருக்கையாலே. (கஅ). ஆகையால், ஈஶ்வரன்தானே ஜகத்துக் குக்காரணம். (ககூ). இவன் காரணமாகிறது - அவித்யா கர்ம பரவஶ்யோபாதிக ளால் அன்றிக்கே, ஸ்வேச்சையாலே. (௨0). ஸ்வஸங்கல்பத்தாலே - செய் கையாலே இதுதான் வருத்தமற்றிருக்கும். (௨க). இதுக்கு ப்ரயோஜநம் கேவல லீலை. (௨௨). ஆனால் ஸம்ஹாரத்தில் லீலை கொலையாதோ வென்னில், (௨௩). ஸம்ஹாரந்தானும் லீலையாகையாலே கொலையாது. (௨௪) இவன் தா னே ஜகத்தாய்ப் பரிணமிக்கையாலே உபாதானமுமாயிருக்கும். (௨௫). ஆனால் நிர்விகாரனென்னும்படி யென்னென்னில். (௨சு). ஸ்வரூபத்துக்கு விகார மில்லாமையாலே நிர்விகாரனென்னக் குறையில்லை. (௨எ). ஆனால் பரிணா மம் உண்டாம்படி யென்னென்னில், (௨அ). விஶிஷ்டவிஶேஷணஸ்த் வாரகமாக. (௨கூ). ஒரு ஶிலந்திக்குண்டான ஸ்வபாவம் - ஸர்வ ஶக்திக்குக் கூடாதொழியாதிறே. (௩0). ஈஶ்வரன் ஸ்ருஷ்டிக்கையாவது - அசித்தைப் பரிணமிப்பிக்கையும், சேதநர்க்கு ஶரீரேந்த்ரியங்களைக் கொடுத்து ஜ்ஞாந விகாஸத்தைப் பண்ணுகையும். (௩க). ஸ்திதிப்பிக்கையாவது - ஸ்ருஷ்ட மான வஸ்துக்களிலே பயிருக்கு நீர்நிலைபோலே, அநுகூலமாக ப்ரவேஶித்து நின்று ஸர்வரக்ஷைகளையும் பண்ணுகை. (௩௨). ஸம்ஹரிக்கையாவது - அவிநீதனான புத்ரனைப் பிதா விலங்கிட்டு வைக்குமாபோலே, விஷயாந்தரங்க ளிலே கைவளருகிற கரணங்களைக் கொலைத்திட்டுவைக்கை. (௩௩). இம்மூன் றுந் தனித்தனியே நாலுப்ரகாரமா யிருக்கும். (௩௪). ஸ்ருஷ்டியில்-ப்ரம் ஹாவுக்கும், ப்ரஜாபதிகளுக்கும், காலத்துக்கும், ஸகல ஜந்துக்களுக்கும் அந் தர்யாமியாய் ரஜோகுணத்தோடேகூடி ஸ்ருஷ்டிக்கும். (௩௫) ஸ்திதியில் விஷ்ண்வாதிரூபேண அவதரித்து, மந்வாதிமுகேந ஶாஸ்த்ரங்களை ப்ர வர்த்திப்பித்து, நல்வழிகாட்டி, காலத்துக்கும், ஸகல ஜந்துக்களுக்கும் அந் [illegible]யாமியாய் ஸத்வகுணத்தோடேகூடி ஸ்திதிப்பிக்கும். (௩சு). ஸம்ஹா ரத்தில் - ருத்ரனுக்கும், அக்நியந்தகாதிகளுக்கும், காலத்துக்கும், ஸகலஜந் துக்களுக்கும் அந்தர்யாமியாய் தமோகுணத்தோடேகூடி ஸம்ஹரிக்கும். (௩எ). சிலரை ஸுகிகளாகவும், சிலரை து:கிகளாகவும் ஸ்ருஷ்டித்தால் ஈஶ்வரனுக்கு வைஷம்ய நைர்க்ருண்யங்கள் வாராதோ என்னில், (௩அ). கர்ம மடியாகச் செய்கையாலும், மண்தின்ற ப்ரஜையை நாக்கிலே குறியிட்டு அஞ்சப்பண்ணும் மாதாவைப்போலே ஹிதபரனாய்ச் செய்கையாலும் வா ராது. (௩கூ). இவன்தான் (முந்நீர்ஞாலம் படைத்த வெம்முகில்வண்ணன்) என்கிறபடியே ஸவிக்ரஹனாய்க்கொண்டு, ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணும். (௪0). விக்ரஹந்தான்-ஸ்வரூபகுணங்களிலுங்காட்டில் அத்யந்தாபிமதமாய், ஸ்வாநுரூபமாய், நித்யமாய், ஏகரூபமாய், ஶுத்தஸத்வாத்மகமாய், சேதந தேஹம்போலே ஜ்ஞாநமயமான ஸ்வரூபத்தை மறைக்கையன்றிக்கே, மாணிக் கச்செப்பிலே பொன்னை யிட்டுவைத்தாற்போலேயிருக்க, பொன்னுருவான திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரகாஶகமாய், நிரவதிகதேஜோரூபமாய், ஸௌ குமார்யாதி கல்யாணகுணகணநிதியாய், யோகித்யேயமாய், ஸகலஜநமோ

ஹநமாய், ஸமஸ்தபோஹவைராக்யஜநகமாய், நித்யமுக்தாநுபாவ்யமாய், * வாசத்தடம்போலே ஸகலதாபஹரமாய், அநந்தாவதாரகந்தமாய், ஸர்வ ரக்ஷகமாய், ஸர்வாபாஶ்ரயமாய், அஸ்த்ரபூஷணபூஷிதமாயிருக்கும். (௪௧). ஈஶ்வரஸ்வரூபந்தான் - பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யா மித்வம், அர்ச்சாவதாரம் என்றஞ்சு ப்ரகாரத்தோடே கூடியிருக்கும். (௪௨). அவற்றில் பரத்வமாவது - அகாலகால்யமான * நலமந்த மில்லதோர் நாட் டிலே நித்யமுக்தர்க்கு போக்யனாய்க்கொண் டெழுந்தருளியிருக்கும் இரு ப்பு. (௪௩). வ்யூஹமாவது - ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரார்த்தமாகவும், ஸம் ஸாரி ஸம்ரக்ஷணார்த்தமாகவும், உபாஸகாநுக்ரஹார்த்தமாகவும், ஸங்கர்ஷண- ப்ரத்யும்ந - அநிருத்தரூபேண நிற்கும்நிலை. (௪௪). பரத்வத்தில் - ஜ்ஞாநாதிக ளாறும் பூர்ணமாயிருக்கும்; வ்யூஹத்தில் - இவ்விரண்டு குணம் ப்ரகடமா யிருக்கும். (௪௫). ஸங்கர்ஷணர் - ஜ்ஞாந பலங்களிரண்டோடுங் கூடி, ஜீவதத்வத்தை அதிஷ்டித்து, அத்தை ப்ரக்ருதியில் நின்றும் விவேகித்து, ப்ரத்யும்நாவஸ்தையையும் பஜித்து, ஶாஸ்த்ர ப்ரவர்த்தநத்தையும், ஜகத் ஸம்ஹாரத்தையும் பண்ணக்கடவராயிருப்பர். (௪௬). ப்ரத்யும்நர் - ஐஶ் வர்ய வீர்யங்களிரண்டோடுங் கூடி, மநஸ்தத்வத்தை அதிஷ்டித்து, தர் மோபதேஶத்தையும், மநுசதுஷ்டயந் தொடக்கமான ஶுத்தவர்க ஸ்ருஷ் டியையும் பண்ணக்கடவராயிருப்பர். (௪௭). அநிருத்தர் - ஶக்தி தேஜஸ் ஸுக்க ளிரண்டோடுங்கூடி, ரக்ஷணத்துக்கும், ஜ்ஞாநப்ரயாநத்துக்கும், காலஸ்ருஷ்டிக்கும், மிஶ்ரஸ்ருஷ்டிக்கும் கடவராயிருப்பர். (௪௮). விபவம்- அநந்தமாய், கௌண முக்யபேதத்தாலே பேதித்திருக்கும். (௪௯). மநுஷ் யத்வம், திர்யக்த்வம்போலே கௌணத்வமும் இச்சையாலே வந்தது; ஸ்வ ரூபேண அன்று. (௫௦). அதில் அப்ராக்ருத விக்ரஹங்களுமாய், அஜஹத் ஸ்வபாவவிபவங்களுமாய், தீபாதுத்பந்ந ப்ரதீபம்போலேயிருக்கக்கடவதான முக்ய ப்ராதுர்பாவங்களெல்லாம் முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யங்களா யிருக் கும். (௫௧). விதி, ஶிவ, பாவக, வ்யாஸ, ஜாமதக்ந்யார்ஜுந, வித்தேஶா திகளாகிற கௌண ப்ராதுர்பாவங்களெல்லாம் அஹங்காரயுக்த ஜீவர்களை அதிஷ்டித்து நிற்கையாலே முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்யங்கள். (௫௨). நித்யோதித ஶாந்தோதிதாதிபேதமும், ஜாக்ரத் ஸம்ஜ்ஞாதியான சாதுராத் ம்யமும், கேஶவாதி மூர்த்யந்தரமும், ஷட்த்ரிம்ஶத் பேதபிந்நமான பத்ம நாபாதிவிபவமும், உபேந்த்ர, த்ரிவிக்ரம, ததிபக்த, ஹயக்ரீவ, நரநா ராயண, ஹரி, க்ருஷ்ண, மத்ஸ்ய, கூர்ம, வராஹாத்யவதார விஶேஷங்களும் அவற்றினுடைய பூஜாஉபாய வர்ண க்ருத்ய ஸ்தாநாதி பேதங்களும், தூரவ யரங்களுமாய், க்ரந்தபதமங்களுமாய் இருக்கையாலே சொல்லுகிறிலோம். (௫௩). அவதாரங்களுக்கு ஹேது இச்சை. (௫௪). பலம் ஸாதுபரித்ரா ணாதி த்ரயம். (௫௫) பல ப்ரமாணங்களிலும் ஸுக்ருதாதி ஶாபாதிகளாலே பிறந் தானென்கையாலே, அவதாரங்களுக்கு ஹேது, கர்மமாகவேண்டாவோவெ ன்னில், (௫௬.) அவைதன்னிலே ஶாபம் வ்யாஜம்; அவதாரம் ஐச்சிகமெ ன்று பரிஹரித்தது. (௫௭.) அந்தர்யாமித்வமாவது-அந்த:ப்ரவிஶ்ய நியந்தா வாயிருக்கை. (௫௮.) ஸ்வர்க நரகப்ரவேஶாதி ஸர்வாவஸ்தைகளிலும் ஸகல

சேதநர்களுக்கும் துணையாய், அவர்களை விடாதே நிற்கிற நிலைக்குமேலே ஶுபாஶ்ரயமான திருமேனியோடே கூடிக்கொண்டு, அவர்களுக்கு த்யேயனுகைக்காகவும், அவர்களை ரக்ஷிக்கைக்காகவும், ஸஹ்யாஹிதனாய்க்கொண்டு ஹ்ருதய கமலத்திலே எழுந்தருளியிருக்கு மிருப்பு. (௫௯.) அர்ச்சாவதாரமாவது - (தமருகந்ததெவ்வுருவமவ்வுருவம்) என்கிறபடியே சேதநர்க்கபிமதமான த்ரவ்யங்களிலே விபவவிஶேஷங்களைப் போலன்றிக்கே, தேஶ காலாதிகாரி நியமமில்லாதபடி ஸந்நிதிபண்ணி, அபராதங்களைக் காணாக்கண்ணிட்டு, அர்ச்சகபரதந்த்ரமான ஸமஸ்த வ்யாபாரங்களையும் உடையனாய்க்கொண்டு, கோயில்களிலும், க்ருஹங்களிலும் எழுந்தருளி நிற்கும் நிலை. (௬௦). ருசிஜநகத்வமும், அஶேஷலோக ஶரண்யத்வமும், அநுஸந்தேயத்வமும், எல்லாம் அர்ச்சாவதாரத்திலே பரிபூர்ணம். (௬௧). ஸ்வஸ்வாமிபாவத்தை மாறாடிக்கொண்டு அஜ்ஞரைப்போலேயும், அஶக்தரைப்போலேயும், அஸ்வதந்த்ரரைப்போலேயும் இருக்கச்செய்தேயும், அபாரகாருண்ய பரவஶனாய்க்கொண்டு ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுத்தருளும். (௬௨).

(ஆக மொத்த ஸூத்ரம் - ௨௦௨).

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

தத்வத்ரயம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

அர்த்தபஞ்சகம். †

ஸம்ஸாரியான சேதநனுக்குத் தத்வஜ்ஞாநம் பிறந்து உஜ்ஜீவிக்கும் போது, அர்த்தபஞ்சக ஜ்ஞாநம் உண்டாகவேணும். அர்த்தபஞ்சகஜ்ஞாநமாவது - ஸ்வஸ்வரூப, (௧) பரஸ்வரூப, (௨) புருஷார்த்தஸ்வரூப, (௩) உபாயஸ்வரூப, (௪) விரோதிஸ்வரூபங்களை, (௫) உள்ளபடி அறிகை. இவற்றில் ஓரொருவிஷயந்தான் - அஞ்சுபடிப்பட்டிருக்கும்.

(௧). ஸ்வஸ்வரூப மென்கிறது - ஆத்மஸ்வரூபத்தை. ஆத்மஸ்வரூபந்தான் - நித்யர், முக்தர், பத்தர், கேவலர், முமுக்ஷுக்களென்றைந்து.

(௨). ‡ பரஸ்வரூபமென்கிறது - ஈஶ்வரஸ்வரூபத்தை. ஈஶ்வரஸ்வரூபந்தான் - பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரமென்றைந்து.

---

† திருமந்த்ரத்திற்சொல்லுகிற அர்த்தபஞ்சக ஸ்வரூபத்தையும் விஶதமாக்குகிறது - இந்தரஹஸ்யம்.

‡ 'ஏகரூபா சாரம்ப்ரவஞ்சுதி ப்ராதுர்பாவைஶ்சாவதாரா: | பரோ வ்யூஹ விபவோ நியந்தா ஸர்வதேஹிநாம் || அர்ச்சாவதாரஶ்ச ததா தயாளு: புருஷாக்ருதி:' என்கிற விஷ்வக்ஸேந ஸம்ஹிதா ப்ரவசனத்தைத் திருவுள்ளம்பற்றி - பரஸ்வரூப மித்யாதி - அருளிச்செய்கிறார். விபவாவதாரம் - இரண்டுவிதம். முக்யப்ராதுர்பாவ மென்றும், கௌணப்ராதுர்பாவ மென்றும். முக்யப்ராதுர்பாவங்கள் - மத்ஸ்யகூர்மாதி திவ்யவதார

(௩). புருஷார்த்தஸ்வரூப மென்கிறது-புருஷனாலே அர்த்திக்கப்படுமது புருஷார்த்தம். அந்தப் புருஷார்த்தந்தான் - தர்ம, அர்த்த, காம, ஆத்மாநுபவ, பகவதநுபவமென்றைந்து.

(௪). உபாயஸ்வரூபமென்கிறது - கர்ம, ஜ்ஞாந, பக்தி, ப்ரபத்தி, ஆசார்யாபிமாநமென்றைந்து.

(௫). விரோதிஸ்வரூபமென்கிறது - ஸ்வரூபவிரோதி, பரத்வவிரோதி, புருஷார்த்தவிரோதி, உபாயவிரோதி, ப்ராப்திவிரோதியென்றைந்து.

(க). [க.] இவற்றில், நித்யராவார்-ஒருநாளும் ஸம்ஸார ஸம்பந்தமாகிற அவத்யமின்றிக்கே நிரவத்யராய், பகவதநுபவாநுகூல்யைகபோகராய், (வாளிவரசு வைகுந்தக்குட்டன் வாசுதேவன்) என்கிற ஸ்ரீவைகுண்டநாதனுக்கு (விண்ணாட்டவர் மூதுவர்) என்கிறபடியே பட்டங்கட்டுகைக் குரியராம்படி மூப்பரான மந்த்ரிகளாய், † ஈஸ்வரநியோகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைப் பண்ணவும் சக்தராய், பரவ்யூஹாதி ஸர்வாவஸ்தைகளிலும் தொடர்ந் தடிமைசெய்யக்கடவராய் கோயில்கொள் தெய்வங்களான ஸேனைமுதலியார் தொடக்கமான அமரர்கள்.

ங்கள். ரளணமாவது - ஆவேசாவதாரம். இவைதான் ஸ்வரூபாவேச மென்றும், சக்த்யாவேச மென்றும் த்விவிதமாயிருக்கும். ஸ்வரூபாவேசமாவது - பரசுராம க்ருஷ்ண த்வைபாயநாதிகளான சேதநருடைய சரீரங்களிலே தன்னுடைய அஸாதாரண விக்ரஹத்தோடே ஆவேசித்துநிற்கை. சக்த்யாவேசமாவது - கார்யகாலத்திலே விதிசிவாதிகளான சேதநர்பக்கலிலே சக்திமாத்ரத்தாலே ஸ்புரித்துநிற்கை. அர்சாவதாரமும் - விபவாவதாராந்தர்பாவமாயிருந்தபோதிலும் ப்ரத்யக்ஷத்தில் வ்யக்த்யந்தரமாகத் தோற்றுகையாலும், வசநபலத்தாலும் அர்சாவதாரத்தை பின்னமாக அருளிச்செய்தாரித்தனை. 'ஐதரெசவ்ரக்ஷிஷ்ணஸ்யசெவாவதீயஸ் யதா உஷ்ராவதாஜதி' என்று ஸஹஸ்ரநாம பாஷ்யம்.

† இத்தால் - ஸ்தோத்ரரத்நபாஷ்யத்தில் (உக - சக) வது ஶ்லோகங்களிற் சொன்னவை நிரஸ்தமாயிற்று. சேதநர்களுக்கு ஜகத்வ்யாபாரமில்லை என்றது - ஸத்வேத்யாதிகளிற் சொல்லுகிற ஜகத்வ்யாபார காரணமில்லையென்றபடியிறே. ப்ரஹ்மாதிகள் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார க்ரமங்களை உபதேச க்ரமத்தாலே பெற்று அவற்றைப்பண்ண சக்தரானபின்பு அநந்ய ப்ரயோஜநராய் ஆச்ரயிக்குமவர்கள், அவனுடைய நியோகத்தால் அவற்றைச்செய்ய சக்தரென்னுமிடஞ் சொல்லவேண்டாவிறே. 'விஸ்ருஜ' என்று விஷ்வக்ஸேநருக்கு ஸ்ருஷ்ட்ருத்வம் கண்டோக்தம். 'ஸ்ரீஜகிவிஷ்வக்ஸேநஸ்ருஷ்டஸமஸ்தாசேஷதேவதாகம்' என்று ஸ்ரீவைகுண்டகத்யத்தில் பாஷ்யகாரரருளிச்செய்தாராகையாலே இதுக்கு விபரீதமானவை உக்தவிபரீதம்போலே த்யாஜ்யமாமித்தனை. ஆக ப்ரஹ்மாதிகளுடைய ஏகதேசஸ்ருஷ்ட்ருத்வாதிசக்தி ஈஸ்வராதீனையாகிறுப்போலே நித்யமுக்தருடைய ஸகலஜகத் ஸ்ருஷ்ட்யாதிசக்தியு மீஸ்வராதீனை என்றபடி. ஆகையால் நித்யமுக்தர்களுக்கு ஸ்ருஷ்ட்யாதியில் சக்தியுண்டென்னுமிடமுபபந்நம். 'ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ப்ராப்தியில்லாமைபோக்கி சக்தியில்லாமையாலே தவறுகிறு

[௨.] முக்தராவார்- † பகவத்ப்ரஸாதத்தாலே ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் வந்த க்லேசமலங்களெல்லாம் கழிந்து, பகவத்ஸ்வரூப ரூப குண விபவங்களை அநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீதி உள்ளடங்காமையாலே வாயாரப் புகழ்ந்து, * மீட்சியின்றி வைகுந்தமாநகரத்திலே களித்தாநந்திக்கிற முநிவர்கள்.

[௩.] பத்தராவார்- பாஞ்சபௌதிகமாய், அநித்யமாய், ஸுகதுःகாநுபவபரிகரமாய், ஆத்மவிச்லேஷத்தில் தர்சந ஸ்பர்சநயோக்யமில்லாதபடி அசுசிபாஸ்பதமாய், அஜ்ஞாந அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநஜநகமான ஸ்வதேஹமே ஆத்மாவாகவும், சப்தாதி விஷயாநுபவஜநிதமான ஸ்வதேஹபோஷணமே புருஷார்த்தமாகவும், சப்தாதிவிஷயாநுபவத்துக் குறுப்பாக வர்ணாச்ரமதர்மங்களை அழியமாறியும், அஸேவ்யஸேவைபண்ணியும், பூதஹிம்ஸைபண்ணியும், பரதார பரத்ரவ்யாபஹாரம்பண்ணியும், ஸம்ஸாரவர்த்தகராய், பகவத்விமுகராந சேதநர்.

[௪.] கேவலனாவான்- தனியிடத்திலே மிகவும் க்ஷுத்பிபாஸைகளாலே நலிவுபட்டவன், பக்ஷ்யாபக்ஷ்ய விவேகம்பண்ணமாட்டாதே தன்னுடம்பைத்தானேஜீவித்து ‡ ப்ரஸந்நனுமாபோலே ஸம்ஸார தாவாக்நியாலே தப்தனானவன், ஸம்ஸார துःக நிவ்ருத்திக்கு உறுப்பாக சாஸ்த்ரஜந்ய ஜ்ஞாநத்தாலே ப்ராக்ருத்யாத்ம விவேகம்பண்ணி, ப்ரக்ருதி - துःகாச்ரயமாய், ஹேயபதார்த்தஸமுதாயமாய் இருக்கிற ஆகாரத்தையும், ஆத்மா - ப்ரக்ருதேः பரனாய் பஞ்சவிம்சகனாய், ஸ்வயம்ப்ரகாசனாய், ஸ்வதஸ்ஸுகியாய், நித்யனாய், அப்ராக்ருதனாய் இருக்கிற ஆகாரத்தையும் அநுஸந்தித்து, முன்பு தான்பட்ட துःகத்தின் பந்தத்தாலே இவ்வல்பரஸத்திலே கால்தாழ்ந்து * உணர்முழுநலமான பரமாத்ம விவேகம் பண்ணமாட்டாதே, * அமுதவெள்ளத்தானாஞ்சிறப்புவிட்டு, அவ்வாத்மப்ராப்திக்கு ஸாதநமான ஜ்ஞாநயோகத்திலே நிஷ்ட0

ரல்ல' ரென்று ஸ்தோத்ரரத்நத்தில் (௨௦) வது ச்லோகத்தில் ஆச்சான்பிள்ளை. '[illegible]' மென்று நாரதீயபுராணாந்தர்கத ஹரிபக்திஸுதோதயத்தில் நாரதபகவானைக்குறித்து பக்தர்களுடைய லக்ஷணஞ்சொல்லுகிறவளவில் ஸர்வேச்வரன்தானே சொன்னானிறே. அந்யத்ரவிஸ்தரः.

† (பகவத்ப்ரஸாதத்தாலே) என்றது - பஹுதாஜந்மஸாத்யமான கர்மஜ்ஞாநங்களாலே பிறந்த தைலதாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதிஸந்தாநரூப பக்திமூலமாகவரும் பகவத்ப்ரஸாதத்தாலேயாதல், நிர்ஹேதுக பகவத்க்ருபையாலே உபாயாந்தர விஷயத்தில் பிறந்த தௌஷ்கரத்வாதி ஸாத்யிமூலமாகவரும் ப்ரபதநமூலமான பகவத்ப்ரஸாதத்தாலே யாதலென்றபடி. இவ்வர்த்தம் தத்வத்ரய வ்யாக்யாநத்தில் (க - ப்ர - ௪௪ - ஸூத்) ஸ்பஷ்டம்.

‡ பாஜித்து (பா).

ஞய், யோமஹலமான † ஆத்மாநுஹவமாத்ரத்தையே புருஷார்யமாக அநுஹ வித்து, பின்பு ஸம்ஸாரஸம்ஸ்வந்யமும், ஹமவத்ப்ராப்தியும் அற்று, யாவதாத் மஹாவி அமரீரியாய்க்கொண்டு திரிவானொருவன்.

---

† இந்தகைவல்யாயிகாரிக்கு பரமாத்மாநுஹவ வெயமயெண கேவலப்ரக்ருதிவிநிர் முக்த ஜீவாத்மாநுபவத்தையே நித்யபுருஷார்யமாகச் சொல்லுமது - ‘ உஹயெ விஹி வரிவஜூணம் வநூஹொவாஸகெ’ இத்யாதி வேதாந்தஸாராதி ஸ்ரீஸூக்திக ளோடே விரோதியாதோ வென்னில் - விரோதியாது. இந்த ஆத்மாநுபவ காமனான கைவல்யாயிகாரிக்கு முக்யஹலம் - ஆத்மாநுபவமே யாகையாலே. இவன் - கேவல நாமா ஷிப்ராணரூவி ஒவிர்த்திஷ்ட ஜீவாத்மஸ்வரூப பர்யந்தமான சிதசிதவஸ்துக்களை ப்ருஹ்ம த்ருஷ்டியாலே யாதல், ஸ்வரூபேணவாத லுபாஸிக்கிற ப்ரதீகாலம்பந னன்றிறே. ப்ர தீகாலம்பநனுக்கு - அர்சிராஷிமத்யாஷிகளில்லை யென்று ‘ ரூமதொவ நிஷதி கமத்யஹி யாநாவு’ ‘அவநூதீகா ஊம்வநாந்நயதீதி’ இத்யாஷிஸூத்ரங்களிற் சொல்லப்பட்டது. ஆகை யாலிவ்விடத்திற் சொல்லுகிறவயிகாரி - ப்ரதீகாலம்பநாயிகாரிஹின்னன். இவன் - ப்ரக்ரு திவியுக்தப்ருஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸந நிஷ்டனாகையாலே ‘ தஂயயா யயொவாஸ தெதஷெவஹவதி’ (ஸ்ரீதபம் ப்ரா - கூ - காண்ட. ந-ப்ரபா. ரு - அத்யா. சு - ப்ராஹ்ம. உ0 - பஞ்) என்கிறபடியே - ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மாநுபவ மாத்ரமேஹமாகக்கடவது. இது தன்னை ‘ஆத்மாநுபவமாத்ரத்தையே’ இத்யாஷி தந்த்ரேண வருளிச்செய்தார். வெதாதஸாரத்தில், ‘ உஹயெவிஹி வரிவஜூணம் வநூஹொவாஸகெ ஈவஹெஷெந. ஹாதீமமரீரகம்வநூஹெவந. வநூஹாதகஹாதாநிதரெ’ என்று ‘கைவல்யாயிகாரியான பஞ்சாக்நிவித்யாநிஷ்டனும், பரப்ரஹ்மோபாஸநநிஷ்டனும் ஈவஹெதத்தாலே பரிபூர்ண மான ப்ரஹ்மத்தை உபாஸிக்கிறார்கள்’ என்று அருளிச்செய் திருக்கையாலே வாவ ஹொவாஸநநிஷ்டனைக்காட்டிலும், பஞ்சாக்நிவித்யா நிஷ்டன் வேறுபட்டவன் என்று ஸித்யிக்கையாலும், இவரிருவர்க்கு மர்சிராஷிமதியை ‘கதஃவாஸவநூஹொவாஸீநா ந், ஆதாநஜுவநுகூதிவியமதும்வநூஹாதகஈவாஸீநாஞயதீதி’ என்று சொல்லு கையாலும், ‘கவிநாஷிநாமதநாம ஷெஹாவஸாந ஃயேவ...தஹாநீஷெவநூஹவநூ விஷூதிவிரொயாவு’ என்று வெதாதீவத்தில் அர்சிராஷிமதியால் போனவனுக்கு அப் பொழுதே வநூஹவநூவியைச் சொல்லுகையால் ஈயெவநூகநூதிமண்டலத்தில் ஆதாநஹவம் ஸங்கதமாகையாலும், ‘ யொஹிநாஷைநூதஂஹாநம ஹாதவஸஷொஷகாஷிணாம’ என்கிற விஷ்ணுபுராண வசநத்துக்கு - ‘ வநூகூதிமண்டலத்துக்கும் - வைகுண்டத்துக்கும் மத்யத்தில் ‘ஆதாநஹவஸூநம்’ என்று ஸஹஸ்ரநாம ஹாஷ்யத்தில் ஹட்டர் அர்யமருளிச் செய்திருக்கையாலும், வநூகநூதிமண்டலத்தி லாதாநஹவம் கெவலவநூதீகாலம்வநனுக்கென்று அந்தஸ்ரோக வ்யாக்யாநத்தில் எங்களாழ்வான் நிவஹா ஹாந்தர மருளிச்செய்திருக்கையாலும், வநூகநூதிமண்டலத்துக்குள் ஆதாநஹவங்கொள் ளில் - அதுக்கநிதநூகூவநூஸங்கம்வரு மாகையாலும், ஈக்திஷெஷிமாதாநஹவ முண்டென்கிற வெதாதாசாயூவசந விரொயம்வரு மாகையாலும், தீதாஹாஷ்ய ஸ்ரீஹா ஷ்யாஷிகளில் ‘ ஜிஜாஸூ’ என்கிற வஜூாநிவிஷூ நிஷ்டனுக்கு நிஸ்ஸேஷவநூகநூதி விதி

[ரு.] மோக்ஷத்திலே இச்சை யுடையவர்களுக்கு † முமுக்ஷுக்களென்று பேராகக்கடவது. இதுதான் - முமுக்ஷுக்களாய், உபாஸகராயிருப்பாரும், முமுக்ஷுக்களாய், ப்ரபந்நராயிருப்பாருமாயிரண்டுபடிப்பட்டிருக்கும்.

முமுக்ஷு ப்ரதிபாத்யாதி ஸாதநாநுஷ்டாந விஶிஷ்டஸ்வரூபத்தை மோக்ஷமாகச் சொல்லுகையாலே ஏதாத்ருஶாநுபவம் ப்ரக்ருதிமண்டலத்திலே தத்விஶிஷ்டனுக்கு ஸர்வதா கூடாமையாலும், உபாஸிதாநிஷ்டனுக்கு அவாந்தரபலமான பஶ்வாதிபலாநுபவார்த்தமாக ஸ்வதேஹப்ரக்ருதி வைஶிஷ்ட்யமும், அண்டாந்தர்பாவமு மவஶ்யம் வேண்டுகையாலே நியதவிரோதவர்வாவயத்தை யுடைத்தான ஸகுண நிர்குணவாக்யங்களுக்கு அநியதவர்வாவயவ விஷயையான பஞ்சாக்நிந்யாயப்ரவ்ருத்தி கூடாதாப்போலே அத்யந்தவைஷம்ய முண்டாகையாலே பஞ்சாக்நிவித்யைக்கு உபாஸிதாநுந்யாய ப்ரவ்ருத்தி கூடாமையாலும், கைவல்யநித்யத்வம் - பராங்குஶ பரகால யதிவராதி தத்வவேதிஸர்வஸம்மதமா யிருக்கையாலும் - தத்வமீதமநாதரணீய மென்றறியவும். ஆக தேஶவிஶேஷத்திலே பகவதநுபவ வைலக்ஷண்ய இந்த கைவல்யாதிகாரிக்கு - ஸாக்ஷாத்ப்ரஹ்மவித்யாங்கத்தில் பதிதமான ப்ரஜாபதி வாக்யாதி தாபஹத பாப்மத்வாதி ஸத்யஸங்கல்பத்வபர்யந்த குணவிஶிஷ்ட ப்ரஹ்மாத்மக ஸ்வஸ்வரூபமே யாவதாத்மாவிமோக்ஷ மென்றதாயிற்று. (பகவத் ப்ராப்தியுமற்று) என்றது-பகவதிச்சாநுபவாநர்ஹதை யுண்டாகையாலே. 'பிராஜாபதே ரேப்ராந்ரோஜாகைவல்யம் ஸ்ம்ருதம் । ததாஸ்ய மோக்ஷஸ்ய மோக்ஷம்ப்ராஹுர்மநீஷிண: ॥ ஸ்வாத்மாநுபவஜாநந்த ஸாவதிம்கைவல்யம் பதம்। நித்யஸம்நிவர்த்தநம் கைவல்யம் மோக்ஷஉச்யதே ॥ ஶ்ரீஶாம்ஶ்ரீ ஹதிவைகாஸமோக விவர்ஜிதம்' என்று பாஞ்சராத்ரத்தில், (உஉஅ.) வதய்யாயத்தில்நித்யவிபூதி வர்ணநத்தில் ஸூத்ரனுஞ் சொன்னனிறே. (அஶரீரியாய்) என்றது - ஸர்வ தேஶதேஶகாலங்களில் ஸர்வப்ரகாரகைங்கர்யம் பண்ணுகைக்கு 'ஸஏகதா பவதி' த்யாதிப்ரகாரேண பரிக்ரஹிக்கிற திவ்யவிக்ரஹ ரஹிதனுய் என்றபடி. 'அஶரீரம் வாவஸந்தம் ந ப்ரியாப்ரியே ஸ்ப்ருஶத:' என்னக்கடவதிறே. முக்தர்களுக்கு அஶரீரத்வமும் ஶரீரத்வமு முண்டென்று அதிகரணத்திற் சொல்லப்பட்டது. வேதவ்யாஸாபிப்ராயமும் கைவல்ய விஷயத்தி லிப்படியே. அவரிதுக் கநித்யத்வாதிகளைச் சொன்னதுக்கு நிதானம் இதுக்கு நித்யபரமபதப்ராப்த்யபாவத்தையே சொல்லில் ஸ்வஸ்வரூபாநுபவமான பரமபதப்ராப்த்யபாவத்தைவிட்டு ப்ராயஶ: எல்லாருமதில் ப்ரவேஶித்து விடுவர்கள் என்று தந்நிராஸார்த்தமாக அப்படி அவர் அருளிச்செய்தார்' என்று ஸம்ப்ரதாய ஸித்தாந்திகளி லருளிச்செய்யப்பட்டது. அநந்தவிஸ்தர:.

† கைவல்யார்த்திக்கு, யத்கிஞ்சித் முமுக்ஷுஶப்தவாச்யத்வ மந்யத்ர வுண்டான போதிலும் - பரிபூர்ண முமுக்ஷுஶப்தவாச்யத்வ மில்லாமையாலே கேவலன் என்றும் முமுக்ஷுக்கள் என்றும் பிரித்தருளிச்செய்தார் என்றறியவும். பகவதநுபவ விரோதியான ஸ்வாத்மாநுபவம் த்யாஜ்யமாயிருக்க, அத்தை விடுகையி லிச்சையில்லாமையாலே பூர்ணமுமுக்ஷுஶப்தவாச்யத்வ மிவனுக்கில்லையாய் விட்டது.

(௨.) [௧.] ஈச்வரவிஷயத்தில், பரத்வமாவது-பரமபதத்திலே (அவாக்யநாதர:) என்றெழுந்தருளியிருக்கிற * ஆதியஞ்சோதி யுருவான பரவாஸுதேவர்.

[௨.] வ்யூஹமாவது-ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களான ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்கள்.

[௩.] விபவமாவது - ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள்.

[௪.] அந்தர்யாமித்வம் - இரண்டுபடிப்பட்டிருக்கும். அதாவது - (அடியேனுள்ளான்) என்றும், (எனதாவி) என்றும், (என்னுயிர்) என்றும், சொல்லுகிறபடியே ஆத்மாவுக்குள்ளும், (போதிற்கமலவன் னெஞ்சம்புகுந்து) என்றும், (அரவிந்தப்பாவையுந் தானுமகம்படி வந்துபுகுந்து) என்றும், (புந்தியிற்புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்தவழகன்) என்றும், (உள்ளுவாருள்ளிற்றெல்லாமுடனிருந்தறிதி) என்றும், சொல்லுகிறபடியே லக்ஷ்மீஸஹிதனாய், விலக்ஷணவிக்ரஹயுக்தனாய்க்கொண்டு, ஹ்ருதயகமலத்துக்குள்ளே ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் ஸதாவலோகநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கு மிருப்பு.

[௫.] அர்சாவதாரமாவது - (தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவந்தானே தமருகந்த தெப்பேர்மற்றப்பேர்) என்கிறபடியே தனக்கென்ன ஓருருவும், ஓர்பெயரும் இன்றிக்கே ஆச்ரிதருகந்தவடிவே வடிவாகவும், அவர்களிட்டபெயரே பெயராகவும், ஸர்வஜ்ஞனா யிருக்கச்செய்தே அஜ்ஞனைப்போலேயும், ஸர்வசக்தனா யிருக்கச்செய்தே அசக்தனைப்போலேயும், அவாப்தஸமஸ்தகாமனாயிருக்கச்செய்தே ஸாபேக்ஷனைப்போலேயும், ரக்ஷகனாயிருக்கச்செய்தே ரக்ஷ்யம்போலேயும், ஸ்வஸ்வாமிபாவத்தை மாறாடிக்கொண்டு கண்ணுக்குவிஷயமாம்படி ஸர்வஸுலபனாய்க்கொண்டு, கோயில்களிலும், க்ருஹங்களிலும், தேசகாலாவதி யின்றிக்கே எழுந்தருளியிருக்கும் நிலை.

(௩.) [௧.] புருஷார்த்தங்களில், தர்மமாவது-ப்ராணிரக்ஷணத்துக் குறுப்பாகப்பண்ணும் வ்ருத்தி விசேஷங்கள்.

[௨.] அர்த்தமாவது - வர்ணாச்ரமாநுரூபமாக தநதாந்யங்களை ஸங்க்ரஹித்து தேவதாவிஷயங்களிலும், பைத்ருகமான கர்மங்களிலும், ப்ராணிகள் விஷயமாகவும், உத்க்ருஷ்டமான தேசகால பாத்ரங்களையறிந்து, தர்மபுத்தியா வ்யயிக்கை.

[௩.] காமமாவது - (A) ஐஹ லௌகிகமாயும், (B) பாரலௌகிகமாயும், த்விவிதமாயிருக்கும்.

கேவலம் - ஶுத்தாத்மாநுபவ விரோதியான ஸம்ஸாரத்தினுடைய விமோசநத்திலே மாத்ரமிறே யிவனுக்கிச்சை யுள்ளது. ஆக முமுக்ஷுக்க ளென்கிறது - ஐச்வர்யப்ராப்திகாமதயா ஸம்ஸார விமோசநத்தி லிச்சைபிறந்தவனை. ஐச்வர்யப்ராப்தி காமர்கள்தான் - உபாஸகர் என்றும் ப்ரபன்னர் என்றும் த்விவிதமா யிருக்கையாலே அத்தை அருளிச்செய்கிறார்—இதுதானித்யாதி.

(A) இஹலோகத்தில் காமமாவது - பித்ரு மாத்ரு ரத்ந தந தாந்ய வஸ்த்ர ராந்ந பாந புத்ர மித்ர களத்ர பஸு ம்ருஹ க்ஷேத்ர சந்தந குஸும தாம்பூலாதி பதார்த்தங்களில் ஸ்பர்சாதி விஷயாநுபவத்தால் வந்த ஸுக விசேஷங்கள்.

(B) பரலோகத்தில் காமமாவது - இதில் விலக்ஷணமாய், தேஜோ ரூபமான ஸ்வர்காதி லோகங்களிலே சென்று, பசி தாஹ சோக மோஹ ஜராமரணாதிகள் இன்றிக்கே, ஆர்ஜித்த புண்யத்துக்கீடாக அம்ருதபாநம் பண்ணி, அப்ஸரஸ்ஸுக்களோடே ஸ்பர்சாதி விஷயாநுபவம்பண்ணுகை.

[ச.] ஆத்மாநுபவமாவது - து:கநிவ்ருத்தி மாத்ரமான கேவலாத்மாநுபவ மாத்ரத்தையும் மோக்ஷமென்று சொல்லுவர்கள்.

[ரு.] இனி, (பகவதநுபவ ரூபமான) † பரமபுருஷார்த்த லக்ஷணமோக்ஷமாவது - ப்ராரப்த கர்மசேஷமாய் அவஸ்ய மநுபாவ்யமான புண்யபாபங்கள் நசித்து, (அஸ்தி-ஜாயதே - பரிணமதே-விவர்த்ததே - அபக்ஷீயதே-விநஸ்யதி) என்கிறபடியே ஷட்பாவ விகாராஸ்பதமாய், தாபத்ரயாஸ்ரயமாய், பகவத் ஸ்வரூபத்தை மறைப்பித்து, விபரீதஜ்ஞாநத்தை ஜநிப்பிக்கக்கடவதாய், ஸம்ஸாரவர்த்தகமான ஸ்தூல சரீரத்தை உபேக்ஷையோடே பொகட்டு, ஸுஷும்நா நாடியாலே ப்ரஹ்மரந்த்ரகபாலத்தை பேதித்துப் புறப்பட்டு, ஸூக்ஷ்ம சரீரத்தோடே * வானேறவழிபெற்று, * மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தினன்னடுவுளன்னதோரெல்லையினூடுபோய், ஸூக்ஷ்ம சரீரத்தையும் வாஸநாரேணுவையும் விரஜாஸ்நாநத்தாலேகழித்து, ஸகலதாபங்களுமாறும்படி அமாநவ கரஸ்பர்சமும் பெற்று, சுத்தஸத்வாத்மகமாய், பஞ்சோபநிஷண்மயமாய், ஜ்ஞாநாநந்தஜநகமாய், பகவதநுபவைகபரிகரமாய், *ஒளிக்கொண்ட சோதியுமாய் இருக்கிற அப்ராக்ருத விக்ரஹத்தைப்பெற்று, * முடியுடைவானவர் முறைமுறையெதிர்கொள்ள, நிரதிசயாநந்த மயமான * திருமாமணி மண்டபத்தை ப்ராபித்து, லக்ஷ்மீஸஹிதனாய், பூமிநீளா நாயகனாய், விலக்ஷணவிக்ரஹயுக்தனாய், * குழுமித்தேவர் குழாங்கள் கைதொழச் சோதிவெள்ளத்தினுள்ளே யெழுவதோருருவான ஸ்ரீவைகுண்டநாதனை நித்யாநுபவம்பண்ணி, நித்யகிங்கரஸ்வபாவனாகை.

(ச.) [க.] உபாயங்களில், கர்ம யோகமாவது - யஜ்ஞ, தாந, தபோ, த்யாந, ஸந்த்யாவந்தந, பஞ்சமஹாயஜ்ஞ, அக்நிஹோத்ர, தீர்த்தயாத்ரா, புண்யக்ஷேத்ரவாஸ, க்ருச்ர, சாந்த்ராயண, புண்யநதீஸ்நாந, வ்ரத, சாதுர்மாஸ்ய, பலமூலாசந, சாஸ்த்ராப்யாஸ, ஸமாராதந, ஜப, தர்ப்பணாதி கர்மாநுஷ்டாநத்தால் வந்த காயசோஷணத்தாலே பாபநாசம் பிறந்து, அத்தாலே இந்த்ரியத்வாரா ப்ரஸரிக்கிற தர்மபூத ஜ்ஞாநத்துக்கு ஸ்பர்சாதிகள் விஷயமல்லாமையாலே விஷயஸாபேக்ஷைபிறந்து, * யம நியம ஆஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார த்யாந தாரணஸமாதிரூபமான அஷ்டாங்கயோக க்ரமத்தாலே யோகாப்யாஸகாலத்தளவும் ஜ்ஞாநத்துக்கு ஆத்மாவை விஷயமாக்குகை. இதுதான் ஜ்ஞாநயோகத்துக்கு ஸஹகாரியுமாய், ஐஸ்வர்யத்துக்குப்ரதாநஸாதநமுமாயிருக்கும்.

† குண்டலிதவாக்யம் சிலதாளகோசங்களிலில்லை.

[௨] ஜ்ஞாநயோகமாவது-இப்படி யோகஜந்யமான ஜ்ஞாநத்துக்கு ஹ்ருதயகமலம், ஆதித்யமண்டலம் தொடக்கமான ஸ்தலவிஶேஷங்களில் எழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனை விஷயமாக்கி, அவ்விஷயந்தன்னை ஶங்கசக்ர கதா தராமாய், பீதாம்பரயுக்தமாய், கிரீடாதி நூபுராந்த திவ்யபூஷணாலங்க்ருதமாய், லக்ஷ்மீஸஹிதமாகவும் அநுபவித்து, யோகாப்யாஸ க்ரமத்தாலே அநுபவகாலத்தைப் பெருக்கி, அநவரத பாவநாரூபமாக்குகை. இதுதான் பக்தியோகத்துக்கு ஸஹகாரியுமாய், கைவல்ய மோக்ஷத்துக்கும் ப்ரதாநஸாதநமுமாய் இருக்கும்.

[௩.] பக்தியோகமாவது-இப்படி தைலதாராவதவிச்சின்னஸ்ம்ருதிஸந்தாநரூபமான அநுபவம் ப்ரீதிரூபாபந்நமாகையும், அது தன்னை யறியப்பார்த்தால் ப்ராரப்த சர்மங்கழிகையும், ஸாதந ஸாத்யங்களை யநுஸந்தித்து, அதினுடைய ஸங்கோச விகாஸமாம்படி பரிணமிப்பிக்கையும்.

[௪.] ப்ரபத்த்யுபாயமாவது-இப்படி கர்ம ஜ்ஞாநஸஹக்ருதையான பக்தியோகத்தில் அஶக்தர்க்கும் அப்ராப்தர்க்கும் ஸுகரமுமாய், ஶீக்ர பலப்ரதமுமாய், உபாயம் ஸக்ருத்தாகையாலே உபாயாநுஷ்டாநஸமநந்தரமுண்டாகக்கடவதான பகவத்விஷயாநுபவங்களெல்லாம் ப்ராப்யகோடி கடிதங்களாகையாலே ஸ்வரூபாநுரூபமாயிருக்கும்.

இதுதான் (A) ஆர்த்தரூப ப்ரபத்தியென்றும், (B) த்ருப்தரூப ப்ரபத்தியென்றும், இரண்டுபடிப்பட்டிருக்கும்.

(A) ஆர்த்தரூபப்ரபத்தியாவது-நிர்ஹேதுகபகவத்கடாக்ஷமடியாக ஶாஸ்த்ராப்யாஸத்தாலும், ஸதாசார்யோபதேஶத்தாலும், யதாஜ்ஞாநம் பிறந்தவாறே, பகவதநுபவத்துக்கு விபரீதமான தேஹஸம்பந்தமும், தேஶஸம்பந்தமும், தேஶிகருடையஸஹவாஸமும் து:ஸ்ஸஹமாய், பகவதநுபவத்துக்கு ஏகாந்தமாம்படி விலக்ஷணமான தேஹத்தையும், தேஶத்தையும், தேஶிகரையும் ப்ராபிக்கையில் த்வரைவிஞ்சி, * ஓயுமூப்புப்பிறப்பிறப்புப்பிணி வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்தானாகையாலே, (திருவேங்கடத்தானே புகலொன்றில்லா வடியேன்) (வேங்கடத்துறைவார்க்குநம:) என்று பூர்ணப்ரபத்திபண்ணி, (பலநீகாட்டிப்படுப்பாயோ) (இன்னங்கெடுப்பாயோ) (இக்கரையேறியிளைத்திருந்தேன் இனியடையவருளாய்) (திருவாணை நின்னாணைகண்டாய்) (இனிநான்போகலொட்டேன்) என்று தடுத்தும், வளைத்தும் பெறுகை.

(B) த்ருப்தரூப ப்ரபத்தியாவது - ஶரீராந்தர ப்ராப்தியிலும் ஸ்வர்க நரகாநுபவங்களிலும் விரக்தியும் பீதியும் பிறந்து, அதினுடைய நிவ்ருத்திக்கும், பகவத்ப்ராப்திக்கும், உறுப்பாக ஸதாசார்யோபதேஶ க்ரமத்தாலே உபாயஸ்வீகாரம்பண்ணி, விபரீதப்ரவ்ருத்திநிவ்ருத்தராய், வேதவிஹிதமானவர்ணாஶ்ரமாநுஷ்டாநமும், பகவத்பாகவத கைங்கர்யமும், மாநஸ வாசிக காயிகங்களாலே யதாபலமநுஷ்டித்து, ஈஶ்வரன்-ஶேஷியாய், நியந்தாவாய், ஸ்வாமியாய், ஶரீரியாய், வ்யாபகனாய், தாரகனாய், ரக்ஷகனாய், போக்தாவாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியாய், ஸர்வஸம்பூர்ணனாய், அவா

ப்தஸமஸ்தகாமனாய் இருக்கிற ஆகாரத்தையும், தான்-அவனுக்குஶேஷமாய் நியாம்யமாய், ஸ்வமாய், ஶரீரமாய், வ்யாப்யமாய், தார்யமாய், ரக்ஷ்ய மாய், போக்யமாய், அஜ்ஞனாய், அஶக்தனாய், அபூர்ணனாய், ஸாபேக்ஷனாய் இருக்கிற ஆகாரத்தையும், அநுஸந்தித்துக்கொண்டு (களைவாய்துன்பங் களை யாதொழிவாய் களைகண்மற்றிலேன்) என்று உபாயத்தில் ஸர்வபாரங்களையும் அவன்பக்கலிலே போகட்டு, நிர்பரனாயிருக்கை.

[௫.] ஆசார்யாபிமாநமாவது - இவை யொன்றுக்கும் ஶக்தனன்றிக்கே யிருப்பானொருவனைக் குறித்து, இவனுடைய இழவையும் இவனைப்பெற்றால் ஈஶ்வரனுக்குண்டான ப்ரீதியையும் அநுஸந்தித்து, ஸ்தநந்தயப்ரஜைக்கு வ்யாதியுண்டானால் அது தன்குறையாக நினைத்து ஔஷதஸேவைபண்ணும் மாதாவைப்போலே இவனுக்காகத் தான் உபாயாநுஷ்டாநம்பண்ணி ரக்ஷிக் கவல்ல பரமதயாளுவான மஹாபாகவதன் அபிமாநத்திலே ஒதுங்கி, (வல் லபரிசுவருவிப்பரேலதுகாண்டும்) என்று சொல்லுகிறபடியே ஸகலப்ரவ் ருத்தி நிவ்ருத்திகளையும் அவனிட்ட வழக்சாக்குகை. எம்பெருமான் தனி த்து நித்ய விதேயப்ராப்யனாகா நிற்கச்செய்தே ஸகலதேவதாந்தர்யாமியா ய்க்கொண்டு ப்ராப்யனாகிறாப்போலே இவ்வாசார்யாபிமாநமும் தனியே உபாய மாகாநிற்கச்செய்தேயும், எல்லா உபாயங்களுக்கும் ஸஹகாரியுமாய் ஸ்வதந்த்ரமுமாய் இருக்கும்.

(௫.) [௧] விரோதிவர்க்கத்தில், ஸ்வரூபவிரோதியாவது - தேஹாத்மா பிமாநமும், அந்யஶேஷத்வமும், ஸ்வஸ்வாதந்த்ர்யமும்.

[௨.] பரத்வவிரோதியாவது-தேவதாந்தரபரத்வ ப்ரதிபத்தியும், ஸமத் வப்ரதிபத்தியும், அவதாரவிஷயத்தில் மாநுஷ ப்ரதிபத்தியும், அர்சாவதார விஷயத்தில் அஶக்தியோக ப்ரதிபத்தியும்.

[௩.] புருஷார்த்த விரோதியாவது - புருஷார்த்தாந்தரங்களிலிச்சையும், தானுகந்த பகவத்கைங்கர்யங்களிலிச்சையும்.

[௪.] உபாயவிரோதியாவது-உபாயாந்தரவைலக்ஷண்ய ப்ரதிபத்தியும், உபாயலாகவமும், உபேயகௌரவமும், விரோதிபாஹுள்யமும்.

[௫.] ப்ராப்திவிரோதியாவது-ப்ராரப்த ஶரீரஸம்பந்தமும், அநுதா பஶூந்யமாய் குருவாய் ஸ்திரமாய் இருந்துள்ள பகவதபசார பாகவதாப சார அஸஹ்யாபசாரங்களும் - இவை எல்லாவற்றுக்கும் விரோதியென்று பேராகக்கடவது. அந்நதோஷம் - ஜ்ஞாந விரோதியாகக்கடவது. ஸஹவாஸ தோஷம் - போகவிரோதியாகக்கடவது. அபிமாநம் - ஸ்வரூபவிரோதியா கக்கடவது.

இப்படி அர்த்தபஞ்சக ஜ்ஞாநம்பிறந்து முமுக்ஷுவாய் ஸம்ஸாரத்திலே வர்த்திக்கிற சேதநனுக்கு மோக்ஷஸித்தியளவும் ஸம்ஸாரம் மேலிடாதபடி காலக்ஷேபம்பண்ணும் க்ரமம் - வர்ணாஶ்ரமாநுரூபமாகவும், வைஷ்ணவத் வாநுரூபமாகவும், அஶநாச்சாதநங்களை ஸம்பாதித்து, (யதந்ந: புருஷோ பவதி ததந்நா ஸ்தஸ்ய தேவதா:) என்கிறபடியே ஸகல பதார்த்தங்களையும் பகவத்

விஷயத்திலே நிவேசித்து, யதாபலம் ஸாமவதகிஞ்சித்காரமும்பண்ணி, தேஹதாரண மாத்ரத்தை ப்ரஸாத ப்ரதிபத்தியோடே ஜீவிக்கையும், வருந்தியும் தத்வஜ்ஞாநம் பிறப்பித்த ஆசார்யன் ஸந்நிதியிலே-கிஞ்சித்காரத்தோடே அவனுக்கபிமதமாக வர்திக்கையும், ஈஶ்வரன் ஸந்நிதியிலே - தன்னுடைய நீசத்வத்தையநுஸந்திக்கையும், ஆசார்யன் ஸந்நிதியில் - தன்னுடைய அஜ்ஞதையை அநுஸந்திக்கையும், ஸ்ரீவைஷ்ணவ ஸந்நிதியில் - தன்னுடைய பாரதந்த்ர்யத்தை அநுஸந்திக்கையும், ஸம்ஸாரிகள் முன்னில் - தன்னுடைய வ்யாவ்ருத்தியை அநுஸந்திக்கையும், ப்ராப்யத்தில் - த்வரையும், ப்ராபகத்தில் - அத்யவஸாயமும், விரோதியில் - பயமும், தேஹத்தில் - அருசியும், ஆர்த்தியும், ஸ்வரூபத்தில் - உணர்த்தியும், ஸ்வரக்ஷணத்தில் - அஶக்தியும், உத்தேஶ்யவிஷயத்தில் - கௌரவமும், உபகாரவிஷயத்தில் - க்ருதஜ்ஞதையும், உத்தாரகப்ரதிபத்தியும், அநுவர்த்திக்கையும்வேணும்.

இப்படிஜ்ஞாநாநுஷ்டாநங்களோடே கூடிவர்திக்குமவன் - ஈஶ்வரனுக்குப் பிராட்டிமாரிலும்,நித்யமுக்தரிலும் அத்யந்தாபிமத விஷயமாகக்கடவன்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

அர்த்தபஞ்சகம் முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீவசநபூஷணம்.

ஸ்ரீவசநபூஷணத்துக்கே உரியனவாய், இதினிருவகையான ப்ரகரணபேதம் முதலியதைக்காட்டும் தனியன்கள்.

ஆறுப்ரகரணமாக வகுக்கும் ஶ்லோகம்.

(க.) புருஷகாரவைபவஞ்ச (உ.) ஸாதநஸ்ய கௌரவம் (ங.)
தததிகாரிக்ருத்யம் (ச) அஸ்ய ஸத்குருபஸேவநம் ।
(ரு.) ஹரிதயாமஹேதுகீம் (சு.) குரோருபாயதாஞ்சய:
வசநபூஷணேऽவதஜ் ஜகத் குருர் தமாஶ்ரயே ॥

ஸாங்காவிலத்ரவிடஸம்ஸ்க்ருதரூபவேத
ஸாரார்த்தஸங்க்ரஹமஹாரஸவாக்யஜாதம் ।
ஸர்வஜ்ஞலோககுரு நிர்மிதமார்யபோக்யம்
வந்தே ஸதா வசநபூஷண திவ்யஶாஸ்த்ரம் ॥†

ஆகண்டோத்கண்ட வைகுண்டப்ரியாணுங் கண்டபூஷணம் ।
குருணா ஜகதா முக்தம் வ்யாப்தம் வசநபூஷணம் ॥

---

† ஸ்ரீ வசநபூஷண மீமாம்ஸா மங்களஶ்லோகம்.

ஆறுப்ரகரணமாக வகுக்கும் பாட்டு.

(க.) பேறுதருவிக்குமவள்தன் பெருமை (உ.) யாறு (௩.) பெறுவான் முறை (௪.) யவன், கூறுகுருவைப்பனுவல் (௫.) கொள்வதிலே யாகிய குளிர்ந்தவருள்தான், (௬.) மாறில்புகழ்நற்குருவின்வண் மையோடெலாம்வசன பூடணமதில், தேறிடநமக்கருள்முடும் பை யிறைவன்கழல்கள்சேரென்மனனே.

ஒன்பது ப்ரகரணமாக வகுக்கும் பாட்டு.

(க.) திருமாமகள்தன் சீரருளேற்றமும்
(உ.) திருமால்திருவடி சேர்வழிநன்மையும்
(௩.) அவ்வழியொழிந்தன வனைத்தின்புன்மையும்
(௪.) மெய்வழியூன்றிய மிக்கோர்பெருமையும்
(௫.) ஆரணம்வல்லவ ரமருநன்னெறியையும்
(௬.) நாரணன்றுள்தரு நற்குருநீதியும்
(௭.) சோதிவானருள் தூயமாகுருவின்
பாதமாமலர் பணிபவர்தன்மையும்
(௮.) தீதில்வானவர் தேவனுயிர்களை
ஏதுமின்றி யெடுக்கும்படியையும்
(௯.) மன்னியவின்பமு மாகதியுங்குரு
என்னுநிலைபெறு மின்பொருடன்னையும்
அசைவிலாவேத மதனுளனைத்தையும்
வசனபூடண வழியாலருளிய
மறையவர்சிகாமணி வண்புகழ்முடும்பை
இறையவனெங்கோ னேருலகாரியன்
தேன்மலர்ச்சேவடி சிந்தைசெய்பவர்
மாநிலத்தின்பம தெய்திவாழ்பவரே.

லோகாசார்யக்ருதே லோகஹிதே வசநபூஷணே !
தத்வார்த்ததர்ஶிநோ லோகே தந்நிஷ்டாஶ்ச ஸுதுர்லபா: ||
ஜகதாசார்யரசிதே ஸ்ரீமத்வசநபூஷணே !
தத்வஜ்ஞாநஞ்ச தந்நிஷ்டாம் தேஹி நாத யதீந்த்ர மே || †

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

---

† இந்த ஶ்லோகத்வயம் புராதன தாளகோசங்களிலில்லை. பெரியோர்களும் அநுஸந்திப்பதுமில்லை. இவைமணவாளமா முனிகளருளிச்செய்த தென்று பெரியோர்களருளிச் செய்வர்கள்.

முதல்ப்ரகரணம்.

—[உபோத்காதம்.]—

வேதார்த்தம் அறுதியிடுவது-ஸ்ம்ருதிதிஹாஸ புராணங்களாலே. (க). ஸ்ம்ருதியாலே - பூர்வபாகத்தில் அர்த்தம் அறுதியிடக்கடவது; மற்றையிரண்டாலும்-உத்தரபாகத்தில் அர்த்தம் அறுதியிடக்கடவது. (உ). இவையிரண்டிலும் வைத்துக்கொண்டு, இதிஹாஸம் ப்ரபலம். (௩). அத்தாலே அது முற்பட்டது. (௪).

—[புருஷகாரோபாயவைபவப்ரகரணம் ॥ ௬ - ல் - க ॥]—

இதிஹாஸஸ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால் - சிறையிருந்தவள் ஏற்றஞ்சொல்லுகிறது; மஹாபாரதத்தால் - தூதுபோனவன் ஏற்றஞ்சொல்லுகிறது.(௫). இவையிரண்டாலும் - புருஷகாரவைபவமும், உபாயவைபவமும் சொல்லிற்றாயிற்று. (௬). புருஷகாரமாம்போது - க்ருபையும், பாரதந்த்ர்யமும், அநந்யார்ஹத்வமும் வேணும். (எ). பிராட்டி முற்படப்பிரிந்தது - தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக; நடுவிற்பிரிந்தது - பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக; அநந்தரம்பிரிந்தது - அநந்யார்ஹத்வத்தை வெளியிடுகைக்காக. (அ). ஸம்ஸ்லேஷ விஸ்லேஷங்களிரண்டிலும் - புருஷகாரத்வந் தோற்றும். (௯). ஸம்ஸ்லேஷதசையில் - ஈஸ்வரனைத்திருத்தும்; விஸ்லேஷதசையில் - சேதநனைத் திருத்தும். (க0). இருவரையும் திருத்துவது முபதேசத்தாலே. (கக). உபதேசத்தாலே யிருவருடையவும் கர்மபாரதந்த்ர்யமுங்குலையும். (கஉ). உபதேசத்தால் மீளாதபோது - சேதநனை அருளாலேதிருத்தும்; ஈஸ்வரனை அழகாலேதிருத்தும். (க௩). * அறியாத அர்த்தங்களை அடைய அறிவித்து, ஆசார்யக்ருத்யத்தையும், புருஷகாரக்ருத்யத்தையும், உபாயக்ருத்யத்தையும், தானே யேறிட்டுக்கொள்ளுகையாலே மஹாபாரதத்தில் உபாயவைபவஞ்சொல்லிற்றாயிற்று. (க௪). புருஷகாரத்துக்கும், உபாயத்துக்கும்,வைபவமாவது-தோஷத்தையும்,குணஹாநியையும்பார்த்து உபேக்ஷியாத அளவன்றிக்கே, அங்கீகாரத்துக்கு அவைதன்னையே பச்சையாக்குகை. (க௫) இரண்டு-மிரண்டுங் குலையவேணு மென்றிருக்கில், இரண்டுக்கும் - இரண்டு முண்டாய்த்ததாம். (க௬). இரண்டுங் குலைந்ததென்றிருக்கில், இத்தலைக்கிரண்டுமுண்டாய்த்ததாம். (கஎ). ராக்ஷஸிகள் தோஷம் பரஸித்தம். (கஅ). ஜிதேந்த்ரியரில் தலைவனாய், ஆஸ்திகாக்ரேஸரனாய், (கேஸவஸ்யாத்மா) † என்று க்ருஷ்ணனுக்கு தாரகனாயிருக்கிற அர்ஜுநனுக்கு தோஷமேதென்னில், பந்துக்கள்பக்கல்-ஸ்நேஹமும், காருண்யமும், வதபீதியும். (க௯). த்ரௌபதிபரிபவங் கண்டிருந்தது - க்ருஷ்ணாபிப்ராயத்தாலே ப்ரயாநதோஷம். (உ0). பாண்டவர்களையும் நிரஸிக்க ப்ராப்தமாயிருக்க, வைத்தது - த்ரௌபதியுடைய மங்களஸூத்ரத்துக்காக. (உக). அர்ஜுநனுக்கு - தூத்யஸாரத்யங்கள் பண்ணிற்றும், ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்றும் இவளுக்காக. (உஉ).

[ஆறுப்ரகரணங்களில் ஒன்றுவதான புருஷகாரோபாயவைபவ ப்ரகரணம்.]

முற்றிற்று.

---

† பாரதம் - த்ரோண - கக - ௩அ.

—[உபாயப்ரகரணம் ‖ ௬-ல்-௨ ‖]—

ப்ரபத்திக்கு-தேஶநியமமும், காலநியமமும், ப்ரகாரநியமமும், அதிகாரி நியமமும், ஃபலநியமமும் இல்லை. (௨௩). விஷயநியமமே உள்ளது. (௨௪). கர்மத்துக்கு - புண்யக்ஷேத்ரம், வஸந்தாதிகாலம், ஶாஸ்த்ரோக்தங்களான தத்தத் ப்ரகாரங்கள், த்ரைவர்ணிகர், என்றிவையெல்லாம் வ்யவஸ்திதங்களாயிருக்கும். (௨௫). (ஸ ஏஷ தேஶ: கால:) † என்கையாலே இதுக்கு தேஶகால நியமமில்லை. (௨௬). இவ்வர்த்தம்-மந்த்ர ரத்நத்தில் ப்ரதமபதத்திலே ஸுஸ்பஷ்டம். (௨௭). ப்ரகாரநியதியில்லையென்னுமிட மெங்குங்காணலாம். (௨௮). த்ரௌபதீ-ஸ்நாதையாயன்றே ப்ரபத்திபண்ணிற்று; அர்ஜுநன் - நீசர்நடுவேயிறே யிவ்வர்த்தங்கேட்டது. (௨௯). ஆகையால் ஶுத்யஶுத்திகளிரண்டுந் தேடவேண்டா, இருந்தபடியே அதிகாரியாமித்தனை. (௩0). இவ்விடத்திலே வேல்வெட்டிப்பிள்ளைக்குப் பிள்ளையருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. (௩௧). அதிகாரிநியமமின்றிக்கே ஒழிந்தபடி யென்னென்னில்; தர்மபுத்ராதிகளும், த்ரௌபதியும், காகமும், காளியனும், ஸ்ரீகஜேந்த்ராழ்வானும், ஸ்ரீவிபீஷணாழ்வானும், பெருமாளும், இளையபெருமாளும், தொடக்கமானவர்கள் ஶரணம் புகுருகையாலே அதிகாரிநியமமில்லை. (௩௨). ஃபலநியமமின்றிக்கேயொழிந்தபடியென்னென்னில்; தர்மபுத்ராதிகளுக்கு ஃபலம்-ராஜ்யம். த்ரௌபதிக்கு ஃபலம் - வஸ்த்ரம். காகத்துக்கும், காளியனுக்கும் ஃபலம்-ப்ராணம். ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு ஃபலம்-கைங்கர்யம். ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு ஃபலம் ராமப்ராப்தி. பெருமாளுக்கு ஃபலம்-ஸமுத்ரதரணம். இளையபெருமாளுக்கு ஃபலம்-ராமாநுவ்ருத்தி. (௩௩). விஷயநியமமாவது-குணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகை. (௩௪). பூர்த்தியுள்ளதும் - அர்சாவதாரத்திலே. (௩௫). ஆழ்வார்கள் பலவிடங்களிலும் ப்ரபத்திபண்ணிற்றும், அர்சாவதாரத்திலே. (௩௬). (பூர்ணம்) ‡ என்கையாலே, எல்லா குணங்களும் புஷ்கலங்கள். (௩௭). ப்ரபத்திக்கு அபேக்ஷிதங்களான ஸௌலப்யாதிகள் - இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாஶிப்பது இங்கே. (௩௮). பூர்த்தியையும், ஸ்வாதந்த்ர்யத்தையும் குலைத்துக்கொண்டு, தன்னை அநாதரிக்கிறவர்களைத் தான் ஆதரித்து நிற்கிறவிடம். (௩௯). பூகத ஜலம்போலே-அந்தர்யாமித்வம். ஆவரண ஜலம் போலே-பரத்வம். பாற்கடல்போலே-வ்யூஹம். பெருக்காறுபோலே-விபவங்கள். அதிலே தேங்கின மடுக்கள்போலே - அர்சாவதாரம். (௪0). இதுதான் ஶாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே விஷயாந்தரங்களிலே மண்டி, விமுகராய்ப்போரும் சேதநருக்கு வைமுக்யத்தைமாற்றி, ருசியை விளைக்கக் கடவதாய், ருசிபிறந்தாலுபாயமாய், உபாயபரிக்ரஹம்பண்ணினால் போக்யமுமாயிருக்கும். (௪௧). இதில் ப்ரபத்திபண்ணும் அதிகாரிகள்- மூவர். (௪௨). அஜ்ஞரும், ஜ்ஞாநாதிகரும், பக்திபரவஶரும். (௪௩). அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் - அஸ்மதாதிகள். ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் - பூர்வாசார்யர்கள். பக்திபாரவஶ்யத்தாலே ப்ரபந்நர் - ஆழ்வார்கள். (௪௪). இப்படி சொல்லுகிறதும் ஊற்றத்தைப்பற்ற. (௪௫). இம்மூன்றும் மூன்று தத்வத்தையும்

---

† ராமா - யு - ௧௭ - ௫௭.

‡ ஶதபதப்ரா - ௧௪ - காண்டம், ௬ - ப்ரபாட . ௭ - அத்யா, ௪ - ப்ராம், ௧ - வா

பற்றிவரும். (சசு). (என்னுன்செய்கேன்) என்கிறவிடத்திலே இம்மூன்றுமுண்டு. (சஎ) அங்கொன்றைப்பற்றியிருக்கும். (சஅ). முக்யமதுவே. (சகூ). (அவிதீயாத:) † என்கிற ஸ்லோகத்திலே இம்மூன்றுஞ்சொல்லிற்று. (௫0) (இஷ்ம் ஸரணமஜ்ஞாநாம்). ‡ (௫க). ஸக்தி தன்னிலே அவஸ்யாபேக்ஷம் பிறந்தவாறே இதுதான் கொலேபக்கடவதாயிருக்கும். (௫உ). தன்னைப் பேணவும் பண்ணும், ஸரிக்கவும் பண்ணும். (௫௩). இந்த ஸ்வபாவவிஸேஷங்கள் - சல்யாணகுணங்களிலும், திருச்சரங்களிலும், திருநாமங்களிலும், திருக்குழலோசையிலும் காணலாம். (௫ச). இதுதன்னைப் பார்த்தால் பிதாவுக்குப்புத்ரன் எழுத்துவாங்குமாபோலே இருப்பதொன்று. (௫௫). இது தனக்கு ஸ்வரூபம் - தன்னைப்பொறுதொழிகை. (௫சு). அங்கம் தன்னை ஒழிந்தவற்றைப் பொருதொழிகை. (௫எ). உபாயம்-தன்னைப்பொறுக்கும். (௫அ). உபாயாந்தரம் - இரண்டையும் பொறுக்கும். (௫கூ). இது-இரண்டையும் பொருது. (சு0) ஹலத்துக்கு - ஆத்மஜ்ஞாநமும், அப்ரதிஷேயமுமே வேண்டுவது. (சுக). அல்லாதபோது-வங்யத்துக்கும், பூர்த்திக்கும், கொத்தையாம். (சுஉ) ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறேமென்று ஸீரமித்து அத்தை விளைத்துக் கொள்ளாதொழிகையே வேண்டுவது. (சு௩). ரக்ஷணத்துக்கபேக்ஷிதம் - ரக்ஷ்யபத்வாநுமதியே. (சுச). ¶ எல்லா உபாயத்துக்கும் பொதுவாகையாலும், சைதந்ய கார்யமாகையாலும், ப்ராப்திஉஸையிலும் அநுவர்த்திக்கையாலும், ஸ்வரூபாதிரேகி அல்லாமையாலும், அசித்வ்யாவ்ருத்தி வேஷத்தை ஸாயநமாக்கவொண்ணுது. (சு௫). அசித்வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜநம் - உபாயத்தில் உபகாரஸ்ம்ருதியும், உபேயத்தில் உகப்பும்., (சுசு). (உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்) என்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன் நினைவு. (சுஎ). அதுதானெப்போதும் உண்டு. (சுஅ). அதுபலிப்பது-இவன் நினைவுமாறினுல். (சுகூ). 'அந்திமகாலத்துக்குத் தஞ்சம், இப்போது தஞ்சம் என்? என்கிற நினைவுகொலேகை' யென்று ÷ ஜீயரருளிச்செய்தார். (எ0). ப்ராப்தாவும், ப்ராபகனும், ப்ராப்திக்கு உகப்பானும், அவனே. (எக). ஸ்வயத்நநிவ்ருத்தி - பாரதந்த்ர்யஹலம். ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி - ஸேஷத்வஹலம். (எஉ). பரப்ரயோஜந ப்ரவ்ருத்தி - ப்ரயத்நஹலம். தத்விஷயப்ரீதி-சைதந்யஹலம். (எ௩). அஹமர்யத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்யமென்னும்படி தாஸ்யமிறே அந்தரங்கநிரூபகம். (எச). இதுதான் வந்தேறியன்று. (எ௫). ஸ்வாதந்த்ர்யமும் அந்யஸேஷத்வமும், வந்தேறி. (எசு). ஸேஷத்வவிரோயி - ஸ்வாதந்த்ர்யம், தச்ஸேஷத்வவிரோயி - ததிதரஸேஷத்வம். (எஎ). அஹங்காரமாகிற ஆர்ப்பைத்துடைத்தால் ஆத்மாவுக்கழியாதபேர் அடியானென்றிறே. (எஅ). ஸீராமகுலாதிகளால் வரும்பேர் அநர்யஹேது. (எகூ). (ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய:) (அ0).

(ஆறுப்ரகரணங்களி லிரண்டாவதான உபாய ப்ரகரணம்)

முற்றிற்று.

---

† ஸ்ரீபட்டார்யமுக்தகம். ‡ லக்ஷ்மீதந்த்ரம். கஎ - க00.

¶ இதுதான் எல்லாவுபாயத்துக்கும் - என்று ஆயிவ்யாக்யாந பாடம்.

÷ ஜீயரருளிச்செய்தவார்த்தை - என்றும் ஜீயரருளிச்செய்வர் என்றும் பாடாந்தரம்.

—[அதிகாரிநிஷ்டாப்ரகரணம். சூ - ல் - ௩.]—

உபாயத்துக்கு - † பிராட்டியையும், த்ரௌபதியையும், திருக்கண்ணமங்கையாண்டானையும்போலே இருக்கவேணும். ‡ உபேயத்துக்கு - இளைய பெருமாளையும், பெரிய உடையாரையும், பிள்ளை திருநறையூர் அரையரையும், சிந்தயந்தியையும் போலே யிருக்கவேணும். (அக). பிராட்டிக்கும், த்ரௌபதிக்கும் வாசி - ஶக்தியும், அஶக்தியும். (அஉ). பிராட்டி-ஸ்வஶக்தியைவிட்டாள் ; த்ரௌபதி - லஜ்ஜையைவிட்டாள் ; திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான். (அ௩). பசியராயிருப்பார் - அட்டசோறும் உண்ணவேணும் அடுகிறசோறும் உண்ணவேணும் என்னுமாபோலே, காட்டுக்குப்போகிறபோது இளையபெருமாள்-பிரியில் தரியாமையை முன்னிட்டு 'அடிமை செய்யவேணும்' 'எல்லா அடிமையுஞ் செய்யவேணும்' 'ஏவிக்கொள்ளவும் வேணும்' என்றார்; படைவீட்டில் புகுந்தபின்பு காட்டில் தனியிடத்தில் ஸ்வயம்பாகத்திலே வயிற்றைப் பெருக்கினபடியாலே ஒப்பூணுண்ணமாட்டாதே, ஒரு திருக்கையாலே-திருவெண்கொற்றக் குடையையும், ஒரு திருக்கையாலே - திருவெண்சாமரத்தையுந் தரித்து அடிமைசெய்தார். (அச). பெரிய உடையாரும், பிள்ளை திருநறையூர் அரையரும், உடம்பை உபேக்ஷித்தார்கள். சிந்தயந்திக்கு-உடம்பு தன்னடையே போயிற்று. (அரு). உபாயத்துக்கு-ஶக்தியும், லஜ்ஜையும், யத்நமும், குலையவேணும்; உபேயத்துக்கு ப்ரேமமும், தன்னைப்பேணாமையும், தரியாமையும் வேணும். (அசு). இவனுக்கு வைதமாய் வருமதிறே த்யஜிக்கலாவது; ராகப்ராப்தமாய் வருமது த்யஜிக்க வொண்ணாதிறே. (அஎ). உபாயத்வாநுஸந்தாநம் - நிவர்த்தகம்; உபேயத்வாநுஸந்தாநம் - ப்ரவர்த்தகம். (அஅ). அப்ராப்தவிஷயங்களிலே ஸக்தனானவன் அது லபிக்கவேணு மென்றிராநின்றால், ப்ராப்தவிஷய ப்ரவணனுக்குச் சொல்லவேண்டாவிறே. (அகூ). அநுஷ்டாநமும், அநநுஷ்டாநமும் உபாயகோடியிலே அந்வயியாது. (கூ0). அநந்யோபாயத்வமும், அநந்யோபேயத்வமும், அநந்யதைவத்வமும், குலையும்படியான ப்ரவ்ருத்தி காணுகின்றோமிறே. (கூக). ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும். (கூஉ). உபாயபலமாய், உபேயாந்தர்பூதமாய் இருக்குமது உபாயப்ரதிபந்தகமாகாது. (கூ௩). * ஸாத்யஸமாநம் விளம்பாஸஹமென்றிறே ஸாதநத்துக்கேற்றம்; ஸாத்யப்ராவண்ய மடியாகவிறே ஸாதநத்திலிழிகிறது. (கூச). இவனுக்குப்பிறக்கும் ஆத்மகுணங்க ளெல்லாவற்றுக்கும் ப்ரதாநஹேது-இந்த ப்ராவண்யம். (கூரு). (மாற்பால்மனஞ்சுழிப்ப) (பரமாத்மநியோ ரக்த:) ¶ (கண்டுகேட்டுற்றுமோந்து.) (கூசு). ஆத்மகுணங்களில் ப்ரதாநம் - ஶமமும், தமமும். (கூஎ). இவை இரண்டுமுண்டானால் ஆசார்யன் கைபுகுரும். ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்த்ரங் கைபுகுரும். திருமந்த்ரங் கைபுகுந்தவாறே ஈஶ்வரன் கைபுகுரும். ஈஶ்வரன்கைபு

† உபாயத்தில் - என்றும் வ்யாக்யாந பாடாந்தரம்.

‡ உபேயத்தில் - என்றும் ஷை - பா. * ஸாத்யஸமாநம் என்கிற வாக்யம்பூர்வஸூத்ரஶேஷமாக ஆயிவ்யாக்யாநம்.

¶ நாரதபரிவ்ராஜகோபநிஷத் - ௩ - உபதேஶம்.

குந்தவாறே (வைகுந்தமாநகர் மற்றதுகையதுவே) என்கிறபடியே ப்ராப்ய பூமி கைபுகுரும். (௯௮). ப்ராப்யலாபம் - ப்ராபகத்தாலே. ப்ராபகலாபம் - திருமந்த்ரத்தாலே. திருமந்த்ரலாபம் - ஆசார்யனாலே. ஆசார்யலாபம் - ஆத்மகுணத்தாலே. (௯௯). இதுதான் - ஐஸ்வர்யகாமர்க்கும், உபாஸகர்க்கும், ப்ரபந்நர்க்கும் வேணும். (௧௦௦). மூவரிலும் வைத்துக்கொண்டு மிகவும் வேண்டுவது ப்ரபந்நனுக்கு. (௧௦௧). மற்றையிருவர்க்கும் - நிஷித்தவிஷய நிவ்ருத்தியேயமையும்; ப்ரபந்நனுக்கு - விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றம். (௧௦௨). இதுதான் சிலர்க்கு - அழகாலே பிறக்கும். சிலர்க்கு - அருளாலேபிறக்கும். சிலர்க்கு - ஆசாரத்தாலே பிறக்கும். (௧௦௩). பிறக்கும் க்ரமம் என்னென்னில், அழகு - அஜ்ஞாநத்தை விளைக்கும். அருள் - அருசியை விளைக்கும். ஆசாரம் - அச்சத்தை விளைக்கும். (௧௦௪). இவையும் ஊற்றத்தைப்பற்றச் சொல்லுகிறது. (௧௦௫.) அருசி பிறக்கும்போதைக்கு தோஷதர்சநம் அபேக்ஷிதமாயிருக்கும். (௧௦௬). அது த்யாகஹேதுவன்று. (௧௦௭). அப்ராப்ததையே த்யாகஹேது. (௧௦௮). பகவத்விஷயத்தில் இழிகிறதும் - குணங்கண்டன்று; ஸ்வரூபப்ராப்தமென்று. (௧௦௯). இப்படி கொள்ளாதபோது, குணஹீநமென்று நினைத்த தசையில் - பகவத்விஷய ப்ரவ்ருத்தியும், தோஷாநுஸந்தாநதசையில் - ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியுங்கூடாது. (௧௧௦). (கொடியவென்னெஞ்ச மவனென்றே கிடக்கும்) (அடியேன் நான் பின்னுமுன் சேவடியன்றிநயவேன்) - என்னாநின்றார்களிறே. (௧௧௧) குணக்ருத தாஸ்யத்திலுங் காட்டில் ஸ்வரூபப்ரயுக்தமான தாஸ்யமிறே ப்ரதாநம். (௧௧௨). அநஸூயைக்குப் பிராட்டி அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. (௧௧௩), பகவத்விஷய ப்ரவ்ருத்தி பின்னைச்சேருமோவென்னில், அதுக்கடி - ஸம்பந்தம். அதுதான் - ஔபாதிகமன்று, ஸத்தாப்ரயுக்தம். (௧௧௪). அந்த ஸத்தை ப்ராவண்ய கார்யமான அநுபவமில்லாதபோது குலையும்; அது குலையாமைக்காக வருமவையெல்லாம் அவர்ஜநீயங்களுமாய், ப்ராப்தங்களுமாய் இருக்கும்; ஆகையாலே பகவத்விஷய ப்ரவ்ருத்திசேரும். (௧௧௫). †

ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கும் - அஜ்ஞாநாசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதாநஹேது. (௧௧௬). ப்ராபகாந்தரம் - அஜ்ஞர்க்கு உபாயம். (௧௧௭). ஜ்ஞாநிகளுக்கபாயம். (௧௧௮). அபாயமாயிற்றது - ஸ்வரூப நாசகமாகையாலே. (௧௧௯). (நெறிகாட்டிநீக்குதியோ) என்னாநின்றதிறே. (௧௨௦). (வர்த்ததே மே மஹத்பயம்) ‡ என்கையாலே பயஜநகம்; (மாசுச:) என்கையாலே சோகஜநகம். (௧௨௧). இப்படி கொள்ளாதபோது - ஏதத் ப்ரவ்ருத்தியில் ப்ராயச்சித்த விதி கூடாது. (௧௨௨). திருக்குருகைப்பிரான்பிள்ளான் பணிக்கும்படி - 'மதிராபிந்து மிச்ரமான சாதகும்பமயகும்பகததீர்த்தஸலிலம்போலே, அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்'. (௧௨௩). ரத்நத்துக்குப் பலகரைபோலேயும், ராஜ்யத்துக் கெலுமிச்சம்பழம்போலேயும், பலத்துக்கு ஸத்ருசமன்று. (௧௨௪). தான் தரித்ரனாகையாலே தனக்குக் கொடுக்கலாவதொன்றுமில்லை. (௪௨௫). அவன் தந்தத்தைக் கொடுச்சு

† ௯-வது ப்ரகரணத்தில் ௨-வது ப்ரகரணம் இவ்விடத்தில் முடிகின்றது. ‡ ஜிதந்தா-௧.

மிடத்தில் அடைவிலே கொடுக்கில் அநுபாயமாம்; அடைவுகெடக்கொடுக்கில் களவு வெளிப்படும். (கஉசு). ஸர்த்ருஹோமத்தை வயிறு வளர்க்கைக் குறுப்பாக்குமாபோலே, இருவர்க்கும் அவத்யம். (கஉஎ). வேதாந்தங்களுபாயமாக விதிக்கிறபடி யென்னென்னில், (கஉஅ). ஔஷதஸேவை பண்ணுதவர்களுக்கு அபிமதவஸ்துக்களிலே அத்தைக்கலசி யிடுவாரைப்போலே ஈஶ்வரனைக்கலந்து விதிக்கிறதித்தனை. (கஉகூ). இத்தை ப்ரவர்த்திப்பித்தது பரஹிம்ஸையை நிவர்த்திப்பிக்கைக்காக. (கஙo). இதுதான் - பூர்வ விஹித ஹிம்ஸைபோலே, விதிநிஷேதங்க ளிரண்டுக்கும் குறையில்லை. (கஙக) அத்தை - ஶாஸ்த்ரவிஶ்வாஸத்துக்காக விதித்தது. இத்தை-ஸ்வரூப விஶ்வாஸத்துக்காக விதித்தது. (கஙஉ). அது தோல்புரையேபோம், இது மர்மஸ்பர்ஶி. (கஙங). இதுதான் - கர்மஸாத்யமாகையாலே து:ஷ்கரமுமாயிருக்கும். (கஙச). ப்ரபத்யுபாயத்துக்கு இக்குற்றங்களொன்றுமில்லை. (கஙரு). ஆத்மயாதாத்ம்யஜ்ஞாந கார்யமாகையாலே - ஸ்வரூபத்துக் குசிதமுமாய், (சிற்றவேண்டா) என்கிறபடியே நிவ்ருத்தி ஸாத்யமாகையாலே ஸுகரமுமாயிருக்கும். (கஙசு). பூர்ணவிஷயமாகையாலே, பெருமைக்கிடாகப் பச்சையிடவொண்ணுது. (கஙஎ). ஆபிமுக்யஸூசகமாத்ரத்திலே ஸந்தோஷம் விளையும். (கஙஅ). பூர்த்தி - கைவாங்காதே மேல்விழுகைக்கு ஹேதுவித்தனை. (கஙகூ). (பத்ரம் புஷ்பம்). † (அந்யத்பூர்ணுத்) ‡ (புரிவதுவும் புகைபூவே). (கசo). புல்லைக்காட்டி அழைத்துப் புல்லையிடுவாரைப்போலே ஃபல ஸாதநங்களுக்கு வேதமில்லை. (கசக). ஆகையாலே ஸுஸ்வரூபமாயிருக்கும். ¶ (கசஉ). இவன் அவனைப்பெற நினைக்கும்போது இந்தப்ரபத்தியும் உபாயமன்று. (கசங). அவன் இவனைப்பெற நினைக்கும்போது பாதகமும் விலக்கன்று. (கசச). இவையிரண்டும்-ஸ்ரீஸரதாழ்வான் பக்கலிலும், ஸ்ரீமஹாப்பெருமாள் பக்கலிலும் காணலாம். (கசரு). ஸ்ரீஸரதாழ்வானுக்கு-நன்மைதானே தீமையாயிற்று. ஸ்ரீமஹாப்பெருமாளுக்கு - தீமைதானே நன்மையாயிற்று. (கசசு). ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயஶ்சித்தமான ப்ரபத்திதானும் - அபராதகோடியிலேயாய், க்ஷாமணம்பண்ண வேண்டும்படி நில்லாநின்றதிறே. (கசஎ). நெடுநாள் அந்யபரையாய்ப்போந்த ஸார்யை லஜ்ஜாபயங்களின்றிக்கே ஸர்த்ருஸகாஶத்திலே நின்று 'என்னை அங்கீகரிக்கவேணும்' என்றபேக்ஷிக்குமாபோலே யிருப்பதொன்று இவன்பண்ணும் ப்ரபத்தி. (கசஅ). க்ருபையாலே வரும் பாரதந்த்ர்யத்தைக் காட்டில் ஸ்வாதந்த்ர்யத்தாலேவரும் பாரதந்த்ர்யம் ப்ரபலம். (கசகூ). இவ்வர்த்தத்தை வேதபுருஷன் அபேக்ஷித்தான். (கருo) அபேக்ஷாநிரபேக்ஷமாக - திருவடிக்கும், ஸ்ரீமஹாப்பெருமாளுக்கும் இதுண்டாயிற்று. (கருக). இவன் முன்னிடுமவர்களை அவன் முன்னிடுமென்னுமிடம் அபயப்ரதாநத்திலுங்காணலாம். (கருஉ). இருவர்முன்னிடுகிறதும் - தந்தாங் குற்றங்களை ஶமிப்பிக்கைக்காக. (கருங). ஸ்வரூபஸித்தியுமத்தாலே. (கருச). ஔபாதிகமுமாய் நித்யமுமான பாரதந்த்ர்யம் இருவர்க்கும் உண்டிறே. (கருரு). அநித்யமான இருவர் பாரதந்த்ர்யங் குலைவது மத்தாலே.

---

† கீதா - கூ - உசு. ‡ பார - உத்யோ. அஎ - கங.

¶ கூ-ல் ரு-வது ப்ரகரண மிவ்விடத்தில் முடிகின்றது.

(கடுசு). ஸஸாக்ஷிகமாகையாலே இவ் ஸம்பந்தத்தை இருவராலும் இல்லை செ
ய்யப்போகாது. (கடுஎ). (என்னை நெகிழ்க்கிலும்) (கோலமலர்ப்பாவைக்கன்
பாகிய). (கடுஅ). கர்மணிவ்யுத்பத்தியில் ஸ்வரூபகுணங்களால் வருகிற கர்த்
ருஸங்கோச ராஹித்யத்தை நினைப்பது. (கடுகூ). அதிகாரித்ரயத்துக்கும்
புருஷகாரம் அவர்ஜநீயம். (கசூ0). தனக்குத்தான் தேடும் நன்மை தீமை
யோபாதி விலக்காயிருக்கும். (கசூக). அழகுக்கிட்டசட்டை அணைக்கைக்கு
விரோதியாமாபோலே. (கசூஉ). (ஹாரோபி) * (கசூஙு). புண்யம்போலே,
பாரதந்த்ர்யமும் பராநுபவத்துக்கு விலக்கு. (கசூச). குணம்போலே, தோ
ஷநிவ்ருத்தி. (கசூடு). ஆபரணம் அநபிமதமாய், அழுக்கு அபிமதமாய், இரா
நின்றதிறே. (கசூசூ). (ஸ்நாநம் ரோஷஜநகம்) என்கிற வார்த்தையை ஸ்மரிப்
பது. (கசூஎ). (வஞ்சக்கள்வன்) (மங்கவொட்டு) (கசூஅ). வேர்ச்சூடுமவர்
கள் மண்பற்றுக்கழற்றுதாப்போலே ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே யாதரிக்
கும். (கசூகூ). பரமார்த்தனை இவனுடைய ஶரீரஸ்திதிக்கு ஹேது - கேவல
பகவதிச்சையிறே. (கஎ0). (திருமாலிருஞ்சோலைமலையே) என்கிறபடியே
உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை யிவனுடைய
ஶரீரைகதேஶத்திலேபண்ணும். (கஎக). அங்குத்தைவாஸம் ஸாதநம், இங்
குத்தைவாஸம் ஸாத்யம். (கஎஉ). (கல்லுங்கனைகடலும்) என்கிறபடியே
இது ஸித்தித்தால், அவற்றில் ஆதரம் மட்டமாயிருக்கும். (கஎஙு). (இளங்
கோயில்கைவிடேல்) என்றிவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியா யிருக்கும்.
(கஎச). ப்ராப்ய ப்ரீதிவிஷயத்வத்தாலும், க்ருதஜ்ஞதையாலும் பின்பவை
அபிமதங்களாயிருக்கும். (கஎடு). ஆகையாலே தோஷநிவ்ருத்திபோலே ஆந்
தரகுணமும் விரோதியாயிருக்கும். (கஎசூ) தோஷநிவ்ருத்திதானே தோஷ
மாமிறே. (கஎஎ). (தன்னால்வரும் நன்மை விலைப்பால்போலே; அவனால்வரும்
நன்மை முலைப்பால்போலே) என்று பிள்ளான் வார்த்தை. (கஎஅ). அவனை
யொழியத் தான் தனக்கு நன்மைதேடுகையாவது-ஸ்தநந்தயப்ரஜையை மாதா
பிதாக்கள் கையில் நின்றும் வாங்கி பாதுகனை ஆட்டுவாணியன் கையிலே
காட்டிக்கொடுக்குமாபோலே யிருப்பதொன்று. (கஎகூ). தன்னைத்தானேயி
றே முடிப்பான். (கஅ0). தன்னைத்தானே முடிக்கையாவது-அஹங்காரத்தை
யும், விஷயங்களையும்விரும்புகை. (கஅக). அஹங்காரம் அக்நிஸ்பர்ஶம்போ
லே. (எஅஉ). (நகாமகலுஷஞ்சித்தம்,) † (நஹிமேஜீவிதேநார்த்த:) ‡ (நதே
ஹம்) (எம்மாவீட்டுத்திறமும்) (கஅஙு). ப்ரதிகூல விஷயஸ்பர்ஶம்,விஷஸ்பர்
ஶம்போலே. அநுகூலவிஷயஸ்பர்ஶம்-விஷமிஶ்ரபோஜநம்போலே.(கஅச).
அக்நிஜ்வாலையைவிழுங்கி விடாய்கெடநினைக்குமாபோலேயும், ஆடுகிறபாம்
பின் நிழலிலே யொதுங்க நினைக்குமாபோலேயும்-விஷயப்ரவணனாய் ஸுகி
க்க நினைக்கை. (கஅடு). ¶ அசுணமாமுடியுமாபோலே-பகவதநுபவைகபர
னாய், ம்ருதுப்ரக்ருதியாயிருக்குமவன் விஷயதர்ஶநத்தாலே முடியும்படி.
(கஅசூ). (காட்டிப்படுப்பாயோ) என்னக்கடவதிறே. (கஅஎ). அஜ்ஞனை
விஷயப்ரவணன்-கேவல நாஸ்திகனைப்போலே, ஜ்ஞாநவானை விஷயப்ரவ

* ப்ரம்ஹவைவர்தபுராணே. க்ருஷ்ணஜந்மகண்டே உத்தரார்த்தே. சூஉ - அஙு.
† ஜிதந்தா க. ‡ ராமா ஸு. உசூ - டு. ¶ அசுணமா - பக்ஷிவிஶேஷம்.

ணன் - ஆஸ்திகநாஸ்திகனைப்போலே. (கஅஎ). கேவல நாஸ்திகனைத்திருத்தலாம்; ஆஸ்திகநாஸ்திகனை யொருநாளுந் திருத்தவொண்ணாது. (கஅகூ). இவையிரண்டும்-ஸ்வரூபேண முடிக்குமளவன்றிக்கே பாகவதவிரோதத்தையும் விளைத்து முடிக்கும். (ககூ0). நாமரூபங்களை யுடையராய் பாகவதவிரோதம் பண்ணிப்போருமவர்கள் உதிரபடம்போலே. (ககூக). மடிப்புடவை வெந்தால் உண்டையும் பாவும் ஒத்துக்கிடக்கும்; காற்றடித்தவாறே பறந்துபோம். (ககூஉ). 'ஈஶ்வரனவதரித்துப்பண்ணின * ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை' என்று ஜீயரருளிச்செய்வர். (ககூ௩). (அவமாநக்ரியா). (ககூச). பாகவதாபசாரந்தான்-அநேகவிதம். (ககூரு). அதிலேயொன்று - அவர்கள்பக்கல் ஜந்மநிரூபணம். (ககூசா). இது தான் அர்ச்சாவதாரத்தி லுபாதாந ஸ்ம்ருதியிலுங் காட்டில் க்ரூரம். (ககூஎ). அத்தை 'மாத்ருயோநி பரீக்ஷயோடொக்கும்' என்று ஶாஸ்த்ரஞ் சொல்லும். (ககூஅ). த்ரிஶங்குவைப்போலே கர்மசண்டாளனாய், மார்பிலிட்ட யஜ்ஞோபவீதந்தானே வாராய்விடும். (ககூகூ). ஜாதிசண்டாளனுக்குக் காலாந்தரத்திலே பாகவதனாகைக்கு யோக்யதையுண்டு; அதுவுமில்லை யிவனுக்கு. (உ00). ஆரூடபதிதனாகையாலே. (உ0க). இது தனக்கு அதிகாரி நியமமில்லை. (உ0உ). (தமர்களிற்றலைவராய சாதியந்தணர்களேலும்) என்கையாலே. (உ0௩). இவ்விடத்திலே வைநதேய வ்ருத்தாந்தத்தையும், பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்தவார்த்தையையும் ஸ்மரிப்பது. (உ0ச). ஜ்ஞாநாநுஷ்டாநங்களை யொழிந்தாலும் பேற்றுக் கவர்கள் பக்கல் ஸம்பந்தமே யமைகிறப்போலே, அவையுண்டானாலும் இழவுக்கவர்கள் பக்கலபசாரமேபோரும். (உ0ரு). இதில் ஜந்மவ்ருத்தாதி நியமமில்லை (உ0சா) இவ்வர்த்தம் கைஶிகவ்ருத்தாந்தத்திலும், உபரிசரவஸு வ்ருத்தாந்தத்திலும் காணலாம். (உ0எ). ப்ராஹ்மண்யம் விலைசெல்லுகிறது, வேதாத்யயநாதி முகத்தாலே பகவல்லாபஹேதுவென்று; அதுதானே யிழவுக்குறுப்பாகில் த்யாஜ்யமாமிறே. (உ0அ). ஜந்மவ்ருத்தங்களினுடைய உத்கர்ஷமும் அபகர்ஷமும் பேற்றுக்கும் இழவுக்கும், அப்ரயோஜகம். (உ0கூ). ப்ரயோஜகம் - பகவத்ஸம்பந்தமும் அஸம்பந்தமும்.— (உக0). பகவத்ஸம்பந்த முண்டானா லிரண்டு மொக்குமோவென்னில், (உகக). ஒவ்வாது. (உகஉ). உத்க்ருஷ்டமாக ப்ரமித்த ஜந்மம், ப்ரம்ஶஸம்பாவனையாலே (ஶரீரேவ) என்கிறபடியே பயஜநகம். (உக௩). அதுக்கு ஸ்வரூபப்ராப்தமான நைச்யம் பாவிக்கவேணும். (உகச). அபக்ருஷ்டமாக ப்ரமித்த உத்க்ருஷ்ட ஜந்மத்துக்கு இரண்டு தோஷமுமில்லை. (உகரு). நைச்யம் ஜந்மஸித்தம். (உகசா). ஆகையால் உத்க்ருஷ்ட ஜந்மமே ஶ்ரேஷ்டம். (உகஎ). (ஶ்வபசோபி மஹீபால.)— (உகஅ). நிக்ருஷ்டஜந்மத்தால் வந்த தோஷம் ஶமிப்பது விலக்ஷணஸம்பந்தத்தாலே. (உககூ) ஸம்பந்தத்துக்கு யோக்யதை யுண்டாம்போது ஜந்மக்கொத்தை போகவேணும். (உஉ0). ஜந்மத்துக்குக் கொத்தையும், அதுக்குப்பரிஹாரமும் (பழுதிலாவொழுகல்) என்கிற பாட்டிலே யருளிச்செய்தார். (உஉக). வேதகப்பொன்போலே யிவர்களோட்டை ஸம்பந்

* ஆனைத்தொழில்கள் - அதிமாநுஷசேஷ்டிதங்கள்.

யம். (௨௨௨). இவர்கள் பக்கள் ஸாம்யபு³த்³தியும், ஆதி⁴க்யபு³த்³தியும், நடக்கவேணும். (௨௨௩). அதாவது - ஆசார்யதுல்யரென்றும், ஸம்ஸாரிகளிலும், தன்னிலும் ஈஶ்வரனிலு மதி⁴கரென்றும் நினைக்கை. (௨௨௪). ஆசார்ய ஸாம்யத்துக்கடி - ஆசார்யவசநம். (௨௨௫). இப்படி நினையாதொழிகையும் அபசாரம். (௨௨௬). இவ்வர்த²ம், இதிஹாஸ புராணங்களிலும், (பயிலுஞ்சுடரொளி) (நெடுமாற்கடிமை) யிலும், (கண்சோரவெங்குருதி) யிலும், (நண்ணாதவாளவுண) ரிலும், (தேட்டருந்திறற்றே) னிலும், (மேம்பொருளுக்கு) மேலிற்பாட்டுக்களிலும் விஶத³மாகக்காணலாம். (௨௨௭). க்ஷத்ரியனான விஶ்வாமித்ரன் ப்ரம்ஹருஷியானான். (௨௨௮), ஸ்ரீவிபீஷணனை ராவணன் குலபாம்ஸனென்றான்; பெருமாள் இக்ஷ்வாகுவம்ஶ்யராக நினைத்து வார்த்தையருளிச்செய்தார். (௨௨௯). பெரிய உடையாருக்குப் பெருமாள் ப்³ரம்ஹமேத⁴ ஸமஸ்காரம் பண்ணியருளினார். (௨௩௦). த⁴ர்மபுத்ரர் அஶரீரி வாக்யத்தையும், ஜ்ஞாநாதி⁴க்யத்தையுங்கொண்டு, ஸ்ரீவிது³ரரை ப்³ரம்ஹ மேத⁴த்தாலே ஸம்ஸ்கரித்தார். (௨௩௧). ருஷிகள் த⁴ர்மவ்யாத⁴ன் வாசலிலே துவண்டு த⁴ர்மஸந்தே³ஹங்களை ஶமிப்பித்துக்கொண்டார்கள். (௨௩௨). க்ருஷ்ணன் பீ⁴ஷ்மத்³ரோணாதி³கள் க்³ருஹங்களைவிட்டு ஸ்ரீவிது³ரர் திருமாளிகையிலே யமுதுசெய்தான். (௨௩௩). பெருமாள் ஸ்ரீஶபரி கையாலே யமுதுசெய்தருளினார். (௨௩௪). மாறனேர் நம்பி விஷயமாகப் பெரியநம்பி உடையவர்க் கருளிச்செய்தவார்த்தையை ஸ்மரிப்பது.—(௨௩௫). (ப்ராது³ர்ஹாவைரித்யாதி³.) (௨௩௬). 'ஹாமவதனன்றிக்கே வேதா³ர்த²ஜ்ஞாநாதி³களையுடையவன் குங்குமஞ்சுமந்த கழுதையோபாதி' என்று சொல்லாநின்றதிறே. (௨௩௭). ராஜாவான ஸ்ரீகுலஶேக²ரப்பெருமாள் திர்யக்ஸ்தா²வர ஜந்மங்களை யாசைப்பட்டார். (௨௩௮). ப்³ராம்ஹணோத்தமரான பெரியாழ்வாரும், திருமகளாரும், கோபஜந்மத்தை ஆஸ்தா²நம் பண்ணினார்கள். (௨௩௯). * கந்தல் கழிந்தால் ஸர்வர்க்கும் நாரீணாமுத்தமையுடைய அவஸ்தை² வரக்கடவதாயிருக்கும். (௨௪௦). ஆறுப்ரகாரத்தாலே பரிஶுத்³தா⁴த்மஸ்வரூபத்துக்கும் தத்ஸாம்ய முண்டாயிருக்கும்.—(௨௪௧). த்³ருஷ்டத்தில் உத்கர்ஷம் அஹங்காரத்தாலே; அத்³ருஷ்டத்தில் உத்கர்ஷம் அஹங்காரராஹித்யத்தாலே. (௨௪௨). ப்³ரம்ஹாவா யிழந்துபோதல், இடைச்சியாய்ப் பெற்றுவிடுதல் செய்யும்படியாயிருக்கும். (௨௪௩). இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் நாஶஹேதுவான அஹங்காரத்துக்கும் அதினுடைய கார்யமான விஷயப்ராவண்யத்துக்கும் விளைநிலம் தானாகையாலே, தன்னைக் கண்டால் ஶத்ருவைக்கண்டாற்போலேயும், அவற்றுக்கு வர்த⁴கரான ஸம்ஸாரிகளைக் கண்டால் ஸர்ப்பத்தைக்கண்டாற்போலேயும், அவற்றுக்கு நிவர்த்தகரான ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால் ப³ந்து⁴க்களைக் கண்டாற்போலேயும், ஈஶ்வரனைக்கண்டால் பிதாவைக்கண்டாற்போலேயும், ஆசார்யனைக்கண்டால் பசியன் சோற்றைக்கண்டாற்போலேயும், ஶிஷ்யனைக்கண்டால் அபி⁴மதவிஷயத்தைக் கண்டாற்போலேயும் நினைத்து † அஹங்கா

---

* கந்தல் - கல்மஷம். அதாவது அவித்³யாதி³தோ³ஷம்.

† அர்த²காமாபி⁴மாநங்கள் மூன்றும் என்று வ்யாக்²யாந பாடா²ந்தரம்.

ரார்ய காமங்கள் மூன்றும், அநுகூலர் பக்கல் அநாதரத்தையும், ப்ரதிகூலர்பக்கல் ப்ராவண்யத்தையும், உபேக்ஷிக்கு மவர்கள் பக்கல் அபேக்ஷையையும் பிறப்பிக்குமென்றஞ்சி, ஆத்மகுணங்கள் நம்மாலும் பிறராலும் பிறப்பித்துக்கொள்ள வொண்ணாது, ஸதாசார்ய ப்ரஸாத மடியாகவருகிற ஹைவத் ப்ரஸாதத்தாலே பிறக்கு மத்தனையென்று துணிந்து, தேஹயாத்ரையிலுபேக்ஷையும், ஆத்மயாத்ரையி லபேக்ஷையும், ப்ராக்ருத வஸ்துக்களில் ஹேயதாபுத்தியி நிவ்ருத்தியும், 'தேஹதாரணம் பரமாத்மஸமாராதந ஸமாப்தி, ப்ரஸாத ப்ரதிபத்தி' என்கிற புத்திவிசேஷமும், தனக்கொரு க்லேசமுண்டானல் கர்மபலமென்றுதல் க்ருபாபலமென்றுதல் பிறக்கும் ப்ரீதியும், ஸ்வாநுஷ்டாநத்தில் ஸாதநத்வபுத்தி நிவ்ருத்தியும், விலக்ஷணருடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் வாஞ்சையும், உகந்தளிருன நிலங்களில் ஆதராதிசயமும், மங்களாசாஸநமும், இதரவிஷயங்களில் அருசியும், ஆர்த்தியும், அநுவர்த்தந நியதியும், ஆஹாரநியதியும், அநுகூல ஸஹவாஸமும், ப்ரதிகூல ஸஹவாஸ நிவ்ருத்தியும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன். (உசச)

த்ருதீயப்ரகரணம்॥ ௩ ॥

மங்களாசாஸநம் ஸ்வரூபவிருத்தம் மன்றோவென்னில்; ஜ்ஞாநதசையில் ரக்ஷ்யரக்ஷகபாவம் † தன்கப்பிலே கிடக்கும்; ப்ரேமதசையில் தட்டுமாறிக்கிடக்கும். (உசரு). அவன் ஸ்வரூபத்தை அநுஸந்தித்தால் அவனைக் † கடகாகக்கொண்டு தன்னை நோக்கும். (உசசு) இவ்வர்த்தம், சக்ரவர்த்தி, ஸ்ரீஜநகராஜன் - திருமகள், விஶ்வாமித்ரன், ஸ்ரீதண்டகாரண்ய வாஸிகளான ருஷிகள், திருவடி, மஹாராஜர், ஸ்ரீநந்தகோபர், ஸ்ரீவிதுரர், பிள்ளையுறங்காவில்லிதாஸர் தொடக்கமானவர்கள் பக்கலிலே காணலாம். (உசஎ). இளையபெருமாளை ஸ்ரீகுஹப்பெருமாள் அதிசங்கைபண்ண, இருவரையும் அதிசங்கைபண்ணி குஹப்பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிறே. (உசஅ). ஒருநாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகு படுத்தும் பாடாயிற்றிது. (உசகூ). இவர்கள் நம்முடைய கோடியிலே என்னும்படியாயிற்று ஆழ்வார்கள் நிலை. (உரு௦). ஆழ்வார்களெல்லாரையும் போலல்லர் பெரியாழ்வார். (உருக). அவர்களுக்கிது காதாசித்கம், இவர்க்கிது நித்யம். (உருஉ). அவர்களுடைய ஆழங்கால்தானே இவர்க்கு மேடாயிருக்கும். (உருங) அவர்களுக்கு உபயசேஷத்வத்தையு மழித்து, ஸ்வரூபத்தைக் ‡ குமிழிநீருண்ணப் பண்ணுமது, இவர்க்கு உபயவ்ருத்தியிக்கும் ஹேதுவாய், ஸ்வரூபத்தைக் கரையேற்றும். (உருச). பயநிவர்த்தகங்களுக்கு பயப்படுவது, ப்ரதிகூலரையும் அநுகூலராக்கிக்கொள்ளுவது, அதீதகாலங்களி லபதாநங்களுக்கு உத்தரகாலத்திலே வயிறெரிவது, ப்ராப்திபலமு மிதுவேயென்பது, அநிமிஷரைப்பார்த்து (உறகல், உறகல்) என்பதாய்க்கொண்டு இது

---

† கப்பு - ஆஶ்ரயம். † கடகு - அநிஷ்டநிவாரகன், ரக்ஷகன்.

‡ குமிழிநீருண்கை - அமிழ்ந்து தலஸ்பர்ஶியாகை.

தானே யாத்ரையாய் நடக்கும். (உருரு). அல்லாதவர்களைப்போலே கேட்கிறவர்களுடையவும், சொல்லுகிறவர்களுடையவும் தனிமையைத் தவிர்க்கையன்றிக்கே, (ஆளுமாளார்) என்கிறவனுடைய தனிமையைத் தவிர்க்கைக்காயிற்று பாஷ்யகாரரும், இவரு முபதேசிப்பது. (உருசு), அல்லாதார்க்கு ஸத்தாஸம்ருத்திகள் தர்சநாநுபவ கைங்கர்யங்களாலே; இவர்க்கு மங்களாசாஸநத்தாலே. (உருஎ). உகந்தருளின நிலங்களை அநுஸந்தித்தால் ஊணுமுறக்கமுமின்றிக்கே, இவருடைய யாத்ரையே நமக்கெல்லார்க்கும் யாத்ரையாகவேணும். (உருஅ). ஆகையால் மங்களாசாஸநம் ஸ்வரூபாநுரூபம். ||உருகூ||

அநுகூலராகிறார் - ஜ்ஞாநபக்தி வைராக்யங்கள் இட்டுமாறினாற்போலே வடிவிலே † தொடைகொள்ளலாம்படியிருக்கும் பரமார்த்தர். (உருகூ). ஒருசெய்நிரம்ப நீர் நின்றால் அசல் செய் பொசிந்து காட்டுமோபோலே இவையில்லாதார்க்கு மிவர்களோட்டை ஸம்பந்தத்தாலே உருவுதல் தீரக்கடவதாயிருக்கும். (உகூ0). ஆறுநீர் வரவணித்தானால் அதுக்கீடான அடையாளங்களுண்டாமாபோலே, ப்ராப்தியணித்தானவாறே இந்த ஸ்வபாவவிசேஷங்கள் தன்னடையே விளையக்கடவதாயிருக்கும். (உகூக). இவற்றைக்கொண்டு சரமசரீரம் என்று தனக்குத்தானே அறுதியிடலாயிருக்கும். (உகூஉ). ப்ரதிகூலராகிறார் - தேஹாத்மாபிமாநிகளும், ஸ்வதந்த்ரரும், அந்யசேஷபூதரும், உபாயாந்தரநிஷ்டரும், ஸ்வப்ரயோஜநபரரும்.—(உகூங) இவர்களுக்குஉத்தேச்யரும், உபாயோபேயங்களும்பேதித்திருக்கும். (உகூச). தேஹாத்மாபிமாநிகளுக்கு உத்தேச்யர் - தேஹவர்த்தகரான மநுஷ்யர்கள்; உபாயம் - அர்த்தம், உபேயம் - ஐஹிகபோகம். ஸ்வதந்த்ரர்க்கு உத்தேச்யர் - ஸ்வர்க்காதிபோகப்ரதர், உபாயம் - கர்மாநுஷ்டாநம், உபேயம் - ஸ்வர்க்காதிபோகம். அந்யசேஷபூதர்க்கு உத்தேச்யர் - ப்ரஹ்ம ருத்ராதிகள், உபாயம் - தத்ஸமாச்ரயணம், உபேயம் - தத்ஸாயுஜ்யம். உபாயாந்தர நிஷ்டர்க்கு உத்தேச்யன் - தேவதாந்தர்யாமியான ஈச்வரன், உபாயம்-கர்ம ஜ்ஞாநபக்திகள், உபேயம் - பகவதநுபவம். ஸ்வப்ரயோஜநபரர்க்கு உத்தேச்யன் - (நெஞ்சினால்நினைப்பான்யவன்) என்கிறவன், உபாயம் - ஸ்வகீய ஸ்வீகாரம், உபேயம் - ஸ்வார்த்தகைங்கர்யம். (ஙகூரு) முதல்சொன்ன மூவரும் நிக்ரஹத்துக்கிலக்கு; மற்றையிருவரும் அநுக்ரஹத்துக்கிலக்கு. (உகூசா). மூவருடையவும் கர்மம் அநுபவ விநாச்யம், நாலாமதிகாரிக்கு ப்ராயச்சித்த விநாச்யம், அஞ்சாமதிகாரிக்குப் புருஷகார விநாச்யம். (உகூஎ). உபாயம் ஸ்வீகாரகாலத்தில் புருஷ ஸாபேக்ஷமுமாய், புருஷகார ஸாபேக்ஷமுமாயிருக்கும்; கார்யகாலத்தில் உபயநிரபேக்ஷமாயிருக்கும். (உகூஅ) ஸ்வப்ரயோஜநபரரெல்லாரையும் ப்ரதிகூலராக நினைக்கலாமோவென்னில்; (உகூகூ). இங்கு ஸ்வப்ரயோஜந மென்கிறது - ஆச்ரயதோஷ ஜந்யமானத்தை. (உஎ0). ஆகையாலே தோஷமில்லை. (உஎக). விஷயதோஷத்தாலே ‡ வருமவையெல்லாம் தாஸ்யஜமாயிரேயிருப்பது. (உஎஉ).

† தொடைகொள்ளலாம்படி = அறியலாம்படி.

‡ வருமது என்றும் வ்யாக்யாந பாடாந்தரம்.

(ஊமையரோடு செவிடர்வார்த்தை) (கயமங்யதிச்ஹதி.) (௨௭௩). இப்படி இவையித்தனையும் ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்போதைக்கு, வஸ்தவ்யம் - ஆசார்யஸந்நிதியும் பகவத்ஸந்நிதியும். வக்தவ்யம் - ஆசார்யவைபவமும் ஸ்வநிகர்ஷமும்; ஜப்தவ்யம் குருபரம்பரையும், த்வயமும்; பரிக்ராஹ்யம் - பூர்வாசார்யர்களுடைய வசநமும் அநுஷ்டாநமும். பரித்யாஜ்யம் - அவைஷ்ணவஸஹவாஸமும், அபிமாநமும். கர்த்தவ்யம் - ஆசார்யகைங்கர்யமும், பகவத்கைங்கர்யமும். (௨௭௪). கீழ்ச்சொன்ன பகவத்கைங்கர்யமறிவது - ஶாஸ்த்ர முவத்தாலே; ஆசார்ய கைங்கர்யமறிவது ஶாஸ்த்ரமுவத்தாலும், ஆசார்யவசநத்தாலும். (௨௭௫) கைங்கர்யந்தானிரண்டு. (௨௭௬). அதாவது - இஷ்டஞ்செய்கையும், அநிஷ்டம் தவிருகையும். (௨௭௭). இஷ்டாநிஷ்டங்கள், வர்ணாஶ்ரமங்களையும் ஆத்மஸ்வரூபத்தையுமவலம்பித்திருக்கும். (௩௭௮). புண்யத்துக்கஞ்சுகிறவன் பாபத்தைப் பண்ணுனிறே. (௨௭௯). இவன் புண்யத்தைப் பாபமென்றிருக்கும்; அவன் பாபத்தைப் புண்யமென்றிருக்கும்; அவனுக்கிது கிடையாது; இவனது செய்யான். (௨௮0). கைங்கர்யந்தான் பக்திமூலமல்லாதபோது; விதிமூலமாய் வரவேணும். (௨௮௧). அதுவுமில்லாதபோது, அபிகாரத்திலும், உபாயோபேயங்களிலு மந்வயமின்றிக்கே யொழியும்.—(௨௮௨). கைங்கர்யந்தன்னை பலஸாதநமாக்காதே பலமாக்கவேணும். (௨௮௩). அதாவது - தான்கையேற்காதே அவனைக் கையேற்கப்பண்ணுகை. (௨௮௪). கொடுத்துக் கொள்ளாதே கொண்டதுக்குக் கைக்கூலி கொடுக்கவேணும். (௨௮௫) ஸ்ரீவிதுரரையும, ஸ்ரீமாலாகாரரையும், கூனியையும்போலே கிஞ்சித்கரித்தால் ஸ்வரூபம் நிறம்பெறுவது. (௨௮௬). மடிதடவாதசோறும், சுருள்நாறுதபூவும், சுண்ணும்புபடாத சாந்துமிறே இவர்கள் கொடுத்தது. (௨௮௭). கைங்கர்யதஶைபோலே முன்புள்ள தஶைகளிலும் ஸ்வரூபத்தை உஜ்வலமாக்கவேணும். (௨௮௮). முன்பே நாலுதஶையுண்டு. (௨௮௯). அதாவது - ஜ்ஞாநதஶையும், வரணதஶையும், ப்ராப்திதஶையும், ப்ராப்யாநுபவதஶையும். (௨௯0). ஜ்ஞாநதஶையில் அஜ்ஞாநத்தை முன்னிடும்; வரணதஶையில் அபூர்த்தியை முன்னிடும்; ப்ராப்தி தஶையில் ஆர்த்தியை முன்னிடும்; ப்ராப்யாநுபவதஶையில் அபிநிவேஶத்தைமுன்னிடும். (௨௯௧). அஜ்ஞாநம்போவது-ஆசார்யஜ்ஞாநத்தாலே. அபூர்த்திபோவது-ஈஶ்வரபூர்த்தியாலே, ஆர்த்திபோவது-அருளாலே, அபிநிவேஶம்போவது-அநுபவத்தாலே. (௨௯௨). அஜ்ஞாநத்துக்கடி - அபராதம், அபூர்த்திக்கடி-ஜ்ஞாநபூர்த்தி, ஆர்த்திக்கடி-அலாபம், அபிநிவேஶத்துக்கடி - அழகு. (௨௯௩). ஆர்த்தியும் அபிநிவேஶமு மிருக்கும்படி அர்சிராதிகதியிலே சொன்னோம். (௨௯௪). இவன்றனக்கு நாலுதஶைபோலே நாலுகுணமுமுண்டு. (௨௯௫). அதாவது - ஜ்ஞாநமும், அஜ்ஞாநமும், ஶக்தியும், அஶக்தியும். (௨௯௬). இவைதான் அவனுக்குமுண்டு. (௨௯௭). அவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு - இவனுடைய குணம், அஜ்ஞாநத்துக்கிலக்கு - இவனுடையதோஷம், ஶக்திக்கிலக்கு - இவனுடைய ரக்ஷணம், அஶக்திக்கிலக்கு-பரித்யாகம். (௨௯௮). இவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு-ஆசார்யகுணம், அஜ்ஞாநத்துக்கிலக்கு-ஆசார்யதோஷம், அஶக்திக்கிலக்கு-நிஷித்

யாநுஷ்டாநம்.—(௨௯௯). நிஷித்யந்தானும் நாலுபடியாயிருக்கும். (௩௦௦). அதாவது - அக்ருத்யகரணமும், பகவதபசாரமும், பாகவதாபசாரமும், அஸஹ்யாபசாரமும். (௩௦௧). அக்ருத்யகரணமாவது - பரஹிம்ஸை, பரஸ்தோத்ரம், பரதாரபரிக்ரஹம், பரத்ரவ்யாபஹாரம், அஸத்யகதநம், அபக்ஷ்யபக்ஷணந் தொடக்கமானவை. (௩௦௨). பகவதபசாரமாவது-தேவதாந்தரங்களோடொக்க ஈஶ்வரனை நினைக்கையும், ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் மநுஷ்யஸஜாதீயதாபுத்தியும், வர்ணாஶ்ரம விபரீதமான உபசாரமும், அர்சாவதாரத்தில் உபாதாந நிரூபணமும், ஆத்மாபஹாரமும், பகவத்த்ரவ்யாபஹாரமுந் தொடக்கமானவை. (௩௦௩). பகவத்த்ரவ்யத்தைத் தானபஹரிக்கையும், அபஹரிக்கிறவர்களுக்கு ஸஹகரிக்கையும், அவர்கள் பக்கலிலே யாசிதமாகவும் அயாசிதமாகவும் பரிக்ரஹிக்கையும் பகவானுக்கநிஷ்டமாயிருக்கும். (௩௦௪). பாகவதாபசாரமாவது - அஹங்காரார்த்த காமங்களடியாக ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பண்ணும் விரோதம். (௩௦௫). அஸஹ்யாபசாரமாவது - நிர்நிபந்தநமாக பகவத்பாகவத விஷயமென்றால் அஸஹமானனாயிருக்கையும், ஆசார்யாபசாரமும், தத்பக்தாபசாரமும். (௩௦௬). இவையொன்றுக்கொன்று க்ரூரங்களுமாய், உபாயவிரோதிகளுமாய், உபேயவிரோதிகளுமாயிருக்கும். (௩௦எ) (அதிகாரிநிஷ்டா ப்ரகரணம் ஸமாப்தம்)

தான் ஹிதோபதேஶம் பண்ணும்போது, தன்னையும், ஶிஷ்யனையும், பலத்தையும் மாறாடிநினைக்கை க்ரூரநிஷித்தம். (௩௦அ). தன்னைமாறாடி நினைக்கையாவது - தன்னை ஆசார்யனென்றுநினைக்கை; ஶிஷ்யனை மாறாடி நினைக்கையாவது - தனக்கு ஶிஷ்யனென்று நினைக்கை; பலத்தை மாறாடி நினைக்கையாவது - த்ருஷ்ட ப்ரயோஜநத்தையும், ஶிஷ்யனுடைய உஜ்ஜீவநத்தையும், பகவத்கைங்கர்யத்தையும், ஸஹவாஸத்தையும் பலமாக நினைக்கை.—(௩௦௯). நினையாதிருக்க, இந்நாலுபலமும் ஸித்திக்கிறபடி யென்னென்னில்; ஶேஷபூதனான ஶிஷ்யன் நினைவாலே த்ருஷ்டபலம் ஸித்திக்கும், ஈஶ்வரன் நினைவாலே உஜ்ஜீவநம் ஸித்திக்கும்; ஶேஷபூதனான ஶிஷ்யன் நினைவாலே பகவத்கைங்கர்யம் ஸித்திக்கும்; உபகாரஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்திக்கும். (௩௧௦). ஸாக்ஷாத்பலமும், ஆசார்யத்வமும் ஸித்திக்கிறபடி யென்னென்னில்; தன்னினைவாலும், ஈஶ்வரன் நினைவாலும் ஸித்திக்கும். (௩௧௧). இப்படியொழிய வுபதேஶிக்கில், இருவருக்கும் ஸ்வரூப ஸித்தியில்லை. (௩௧௨). ஆசார்யனுக்கு ஶிஷ்யன்பக்கல் க்ருபையும், ஸ்வாசார்யன் பக்கல் பாரதந்த்ர்யமும் வேணும். (௩௧௩). க்ருபையாலே ஶிஷ்யன் ஸ்வரூபம் ஸித்திக்கும், பாரதந்த்ர்யத்தாலே தன்ஸ்வரூபம் ஸித்திக்கும்.—(௩௧௪). நேரே ஆசார்யனென்பது - ஸம்ஸாரநிவர்த்தகமான பெரியதிருமந்த்ரத்தை உபதேஶித்தவனை. (௩௧௫). ஸம்ஸாரவர்த்தகங்களுமாய், க்ஷுத்ரங்களுமான பகவன்மந்த்ரங்களை யுபதேஶித்தவர்களுக்கு ஆசார்யத்வ பூர்த்தியில்லை. (௩௧௬). பகவன் மந்த்ரங்களை க்ஷுத்ரங்களென்கிறது - பலத்வாரா. (௩௧எ). ஸம்ஸாரவர்த்தகங்களென்கிறது மத்தாலே. (௩௧அ). இதுதான் ஔபாதிகம். (௩௧௯). சேதநனுடைய ருசியாலே வரு

கையாலே.— (௩௨௦). ஶிஷ்யனென்பது - ஸாத்யாந்தர நிவ்ருத்தியும், பலஸாதந ஶுஶ்ரூஷையும், ஆர்த்தியும், ஆதரமும், அநஸூயையுமுடைய வனே. (௩௨௧). மந்த்ரமும், தேவதையும், பலமும், பலாநுபந்திகளும், பலஸாதநமும், ஐஹிகபோகமுமெல்லா மாசார்யனென்று நினைக்கக்கட வன். (௩௨௨). (மாதாபிதாயுவதய) என்கிற ஶ்லோகத்திலே, இவ்வர்த்தத் தைப் பரமாசார்யரு மருளிச்செய்தார். (௩௨௩). இதுக்கடி உபகாரஸ்ம்ருதி. (௩௨௪) உபகாரஸ்ம்ருதிக்கு முதலடி ஆசார்யன் பக்கல் க்ருதஜ்ஞதை; முடிந்த நிலம் ஈஶ்வரன்பக்கல் க்ருதஜ்ஞதை.—(௩௨௫) ஶிஷ்யனும், ஆசார் யனும், அந்யோந்யம் ப்ரியஹிதங்களை நடத்தக்கடவர்கள். (௩௨௬). ஶிஷ் யன்றான் ப்ரியத்தை நடத்தக்கடவன்; ஈஶ்வரனைக் கொண்டு ஹிதத்தை நடத்தக்கடவன், ஆசார்யன் மாறுடி நடத்தக்கடவன். (௩௨௭). ஶிஷ்யன் உக ப்பிலே யூன்றிப்போரும்; ஆசார்யன், உஜ்ஜீவநத்திலே யூன்றிப்போரும். (௩௨௮) ஆகையால், ஶிஷ்யன் ஆசார்யனுடைய ஹர்ஷத்துக் கிலக்காகை யொழிய, ரோஷத்துக் கிலக்காகைக்கு அவகாஶமில்லை. (௩௨௯). நிக்ரஹத் துக்குப் பாத்ரமாம்போது அது ஹிதரூப மாகையாலே யிருவர்க்கு முபாதே யம். (௩௩௦). ஶிஷ்யனுக்கு நிக்ரஹகாரணம் த்யாஜ்யம், (௩௩௧). நிக்ர ஹந்தான் பகவந்நிக்ரஹம்போலே ப்ராப்யாந்தர்கதம். (௩௩௨). ஆசார் யன் ஶிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப்பேணக்கடவன், ஶிஷ்யன் ஆசார்யனு டைய தேஹத்தைப் பேணக்கடவன்; (௩௩௩). இரண்டு மிருவர்க்கும் ஸ்வரூபமுமாய், பகவத்கைங்கர்யமுமாயிருக்கும். (௩௩௪). ஆசார்யனு க்கு தேஹரக்ஷணம் ஸ்வரூபஹாநி; ஶிஷ்யனுக்கு ஆத்மரக்ஷணம் ஸ்வரூப ஹாநி. (௩௩௫). ஆசார்யன் ஆத்மரக்ஷணம் பண்ணு மிடத்தில் அஹங் காரம் விரோதி; ஶிஷ்யன் தேஹரக்ஷணம் பண்ணுமிடத்தில் மமகாரம் விரோதி. (௩௩௬). ஆசார்யன் தன்னுடைய தேஹரக்ஷணம் தன் வஸ்து வைக்கொண்டு பண்ணக்கடவன்; ஶிஷ்யன் ஸ்வதேஹரக்ஷணம் ஆசார்யன் வஸ்துவைக்கொண்டு பண்ணக்கடவன். (௩௩௭). ஆசார்யன் ஶிஷ்யன் வஸ் துவைக் கொள்ளக்கடவனல்லன்; ஶிஷ்யன் தன்வஸ்துவைக் கொடுக்கக்கடவ னல்லன். (௩௩௮). கொள்ளில் மிடியனும், கொடுக்கில் கள்ளனும். (௩௩௯). கொள்கொடையுண்டானால் ஸம்பந்தங் குலையும். (௩௪௦). இவன் மிடிய னாகையாலே கொடான்; அவன் பூர்ணனாகையாலே கொள்ளான். (௩௪௧). அவனுக்குப் பூர்த்தியாலே ஸ்வரூபம் ஜீவித்தது; இவனுக்கு மிடியாலே ஸ்வ ரூபம் ஜீவித்தது.—(௩௪௨). ஆனால் ஶிஷ்யன் ஆசார்யனுக்குப்பண்ணு முப கார மொன்றுமில்லையோ வென்னில்; (௩௪௩). ஆசார்யன் நினைவாலே யுண்டு. (௩௪௪). அதாவது—ஜ்ஞாநவ்யவஸாய ப்ரேம ஸமாசாரங்கள். (௩௪௫). ஆசார்ய ப்ரீத்யர்த்தமாக இவனுக்குத் தவிர வேண்டுவது - பகவத் த்ரவ்யத்தை யபஹரிக்கையும், பகவத்போஜநத்தை விலக்குகையும், குரு மந்த்ர தேவதாபரிபவமும்.—(௩௪௬). பகவத் த்ரவ்யாபஹாரமாவது - ஸ்வா தந்த்ர்யமும், அந்யஶேஷத்வமும்; (௩௪௭). பகவத்போஜநத்தை விலக்கு கையாவது-அவனுடைய ரக்ஷகத்வத்தை விலக்குகை. (௩௪௮). அவனுடைய ரக்ஷகத்வக்ரமம்-ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம்.—(௩௪௯). குரு

பரிபவமாவது-கேட்ட அர்த்தத்தின்படி அநுஷ்டியாதொழிகையும், அநதிகாரிகளுக்குபதேஶிக்கையும். மந்த்ரபரிபவமாவது - அர்த்தத்தில் விஸ்ம்ருதியும், விபரீதார்த்தப்ரதிபத்தியும். தேவதாபரிபவமாவது - கரணத்ரயத்தையும் அப்ராப்தவிஷயங்களிலே ப்ரவணமாக்குகையும், தத்விஷயத்தில் ப்ரவணமாக்காதொழிகையும். (௩௫௦). — இவனுக்கு ஶரீராவஸாநத்தளவும் ஆசார்யவிஷயத்தில் (என்னைத் தீமனங்கெடுத்தாய், மருவித்தொழும் மனமேதந்தாய்) என்று உபகாரஸ்ம்ருதி நடக்கவேணும். (௩௫௧). மநஸ்ஸுக்குத் தீமையாவது - ஸ்வகுணத்தையும், பகவத்பாகவத தோஷங்களையும் நினைக்கை. (௩௫௨). தோஷம் நினையாதொழிகிறது - குணம்போலே யுண்டாயிருக்கவன்று; இல்லாமையாலே. (௩௫௩). தோஷமுண்டென்று நினைக்கில் அது பரதோஷமன்று; ஸ்வதோஷம். (௩௫௪). ஸ்வதோஷமானபடி யென்னென்னில், (௩௫௫). ஸ்வதோஷத்தாலும், பந்தத்தாலும். (௩௫௬). ஸ்வதோஷமில்லையாகில் குணப்ரதிபத்தி நடக்கும். (௩௫௭). நடந்ததில்லையாகில் தோஷஜ்ஞாநமே தோஷமாம். (௩௫௮). இது தனக்கவஸரமில்லை. (௩௫௯). ஸ்வதோஷத்துக்கும், பகவத்பாகவத குணங்களுக்குமே காலம் போருகையாலே. (௩௬௦). ஸம்ஸாரிகள் தோஷமும் ஸ்வதோஷமென்று நினைக்கக்கடவன். (௩௬௧). அதுக்கு ஹேது பந்த ஜ்ஞாநம். (௩௬௨). (இறைப்பொழுதுமெண்ணோமே) என்கையாலே அதுதான் தோன்றாது. (௩௬௩). தோன்றுவது நிவர்த்தநார்த்தமாக. (௩௬௪). பிராட்டி, ராக்ஷஸிகள் குற்றம் பெருமாளுக்கும் திருவடிக்கு மறிவியாதாப்போலே, தன்க்குப் பிறர் செய்த குற்றங்களை பகவத்பாகவத விஷயங்களி லறிவிக்கக்கடவனல்லன். (௩௬௫). அறிவிக்க வுரியவ னகப்பட வாய்திறவாதே ஸர்வஜ்ஞ விஷயங்களுக்கும் மறைக்கு மென்னாநின்றதிறே. (௩௬௬). குற்றஞ்செய்தவர்பக்கல் பொறையும், க்ருபையும், சிரிப்பும், உகப்பும், உபகார ஸ்ம்ருதியும் நடக்கவேணும் (௩௬௭).

(ஸதாசார்யாநுவர்த்தந ப்ரகரணம் முற்றிற்று. ௪.)

ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது; பகவத்குணாநுஸந்தாநம் அபயஹேது. (௩௬௮). பயாபயங்களிரண்டும் மாறாடில் அஜ்ஞதையே ஸித்திக்கும். (௩௬௯). ஆனால் (நலிவானின்ன மெண்ணுகின்றாய்) (ஆற்றங்கரை வாழ் மரம்போலஞ்சுகின்றேன்) என்கிற பாசுரங்களுக் கடியென்னென்னில், (௩௭௦). பந்தாநுஸந்தாநம். (௩௭௧). ப்ரஜை தெருவிலே யிடறித் தாய் முதுகிலே குத்துமாபோலே, நிருபாதிக பந்துவாய் ஶக்தனாயிருக்கிறவன் விலக்காதொழிந்தால், அப்படி சொல்லலாமிறே. (௩௭௨). ப்ரஜையைக் கிணற்றின்கரையில் நின்றும் வாங்காதொழிந்தால், தாயே தள்ளினாளென்னக் கடவதிறே. (௩௭௩). இவனுடைய அநுமதி, பேற்றுக்கு ஹேதுவல்லாதாப் போலே, அவனுடைய அநுமதியும் இழவுக்கு ஹேதுவன்று. (௩௭௪). இரண்டு மிருவருக்கும் ஸ்வரூபம். (௩௭௫). இழவுக்கடி - கர்மம்; பேற்றுக்கடி - க்ருபை. (௩௭௬). மற்றைப்படிசொல்லி லிழவுக்குறுப்பாம். (௩௭௭). எடுக்க

† தோஷமில்லையாகில் என்றே வ்யாக்யாந கோஶங்களில் பாடங்காண்கிறது. ஸ்வதோஷமில்லையாகில் - என்று ஆயிவ்யா.

நினைக்கிறவனைத் தள்ளினுயென்கை எடாமைக்குறுப்பிறே. (௩எஅ). (சீற்ற முள) என்ற வநந்தரத்திலே இவ்வர்த்தத்தைத் தாமேயருளிச்செய்தாரிறே. (௩எகூ), சீற்றமுண்டென்றறிந்தால் சொல்லும்படி யென்னென்னில்; அருளும், ஆர்த்தியும், அநந்ய ஹதித்வமுஞ் சொல்லப்பண்ணும். (௩௮0). சீறினுலுங் காலைக்கட்டிக்கொள்ளலாம்படி யிருப்பானொருவனைப்பெற்று லெல்லாஞ் சொல்லலாமிறே. (௩௮க). (க்ருபயாபர்யபாலயத்) (அரிசினத்தால்) (௩௮௨).

சதுர்த்த ப்ரகரணம்.

த்ரிபாத்விபூதிப்ரகரணம்.

த்ரிபாத் விபூதியிலே பரிபூர்ணநுபவம் நடவாநிற்க, அதுண்டதுருக்காட்டாதே, தேசாந்தர கதனை புத்ரன் பக்கலிலே பித்ருஹ்ருதயம் கிடக்குமாபோலே ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடிபோய், இவர்களைப் பிரிந்தா லாற்றமாட்டாதே, இவர்களோடே கலந்து பரிமாறுகைக்குக் கரண களேபரங்களைக்கொடுத்து, அவற்றைக்கொண்டு வ்யாபரிக்கைக்கீடான சக்திவிசேஷங்களையுங் கொடுத்து, கண்காணநிற்கில் ஆணையிட்டுவிலக்குவர்கள் என்று கண்ணுக்குத்தோற்றுதபடி, உறங்குகிற ப்ரஜையைத் தாய் முதுகிலே யணைத்துக்கொண்டு கிடக்குமாபோலே, தானறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக விடமாட்டாதே அகவாயிலே யணைத்துக்கொண்டு, ஆட்சியில் தொடர்ச்சி நன்று என்று விடாதே, ஸத்தையேநோக்கி உடன் கேடனுய், இவர்கள் அஸத்கர்மங்களிலே ப்ரவர்த்திக்கும்போது மீட்கமாட்டாதே அநுமதி தாநத்தைப்பண்ணி, உதாஸீநரைப்போலே யிருந்து, மீட்கைக்கிடம்பார்த்து, நன்மையென்று பேரிடலாவதொரு தீமையுங்காணுதே, நெற்றியைக் கொத்திப்பார்த்தால் ஒருவழியாலும் பசைகாணுதொழிந்தால் அப்ராப்யமென்று கண்ணநீரோடே மீளுவது, தனக்கேற விடம்பெற்ற வளவிலே, 'என்னூரைச் சொன்னுய், என்பேரைச்சொன்னுய். என்னடியாரைநோக்கினுய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கொதுங்க நிழலைக் கொடுத்தாய்' என்னுமாபோலே சிலவற்றை யேறிட்டு, மடிமாங்காயிட்டு, பொன் வாணியன் பொன்னை உரைகல்லிலேயுரைத்து மெழுகாலே யெடுத்து கால்கழஞ்சென்று திரட்டுமாபோலே, ஜந்மபரம்பரைகள் தோறும் 'யாத்ருச்சிகம், ப்ராஸங்கிகம், ஆநுஷங்கிக'மென்கிற ஸுக்ருத விசேஷங்களைக் கற்பித்துக்கொண்டு, தானேயவற்றை ஒன்றுபத்தாக்கி நடத்திக்கொண்டு போரும். (௩௮௩). லளிதாசரிதாதிகளிலே இவ்வர்த்தம் சுருக்கமொழியக்காணலாம். (௩௮௪). அஜ்ஞரான மநுஷ்யர்கள், * வாளாதந்தானென்றிருப்பர்கள். (௩௮௫). ஜ்ஞாநவான்கள், (இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை யென்னுள்வைத்தான்) எந்நன்றிசெய்தேனு வென்னெஞ்சிற்றிகழ்வதுவே) (நடுவேவந்துய்யக்கொள்கின்ற நாதனே,) அறியாதன வறிவித்தவத்தாநீசெய்தன வடியேனறியேனே) (பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யடிமைகொண்டாய்) (என்னைத்தீமனங் கெடுத்தாய்) மரு

* 'வாளார்தந்தார்' என்றும் வ்யாக்யாநபாடாந்தரம்.

வித்தொழும் மனமேதந்தாய்) என்றீடுபடா நிற்பர்கள். (௩௮௬). பாஷ்ய காரர் காலத்திலே ஒருநாள் பெருமாள் புறப்பட்டருளுந் தனையும் பார்த்துப் பெரியதிரு மண்டபத்துக்குக்கீழாக முதலிகளெல்லாரும் திரளவிருந்தவளவிலே இவ்வர்த்தம் ப்ரஸ்துதமாக, பின்பு பிறந்த வார்த்தைகளை ஸ்மரிப்பது. (௩௮௭). ஆகையால் அஜ்ஞாதமான நன்மைகளையே பற்றாசாகக்கொண்டு கடாக்ஷியாநிற்கும். (௩௮௮). இவையுங்கூட விளையும்படியிறே இவன் றன்னை முதலிலே அவன் ஸ்ருஷ்டித்தது. (௩௮௯). அது தன்னை நிரூபித்தால் இவன் றனக்கொன்றுஞ் செய்யவேண்டாதபடியாயிருக்கும். (௩௯௦). பழையதாக உழுவது, நடுவது, விளைவதாய்ப்போரும் க்ஷேத்ரத்திலே உதிரிமுளைத்து பலபர்யந்தமாமாபோலே. இவைதான் தன்னடையே விளையும்படியாயிற்று, * பத்தியுழவன் பழம்புனத்தை ஸ்ருஷ்டித்த கட்டளை. (௩௯௧). அவைதானெவையென்றால்; (௩௯௨). பூர்வக்ருத புண்யாபுண்ய பலங்களை சிரகாலம் ஆர்ஜித்து, உத்தரகாலத்தில் வாஸனைகொண்டு ப்ரவர்த்திக்குமத்தனை யென்னும்படி கைமொழிந்த தசையிலே, 'நாமார், நாம் நின்றநிலையேது, நமக்கினிமேல் போக்கடியேதென்று பிறப்பன சில நிரூபண விசேஷங்களுண்டு, அவையாதல், முன்புசொன்னவையாதல். (௩௯௩). (யதாஹிமோக்ஷகாங்க்ஷீ பாங்யே) என்று தொடங்கி இதினுடைய க்ரமத்தை பகவச்சாஸ்த்ரத்திலே சொல்லிற்று. (௩௯௪). (வெறிதேயருள்செய்வர்) என்று இவ்வர்த்தத்தை யருளிச்செய்தாரிறே. (௩௯௫). [செய்வார்கட்கு] என்று - அருளுக்கு ஹேது ஸுக்ருதமென்னா நின்றதே யென்னில்; அப்போது [வெறிதே] யென்கிறவிடஞ் சேராது. (௩௯௬). பகவதாபிமுக்யம் ஸுக்ருதத்தாலன்றிக்கே பகவத்க்ருபையாலே பிறக்கிறது; அத்வேஷம் ஸுக்ருதத்தாலே யென்னில்; இந்த பலவிசேஷத்துக்கு அத்தை ஸாதநமாக்க வொண்ணாது. (௩௯௭). சாஸ்த்ரமும் விதியாதே, நாமுமறியாதே யிருக்கிறவித்தை ஸுக்ருதமென்று நாம் பேரிடுகிறபடி யென்னென்னில்; நாமன்று, ஈச்வரனென்று கேட்டிருக்கையாயிருக்கும். (௩௯௮). இவ்வர்த்தவிஷயமாக ஆழ்வார்கள் பாசுரங்களில் பரஸ்பரவிருத்யம்போலே தோற்றுமவற்றிற்சொல்லும் பரிஹாரங்களும், மற்றுமுண்டான வக்தவ்யங்களும், விஸ்தர பயத்தாலே சொல்லுகிறிலோம். (௩௯௯). ஆகையால் இவன் விமுகனான தசையிலுங்கூட உஜ்ஜீவிக்கைக்கு க்ருஷிபண்ணின ஈச்வரனை யநுஸந்தித்தால், எப்போதும் நிர்பரனாயே யிருக்குமித்தனை. (௪௦௦). 'எதிர்சூழல் புக்கு'. (௪௦௧). ஒருவனைப்பிடிக்க நினைத்து ஊரைவளைவாரைப்போலே வ்யாப்தியும். (௪௦௨). ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப்போலே 'ஸ்வார்த்தமாக' என்றிறே ஜ்ஞாநாதிக ரநுஸந்திப்பது. (௪௦௩). கர்மபலம்போலே க்ருபாபலமு மநுபவித்தேயறவேணும். (௪௦௪). க்ருபை பெருகப்புக்கால் இருவர் ஸ்வாதந்த்ர்யத்தாலுந் தகையவொண்ணாதபடி யிருகரையு மழியப்பெருகும். (௪௦௫). பயஹேது-கர்மம், அபயஹேது-காருண்யம். (௪௦௬). பயாபயங்க ளிரண்டும் மாறிமாறி ப்ராப்தியளவும் நடக்கும். (௪௦௭). நிவர்த்யஜ்ஞாநம் பயஹேது, நிவர்த்தகஜ்ஞாநம் அபய ஹேது. (௪௦௮).

(பகவந்நிர்ஹேதுக க்ருபாவைபவ ப்ரகரணம் முற்றிற்று).

ஸ்வதந்த்ரனை யுபாயமாகத் தான்பற்றினபோதிறே இப் ப்ரஸங்கந்தானுள்ளது. (௪௦௯). உண்டபோ தொருவார்த்தையும், உண்ணாதபோ தொருவார்த்தையுஞ் சொல்லுவார் பத்துப்பேருண்டிறே, அவர்கள் பாசுரங்கொண்டன் றிவ்வர்த்த மறுதியிடக்கடவது. (௪௧௦). அவர்களைச் சிரித்திருப்பா ரொருவருண்டிறே, அவர்பாசுரங்கொண் டிவ்வர்த்தமறுதியிடக்கடவோம். (௪௧௧). ஸ்வரூபத்துக்கும், ப்ராப்யத்துக்குஞ் சேர்ந்திருக்கவேணுமிறே ப்ராபகம். (௪௧௨). வடுகநம்பி ஆழ்வானையும், ஆண்டானையும், இருகரையரென்பர். (௪௧௩). ப்ராப்யத்துக்கு ப்ரதமபர்வம் - ஆசார்ய கைங்கர்யம்; மத்யமபர்வம் - பகவத்கைங்கர்யம்; சரமபர்வம் - பாகவதகைங்கர்யம். (௪௧௪). ஸ்வரூபப்ராப்தியை ஶாஸ்த்ரம் புருஷார்த்தமாகச் சொல்லாநிற்க ப்ராப்திபலமாய்க்கொண்டு கைங்கர்யம் வருகிறாப்போலே ஸாத்ய வ்ருத்தியாய்க்கொண்டு சரமபர்வம் வரக்கடவது. (௪௧௫). இதுதான் துர்லபம். (௪௧௬). விஷயப்ரவணனுக்கு அத்தைவிட்டு பகவத் விஷயத்திலே வருகைக்குள்ள அருமைபோலன்று, ப்ரதமபர்வத்தைவிட்டு, சரமபர்வத்திலே வருகைக்குள்ளவருமை. (௪௧௭). அங்கு தோஷதர்ஶநத்தாலே மீளலாம்; இங்கு அதுசெய்யவொண்ணாது. (௪௧௮). தோஷமுண்டானாலும் குணம்போலே யுபாதேயமாயிருக்கும். (௪௧௯). லோகவிபரீதமாயிறே யிங்கிருப்பது. (௪௨௦). குணமுபாதேயமாகைக் கீடானஹேது தோஷத்துக்கு முண்டிறே. (௪௨௧). நிர்க்ருணனென்று வாய்மூடுவதற்கு முன்னே க்ருணாவானென்று சொல்லும்படியாயிருந்ததிறே. (௪௨௨). இப்படி சொல்லும்படி பண்ணிற்று, க்ருபையாலேயென்று, ஸ்நேஹமும், உபகார ஸ்ம்ருதியும் நடந்ததிறே. (௪௨௩). நிர்க்ருணனாக ஶங்கித்துச்சொல்லு மவஸ்தையிலும், காரணத்தை ஸ்வகதமாகவிறே சொல்லிற்று. (௪௨௪). குணதோஷங்களிரண்டும், க்ஷுத்ரபுருஷார்த்தகாஷ்டையையுங் குலைக்கும். (௪௨௫). நித்யஶத்ருவாயிறே யிருப்பது. (௪௨௬). இப்படி ப்ராப்யத்தை யறுதியிட்டா லதுக்கு ஸத்ருஶமாக வேணுமிறே ப்ராபகம். (௪௨௭). அல்லாதபோது ப்ராப்யப்ராபகங்களுக்கு ஐக்யமில்லை. (௪௨௮). ஈஶ்வரனைப்பற்றுகை - கையைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி; ஆசார்யனைப்பற்றுகை காலைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி. (௪௨௯). ஆசார்யனிருவர்க்கு முபகாரகன். (௪௩௦). ஈஶ்வரனுக்கு ஶேஷவஸ்துவை யுபகரித்தான்; சேதநனுக்கு ஶேஷியை யுபகரித்தான். (௪௩௧). ஈஶ்வரன்றானும் ஆசார்யத்வத்தை யாசைப்பட்டிருக்கும். (௪௩௨). ஆகையிறே குருபரம்பரையிலே அந்வயித்ததும், ஸ்ரீகீதையும் அபயப்ரதாநமு மருளிச்செய்ததும். (௪௩௩). ஆசார்யனுக்கு ஸத்ருஶப்ரத்யுபகாரம் பண்ணலாவது - விபூதிசதுஷ்டயமும் ஈஶ்வரத்வயமு முண்டாகில். (௪௩௪). ஈஶ்வர ஸம்பந்தம் பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயிருக்கும்; ஆசார்ய ஸம்பந்தம் மோக்ஷத்துக்கே ஹேதுவாயிருக்கும், (௪௩௫). பகவல்லாபம் ஆசார்யனாலே. (௪௪௬). ஆசார்யலாபம் பகவானாலே. (௪௩௭) உபகார்யவஸ்து கௌரவத்தாலே, ஆசார்யனைக்காட்டில் மிகவு முபகாரகன் ஈஶ்வரன். (௪௩௮). ஆசார்யஸம்பந்தங் குலையாதே கிடந்தால், ஜ்ஞாநபக்தி வைராக்யங்களுண்டாக்கிக்கொள்ளலாம்; ஆசார்யஸம்பந் ங் குலைந்

தால், அவையுண்டானாலும் ப்ரயோஜநமில்லை. (௪௩௯). தாலிகிடந்தால் பூ-ஷணங்கள் பண்ணிப் பூணலாம்; தாலிபோனால் பூஷணங்களெல்லாம் அவத்யத்தை விளைக்கும். (௪௪௦). தாமரையை யலர்த்தக்கடவ ஆதித்யன்றானே நீரைப்பிரிந்தா லத்தை யுலர்த்துமாபோலே, ஸ்வரூப விகாஸத்தைப் பண்ணும் ஈச்வரன்றானே ஆசார்யஸம்பந்தங் கொலைந்தா லத்தை வாடப் பண்ணும். (௪௪௧). இத்தையொழிய பகவத்ஸம்பந்தம் துர்லபம். (௪௪௨). இரண்டு மமையாதோ, நடுவிற்பெருங்குடி யென்னென்னில், (௪௪௩). கொடியைக் கொம்பிலே துவக்கும்போது சுள்ளிக்கால் வேண்டுமாபோலே ஆசார்யாந்வயத்துக்கு மிதுவேணும். (௪௪௪). 'ஸ்வாபிமாநத்தாலே ஈச்வராபிமாநத்தைக் கொலைத்துக்கொண்ட விவனுக்கு ஆசார்யாபிமாநமொழிய கதியில்லை' என்று பிள்ளை பலகாலு மருளிச்செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும். (௪௪௫). ஸ்வஸ்வாதந்த்ர்ய பயத்தாலே பக்திநழுவிற்று. (௪௪௬). பகவத் ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே ப்ரபத்திநழுவிற்று. (௪௪௭). ஆசார்யனையுந் தான் பற்றும்பற்று அஹங்கார கர்பமாகையாலே, காலன்கொண்டு மோதிரமிடுமோபாதி. (௪௪௮). ஆசார்யாபிமாநமே உத்தாரகம். (௪௪௯). கைப்பட்ட பொருளைக் கைவிட்டுப் புதைத்தபொருளைக் * கணிசிக்கக்கடவனல்லன். (௪௫௦) விடாய் பிறந்தபோது கரஸ்தமான உதகத்தை உபேக்ஷித்து ஜீமூதஜலத்தையும், ஸாகரஸலிலத்தையும், ஸரித்ஸலிலத்தையும், வாபீகூப பயஸ்ஸுக்களையும் வாஞ்சிக்கக் கடவனல்லன். (௪௫௧). பாட்டுக்கேட்கு மிடமும் கூப்பீடு கேட்குமிடமும், குதித்தவிடமும், வளைத்தவிடமும், † ஊட்டுமிடமு மெல்லாம் வகுத்தவிடமேயென் றிருக்கக்கடவன். (௪௫௨). இவனுக்கு ப்ரதிகூலர் - ஸ்வதந்த்ரரும், தேவதாந்தரபரரும். அநுகூலர் - ஆசார்யபரதந்த்ரர். உபேக்ஷணீயர் - ஈச்வரபரதந்த்ரர். (௪௫௩). ஜ்ஞாநாநுஷ்டாநங்களிரண்டும் - அல்லாதார்க்கு உபாயாங்கமாயிருக்கும். இவனுக்கு ‡ உபேயாங்கமாயிருக்கும். (௪௫௪). இவனுக்கு நிஷித்தாநுஷ்டாநம் - தன்னையும் பிறரையும் நசிப்பிக்கையாலே த்யாஜ்யம். (௪௫௫). தான் நசிக்கிறது - மூன்றபசாரத்திலு மந்வயிக்கையாலே, பிறர் நசிக்கிறது - தன்னை அநாதரித்தும் தன் அநுஷ்டாநத்தை அங்கீகரித்தும். (௪௫௬). விஹிதபோகம் - நிஷித்தபோகம்போலே லோகவிருத்தமுமன்று; நரகஹேதுவுமன்று. ஆயிருக்கச்செய்தே, ஸ்வரூபவிருத்தமுமாய், வேதாந்த விருத்தமுமாய், சிஷ்டகர்ஹிதமுமாய், ப்ராப்யப்ரதிபந்தகமுமா யிருக்கையாலே த்யாஜ்யம். (௪௫௭). போக்யதாபுத்தி கொலைந்து தர்மபுத்த்யா ப்ரவர்த்தித்தாலும் ஸ்வரூபங்கொலையும். (௪௫௮). (க்ஷேத்ராணி மித்ராணி) என்கிற ச்லோகத்தி லவஸ்தை பிறக்கவேணும், ஸ்வரூபங்கொலையாமைக்கு. (௪௫௯). ப்ராப்யபூமியில் ப்ராவண்யமும், த்யாஜ்யபூமியில் ஜிஹாஸையும், அநுபவாலாபத்தில் ஆத்மதாரணயோக்யதையும், உபாயசதுஷ்டயத்துக்கும் வேணும். (௪௬௦). (பழுதாகாதொன்றறிந்தேன்) என்கிற பாட்டை பூர்வோபாயத்துக்கு ப்ரமாணமாக வநுஸந்திப்பது. (௪௬௧). (நல்லவென்றோழி)

---

* கணிசிக்கை - இச்சிக்கை. † மூட்டுமிடமும் - என்றும் பாடாந்தரம்.

‡ 'உபேயமாயிருக்கும்' என்றும் வ்யாக்யாந பாடாந்தரம்.

(மாருபதானவனே) என்கிற பாட்டுக்களேயும், ஸ்தோத்ரத்தில் முடிந்த ஶ்லோகத்தையும், (பஶுர்மநுஷ்ய:) என்கிற ஶ்லோகத்தையும், இதுக்கு ப்ரமாணமாக வநுஸந்திப்பது. (௪௬௨). ஆசார்யாபிமாநந்தான் - ப்ரபத்தி போலே உபாயாந்தரத்துக்கு அங்கமுமாய், ஸ்வதந்த்ரமுமா யிருக்கும். (௪௬௩). பக்தியில் அஶக்தனுக்கு ப்ரபத்தி; ப்ரபத்தியில் அஶக்தனுக்கு இது. (௪௬௪). இது ப்ரதமம் ஸ்வரூபத்தைப் பல்லவிதமாக்கும், பின்பு புஷ்பிதமாக்கும், அநந்தரம் பலபர்யந்தமாக்கும். (௪௬௫)

—[சரமபர்வ நிஷ்டாப்ரகரணம் ஸமாப்தம் ‖ ௬ ‖]—

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீவசநபூஷணம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அர்சிராதி

†ப்ரதமப்ரகரணம்.

தனியன்.

(கலித்துறை.)

போர்மண்டலஞ்சங்கு தண்டுவில்வாள்புக ராழிவெய்யோன்
கார்மண்டலஞ்சென்று காண்பார்தமக்குக் கதிரொளியோன்
* ஏர்மண்டலந்தன்னை யெய்தும்வழியை யினிதுரைத்தான்
பேர்மண்டலகுரு வென்னு முடும்பை பிறந்தவனே.

ஸ்ரீய:பதியான ஸர்வேஶ்வரனுக்கு விபூதித்வயமும் ஶேஷமாயிருக்கும். அதில் போகவிபூதியிலுள்ளார் (ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப) என்கிறபடியே அவனுடைய செங்கோலே ஏகாதபத்ரமாக நடக்கும்படி அவனுடைய அபிமாநத்திலே யந்தர்பவித்துப் போருவர்கள். லீலாவிபூதியிலுள்ளார் - அவர்களைப்போலே பகவதநுவர்த்திகளன்றிக்கே ஸங்கல்பாநுவிதாயிகளாய், (நம இத்யேவவாதிந:) என்கிறதுக் கெதிராக (நமமேயம்) (ஈஶ்வரோஹம்) என்கிறபடியே, மனேயடைவே, (யானே யென்றனதே) என்று, அவர்கள் (பணியா வமரரா) யிருக்கு மிருப்புக்கெதிராக மற்றோர் தெய்வம்பாடி யாடிப்பணிந்து, (மிக்கார்வேதவிமலர்) என்கிறபடியே, அவர்களைப்போலே பெருமக்களாயிராதே (சிறியார் சிவப்பட்டார்) என்கிறபடியே சிறியராய், (அயர்வறுமமரர்கள்) என்கிறபடியே அவர்களைப்போலே திவ்யஜ்ஞாநோபபந்நராயிராதே அறிவிலாமனிசராய், ஒளிக்கொண்டசோதிக்கெதிராக அழுக்குடம்பை பரிக்ரஹித்து, (விபந்யவ:) (விண்ணோர்பரவுந்தலைமகன்) என்கிறதுக்கெதிராக உலகில் கண்டவா தொண்டரைப்பாடி, (உனக்கே நாமாட்செய்வோம்) என்கிறபடியே அவனுக்காட் செய்யா

* 'மண்டலந்தன்னிலேகும்படியை' என்றும் பாடங்காண்கிறது.

தே *மாரனார்வரி வெஞ்சிலைக்காட்செய்து, தொண்டுபூண்டமுதமுண்ணாதே பாவையர்வாயமுதமுண்டு, (ஸஏகயாஹவதி) என்கிறதுக்கெதிராக குலந்தானைத்தனையும்பிறந்து, உருவார்சக்கரஞ் சங்குசுமந்திங்கவனோ டொருபாடுழலாதே ஆக்கையின்வழி யுழன்று, (ஏதத்வ்ரதம்மம) என்கிறவனுடைய வ்ரதத்துக்கெதிராக யாதானும்பற்றி நீங்கும் விரதத்தை யேறிட்டுக்கொண்டு, (அவர் தருங் கலவியேகருதி யோடினேன்) என்கிறபடியே அலம்புரிந்த நெடுந்தடக்கைக்குமெட்டாதபடி கைகழியவோடி, அற்பசாரங்களவை சுவைத்தகன்று போரக்கடவராயிருப்பர்கள்.— இவர்கள் தண்மையைப்பார்த்துக் கைவிடாதே,ஸ்வாபாவிக ஸம்பந்தமே ஹேதுவாக விடமாட்டாதே ‡ எதிர்சூழல் புக்குத்திரிகிற ஸர்வஜ்ஞ ஸுஹ்ருத்தான ஸர்வேஶ்வரனுடைய யத்நவிஶேஷம் ஒருநாள்வரையிலே யோரவகாஶத்திலே ஃபலித்து, அத்வேஷாபிஸந்தியையுடையனாய், மோக்ஷ ஸமீக்ஷாயுக்தனாய், ப்ரவ்ருத்தமானவைராக்யனாய், விவேகாபிநிவேஶியாய், ஸதாசார்ய ஸமாஶ்ரயணம் பண்ணிச்செய்த வேள்வியனாய், ஸம்ஸாரத்தினுடைய கொடுமையை யநுஸந்தித்து, ஸர்ப்பாஸ்யகதமான மண்டூகம் போலேயும், காட்டுத்தீ கதுவின மான்பேடைபோலேயும், இருபாடெரியினுள் ளெறும்புபோலேயும், ஆவாரார்துணையென்றலைநீர்க்கடலுளழுந்தும் ¶ நாவாய்போலேயும், ஆற்றத்துளங்கி, (பலநீகாட்டிப்படுப்பாயோ) (இன்னங்கெடுப்பாயோ), ஐவர்திசைதிசை வலித்தெற்றுகின்றனர்) (கூறைசோறிவைதாவென்று குமைத்துப்போகார்) என்று இந்த்ரியங்களினுடைய கொடுமையை நினைத்துக் கூப்பிட்டு (எண்ணாராத்துயர்விளைக்கு மிவையென்ன வுலகியற்கை) (உயிர்மாய்தல் கண்டாற்றேன்) (ஓஓஉலகினதியல்வே) என்று ஸம்ஸாரிகளிழவுக்கு நொந்தாற்றமாட்டாதே, (பேயரேயெனக்கியாவரும்) (நாட்டுமானிடத்தோடெனக்கரிது) என்றும் (நாட்டாரோடியல்வொழிந்து) என்றுஞ் சொல்லுகிறபடியே, பிராட்டிக்கு ராக்ஷஸிகளோட்டை ஸஹவாஸ மஸஹ்யமானாற்போலே, மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக்கொண்டு உண்டியேயுடையே யுகந்தோடுகிற பௌரிசிந்தா விமுகரான ஸம்ஸாரிகளோட்டை ஸஹவாஸம் து:ஸ்ஸஹமாய், (இங்நின்ற நீர்மையினியாமுறாமை) (எங்கினித்தலைப்பெய்வன்) (நாளேலறியேன்) (வானுலகந்தெளிந்தே யென்றெய்துவது) (தரியேனினி) (கூவிக்கொள்ளுங்கால மின்னங்குறுகாதோ) என்று பகவதநுபவம் பெறாமையாலே பெருவிடாய்ப்பட்டு, தீயோடுடன்சேர்மெழுகாய், காணவாராயென்றென்று கண்ணும் வாயுந்துவர்ந்து, காணப்பெறாமையாலே ஒருபகலாயிரமூழியாய், (க்ருதக்ருத்யா:ப்ரதீக்ஷந்தே) என்கிறபடியே ஆக்கைவிடும் பொழுதை மநோரதித்து, மஹிஷியினுடைய உச்சிஷ்டத்தை விரும்பும் ராஜபுத்ரனைப்போலே தான் த்யஜித்த தேஹத்தை விரும்புகிற ஈஶ்வரனை (மங்கவொட்டு) என்றபேக்ஷித்து, உண்டிட்டாயினி யுண்டொழியாய்) (முற்றக்

* மாரன் - காமன்.

† இந்தப்ரபந்தம் - ஒரேப்ரகரணமாயிருக்க, அநுஸந்தாக்களுக்கு ஸௌகர்யார்த்தமாகப் பூர்வர்கள் ப்ரகரண சதுஷ்டயமாக்கினார்கள் - என்று பெரியோர்கள்.

‡ எதிர்சூழல்புக்கு - ஸஜாதீயாவதாரம்பண்ணி. ¶ நாவாய் - ஓடம்.

கரந்தொளித்தாய்) (திருவாணை நின்னாணைகண்டாய்) இனி நான் போக லொட்டேன்) என்று தடுத்தும், வளைத்தும் பெறவேண்டும்படி பரமஹக் திதலையெடுத்தல், அவ்வளவன்றிக்கே யுக்திமாத்ரத்திலே அந்வயித்தல், (நானும் பிறந்தமை பொய்யன்றே) (தங்கள் தேவரை வல்லபரிசு வருவிப்ப ரேலதுகாண்டும்) (என்று சொல்லுகிறபடியே பழுதாகாதவழியை யறிந்து வேறுகவேத்தியிருக்கு மவனைப் பற்றுதல்செய்து, தெளிவுற்று வீவின்றி நிற்குமவனுக்கு, ஶரீராவஸாநகாலத்திலே, ஈஶ்வரன், தன் திருவடிகளிலே இவன் தலைசாய்த்தவன்றுதொடங்கி (ருணம்ப்ரவ்ருத்யம்), (உன்னடியார்க் கென்செய்வனென்றே யிருத்தி நீ) என்கிறபடியே பெருந் * தனிசாளனுய், ப்ரத்யுபகாரந்தேடித் தடுமாறி, திருத்திப் பணிகொள்ள நினைத்து, பல்வாங்கி ன பாம்புபோலே ஸம்ஸாரம் † மறுவலிடாதபடி யடியறுக்கச் செய்தேயும் 'பிணமெழுந்து கடிக்கிறதோ' என்றதிஶங்கைபண்ணி, அமர்ந்த நிலத்திலே கொண்டுபோகையிலே விரைந்து, இவன் விடாய் குளப்படி யென்னும்படி கடல்போலே முற்றப்பருக வேண்டும்படி பெருவிடாயை யுடையனுப், ஒருமாநொடியும் பிரியாதே, சக்ரவர்த்தி, பெருமாள் திருவபிஷேகத்துக்கு, வஸிஷ்ட வாமதேவாதிகளை யழைத்துப் ‡ பாரித்தாற்போலே, நித்யஸூரிக ளை யழைப்பித்து, வழியைக் ¶ கோடிப்பிப்பதாய்க்கொண்டு, (அலங்காரவி தம்க்ருத்ஸ்நம் காரயாமாஸவேஶ்மநி) என்கிறபடியே வீடுதிருத்தி, அநா திகாலார்ஜிதங்களாய் இவன் ஆசார்ய ஸமாஶ்ரயணம் பண்ணின வன்றே தொடங்கி அருளென்னுந் தண்டாலடியுண்டு, மூக்கும் முகமுஞ் சிதைந்து, பண்டுபோலே வீற்றிருக்கை தவிர்ந்து, மடியடக்கி நில்லாதே சரக்குவாங்கி (மருங்குங்கண்டிலமால்) என்னும்படி யொளித்து வர்த்திக்கிற பூர்வாவங் களையும், உத்தராவங்களையும், அநுகூலர் விஷயமாகவும், ப்ரதிகூலர் விஷ யமாகவும், வருணனைக்குறித்துத் தொடுத்த அம்பை மருகாந்தாரத்திலே விட்டாற்போலே ÷ அசல்பிளந்தேறிட்டு, இவனோடு ஸம்பந்தமுடையராய் நரகாநுபவம் பண்ணுகிறவர்களை (ஏதத்ஸம்பந்தி நஶ்சாந்யே) என்கிற படியே ஸ்வர்கஸ்தராம்படி நினைப்பிட்டு, (ஊஹ:பஞ்சாத்மாநாதேந தார்க்ஷ்ய ரூபேண) (செழும்பறவைதா னேறித்திரிவான்) என்று சொல்லுகிறபடியே (அருளாழிப்புட்கடவீர்) என்று இவனுசைப்பட்டபடியே கொற்றப்புள் ளொன்றேறிவந்து தோன்றி, மஞ்சுயர் பொன்மலைமேலெழுந்தமாமுகில் போன்ற வடிவையநுபவிப்பித்து, ஆதிவாஹிகரை யழைத்தருளி, இவனை ஸத்கரிக்கும் க்ரமத்திலே ஸத்கரிக்க வருளிச்செய்ய; பின்பு (இந்த்ரியைர்மந ஸிஸம்பத்யமாநை:) வாங்மநஸிஸம்பத்யதே மநப்ராணே ப்ராணஸ்தேஜஸி தேஜ:பரஸ்யாமதேவதாயாம்) என்கிறபடியே, பாஹ்யகரணங்கள் அந்த: கரணத்திலே சேர்ந்து, அந்த:கரணம் ப்ராணனோடே சேர்ந்து, ப்ராணன் இச்சேதநனோடே ஸம்பந்தித்து, இவன் பூதஸூக்ஷ்ம விஶிஷ்டனுய்க் கொண்டு பரமாத்மாவின் பக்கலிலே சேரும். பின்பு, வர்மகாலத்

* தனிசு - கடன். † மறுவலிடுகை - திரும்புகை. ‡ பாரித்தல் - உத்யோகித்தல்.
¶ கோடிக்கை - அலங்கரிக்கை.
÷ அசல்பிளந்தேறிடுகை - அந்யத்ரஸங்க்ரமிப்பிக்கை.

திலே ஆதித்யகிரணத்தாலே தப்தனானவன் நிழல்மரத்தைப்பற்றி யிளைப்
பாறுமாபோலே, ஸம்ஸாரஜ்வாலாவர்க்க தாபதப்தனான விவன் வாஸுதேவ
தருச்சாயையைக்கிட்டி விஸ்ரமித்து, திருக்கோவலூருக்குப் போம்போது
திருமங்கை யாழ்வாருக்கு (தானுகந்த வூரெல்லாந் தன்றாள்பாடி) என்கிறப
டியே திருவுலகளந் தருளின திருவடிகளே பாதேயமாமாபோலே, (ப்ராண
ப்ரயாணபாதேயம்) (பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்)
என்கிறபடியே தீவயவசநமே பாதேயமாகவும், (ஏதேநப்ரதிபதீயமாநா:)
(தேவயாநபதாஸ்ஸர்வே முக்திமார்காபிலாஷிண:) என்கிறபடியே அர்சி
ராதிமார்கமே பெருவழியாகவும், அண்டத்தப்புறத் துய்த்திடுமையனாய், ஆப்
ததமனாய், படர்கொள் பாம்பணைப்பள்ளிகொண்ட சுரிகுழற்கமலக்கட் கனி
வாய்க்காளமேகமான அரங்கத்துறையு மின்துணைவனே வழித்துணையாக
வும், விரஜாதீரமும் திவ்யவ்ருக்ஷமும் ஆமோதஹ்ருதடமுமே விஸ்ரமஸ்தல
மாகவும், திருமாமணிமண்டபமே புகலிடமாகவும், அர்சிராதி புருஷர்களே
* உசாத்துணையாகவும், சூழ்விசும்பணி முகிலினுடைய முழக்கமே ப்ரயாண
படஹத்வனியாகவுமமைந்து வழியைத்தரும் நங்கள் வானவரீசனான ஹார்
தன் வழிபட்டோடவருள, வானேறவழிபெற்று, போக்கிலே யொருப்பட்டு,
ப்ரீத்யதிசயத்தாலே, அநாதிகாலம் தன்னைக்குடிமைகொண்டுபோந்த ஸம்
ஸாரத்தை (நரகத்தைநகுநெஞ்சே) என்கிறபடியே புரிந்து பார்த்துச்சிரித்து,
மாகவைகுந்தங் காண்பதற்குப் பண்டேயுண்டானவாசை† கொந்தளித்து,
மேலேமேலே பெருக, பிராட்டியும் ஸ்ரீவிபீஷணப்பெருமாளு மிலங்கையி
னின்றும் புறப்பட்டாற்போலே ஹ்ருதயகமலத்தினின்றும் புறப்பட்டு, (ஶத
ஞ்சைகாச ஹ்ருதயஸ்யநாட்ய:) என்கிறபடியே - ஹ்ருதயத்தைப்பற்றிக்கிடக்
கிற நூற்றொருநாடியிலும், ஸுஷும்நை என்று பேரையுடைத்தான மூர்தந்
யநாடியாலே, வித்யாமாஹாத்ம்யத்தாலும் தேவயாநாநுஸ்ம்ருதியாலும் ப்ர
ஸந்நனான ஹார்தன் கைவிளக்குப் பிடித்துக்கொண்டு போகப்போய், ஶிர:
கபாலத்தை பேதித்து, (தஆஸுநாடீஷுஸ்ருப்தா: ஆபீயோநாடீப்ய: ப்ர
தாயந்தே தேமுஷ்மிந்நாதித்யே ஸ்ருப்தா: .... அதைதைரே வரஶ்
மிபிரூர்த்வ ஆக்ரமதே) என்கிறபடியே அந்நாடியோடே ஸம்பந்தித்து,
ஆதித்யரஶ்மியை யநுஸரித்துக்கொண்டு, (ஓங்காரரதமாருஹ்ய) என்கிறப
டியே ப்ரணவமாகிற தேரிலேயேறி, மநஸ்ஸு ஸாரதியும் பண்ணப்போம்
போது, கையார்சக்கரத்தினின் றெல்லாவடிவும் ‡ புதுக்கணிக்குமாபோலே
உபயவிபூதியும் புதுக்கணித்து, கடல் தன் காம்பீர்யமெல்லாங் கொலைந்து,
கீழ்மண்கொண்டு மேல்மண்ணெறிந்து ஸஸம்ப்ரம ந்ருத்தம் பண்ணியார்க்க,
உபரிதநலோகங்களி லுள்ளார்களுடைய உபஹாரபாணிகளாய், நெடுவரைத்
தோரணம் நிரைத்து, ஆகாஶமெங்கும் பூர்ணகும்பங்களாலே பூர்ணமாக்கி,
தூபநன்மலர் மழைபொழிந்து, 'இவனொருக்கால் தங்கிப்போமோ' என்கிற
நோயாசையாலே எதிரெதிரிமையவ ரிருப்பிடம்வகுக்க, லோகங்களெல்லா
மதிரும்படி கடலிரைத்தாற்போலே வாத்யங்களெங்கு முழங்க, வழியிலுள்

* உசாத்துணை - ஸஹாயம். † கொந்தளிக்கை - பொங்குகை.
‡ புதுக்கணிப்பு - நவீனகாந்தி.

ளார்களடைய (போதுமினெமதிடம்புகுதுக) என்கிறபடியே தந்தாம் ஸ்யா நங்களையும் ஐஶ்வர்யங்களையும் ஸமர்ப்பிக்க, சிலர் கீதங்கள்பாட, சிலர் யாமாதிஸுக்ருத ஃபலங்களை ஸமர்ப்பிக்க, வேறே சிலர் தூபதீபாதிகளாலே அர்சிக்க, சிலர் காளங்கள் வலம்புரி கலந்தெங்கு மாரவாரிப்ப, வாளொண்கண் மடந்தையரான ஆதிவாஹிகமஹிஷிகள், 'இது அராஜகமாய்க் கிடக்கக்கடவதோ, இத்தையாளவேணும்' என்று மங்களாஶாஸநம்பண்ண, மருதரும் வசுக்களும் இவன் விரைந்துபோனு லீஶ்வரன் நமக்குக் கையடைப்பாக்கின நிலங்கழிந்ததென்றிராதே, லோகாந்தரங்களிலுந் தொடர்ந்துசென்று இவன் செவிப்படும்படி ஸ்தோத்ரம்பண்ண, (மற்றெல்லாங்கைதொழப்போய்) என்கிறபடியே பெரியஸத்காரத்தோடே போம்போது, (அர்சிஷமேவாபி ஸம்பவந்தி அர்சிஷோஹ அஹ்ந ஆபூர்யமாணபக்ஷம்), (அக்நிர்ஜ்யோதிரஹஶ்ஶுக்லஷ்ஷாண்மாஸா உத்தராயணம்) என்று சாந்தோக்ய வாஜஸநேய கௌஷீதகீ ப்ரஶ்ருதிகளிற் சொல்லுகிறபடியே, அர்சிராதி புருஷர்கள் வழி நடத்தப்போம்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேஶரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

த்விதீயப்ரகரணம்.

அதில் முற்பட அர்சிஸ்ஸைக்கிட்டி, அவன் சிறிதிடம் வழிநடத்த, பின்பு அஹஸ்ஸையும், ஶுக்லபக்ஷாபிமாநியையும், உத்தராயணாபிமாநியையும், ஸம்வத்ஸராபிமாநியையும், வாயுவையுங் கிட்டி, அவர்கள் வழிநடத்த, (ப்ரவிஶ்யச ஸஹஸ்ராம்ஶும்) (மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தினன்னடுவுள்) என்கிறபடியே, ஹிரண்மயமாய் காலசக்ர ப்ரவர்த்தகமான தேரார் நிறைகதிரோன் மண்டலத்திலே, எதிர்விழிக்கவொண்ணுதபடி நிரவதிக தேஜஸ்ஸோடே எதிரேயொரு ஆதித்யன் செல்லுமாபோலேசென்று, அவன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு, அவ்வருகேபோய், (க்ரமாச்சந்த்ரமஸம்ப்ராப்ய) என்கிறபடியே க்ரஹநக்ஷத்ரதாரகா நிர்வாஹகனுய் அம்ருதாத்மகனுயிருந்துள்ள சந்த்ரனைக்கிட்டி, அவன் ஸத்கரிக்க அவ்வருகே போய், அமாநவனைக்கிட்டி, அவன் வழிநடத்த, ஸர்வாப்யாயகனுன வருணனும், த்ரைலோக்ய பாலகனுன இந்த்ரனும், முக்தராய்ப்போகுமவர்களை ஸர்வப்ரகாரத்தாலும் மிகவும்ஶ்லாகிக்கக் கடவர்களாய், ஸுராஸுர கந்தர்வ யக்ஷ ராக்ஷஸ நிர்வாஹகனுன ப்ரஜாபதியையுஞ் சென்றுகிட்டி, அவர்கள் லோகங்களையுங் கடந்து, அண்டத்தையும், தஶோத்தரமான ஆவரண ஸப்தகத்தையும், முடிவில் பெரும்பாழான மூலப்ரக்ருதியையுங்கடந்து;—முன்பு ஸம்ஸாரியான நாளில் அந்தகாராவ்ருதமாய், நீரும் நிழலுமின்றிக்கே (வீதோஸ்ம்யஹம் மஹாதேவஶ்ருத்வாமார்கஸ்ய விஸ்தரம்) என்கிறபடியே, கேட்டபோதே துளங்கவேண்டும்படியான கொடியவழியிலே, யமபடர் பாசங்களாலும், புத்ரதாரமய பாசங்களாலுங் கட்டுண்டு, யமதூதராலே யிழுப்பு

ண்டு, தொடைவழி நாய்கள்கவர, ஶக்தி ஶங்கு தோமர ஸாயக ஶூலாதிக ளாலே நோவுபட்டு, வ்யாக்ர ஸிம்ஹரான ராக்ஷஸர் மூவங்களுக் கிரை யாய் உடம்பெங்கும் சீயும் ரக்தமும்வடிய, பசியும் தாஹமும் மேலிட்டு, உதரைச் சோறும் தண்ணீரும் வேண்டி, மூக்கும் முகமும் உதடும் பல் லுந்தகர்ந்து, கையுங்காலுமொடிந்து, கூப்பிட்டுப்போன விழவுதீர,—ஸ ர்வோத்தரமான மார்மத்தாலே இவ்வெல்லை கடந்தபோதே தொடங்கிக் கண் டாரடைய ஸத்கரிக்க, தனக்கு உபாயமான பாரளந்த பாதப்போதுபோலே யும், அந்தரமேழினூடு செலவுய்த்த பாதம்போலேயுங் கடுநடையிட்டுப் போய், ஶப்த ஸ்பர்ஶாதிகளாகிற ஸிம்ஹவ்யாக்ராதிகளைத் தப்பி, ஸம்ஸா ரமாகிற பெருந்தூற்றினின்றும் புறப்பட்டு, தாபத்ரயமாகிற காட்டுத்தீயிலே யகப்பட்டுப் பட்ட க்லேஶமெல்லாந்தீர, (ததஸ்து விரஜாதீரப்ரதேஶம்) (ஸமச்சதி விரஜாம்நதீம்) என்கிறபடியே அம்ருதவாஹிநியாய், வைதரணிக் கெதிர்த்தட்டான விரஜையைச் சென்றுகிட்டி, வன்சேற்றள்ளலையும் வாஸ நாரேணுவையுங் கழுவி, மேகாவ்ருதமான ஆதித்யமண்டலம்போலேயும், ராஹுக்ரஸ்தமான சந்த்ரமண்டலம் போலேயும், சேற்றிலழுந்தின மாணி க்கம்போலேயும் அழுக்குடம்பிலே யகப்பட்டு திரோஹிதஸ்வரூபனான விவன் அதுவும் நிவ்ருத்தமாய், (தத்தோயஸ்பர்ஶமாத்ரேண) என்கிறபடி யே விரஜாஜலஸ்பர்ஶத்தாலே திரோதாயகமான ஸூக்ஷ்மஶரீரமுங் கழி யப்பெறுகையாலே, (ஸூர்யகோடிப்ரதீகாஶ:) என்கிறபடியே அநேகமா யிரமாதித்யர்கள் சேரவுதித்தாற்போலே கண்கொண்டு காணவொண்ணாத படி நிரவதிக தேஜஸ்ஸை யுடையனாய், (அமாநவம் ஸமாஸாத்ய) என்கிற படியே சதுர்புஜனாய், ஶங்க சக்ர கதாதரனாய், விரஜைக்கரையிலே யெழுந்தருளியிருக்கிற அமாநவனைச்சென்று கிட்டி, அவன் திருக்கைகளாலே ஸ்பர்ஶிக்க, பின்பு லாவண்ய ஸௌந்தர்யாதி கல்யாணகுணாகரமாய் ஶுத்த ஸத்வ மயமாய், பகவதநுபவைக பரிகரமான விக்ரஹத்தைப்பெற்று, இந்த்ராதி பதங்கள்போலே கர்மஸாத்யமாய், நஶ்வரமாய், குணத்ரயாத் மகமாயிருக்கை யன்றிக்கே, பகவத் ப்ரீதிஸாத்யமாய், நித்யமாய், ஶுத்த ஸத்வாத்மகமாய், (இல்லைகண்டீரின்பம்) என்கிறதுக் கெதிர்த்தட்டாக நலமந்தமில்லதோர் நாடாய், இருள்தருமா ஞாலத்துக்கெதிர்த்தட்டாக (தெ ளிவிசும்பு திருநாடு) என்கிறபடியே தெளிதாகிய சேண்விசும்பாய், ஸநகா திகள் நெஞ்சுக்கும் நிலமன்றிக்கே பகவதநுகூல்யைக போகரான நித்யஸூ ரியாலே நெருங்கி, அவர்களாலு மளவிடவொண்ணாதவளவையும், ஐஶ் வர்யத்தையும், ஸ்வபாவமாக வுடைத்தான திவ்யதேஶத்தைக் கண்களாரள வும் நின்றுகண்டு, (விண்ணைத்தொழுது) என்கிறபடியே தொழுது, அமாநவ பரிஸரத்திலே ஶங்க காஹள பேரிகளினுடைய முழக்கத்தைக்கேட்டு, (ஓடுவார் விழுவாருகந்தாலிப்பார் - நாடுவார்நம்பிரா னெங்குற்றானென்பார்) (கண்டோங் கண்டோங் கண்டோங் கண்ணுக்கினியனகண்டோங் - தொ ண்டீரெல்லீரும்வாரீர்) என்பாராய்க்கொண்டு பெரிய * ஆர்ப்பரவத்தைப் பணித் திரள்திரளாகப் புறப்பட்டு வருகிற நித்ய முக்தருடைய ஆநந்த

* ஆர்ப்பரவம் - ஆரவாரம்.

* களகளத்தைக் கண்டநுபவித்துக் கொண்டு, பெரிய ப்ரீதியோடே போகிற வளவிலே, (தம்பஞ்சஶதாந்யப்ஸரஸாம்ப்ரதியாவந்தி); (தத்ராம த்யச தேஶேவாஸ் ஸாயீயாஸீச விமலாபயா:) என்கிறபடியே திவ்யமால் யம், திவ்யாஞ்ஜநம், திவ்யசூர்ணம், திவ்யவஸ்த்ரம், திவ்யாபரணந் தொடக்க மானவற்றை யரித்துக்கொண்டு, ஐந்நூறு திவ்யாப்ஸரஸ்ஸுக்களும், நித்யஸூரிகளு மெதிரேவந்து, (ப்ரம்ஹாலங்காரேண) (ப்ரம்ஹா லங்க்ரியா) என்கிறபடியே அலங்கரித்து, உடுத்துக்களைந்த நின்பீதக வாடை, சூடிக்களைந்த திவ்யமால்யம், திவ்யாபரணங்கள், திவ்யாங்கராக ங்கள் தொடக்கமானவற்றாலே யலங்க்ருதனு யிருக்கிற படியைக்கண்டு, (புனை யிழைகளணிவு மாடையுடையும் புதுக்கணிப்பும் - நினையும் நீர்மையதன்று) என்று விஸ்மிதராய்க்கொண்டாட, பின்பு அநேகமாயிரங் கொடிகளாலும், முத்துத்தாமங்களாலும், மேற்கட்டிகளாலு மலங்க்ருதமாய், திவ்யஸ்த்ரீப ரிவ்ருதமாய், பகவத்ஸங்கல்ப கல்பிதமாயிருப்பதொரு திவ்யவிமாநத்தைப் பெரியதிருவடி கொண்டுவர, அதிலே யிவனையேற்றி ஸ்தோத்ரம் பண்ணிக் கொண்டு திவ்யகாந்தாரத்தளவிலே சென்றவாறே; நாநாவிதமான உபஹா ரங்களை யேந்திக்கொண்டு வேறேசில திவ்யாப்ஸரஸ்ஸுக்க ளெதிரேத்தி ஸத்கரிக்க, பின்பு திவ்யகந்தம், ப்ரம்ஹகந்தந் தொடக்கமான அப்ராக் ருத கந்தங்களை ஆக்ராணம்பண்ணி ஸர்வகந்தனுய், (கொடியணிநெடும திள் கோபுரங்குறுகினர்) என்கிறபடியே த்வஜபதாகாதிகளாலே யலங்க் ருதமான திவ்ய கோபுரத்தைக்கிட்டி, திருவாசல்காக்கும் முதலிகள் (வைகுந் தன்றமரெமரெமதிடம்புகுதுக) என்கிறபடியே பெரியவாதரத்தோடே ஸத் கரிக்க, (ஸமதீத்யஜநாகுலம்) (கவாடங்கடந்துபுக்கு) என்கிறபடியே நெஞ் சையும் கண்ணையும் வருந்தி மீட்டுக்கொண்டு, அயோத்யையை யென்றும் அப ராஜிதையென்றுஞ் சொல்லப்படுகிற ஏர்கொள் வைகுந்தமாநகரத்திலே ஒரு வண்ணஞ் சென்றுபுக்கு, (ஸ்ரீவைகுண்டாய திவ்யநகராயநம:) என்று கண் ணன் விண்ணூரைத்தொழுது, வைகுந்தத்தமரும் முனிவரும், 'கடலில் நீர் ஸஹ்யத்திலே ஏறக்கொழித்தாற்போலே ஸம்ஸாரஸ்தனுன விவனிந் தேஶத்திலே வரப்பெறுவதே' என்று விஸ்மிதராய்க்கொண்டாட, பின்பு கோயில்கொள் தெய்வங்களான பெரியதிருவடி, ஸ்ரீஸேநாபதியாழ்வான் தொடக்கமானவர்கள் தந்தாந் திருமாளிகைகளிலே கொண்டுபுக்கு, இவனை ஆஸநத்திலே யுயரவைத்து, தாங்கள் தரையிலேயிருந்து, தங்கள் மஹி ஷிகள் நீர்வார்க்க ஸ்ரீபாதம் விளக்கி, தங்கள் மஹிஷிகளுக்கு (தேவர்வை கல் தீர்த்தங்களே) என்று இவன் ப்ரபாவத்தைச் சொல்லி, ஸத்கரிக்கும் க்ரமத்திலே ஸத்கரிக்க, பின்பு ஸ்ரீஶடகோபனும், திவ்யசூர்ணங்களும், பூர்ணகும்பங்களும், மங்கள தீபங்களு மேந்திக்கொண்டு, தேஶாந் தராகதனுய் வந்த புத்ரனைக்கண்ட தாய்மாரைப்போலே குளிர்ந்தமுக த்தையுடைய மதிமுகமடந்தையர் வந்தெதிர்கொள்ள, பெருந்தெருவாலே யுள்ளேபுக்கு, திவ்யாவரண ஶதஸஹஸ்ராவ்ருதமான செம்பொன்செய் கோயிலைக்கிட்டி, (ஸ்ரீவைகுண்டாய திவ்யவிமாநாயநம:) என்று தெண்

* களகளம் - பேரொலி.

டனிட்டு, ஒருபாட்டம் மழை விழுந்தாற்போலே தன்னுடைய வரவாலே தளிர்த்துச் * செருந்தியிலையும் மரமுந் தெரியாதபடி பாஹுள்யமான நிறத்தையும் ஸௌகந்த்யத்தையுமுடைய அப்ராக்ருத புஷ்பங்களாலே நெருங்கித் தேன் வெள்ளமிடுகிற கற்பகச்சோலைகளாலும் நாநாவிதமான பூக்களாலும் ரத்நங்களாலுஞ் சமைந்த லீலாமண்டபங்களாலும், அபூர்வவத்விஸ்மய ஜநகங்களான க்ரீடாஶைலங்களாலும், ஸ்ரீவைகுண்டநாதனுக்கும் பெரியபிராட்டியார்க்கும் லீலாபரிகரங்களாய், செவிகளடைய மயிர்க்கூச்சிடும்படி இனிய பேச்சுக்களையுடைய ஸுக ஸாரிகா மயூர கோகிலாதிகளாலும் ஆகுலங்களாய், மாணிக்கம் முத்து பவளந் தொடக்கமானவற்றாலே சமைந்தபடிகளையுடைத்தாய், நித்யமுக்தர்களுடைய திருவுள்ளங்கள்போலே குளிர்ந்து, தெளிந்து, அம்ருதரஸங்களான திவ்யஜலங்களாலே நிறைந்து, நாநாவித பக்ஷிஸங்கஸமாகீர்ணமாய்த் துளும்பி யெங்குஞ்சொரிகிற தேன்வெள்ளத்தையுடைத்தாய், (மாதர்கள்வாண்முகமுங் கண்ணுமேந்தும்) என்கிறபடியே மதிமுக மடந்தையருடைய திருமுகங்களுக்குந் திருக்கண்களுக்கும் போலியான தாமரை செங்கழுநீர் தொடக்கமான அப்ராக்ருத புஷ்பங்களையுடைய ஓதநெடுந்தடங்களாலும், நாநாவிதமான பூம்படுக்கைகளாலும், பரிமளம் போலே பூக்களிலே படிந்து மதுவெள்ளத்திலேமுழுகிப் பாட்டுக்களாலே அநுமேயங்களான தெய்வவண்டுகளினுடைய திவ்யகாநத்தாலும் கிட்டினரைப் பிச்சேற்றுகிற திவ்யோத்யாநஶதஸஹஸ்ரங்களாலும் சூழப்பட்டு, நாநா ரத்நங்களாலே சமைந்த ஸ்தலங்களையு முடைத்தாய், அநேகமாயிரம் ரத்ந ஸ்தம்பங்களாலே யலங்க்ருதமாய், உபயவிபூதியிலுள்ளாரு மொருமூலையிலே யடங்கும்படி யிடமுடைத்தாய், தாமரை, செங்கழுநீர், சந்தநம், அகில், கர்ப்பூரந் தொடக்கமானவற்றை யளைந்துவருகிற மந்தமாருதனாலே ஸேவ்யமாநமாய், நிரதிஶயாநந்தமயமான திருமாமணிமண்டபத்தைச் சென்றுகிட்டி, (ஆநந்தமயாய மண்டபரத்நாயநம:) என்று தெண்டனிட்டு, அப்பால் முதலாய்நின்ற அளப்பரிய வாரமுதை யெப்போது மொக்கப் பருகுகையாலே † இளகிப்பதித்து வைகுந்தக்குட்டனோடு ஸாம்யாபந்நராய் அநுபவஜநிதமான ஹர்ஷப்ரகர்ஷத்துக்குப் போக்குவிட்டு ஸாமகாநம் பண்ணுவார், (செஞ்சொற்கவிகா ளுயிர்காத்தாட்செய்மின்) என்று இன்பவாற்றிலே ஶீலகுணமாகிற ஆழங்காலிலே ‡ கொண்டைக்கோல் நாட்டுவார், ஸ்வாசார்யனைக் குறித்து (இழைகொள்சோதிச் செந்தாமரைக்கட்பிரா னிருந்தமைகாட்டினீர்) என்பார், (உற்றேனுகந்து பணிசெய்துன்பாதம் - பெற்றேனீதே யின்னம் வேண்டுவதெந்தாய்) என்பார், (என்முடிவுகாணாதே யென்னுள்கலந்தானைச் - சொன்முடிவுகாணேனான் சொல்லுவதென்சொல்லீர்) என்பார், (நமோநாராயணாயவென்பார்) என்கிறபடியே ஓவாதுரைக்கு முரையான பெரியதிருமந்த்ரத்தைச் சொல்லித் தோள்களை யாரத்தழுவி (என்னுயிரை யறவிலை செய்தனன்சோதி) என்று ஆத்மஸமர்ப்பணம் பண்ணுவார், உருகு

---

* செருந்தி - ஸுரபுன்னை. † இளகிப்பதிக்கை - இளமைவர்த்திக்கை.

‡ கொண்டைக்கோல் - நிலவராயிருப்பார் ஆறுகள் மடுக்களிலே பள்ளங்களுக்கடையாளமாக நடுகிறகோல்.

மாலிலே ஆழ்வார்பட்டதுபட்டு, (வல்வினையேனை யீர்கின்ற குணங்களையுடையாய்) என்று அம்புபாடரைப்போலே யுழைப்பார், (மேலைத்தொண்டுகளித்து) என்கிறபடியே தாஸ்யரஸம் தலைமண்டையிட்டு) (நமஇத்யேவவாதிந꞉) (நமஶ்ஶப்தம் ப்ரயுஞ்ஜதே) என்கிறபடியே அந்திதொழுஞ்சொல்லைச் சொல்லுவாராய்க்கொண்டு, இப்படி ப்ரளயஜலதியிலே யலைவாரைப்போலே ஆநந்தஸாகரத்திலே யலைந்து, நித்யமுக்தர் சொல்லுகிற செவிக்கினிய செஞ்சொற்களாலே, வெஞ்சொலாளர்களுடைய கடுஞ்சொல்லைக்கேட்ட விழவுதீரச் செவிக்கிரையிட்டுக்கொண்டுபோய், திவ்யாஸ்தாநத்தைக்கிட்டி, அப்பேரோலக்கத்தின் நடுவே, தந்தாந்திருமுடிகளிலே திவ்யாயுதங்களை தரித்துக் கொண்டு கூப்பினகைகளுக் தாங்களுமாயிருக்கிற அஸ்த்ரஶஸ்த்ராத்யரான திவ்யபுருஷர்களும், தம்முடைய ஸங்கல்பத்தாலே ஸகலஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைப்பண்ணக்கடவ ஸேநைமுதலியார் தொடக்கமான திவ்யபுருஷர்களும் வரிசையடைவே ஸேவித்திருக்க—

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

த்ருதீயப்ரகரணம்.

உபயவிபூதியும் தொழிலாக வகுப்புண்டு, ஸர்வாஶ்சர்யமயமான கோப்புடைய சீரியசிங்காதனத்திலே பன்னிரண்டிதழாய், நாநாஶக்தி மயமான திவ்ய கமலமாய், அதில் திவ்யகர்ணிகையிலே புஷ்ப ஸஞ்சயவிசித்ரமான திவ்யயோக பர்யங்கமாய், அதின்மேலே அநேகமாயிரம் சந்த்ரர்களை யுருக்கிவார்த்தாற்போலே குளிர்ந்த புகரை யுடைத்தான திருமேனியையுடையனாய் கல்யாண குணங்களுக் கந்தமில்லாமையாலும், ஸர்வவித கைங்கர்யத்திலு மதிக்ருதனாய் கைங்கர்யபரர்க்கெல்லாம் * படிமாவாயிருக்கையாலும், அனந்தனென்றும் ஶேஷனென்றும் திருநாமத்தையுடையனாய், பகவதநுபவத்துக்குப் போக்குவீடாகப் பலவாய்த்தலைகளையுமுடையனாய், விஜ்ஞாநபலங்களுக்கும் ஶைத்ய மார்தவ ஸௌரப்யாதி குணங்களுக்கும் கொள்கலமான திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே, ரஜதகிரிஶிகரத்திலே அநேகமாயிரமாதித்யர்கள் சேரவுதித்தாற்போலே யிருக்கிற ஹணுமண்டலங்களில் ஜ்யோதிர்மண்டலத்தின் நடுவே, (பதிம்விஶ்வஸ்ய) என்கிறவனுக்கும் தன்பூர்த்தியாலே † பொறிபுறந்தடவ வேண்டும்படியான பூர்த்தியையும், (வாசஞ்செய்பூங்குழலாள்) என்கிறபடியே நாற்றத்துக்கும் நாற்றங் கட்டலாம்படியான பூங்குழலையும், புண்டரீகாக்ஷனையுங்கூடக் குடநீர் வார்ப்பித்துக்கொண்டு ஒருமூலையிலே குமிழிநீரூட்டும்படியான வடிக்கோலவாணெடுங்கண்களையும், போகத்துக் கேகாந்தமான ஒப்பனைபோலே பால்யமஶீயத்திலே ‡ மெய்க்காட்டுகிற யௌவநத்தையும், ÷ பேசில் பிசகும்

---

* படிமா - உபமாநம். † பொறிபுறந்தடவுகை - பூர்த்திசெய்கை.

‡ மெய்க்காட்டுகை - எண்ணிக்கை கொடுக்கை.

÷ பேசில் பிசகுகை - வார்த்தைசொல்லில் ஸௌகுமார்யத்தாலே அந்யதாவாகை.

படியான ஸௌகுமார்யத்தையும், (பித்தர்பனிமலர்மேற்பாவைக்கு) என்கிற படியே அல்லாதவர்கள் பக்கல்போலே நூல்பிடித்துப் பரிமாறவொட்டாத ஹோமியதா ப்ரகர்ஷத்தையும், ஹோமோபோதிவாத கேளியிலே ஹமவதீ வைஶ்வரூப்யத்தைச் * சிருங்கிக்கும்படியான பெருமையையுமுடையளாய், திவ்யபரிஜநங்களை தத்ததவஸ்தாநுரூபமாக திவ்யபரிசர்யையிலே நியோகியா நிற்பாளாய், ஸர்வாத்மாக்களுக்கு மென்றுமொக்கச் சார்வாய், ஶீலரூபகுண விலாஸாதிகளாலே (உனக்கேற்கும்) என்னும்படியிருக்கிற ஓசிந்த வொண் மலராளான பெரிய பிராட்டியார் வல † வட்டத்திலே யெழுந்தருளியிருக்க, அவளிலுங் காட்டில் விஞ்சின க்ஷமாதயாதிகுணங்களையும், நாவால்தொ கைக்க வொண்ணாத அழகையுமுடையராய், அவளுக்கு 'நிழல்போல்வன ரான மற்றையிரண்டு நாய்ச்சிமாரு மிடவட்டத்திலே ஸேவித்திருக்க, இவர் களுக்கு நடுவே மூன்று மின்கொடிகளோடேகூடி, தாமரை பூத்ததொரு காளமேகம் வெள்ளிமலையைக் ‡ கினியப்படிந் திருக்குமாபோலே (முடிச் சோதியா யுனது முகச்சோதிமலர்ந்ததுவோ) என்கிறபடியே திருமுவம ண்டலத்தி னொளிவெள்ளமானது மேனோக்கிக் கொழித்தாற்போலேயாய், உபயவிபூதிக்கும் நிர்வாஹகனென்னு மிடத்தைக் ¶ கோட்சொல்லித் தரக்கடவதாய், தன்புகராலே அல்லாதபுகரையடைய முட்டாக்கிடுகிற விண் முதனாயகனீண்முடி) என்கிற திருவபிஷேகத்தையும், கண்டார் கண்ணும் நெஞ்சுமிருளும்படி யிருண்டு சுழன்று, அஷ்டமீசந்திரனிலே அம்ருததாரை விழுந்தாற்போலே திருநெற்றியிலே சாத்தின திருநாமத்தை மறைப்பது காட்டுவதாய்க்கொண்டு அசைந்து விழுகின்ற பூந்தண்டுழாய் விரைநாறு கிற நீலப்பனியிருங் குழல்களையும், ஸௌகுமார்யாதிஶயத்தாலே குறுவேர் பரம்பினாற்போலேயாய், நயந்தார்கட்கு நச்சிலையான திருநெற்றியையும், அலர்ந்து குளிர்ந்திருக்கிற இரண்டு தாமரைப்பூக்களை மதத்தாலே யமுக்கி யாடுகிற இரண்டு வண்டொழுங்குபோலேயிருக்கிற தன்கைச் சார்ங்கமதுவே போ லழகிய திருப்புருவங்களையும், கலந்துபிரிந்தவர்களுக்கு இணைக்கூற் றங்களாய், அல்லாதவர்களைத் தாயாயளிக்கக்கடவதாய், சேதநர்பக்கல் வாத் ஸல்யாதிஶயத்தாலும், செய்யாளான பிராட்டியை யெப்போதுமொக்கக் கடாக்ஷிக்கையாலும், உபயவிபூத்யைஶ்வர்யத்தாலும் சிவந்து, (பதிம்விஶ் வஸ்ய) என்கிற ப்ரமாணம் வேண்டாதபடி (அனைத்துலகுமுடையவர விந்தலோசனனை) என்கிறபடியே ஸர்வேஶ்வரத்வசிஹ்நமாய் வேறோரழ கில் செல்ல வொட்டாதே தனக்கே யற்றுத்திரும்படி பண்ணி (தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவுந்தலைமகனை) என்கிறபடியே த்ரிபாத்விபூ தியையும் ÷ எழுத்து வாங்கிக்கூப்பிடும்படி பண்ணக்கடவதாய் குளிர்ந்து செவ்விபெற்று, பெரியபெருமாள் திருக்கண்கள்போலே கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி, இலங்கொளிசேரரவிந்தம் போன்றுநீண்டு, மிதோவைஜாத்யஸ்பர்த்தாஸ்பதீக்ருதஸௌபரிதீவத்வ லளிதங்களாய், அழகோலக்கங்

---

* சிரும்புதல் - ஸங்கோசிக்கை. † அட்டம் - பக்கம். ‡ கினிய - மூட.

¶ கோட்சொல்லித்தருகை - காட்டிக்கொடுக்கை.

÷ எழுத்துவாங்குகை - ஸ்வாமிபேரை மார்விலே யெழுதிக்கொள்கை.

கிளம்பினால் அடையாளங்களான தூதுசெய்கண்களையும், (மாட்டுயர்கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ வறியேன்) என்று நித்யஸங்ஶ்லேஷஜநகமான கோலநீள் கொடிமூக்கையும், அதினுடைய பல்லவோல்லாஸம்போலேயிருக்கிற திவ்யகபோலங்களையும், அதினுடைய நவகுஸுமம்போலேயாய், (பன்னிலாமுத்தந்தவழ்கதிர் முறுவல்செய்து) என்கிறபடியே பூர்ணசந்த்ரன் முழுநிலாவைச் சொரிந்தாற்போலே திருமுத்தினொளியை ப்ரவஹிக்கிற ஸ்மிதத்தையும், கோலந்திரள் பவளக்கொழுந்துண்டம்போலேயாய், பேச்சில் செல்லவொட்டாதே வாய்கரையிலே நீச்சாம்படி பண்ணி, நட்டாற்றிலே தெப்பத்தைப் பறிப்பாரைப்போலே அநுபவபரிகரமான சிந்தையைக் கவர்ந்து, கூப்பிடும்படி பண்ணக்கடவதாய், கள்வப்பணி மொழிகளுக்கு ஆகரமான திருவதரத்தையும், (இலகுவிலகுமகரகுண்டலத்தன்) என்கிறபடியே ப்ரீத்யதிஶயத்தாலே ஶிரஃகம்பநம் பண்ணுகையாலே யசைந்து, ஸ்கந்தங்களிலேமுட்டி தேஜஸ்ஸு அலையெறிந்து, லாவண்யஸாகரத்திலே யேறித்துள்ளுகிற மின்னுமாமணி மகரகுண்டலங்களையும், காந்தி ஶைத்ய மார்த்தவ ஸௌரப்யாதி குணங்களாலே, (சுற்றுமொளிவட்டஞ்சூழ்ந்து) என்கிறபடியே, ஸகலகலாபூர்ணமாய் ஸர்வாஹ்லாதகரமாய் மறுக்கழற்றின சந்த்ரமண்டலத்தையும் அப்போதலர்ந்த செந்தாமரைப் பூவையும் தோற்பிக்கக்கடவதாய், கிட்டினாரைப்பிச்சேற்றி, மையலேற்றி மயக்கும் மாயமந்திரமான கோளிழைவாண்முகத்தையும், நாய்ச்சிமாருடைய ஹஸ்தாபரணங்களாலே முத்ரிதமாய், க்ரமுக தருண க்ரீவா கம்பு ப்ரதிமமான திருக்கழுத்தையும், நாய்ச்சிமாருடைய திருச்செவிப்பூக்களாலும் கர்ணபூஷணங்களாலும், விகஸிதமான திருக்குழற் கற்றையாலுமுண்டான விமர்த்தத்தாலே (ஸீதயா ஶோபிதம்) என்கிறபடியே அலங்க்ருதங்களாய், இரண் * டட்டத்திலும் மரதககிரியைக்கடைந்து மடுத்தாற்போலே திண்ணியவாய், † கணையத்துக்குள்ளே யிருப்பாரைப்போலே தன்னையண்டைகொள்ளுகையாலே, ஸம்ஸாரத்திலே யிருக்கச்செய்தேயும் நிர்பரனும்படிபண்ணி, (அலம்புரிந்த) என்கிறபடியே தனக்கு உபயவிபூதியையும் வழங்கி, திவ்யாஸ்த்ர புஷ்பிதங்களாயிருக்கிற கற்பகக்காவன நற்பலதோள்களையும், பெரிய பிராட்டியாருக்குக் ‡ கோயிற்கட்டணமாய், நித்யாநுபவம் பண்ணுநிற்கச்செய்தேயும் (இறையுமகலகில்லேன்) என்னும்படி பிச்சேற்றக்கடவதாய், அவள் திருவடிகளிற்சாத்தின செம்பஞ்சுக்குழம்பாலும், ஸ்ரீபூமிப்பிராட்டியாருடைய கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பாலு மலங்க்ருதமாய், வநமாலா விராஜிதமாய், பெரியபிராட்டியார்க்கு ஹிரண்யப்ராகாரமான கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் ஸ்ரீகௌஸ்துபந் தொடக்கமான குருமாமணிப்பூண் குலாவித்திகழுகிற அழகிய திருமார்பையும், காளமேவத்திலே மின்கொடி படர்ந்தாற்போலே திருமேனிக்கு பரபாகரஸாவஹமாய், அழகுவெள்ளத்துக்கு அணைகட்டினாற்போலே யிருக்கிற வெண்புரி நூலையும், (உள்ளத்துள் நின்றுலாகின்றதே) என்கிறபடியே நித்தமுக்தருடைய திருவுள்ளங்

* அட்டம் - பக்கம். † கணையம் - கோட்டை.

‡ கோயிற்கட்டணம் - அந்தஃபுரம்.

களிலே அழகுசெண்டேறுகிற திருஉதரவந்தத்தையும், ஸௌந்தர்யஸாகர மிட்டளப்பட்டுச் சுழித்தாற்போலே நெஞ்சையும் கண்ணையும் சுழியாறு படுத்துகிற திருவுந்தியையும், ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் திருவாழியையும் சந்த்ராதித்யர்களாகக்கருதி, (ஆங்கு மலரும் குவியும்) என்கிறபடியே அலருவது குவிவதாய், விரிஞ்சிவநிதாநமான நாபீபத்மத்தையும், துடிசேரிடையையும், ஸந்த்யாராகரஞ்ஜிதமான ஆகாசம்போலேயிருக்கிற திருவரைக்கு பரபாகரஸாவஹமாய், திருவரை பூத்தாற்போலே யிருக்கிற அந்திபோல் நிறத்தாடையையும், ரம்பாஸ்தம்பாதி கம்பீரமான திருத்தொடைகளையும், தாமரைநாளம் போலே கண்டகிதங்களான திருக்கணைக்கால்களையும், சங்கசக்ர கல்பக த்வஜாரவிந்தாங்குச வஜ்ரலாஞ்சநமாய், நாய்ச்சிமாருங்கூடக் கூசித்தொடவேண்டும்படி அத்யந்தம் ம்ருதுக்களாய், (தேனேமலரும்) என்கிறபடியே நிரதிசயபோக்யங்களான துயரறு சுடரடிகளையும், லாவண்யஸாகரத்தினுடைய திரையொழுங்குபோலே யிருக்கிற திருவிரல்களையும் அதிலே அநேக சந்த்ரர்கள் தோற்றினாற்போலேயிருக்கிற திவ்ய நகங்களையும், வயிரவுருக்காய், ஆண்களையும் பெண்ணுடையுடுத்தி, பந்துக்களோடுறவறுத்து நாட்டைப் பகைவிளைத்து, சேணுயர்வானத் திருக்கும் தேவபிரான்றன்னை (குதிரியாய் மடலூர்தும்) என்கிறபடியே கண்டபோதே கையும் மடலுமாய்க்கொண்டு புறப்படும்படி பண்ணக்கடவதாய், கண்டபோதே யெல்லாவிடாயுங்கெட்டு, கண்டகண்கள் மயிரெறியும்படி யிருண்டுகுளிர்ந்து, ஸாம்யாபந்நரான ஸூரிகளுடைய நெஞ்சையும் கண்ணையும் * படையறுத்து, (இன்னாரென்றறியேன்) (பண்டிவரைக்கண்டறிவ தெவ்வூரில்) என்று மதிமயங்கும்படி பண்ணக்கடவதாய், ஸகலஜந ஜீவாதுவாய், வைதிகிய விதியாதிருஹமாய், மநோரதா நாமஹரிமியாய், ச்ருத்யந்தவாக்ய ஸர்வஸ்வமாய், மாணிக்கச்செப்பிலே பொன்னையிட்டு வைத்தாற்போலேயிருக்கப் பொன்னுருவான திவ்யாத்மஸ்வரூபத்துக்கு ப்ரகாசகமாய், ஒன்றுக்கொன்றுதள்ளி † இட்டளத்தில் வெள்ளம்போலே சுழித்துநின்று, முழாவுகிற ஆயுதாபரணங்களுடைய சோதிவெள்ளத்தினுள்ளே உந்நேயமான கரியகோலத்திருவுருவையும், நித்யஸூரிகளடுத்தடுத்துப் பார்க்கிறபார்வையுங்கூடப் பொறுதென்னும்படியான ஸௌகுமார்யத்தையும், பெரியபிராட்டியாருடைய வடிக்கோல வாணெடுங்கண்களுக்கு நித்யலக்ஷ்யமாகையாலே அரும்பென்றும் மலரென்றும் சொல்லலாம்படியான செவ்வியையும் ‡ கிண்ணகத்துக்குப் படவிட்டாற்போலேயிருக்கிற மெய்யமர்பல்கலன்களையும், நித்யஸூரிகளைக் கொள்ளையூட்டிக்கொண்டு, விடாயர்முகத்திலே நீர்வெள்ளத்தைத் திறந்துவிட்டாற்போலே ஸகலச்ரமங்களுமாறும்படி குளிர்ந்து, தெளிந்து கநககிரியையுருக்கிக் கடலிலேவிளாசினாற்போலே செம்பொனே திகழுகிற ச்யாமமான திருமேனி யொளியாலே (விச்வமாப்யாயயந்) என்கிறபடியே ஸகல ஜகத்தையும் ஆப்யாயநம்பண்ணி, (தெருவெல்லாங்காவிகமழ்) என்கிறபடியே கண்டவிடமெங்கும் புறப்பட்டு ப்ரவஹிக்கிற திருமேனியில் பரிம

* படையறுத்து - வசீகரித்து. † இட்டளம் - நெருங்கின விடம்.
‡ கிண்ணகம் - ப்ரவாஹம்.

ளத்தாலே ஸ்ரீவைகுண்டத்தை யெங்குமொக்கப்பரிமளிதமாக்கி, ஆலங்கட்டியை விட்டெறிந்தாற்போலே உடம்பெங்கும் வவ்வலிடும்படி குளிர்ந்து அரைக்ஷணமாறில் நித்யமுக்தரை ஒரு நீர்ச்சாவியாக்குகிற கடாக்ஷாம்ருத வ்ருஷ்டிகளாலே திவ்யமோஷ்டியைத் தளிரும் முறியுமாக்கி, காம்பீர்யமாதுர்யாதி யநவதிகமஹாகுணமண ஹ்ருஷிதங்களாய் அதிமநோஹர திவ்யஹாவ பாவங்களாய், பூவலர்ந்தாற்போலே யிருக்கிற திருமுகத்தை யெங்குமொக்கச் செவ்விபெறுத்துவனவான லீலாலாபங்களாலே ஸூரிகளுடைய ஹ்ருதயங்களை யுகப்பியாநின்றுகொண்டு, உபயவிபூதியையும் ஆஸநபலத்தாலே ஜயித்து,—

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

சதுர்த்தப்ரகரணம்.

எழுலகுந் தனிக்கோல்செல்ல, குழுமித்தேவர் குழாங்கள் கைதொழவெழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைகுண்டநாதனை (காண்பதெஞ்ஞான்று கொலோ) (காட்டீரானீர்) என்கிற இழவுதீர, (த்ருஷ்டஏவஹிநஸ்சோகம்) என்று இவன் மநோரதித்துக்கொண்டு, சென்றபடியே கண்ணாரக்கண்டு, (ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதேநாராயணாயநம꞉) என்று ஹர்ஷபரவசனாய் விழுந்தெழுந்திருந்து, பெரியப்ரீதியோடேசென்று, பாதபீடத்திலே யடியிட்டு திவ்யஸிம்ஹாஸநத்திலேயேற; அவனும் இவனைக்கண்டு, (அவாக்யநாதர꞉) என்கிற ஆகாரங்குலைந்து, சந்த்ரனைக்கண்ட கடல்போலே விக்ருதனாய், தன்னைப்பிரிந்து நெடுநாள் தரைக்கிடைகிடந்த இழவுதீர, (அங்கே ஸாதமாரோப்ய) என்கிறபடியே மடியிலேவைத்து, ஸ்ரீஸாதாழ்வானையும் அக்ரூரனையு மணைத்தாற்போலே அணைத்து ஸக்த்யதிசயத்தாலே (கோஸி) என்றபடியே (நீயார்) என்று கேட்க; (அஹம்ப்ரஹ்மாஸ்மி) என்று நான் ராஜகுமாரனென்ன, நீ யித்தனைகாலமும் செய்ததென்னென்றுகேட்க, (சாந்தேந்துமென்முலையார் தடந்தோள் புணரின்ப வெள்ளத்தாழ்ந்தேன்) என்ன, நீ அத்தால் பெற்ற பலமேதென்றுகேட்க, (அருநரகத்தழுந்தும் பயன் படைத்தேன்) என்ன, பின்பு, நீசெய்ததென்னென்ன, (போந்தேன்) என்ன, நீபோந்த விரகென் னென்றுகேட்க, (புண்ணியனே) என்ன, நீ யதினின்றும் போந்து செய்ததென்னென்ன, (உன்னையெய்தினேன்) என்ன, நம்மைக்கிட்டினவிடத்தில் நீ பெற்ற ப்ரயோஜநமென்னென்ன, (என்தீவினைகள்தீர்ந்தேன்) என்ன, செய்தது வாய்த்துச் செல்வனாய் நலமந்தமில்லதோர் நாட்டிலே வர்த்திக்கப்பெறுதே, (இல்லைகண்டீரின்பம்) என்கிற கொடுவுலகத்திலே நெடுங்கால மலமர்ந்தாயே, பலமுந்து சீரிற்படியாதே, பன்மாமாயப்பல்பிறவியிலேபடிந்து நோவுபட்டாயே, ஈறிலின்பத்திருவெள்ளத்தையிழந்து, தடந்தோள்புணரின்ப வெள்ளத்திலே ஆழ்ந்து, நித்யது꞉கிதனானையே, அதனைப் பிழையெனக்கருதி நம்மைப்பற்றி நம்மைக்காணவேணுமென் றாசைப்பட்டபோதேவந்து முகங்காட்டப் பெற்றிலோமே,

(ஆகாசத்தைநோக்கி யழுவன் தொழுவன்) என்கிறபடியே நாமிருந்த தேஶ
த்தை நோக்கி அழுவது தொழுவதாய், (கூவிக்கொள்ளும் காலமின்னங்
குறுகாதோ) (எந்நாள் யானுன்னையினிவந்துகூடுவன்) என்பதாய்க்கொண்டு
நோவுபடும்படி தாழ்ந்தோமே, (துன்பக்கடல்புக்கு வைகுந்த னென்ப
தோர் தோணிபெறா துழல்கின்றேன்) என்று க்லேஶித்த நீ அதினின்றுங்
கரையேறி, (நின்மாதாள்சேர்ந்து நிற்பதென்ஞான்றுகொலோ) என்கிற இழ
வுதீர நம்மைக்கிட்டப்பெற்றாயே, (உள்ளுளாவியுலர்ந்துலர்ந்து) என்கிற
தாபமாறக் கூடியிருந்து குளிரப்பெற்றாயே, நம்முடைய ஸ்ருஷ்டியாதி
வ்யாபாரங்கள் ஸபலமாயிற்றதே, (ப்ரணஷ்டஸ்ய யதாலாப:) என்றபடியே
நமக்குக்கிடையாதது கிடைத்ததே, உன்னுடைய வரவாலே யித்தேஶம் ஸநா
தமாயிற்றதே, இஸ்ஸ்ருஷ்டிக்கு நாயகரத்நம்போலே யிருக்க நீகிட்டி ஔஜ்
வல்யத்தை யுண்டாக்கினாயே, (நடந்தகால்கள் நொந்தவோ) என்று (மநோ
ஹரை ஶிசாடுஹிராரீரயந்முதா) என்கிறபடியே ஏத்தாளிகளைப்போலே
யேத்தி, ஔபமேயஸ்வநத்தாலே மயில்போலே ஆலிக்கும்படிபண்ணி, நோ
யெல்லாம் பெய்ததோ ராக்கையிலே யகப்பட்டு, நெடுங்காலம் நோவுபட்டு,
* மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணனைக்கிட்டி, உள்ளநோய்களெல்லாந்
துரந்து, திருவருள் மூழ்கின இவனை,நோய்விட்டுக் குளித்த புத்ரனைப் பிதா
பார்த்துக்கொண் டிருக்குமாபோலேயும் மாயக்கூத்தனுக்குப் பிழைத்த
ஆழ்வாரைப்பார்த்துக்கொண் டிருக்குமாபோலேயும், (லோசநாப்யாம்பிப
ந்நிவ) என்று ஸ்ரீவிபீஷணப்பெருமாளைப் பெருமாள் பார்த்துக்கொண்டி
ருக்குமாபோலேயும், (என்னை நோக்காதொழிவதே) என்கிற இழவுதீரத்
தாமரைக்கண்களால் நோக்கி நெடுநாள்பட்ட விடாயெல்லாம்மாற, ஒருங்கே
மறிந்துகிடந்தலர்ந்த மென்காற்கமலத் தடம்போலேயிருக்கிற பெருங்கண்
மலர்ப் புண்டரீகங்களை யிவன்பக்கலிலே யொருமடைப்படவைத்து, எங்
கும் பக்கநோக்கறியாதே, (தாயேதந்தையில்) திருமங்கையாழ்வார் மநோ
ரதித்தாற்போலேயும், (ஆராவமுதி) லும் (இன்பம் பயக்க) விலும் நம்மாழ்
வார் மநோரதித்தாற்போலேயும், இவன் மநோரதித்த மநோரதங்களை
யெல்லாம் ஸபலமாக்கி, (உருக்காட்டாதே யொளிப்பாயோ) என்கிற இழ
வுதீர, (விவ்ருணுதே தநூம்ஸ்வாம்) என்கிறபடியே (காசினொளியிற்றிகழும்
வண்ணங்காட்டி) (நல்கியென்னைவிடான்) என்கிறபடியே விடாதே, (ஏஷ
ஸர்வஸ்வபூதஸ்து) என்கிறபடியே விட்டுவிட்டணைத்து, (கிந்நுஸ்யாச் சித்
தமோஹோயம்) (மருள்தானீதோ) என்கிறபடியே நிரதிஶய வ்யாமோ
ஹத்தைப் பண்ணி, பெரியபிராட்டியார் திருக்கையிலே காட்டிக்கொடுக்க,
கம்ஸவதாநந்தரம் க்ருஷ்ணனைக்கண்ட தேவகியாரைப்போலே விம்மிப்பாய்
கிற ஸ்தந்யத்தாலே யுடம்பெங்கும் நனையும்படி யணைத்து, உபயவிபூ
தியைஶ்வர்யத்தையுங்கொடுக்க, பூவளருந்திருமகளா லருள்பெற்று, மடி
யில் நின்று மிழிந்து போந்து, செய்யவுடையுந் திருமுகமுஞ் செங்கனி
வாயுங் குழலுங்கண்டு) என்கிறபடியே முன்பேபோந்து முன்புத்தையழ
கை யநுபவித்து, கிண்ணகத்தை யெதிர்ச்செறிக்க வொண்ணாதாப்போ

* மருத்துவன் - ஆசார்யன்.

லே நேர்நின்றநுபவிக்க வொண்ணுமையாலே அட்டத்திலேபோந்து அங்குத்தையழகை யநுபவித்து, அதுவிட்டுப் பூட்டாவிடில் தரிக்கவொண்ணுமையாலே பின்னே போந்து, பின்புத்தையழகை யநுபவித்து, (பூர்வாங்காதியிகா பராங்க கலஹம்) என்று அதில் முன்பு தானே நன்றாயிருக்கையாலே திரியவும் முன்னேபோந்து; ஸௌந்தர்ய தரங்கதாபந தரளசித்தவ்ருத்தியாய், உத்தம் ஸிதாஞ்சலியாய், வளையவளையவந்து, (முழுசி வண்டாடிய தண்டுழாயின் மொய்ம்மலர்க்கண்ணியு மேனியஞ்சாந் - திழிசிய கோல மிருந்தவா றெங்ஙனஞ்சொல்லுகேனோவினல்லா - ரெழுதிய தாமரையன்னகண்ணு மேந்தெழிலாகமுந் தோளும்வாயு - மழகியதாமிவரார்கொலென்ன, அச்சோவொருவரழகியவா) என்று விஸ்மித ஹ்ருதயனாய், (அந்தாமத்தன்பு) (முடிச்சோதி) தொடக்கமானவற்றில் நம்மாழ்வா ரநுபவித்தாற்போலே தன்னைப்பெற்ற ப்ரீதியால் வந்த செவ்வியை யநுபவித்து (யத்ரநாந்யத்பஸ்யதி) என்கிறபடியே புறம்பொன்றில் நெஞ்சுசெல்லாதே (ஹாவு ஹாவு ஹாவு மஹமந்ந மஹமந்நம்), (அல்லிமாமலராள் தன்னொடு மடியேன் கண்டுகொண் டல்லல் தீர்ந்தேனே) (ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் - கண்டசதிர்கண்டொழிந்தே னடைந்தேனுன் திருவடியே, (இசைவித்தென்னை யுன்றாளிணைக்கீ ழிருத்துமம்மானே), (பிறந்துஞ்செத்தும் நின்றிடரும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்) என்று ப்ரீதிக்குப் போக்குவிட்டு வாயாரப்புகழ; ஸ்ரீவைகுண்ட நாதனும் வானுடமருங்குளிர் விழிகளாலே கடாக்ஷித்து, ஸஸ்மிதமாக ஸ்நிக்த கம்பீர மதுரமான பேச்சாலே முகப்பேகூவி, (நின்செம்மா பாதபற்புத்தலைசேர்த்து) என்றிவனபேக்ஷித்தபடியே மலர்மகள் பிடிக்கும் கமலமன்ன குரைகழல்களாலே உத்தமாங்கத்தை யலங்கரித்து, தன்றாளின் கீழ்ச்சேர்த்து, நித்யகைங்கர்யத்திலே நியோகிக்க; தொண்டேசெய்தென்றுந் தொழுது வழி யொழுகப்பெற்று, (வழுவிலாவடிமை செய்யவேண்டு நாம்) என்கிற அபிநிவேசாதிசயத்தாலே நாநாதேஹங்களைப் பரிக்ரஹித்து, அசேஷசேஷ வ்ருத்திகளிலுமந்வயித்து, அஸ்மாநேரக்ஷாவ்யஸநிகளான நித்யஸூரிகளோடே கூடச் சூழ்ந்திருந்து மங்களாசாஸநம்பண்ணி, (சூழிபட்டோடுஞ் சுடர்ச்சோதி வெள்ளத்தின்புற்றிருந்து) என்கிறபடியே அம்ருத ஸாகராந்தர் நிமக்நஸர்வாவயவனாய்க்கொண்டு யாவத்காலமிருக்கும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.

அர்சிராதி முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ப்ரமேயசேகரம்.

நிர்ஹேதுக பகவத்கடாக்ஷ மடியாக அஜ்ஞாத ஸுக்ருதமுண்டாம்; அதடியாக அத்வேஷமுண்டாம்; அதடியாக பகவத்ஸம்பந்த விஷயங்களில் ஆபிமுக்யமுண்டாம்; ஆபிமுக்ய முண்டானவாறே த்யாஜ்யோபாதேய விபாகஜ்ஞாநத்தில் கௌதுகமுண்டாம்; அத்தாலே ஸாத்விக ஸம்பாஷண

முண்டாம்; அத்தாலே ஸதாசார்ய ஸமாஶ்ரயணமுண்டாம்; அதுண்டான வாறே த்யாஜ்யோபாதேய நிஶ்சயமுண்டாம்; அதுண்டானவாறே ப்ராப்யாந்தரத்தில் வைராக்யமும், பரமப்ராப்யத்தில் அபிநிவேஶமு முண்டாம்; அநந்தரம், ப்ராப்யாந்தர நிவ்ருத்திக்கும், பரமப்ராப்ய ஸித்திக்குமடியான ஸித்தோபாய ஸ்வீகாரமுண்டாம்; அநந்தரம், ஶரவத்ப்ராப்தியிலே த்வரையுண்டாம்; அநந்தரம், (அஹம்ஸ்மராமி) என்கிறபடியே - ஈஶ்வரஸ்ம்ருதிக்கு விஷயபூதனும்; அநந்தரம் பூதஸூக்ஷ்மஶரீரபரிஷ்வங்கமுண்டாம்; அநந்தரம், பரமாத்மஸம்ஶ்லேஷ முண்டாம்; பின்பு, ஹார்தாநுக்ரஹத்தாலே மார்க விஶேஷப்ரகாஶமுண்டாம்; பின்பு ஹ்ருதயகுஹாநிர்கமநமுண்டாம்; அநந்தரம், மூர்தந்யநாடீ நிஷ்க்ரமணமுண்டாம்; அநந்தரம், அர்சிராதிமார்க கமநமுண்டாம்; அநந்தரம், ஆதிவாஹிக ஸத்கார முண்டாம்; அநந்தரம், ஆவரணாதிக்ரமண முண்டாம்; அநந்தரம், ப்ரக்ருத்யதிலங்கந முண்டாம்; அநந்தரம், விரஜாஸ்நாநமுண்டாம்; அநந்தரம், ஸூக்ஷ்மஶரீர விஶ்லேஷ முண்டாம்; அநந்தரம், அபஹதபாப்மத்வாதி குணகணப்ராதுர்பாவ முண்டாம்; அநந்தரம், அமாநவகரஸ்பர்ஶமுண்டாம்; அநந்தரம், ஶரவத் ஸங்கல்ப கல்பிதமான திவ்யதேஹ ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், அகாலகால்ய திவ்யதேஶப்ராப்தியுண்டாம்; அநந்தரம், ஆமோதஹ்ருத தடஸ்நாந முண்டாம்; பின்பு, திவ்யாலங்காரமுண்டாம்; பின்பு திவ்யவிமாநாரோஹண முண்டாம்; பின்பு, திவ்யகாந்தார ப்ரவேஶமுண்டாம்; அநந்தரம், திவ்யாப்ஸரஸ் ஸத்காரமுண்டாம்; அநந்தரம், திவ்யகந்த ப்ரவேஶ முண்டாம்; அநந்தரம், ப்ரஹ்மகந்த ப்ரவேச முண்டாம்; அநந்தரம், அப்ராக்ருத கோபுர ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், திவ்யநகர ப்ராப்தி யுண்டாம்; அநந்தரம், ஸூரிபரிஷத் ப்ரத்யுத்கமந முண்டாம்; அநந்தரம், ராஜமார்க கமநமுண்டாம்; அநந்தரம், ப்ரஹ்மதேஜஃ ப்ரவேஶ முண்டாம்; அநந்தரம், திவ்யகோபுர ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், ப்ரஹ்மவேஶ்ம ப்ரவேஶ முண்டாம்; அநந்தரம், திவ்யமண்டப ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், திவ்யபாரிஷத் ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், ஸபத்நீக ஸர்வேஶ்வர தர்ஶந முண்டாம்; அநந்தரம், ஸ்துதிப்ரணாமாஞ்ஜலிப்ரமுக ஸம்ப்ரமாநுவர்த்தநமுண்டாம்; அநந்தரம், பரமாத்மஸமீப ப்ராப்தியுண்டாம்; அநந்தரம், பாதபீட பர்யங்காரோஹண முண்டாம்; அநந்தரம், ஶரவதாத்ஸங்கஸங்க முண்டாம்; அநந்தரம், ஆலோகநாலாபாதி யநுபவமுண்டாம்; அநந்தரம், ஆலிங்கநாதியநுபவ முண்டாம்; அநந்தரம், ஸ்வரூபரூபகுணவிக்ரஹாதியநுபவமுண்டாம்; அநந்தரம், அநுபவஜநித ப்ரீதிப்ரகர்ஷ முண்டாம்; அநந்தரம், நாநாவித விக்ரஹபரிக்ரஹ முண்டாம்; அநந்தரம், ஸர்வதேஶஸர்வகால ஸர்வாவஸ்தோசிதமான ஸர்வப்ரகார கைங்கர்ய முண்டாம்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேஶரணம்.

ஜீயர் திருவடிகளேஶரணம்.

ப்ரமேயஶேவகரம் முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாய நம:.

ப்ரபந்நபரித்ராணம்

முமுக்ஷுவாய், மோக்ஷார்த்தமாக ஸர்வேஶ்வரனைப்பற்றி யிருக்குமவனுக்கு அநந்யகதித்வமும், ஆகிஞ்சந்யமும்வேணும்.—அநந்யகதித்வமாவது - (களைவாய்துன்பங் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்) என்கிறபடியே - ஸர்வேஶ்வரனையொழிய வேறொருரக்ஷகரில்லை யென்றிருக்கை.— ப்ராதாக்கள், புத்ரர்கள், மாதாபிதாக்கள், ப்ரஹ்ம ருத்ராதிகள் தொடக்கமானவர்கள் ரக்ஷகராகக் குறையென்னென்னில், ப்ராதாக்கள் ரக்ஷகரல்ல ரென்னுமிடம், வாலிபக்கலிலும், ராவணன் பக்கலிலுங் காணலாம். புத்ரர்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம், ருத்ரன்பக்கலிலும், கம்ஸன்பக்கலிலுங் காணலாம். மாதாபிதாக்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம், கைகேயிபக்கலிலும், ஹிரண்யன் பக்கலிலுங் காணலாம். மாதாபிதாக்கள், யௌவநவிரோதியென்றுபேக்ஷித்தல், க்ஷாமகாலம்வந்தவாறே ஆள்பார்த்துத் தூற்றிலேபொகடுதல், விலைகூறிவிற்றல், ஆபத்துவந்தவாறே நெகிழநினைத்தல், அர்த்தக்ஷேத்ராதிகளுக்காக எதிரிட்டுக்கொல்லுதல், முடியுமவஸ்தையிலே (சோர்வினால் பொருள்வைத்த துண்டாகில் சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்து) என்கிறபடியே, ஈஶ்வரனை ஸ்மரித்துக் கரைமரஞ் சேரவொட்டாதபடி யலைத்தல் முடித்தல் செய்யாநிற்பர்கள். ஸ்த்ரீகளுக்கு பர்த்தாக்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம், தர்மபுத்ராதிகள் பக்கலிலும், நளன்பக்கலிலுங் காணலாம்.—இவர்கள் ரக்ஷகரல்லரேயாகிலும்,நாட்டார்க்குக் * கண்காட்டியாய்ப் போருகிற சந்த்ராதித்யர்கள் ரக்ஷகராகக்குறையென்னென்னில்; அவர்களும், ஈஶ்வராஜ்ஞைக்கஞ்சி, தாங்கள் நினைத்தபடி ஸஞ்சரிக்கப்பெறாதே, நாழிகைகூறிட்டு, உதிப்பது அஸ்தமிப்பதாய்க்கொண்டுபோருகையாலும், ஹிரண்யராவணாதிகள் கையிலே யகப்பட்டு அவர்களுக்கிழிதொழில் செய்து திரிவார் சிலராகையாலும் ரக்ஷகராகமாட்டார்கள்.—த்ரைலோக்யத்துக்கும் பாலகனான இந்த்ரனும், 'எப்போதோ நம்பதம் நழுவப்புகுகிறது' என்றஞ்சி ஶாபோபஹதனாய், இந்த்ரஜித்தின்கையிலே யகப்பட்டுக் கட்டுண்டு, மஹாபலிபோல்வார்கையிலே ஐஶ்வர்யத்தைப் பறிகொடுத்து, கண்ணுங்கண்ணீருமாய், கழுத்துங் † கப்படமுமாய்க்கொண்டு திரிவானொருவனாகையாலே அவனும் ரக்ஷகனாகமாட்டான்—ப்ரஹ்மாவும், மதுகைடபர்கள் கையிலேயகப்பட்டு, வேதங்களைப் பறிகொடுத்து, 'கண்ணிழந்தேன், தநமிழந்தேன்' என்று நிலந்துழாவுகையாலும், ருத்ரன்கையிலே தலையறுப்புண்கையாலும் ரக்ஷகனாகமாட்டான்.—ருத்ரனும்,ஸகலப்ராணிகளையும் ஸம்ஹரிக்கையே தொழிலாக வுடையனாய், விடாயர் முகத்திலே நெருப்பைச்சொரிந்தாற்போலே யிருக்கத் தழல்நிறவண்ணனாய், தன்னையாஶ்ரயித்தவர்களை 'அறுத்துத்தா பொரித்துத்தா' என்று கொடுந்தொழில்களைச் செய்வித்துக்கொள்ளுகையாலும், தன்னையாஶ்ரயித்தவாணனை, 'தலையில் பூவாடாதே

* கண்காட்டியாய்ப்போருகிற - பதார்த்ததர்ஶநஸாதநமான, கண்ணுக்கு விஷயங்களைக்காட்டுகிற வென்றபடி.

† கப்படம் - தைந்யஸூசகபட விஶேஷம்.

நோக்குகிறேன்' என்று ப்ரதிஜ்ஞைபண்ணி, தன்னைத்தொழுத கைகளைக் கள்ளிக்காடு சீய்த்தாற்போலே சீய்க்கக்கண்டு, 'உயிருண்டாகில் உப்புமாறியுண்ணலாம்' என்று நெற்றியில் கண்ணைப் புதைத்துக்கொண்டு நழுவினவனாகையாலும், லோகஸ்ரூருவாய்த் தனக்கு பிதாவான ஸ்ரஹ்மாவின் தலையைத்திருகி பாதகியாய், * கூறுசெய்தவூரிலே குறும்புசெய்து கையுங் † கைத்தளையுமாய்க்கொண்டு திரிவாரைப்போலே, கையும்கபாலமுமாய், திறந்துகிடந்த வாசல்கள் தோறும் புக்குத் தன்னை வெளியிட்டுக்கொண்டு திரிவானொருவனாகையாலும் ரக்ஷகனாகமாட்டான்.—இனி, அர்யம் ரக்ஷகமாமோவென்று நிரூபித்தால் கள்ளர்கொள்ளுதல், காமங்கொள்ளுதல், ‡ கோமுற்றவர் கொள்ளுதல், ஜ்ஞாதிகொள்ளுதல், வ்யாயிகொள்ளுதல், பிறரோடே யெதிரிட்டு விஷஸக்ஷணம் பண்ணித் தன்னைத்தானே முடித்துக்கொள்ளும்படி பண்ணுதல் செய்கையாலே அர்யமும் ரக்ஷகமாகமாட்டாது. ஈஸ்வரன், மாதாபிதாக்கள் கைவிட்ட அவஸ்தையிலும் (பின்னுநின்றடியேனுக்குற்றானாய் வளர்த்தென்னுயிராகி நின்றான்) என்கிறபடியே, தன்னுருக்கெடுத்து வேற்றுருக்கொண்டு தாய்முகங் காட்டியும், இன்சொல்லுச்சொல்லியும், ஸ்ராதாக்களும் ஸர்த்தாக்களும் நெகிழ நின்றவன்று தானேறிட்டுக்கொண்டு கழுத்திலே யோலைகட்டித் தூதுபோயும், புருவம் நெரித்த விடத்திலே தேரை நடத்தியும், மார்விலே யம்பேற்றும், சாவாமல் நோக்கியும், செத்தாரை மீட்டும், நாராயணத்வப்ரயுக்தமான உகரத்தரிப்பாலே அகவாயிலே நின்று ஸத்தையை நோக்கிக்கொண்டு போருகையாலே இவனே யெல்லார்க்கும் ரக்ஷகன்.—இனி ஆகிஞ்சந்யமாவது - கர்மஜ்ஞாந ஸக்திகளிலும், அவற்றுக்கு ஹேதுவான ஆத்மகுணங்களிலு மந்வய மின்றிக்கே, அவற்றுக்கு விபரீதங்களானவற்றாலே தான் பரிபூர்ணனாயிருக்கிற இருப்பையும், தன்னுடைய ஸ்வரூபம் ஸர்வப்ரகாரத்தாலு மீஸ்வரனுக் கத்யந்த பரதந்த்ரமாயிருக்கிற இருப்பையு மநுஸந்தித்து, நங்கார்யத்துக்கு நாங்கடவோ மல்லோ மென்றிருக்கை.—இவையிரண்டையு முடையனாய், ஈஸ்வரனையே யுபாயமாகப் பற்றுகையாலே நிர்ஸரனாயிருக்கு மவனுக்கு ஸரீராவஸாந காலத்திலே ப்ராப்தியணித்தானவாறே, (நயாமி) என்றருளிச் செய்தபடியே ஈஸ்வரன் தானே ¶ சரக்காளாய்வந்து, அர்சிராதி மார்கத்தாலே பரமபதத் தேறக்கொண்டுபோய், நித்யமுக்தரோடே யொருகோவையாக்கி, நித்யகைங்கர்யத்தையும் கொடுத்தருளும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேஸரணம்.

ஜீயர் திருவடிகளே ஸரணம்.

ப்ரபந்நபரித்ராணம் முற்றிற்று.

---

* கூறுசெய்கை - கூறினதுசெய்கை. ப்ராங்யாதிகளை விபஜிக்கை. மணியம் பண்ணுகை யென்றபடி.

† கைத்தளை - கைவிலங்கு. ‡ கோமுற்றவர் - ராஜாக்கள்.

¶ சரக்காளாய் - பக்ஷார்யத்தை யுடையவனாய்.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

ஸாரஸங்க்ரஹம்.

அகிலஜகத்தியிதாநுஶாஸந பரமான வேதத்திலும், வேதோப ப்ரும்ஹ ணார்த்தமாக ப்ரவ்ருத்தங்களான ஸ்ம்ருதீதிஹாஸ புராணாதி ஸமஸ்தஶாஸ்த் ரங்களிலும் ப்ரதிபாத்யமாய், ஸர்வேஶ்வரனுடைய ஸர்வஸ்வம்மாய் நம்மா சார்யர்களுக்கு ஆஶ்ரயணமாயிருந்துள்ள அர்த்தபஞ்சகத்தையும் ப்ரதிபாதிக்கை யாலே - தசகமென்று திருநாமத்தையுடைத்தா யிருந்துள்ள வாக்யதசகம், பத்தர்த்தத்தை ப்ரதிபாதிக்கிறது.

அதாகிறது - (க). ஸ்ரீயஃபதித்வமும், (உ). நாராயணத்வமும், (ங). நாரா யணனுடைய ஸர்வலோகஶரண்யமான சரணாரவிந்தயுகளமும், (ச). அதினு டைய ப்ராபகத்வமும், (ரு). தத்கோசரமாய் சேதந மதமாயிருந்துள்ள ப்ரார் த்தநா மர்ஹவிஶ்ரம்ஹமும், (சு). லக்ஷ்மீ தத்வல்லபர்களுடைய நிவிலாத்ம கைங்கர்ய ப்ரயோஜனார்த்தமான நித்யஸம்பந்தமும், (எ). கைங்கர்ய ப்ரதிஸம் பந்தியான ஈஶ்வரனுடைய நிரதிஶயபோக்யதையும், (அ). ஸர்வஸ்வா மித்வமும், (கூ). நித்யகைங்கர்யமும், (கo). கைங்கர்ய ப்ரதிபந்தக நிஶ்ஶே ஷ நிவர்த்தனமுமாகிற அர்த்தவிஶேஷங்கள்.

ஈத்ருஶார்த்த விஶேஷப்ரகாஶகமான மந்த்ரவிஶேஷத்தினுடைய விவர ணரூபமாய், அபௌருஷேயமாய், உபநிஷத்தா யிருந்துள்ள திருவாய்மொழி யில் பத்துப்பத்தாலு மிப்பத்தர்த்தத்தையும், நம்பூர்வாசார்யர்கள் அடைவே சேர்த் தநுஸந்தித்துப் போருவர்கள்.—

அதில் முதற்பத்தால் - (மலர்மகள்விரும்பு நம்மரும்பெறலடிகள்) என் றும், (மலராள்மைந்தனே) என்றும், (திருமகளார் தனிக்கேள்வன்) என்றும், (திருவின்மணாள னென்னுடைச் சூழலுளானே) என்றும், (பூமகளார்தனிக் கேள்வன்) என்றும், (மைந்தனே மலராள்மணவாளனே) என்றும், ஸ்ரீயஃபதித் வம் ப்ரதிபாதிதமாயிற்று.—

இரண்டாம்பத்தால் - (எம்பெருமான் நாரணற்கு) என்றும், (எம்பிரா னெம்மான் நாராயணனாலே) என்றும், (நாரணன் முழுவேழுலகுக்கும்நா தன்) என்றும், நாராயணத்வம் ப்ரதிபாதிதமாயிற்று.—

மூன்றாம்பத்தால் - (நாண்மலரா மடித்தாமரை) என்றும், (அங்கதிரடி யன்) என்றும், (அவன்பாதபங்கயம்) என்றும், (அன்றுதேர்கடவியபெரு மான்கனைகழல்) என்றும், (மூவுலகுந்தொழுதேத்துஞ்சீரடியான்) என்றும், நாராயணனுடைய ஸர்வலோகஶரண்யமான சரணாரவிந்தயுகளம் ப்ரதிபாதித மாயிற்று.—

நாலாம்பத்தால் - (இலங்கைநக ரம்பெரியுய்த்தவர்) என்றும், (வல் வினை தீர்க்குங்கண்ணனை) என்றும், (தொல்வினைதீர) என்றும், (வெய்ய

† இந்தரஹஸ்யம் பூர்ணமாக ஆசார்யஹ்ருதய வ்யாக்யானத்தி லுதாஹரிக்கப்பட் டிருக்கிறது. (உ - ப்ரகரணம். சுக - வா) காண்க.

நோய்கள் முழுதும் வியன்ஞாலத்துவீய) என்றும், (மேவிநின்று தொழு வார்வினைபோக) என்றும், (பிறந்துஞ்செத்தும் நின்றிடரும் பேதைமை தீர்ந் தொழிந்தேன்) என்றும், (நோயேமூப்பிறப்பிறப்புப்பிணியே யென்றிவை யொழிய) என்றும், (வேட்கையெல்லாம்விடுத்து - கூட்டரியதிருவடிக்கள் கூட்டினை) என்றும், (அஃதேயுய்யப்புகுமாறு) என்றும், (உய்வுபாயமற்றின் மைதேறி) என்றும், அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திகரத்வலக்ஷணமான ப்ரா பகத்வம் ப்ரதிபாதிதமாயிற்று.

(ரு). அஞ்சாம்பத்தால் - (தமியேனுக்கருளாய்) என்றும், (ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்) என்றும், (உன்னாலல்லால் யாவராலு மொன்றுங்குறை வேண்டேன்) என்றும், (கழல்களவையே சரணாகக்கொண் ட) என்றும், (நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச்சடகோபன்) என்றும், (நாகணைமிசைநம்பிரான் சரணேச ரண்நமக்கு) என்றும், (நாடொறுமேகசிந்தையனாய்) என்றும், தநிமோவர மாய், சேதநகதமாயிருந்துள்ள ப்ரார்த்தநாகர்ஹவிஸ்ரம்ஹம் ப்ரதிபாதித மாயிற்று.

(சா). ஆறாம்பத்தால் - (திருமாமகளிருந் தாமும்மலிந்திருந்து) என்றும், (அடிமைசெய்வார் திருமாலுக்கு) என்றும், (ஓசிந்தவொண்மலராள் கொழு நன்) என்றும், (என்திருமார்வற்கு) என்றும், (கோலத்திருமாமகளோடுன்னை) என்றும், கைங்கர்ய ப்ரதாநார்த்தமான லக்ஷ்மீ தநிவல்லஹருடைய நித்யஸம் ஙந்தம் ப்ரதிபாதிதமாயிற்று.

(எ). ஏழாம்பத்தால்-(கன்னலேயமுதே) என்றும், (கொடியேன் பருகின் னமுதே) என்றும், (அலைகடல் கடைந்தவாரமுதே) என்றும், (திருமாலின்சீரி றப்பெதிர்காலம் பருகிலுமார்வனோ) என்றும், (இவ்வேழுலகையின்பம்ப யக்க) என்றும், கைங்கர்யப்ரதி ஸம்ஙந்தியான வீஸீவரனுடைய நிரதிசய ஹோக்யத்வம் ப்ரதிபாதிதமாயிற்று.

(அ). எட்டாம்பத்தால் - (அடியனேன் பெரியவம்மான்) என்றும், (விண்ணவர்கோன் நங்கள்கோனை) என்றும், (அமர்ந்தநாதனை) என்றும், (மூவு லகாளி) என்றும், (நேர்பட்டநிறை மூவுலகுக்கும் நாயகன்) என்றும், ஸர்வ ஸ்வாமித்வம் ப்ரதிபாதிதமாயிற்று.

(கூ). ஒன்பதாம்பத்தால் - (பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத் தாள் திருவருளுங்கொண்டு நின்கோயில்சீய்த்து) என்றும், (நின்தீர்த்தவடி மைக்குற்றேவல்செய்து) என்றும், (தொடர்ந்து குற்றேவல்செய்து) என்றும், (கொடுவினையேனும் பிடிக்க) என்றும், (உறுவதிது வென்றுனக்காட்பட்டு) என்றும், (ஆட்கொள்வானொத்து) என்றும், (நானும் மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன்) என்றும், நித்யகைங்கர்யம் ப்ரதிபாதிதமாயிற்று.

(க0). பத்தாம்பத்தால் - (துயர்கெடுங்கடிது) என்றும், (கெடுமிடராய வெல்லாம்) என்றும், (எழுமையுமேதஞ்சாரா) என்றும், (தீரும்நோய்வினைக ளெல்லாம்) என்றும், (இப்பிறப்பறுக்கும்) என்றும், (உன்றன்திருவுள்ளமிடர்

கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதுமெம் பெண்மையாற்றேம்) என்றும், (பிணியொன்றுஞ்சாராப் பிறவிகெடுத்தாளும்) என்றும், (பிறவித்துயர் கடிந்தோம்) என்றும், (விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்) என்றும், (அமராவினைகள்) என்றும், (கடுநரகம்புகலொழித்த) என்றும், (பிறவிகெடுத்தேன்) என்றும், (தடுமாற்றவினைகள் தவிர்த்தான்) என்றும், (அந்திதொழுஞ்சொல்லு) என்றும், (அவாவற்று வீடுபெற்ற) என்றும், கைங்கர்யப்ரதிபந்தக நிஶ்ஶேஷநிவர்ஹணம் ப்ரதிபாதிதமாயிற்று.

இப்படி ஸ்ரிய:பதித்வ ப்ரமுகங்களாய் கைங்கர்யப்ரதிபந்தக நிஶ்ஶேஷநிவர்ஹணபர்யந்தங்களாயிருந்துள்ள வுபாதேயார்த்தங்களை ப்ரதிபாதிக்கக்கடவதாயிருந்துள்ள வாக்யதிவயமும், திருவாய்மொழியும் - ஸமவச்ஶரணர்களாய் அநந்யோபாயராயிருக்கு மதிகாரிகளுக்கு, காலக்ஷேபஹேதுவாகவும், போகஹேதுவாகவும், ஈஶ்வரப்ரீதிஹேதுவாகவும் யாவச்ஶரீரபாதமநுஸந்தேயம்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஸாரஸங்க்ரஹம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

† ஸம்ஸாரஸாம்ராஜ்யம்.

* துன்பக்கடலாய் * இருள்தருமாஞாலமான ஸம்ஸாரத்துக்கு உள்வாயிலே பஞ்சபூதங்களாலே சமைந்து, (நவத்வாரபுரே) என்கிறபடியே - ஒன்பதுவாசலான படைவீட்டுக்கு உள்வாயிலே (கொடுவினைத்தூறு) என்பதொருதூறாய், புகவழிதெரியுமித்தனையொழியப் புறப்பட வழிதெரியாதிருப்பதொருகாட்டினுள்ளே, * அநாதிக்லேஶஜாஜநமான மரத்தையிட்டு, அவித்யையென்கிற தேரைச்சமைத்து, அவஸ்தாஸப்தகங்களென்கிற உருளைகளைச்சேர்த்து, ராகத்வேஷாதிகளாகிற குதிரைகளையணைத்து, குணத்ரயங்களென்கிற திரிக்குரும்பை யுஞ்சலின்மேலே கர்மமென்கிற ஸிம்ஹாஸநத்தையிட்டு, ருசியென்கிற மேல்விரியை விரித்து, (அவஶ்யமநுபோக்தவ்யம்) என்கிறபடியே - அநுபவித்தன்றி மீளவொட்டாதிருக்கிற * உருப்பிணிகளாகிற பார்யாவர்கம் பக்கத்திலிருக்க, அஹங்காரமாகிற விளக்கையேற்றி, அவஸ்துக்களாகிற தாஸவர்கம் - பரதோஷம் பரஹிம்ஸை பராநுவர்த்தநம் துடக்கமான போகங்களை பூஜிப்பிக்க பூஜித்து, அப்ரகாஶித ஸ்வரூப ஸ்வபாவனன தன்னை வாஸனையென்கிற வீரத்தையிட்டுப்பார்த்து, தாபத்ரயங்களென்கிற விடாய்க்குடையின்கீழே பஞ்சவ்ருத்தி ப்ராணங்களாகிற புரோ

---

† ஸாரார்த்தசதுஷ்டயமென்கிற ரஹஸ்யத்தை (கஅ) ரஹஸ்யத்தில் பரிகணித்திருக்கிறார்கள் சிலர். அது அஸங்கதமென்று தோற்றுகிறது. அம்மாளருளிச்செய்ததாகப்ரஸித்தமிறே ஸாரார்த்தசதுஷ்டயமாகிற ரஹஸ்யம்.

ஹிதர்-ஸம்ஸாரத்துக்கு மூர்த்தாபிஷிக்தனாக்கி, வ்யாதிலாபபூஜைகள் - கொண்டாட, புண்யபாபங்களாகிற சாமரமிரட்ட, அநேகவித து:கபரம்பரைகள் அடுக்கொலியல் பணிமாற, அஹங்கார மமகாரங்களாகிற ஆலவட்டம்பணிமாற, * ஸுகது:கவர்ஷிணி சுழற்றிப்பணிமாற, அஸ்ம்ருதி - ஒட்டிவட்டிலெடுக்க, அபிநிவேசம் - களாஞ்சியெடுக்க, விஷயாந்தரருசி-அடைப்பையெடுக்க, பூர்வோத்தராவங்களென்கிற ஆனைகுதிரையோடே வாதபித்தஶ்லேஷ்மங்களாகிற மந்த்ரிகள் ஸேவிக்க, காமக்ரோத லோப மத மாத்ஸர்யங் துடக்கமான ப்ரபுக்கள் ஸேவிக்க, பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசார நாநாவிதாபசாரமாகிற காலாள்கள் ஸேவிக்க, நித்ராதேவிஜ்யேஷ்டை துடக்கமான பெண்பிள்ளைகள் ஸேவிக்க, ஆஶையாகிற பாஶக்கயிற்றாலே பிணைத்து, இந்த்ரியங்களாகிற மதகளிறுகள் வலிக்க, காலமாகிறஸாரதி நடத்த, 'தேஹாத்மாபிமாநி வந்தான், ஸ்வதந்த்ரன் வந்தான், அந்யஶேஷபூதன் வந்தான்' என்று காளங்கள் சிஹ்நங்கள் கலந்து பணிமாற, (மெல்லியலாக்கைக் கிருமிக்குருவில் மிளிர்ந்தாங்கே செல்லிய செல்கைத்துலகையென்காணும்) என்கிறபடியே - தானும் தன்பரிகரபூதருமாக ஸுகாநுபவம்பண்ணி, * (யாதானுமோராக்கையில் புக்கங்காப்புண்டு மாப்பவிழ்ந்தும் மூதாவியில்தடுமாறு முயிர்முன்னமே) என்கிறபடியே - புக்கபுக்கஶரீரங்கள் தோறும் அஹங்கார மமகாரங்களைப்பண்ணி, ஸத்தாதாரகனான ஸர்வேஶ்வரனை மறந்து, * மொய்த்தவல்வினையுள்நின்று, த்ரிவிதகரணங்களாலும் பாதகம் அதிபாதகம் மஹாபாதகந் துடக்கமானவற்றாலே போதுபோக்கிக்கொண்டு போருகிறகாலத்திலே, ஈஶ்வரனுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தாலே யிவனுக்கு அத்வேஷம்பிறக்க, அத்தாலே ரக்ஷணத்துக்கு வழிகண்டு 'கனை யெடுக்கக்கொடுத்த கோலைக்கொண்டு கண்ணைக் கலக்கிக்கொள்ளுவாரைப்போலே நம்பக்கல் சேரக்கொடுத்த வுடம்பைக்கொண்டு அகலுகைக் குறுப்பாக்கினான், (பல்பிறவிக்குநோற்றேன்) என்று-ஒருஜந்மத்திலே அநேக ஜந்மத்துக்குவேண்டும் பாபங்களை ஆர்ஜித்துக்கொள்ளுகிற விவனை நம்பக்கலிலே சேர்த்துக்கொள்ளும் விரகேதோ' என்று திருவுள்ளம்பற்றி, வலவட்டத்திலே * தூதுசெய்கண்கள்கொண்டொன்றுபேசி, ஆழ்வானும் * கருதுமிடம் பொருதுமவனாகையாலே, தன்பரிகரபூதரை யேவிவிட, * நின்றிவ்வுலகிற்கடிவான் நேமிப்பிரான்றமர்போந்து, * அருளென்னு மொள்வாளுருவி, (அடைந்தவருவினையோடல்லல் நோய்பாவம் மிடைந்தவைமீண்டொழியவேண்டில் நுடங்கிடையை முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொருநாள் தன்விலங்கைவைத்தான்சரண்) என்கிறபடியே - விரோதிவர்க்கத்தையடைய அழிவுசெய்து ஜ்ஞாநத்தைக்கொடுக்க, இவனும் சைதந்யம் குடிபுகுந்து, (தெரிந்துணர்வொன்றின்மையால் தீவினையேன் வாளா விருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம் கரந்துருவில் அம்மானை யந்நான்று பின்தொடர்ந்தாழியங்கை யம்மானையேத்தாதயர்ந்து) என்கிறபடியே இழந்தநாளைக்கு அநுதபித்து, ப்ராப்யத்தை யுள்ளபடி யறிவித்த ஆசார்யன்பக்கல் க்ருதஜ்ஞனாய், விரோதிவர்க்கத்தில் உபேக்ஷைபிறந்து, ஶ்ரிய:பதியைக்கிட்டி யல்லது தரிக்கவொண்ணாதிருக்கிற ப்ரேமம் விளைந்து,

'இவ்வளவுங் குலையுங் காட்டில் கைக்கொண்டருளவேணும்' என்று பிராட்டி புருஷகாரஞ்செய்ய, அவ்வளவும் பொறுக்கமாட்டாதபடியான வாத்ஸல்யாதி ஞண விஶிஷ்டவஸ்துவாகையாலே கீழ்ச்செய்த அம்ஶத்தைத் திருவுள்ளம் பற்றி மேற்செய்யவேண்டு மம்ஶத்தை ப்ராப்யபர்யந்தமாகத் தலைக்கட்டிக் கொடுத்தருளும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஸம்ஸார ஸாம்ராஜ்யம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நவரத்நமாலை.

ஶரணாகதனானவன்—(க). தன்னையும், (உ). தனக்கு விரோதியான தேஹத்தையும், (ங). தேஹத்தைப் பற்றிவரும் பந்துக்களையும், (ச). ஸம்ஸாரிகளையும், (ரு). தேவதாந்தரங்களையும், (சு). ஸ்ரீவைஷ்ணவர்களையும், (எ). ஆசார்யனையும், (அ). பிராட்டியையும், (கூ). ஈஶ்வரனையும் நினைத்திருக்கும்படி யெங்ஙனேயென்னில்.

(க). உடம்பில் வேறுபட்டு நித்யனாய், ஒருபடிப்பட்டு அணுவாய், ஜ்ஞாநத்தையும் ஆநந்தத்தையும் வடிவாகவுடையனாய், ஜ்ஞாநத்துக்கும் ஆநந்தத்துக்கு மிருப்பிடமாய், எம்பெருமானை யொழிய வேறொன்று நினைத்தல் சொல்லுதல் செய்யமாட்டாதே எம்பெருமானுக்கே யுரியனாய், தன்கார்யத்துக்குத் தான் கடவனன்றிக்கே அவனையே பலமாகவுடையனா யிருக்குமென்று தன்னை நினைப்பான்.

(உ). தன்னையுள்ளபடி யறியவொட்டாதே விபரீதஜ்ஞாநத்தை ஜநிப்பித்து இருபத்துநாலு தத்வங்களினுடைய திரளாய், அநித்யமாய், எப்போதுமொக்கப் பரிணமிக்கக்கடவதாய், ஒருநாளும் ஜ்ஞாநத்துக் கிருப்பிடமன்றிக்கே அநந்த து:கங்களை விளைப்பிக்கக் கடவதாய், ஶப்தாதி விஷயங்களிலே மூட்டி நஶிப்பிக்குமென்று தன் தேஹத்தை நினைப்பான்.

(ங). ஆத்மஜ்ஞாநத்தையும், பகவத் ஜ்ஞாநத்தையும், பகவத் விஷயத்தில் ருசியையும், த்வரையையுங்குலைத்து, தேஹாத்மாபிமாநத்தையும், அஹங்கார மமகாரங்களையும், காமக்ரோதாதிகளையும் விளைப்பித்து, பலபடியாலும் அநர்த்தத்தைப் பண்ணுவார்களென்று தேஹத்தைப் பற்றிவரும் பந்துக்களை நினைப்பான்.

(ச). பகவதநுபவத்துக்கும் பகவத் கைங்கர்யத்துக்கும் விரோதிகளாய் ஸம்ஸாரவர்த்தகரா யிருப்பார்களென்று ஸம்ஸாரிகளை நினைப்பான்.

(ரு). அஜ்ஞராய், அஶக்தராய், எம்பெருமான்பக்கலிலே பிறந்து அவன்கொடுத்த பதங்களையுடையராய், அவனோடே யெதிரிட்டு து:ர்மாநிகளாய்,

தங்களைப் * போரப்பொலிய நினைத்து நாட்டாரை ஹ்ரமிப்பித்து அநர்த்தத்தைப் பண்ணுவார் சிலரென்று தேவதாந்தரங்களை நினைப்பான்.

(௬). ஹமவத்ஜ்ஞாநத்துக்கும் இதரவிஷய வைராக்யத்துக்கும் ஹமவத்ஹக்திக்கும் வர்தகராய், ஶேஷிகளாய், உசாத்துணையாய், ப்ராப்யத்துக் கெல்லைநிலமா யிருப்பார்களென்று ஸ்ரீவைஷ்ணவர்களை நினைப்பான்.

(௭). தன் கடாக்ஷத்தாலே என்னைத்திருத்தி, ஸர்வேஶ்வரன் கைக்கொள்ளுகைக்கு யோக்யனும்படி பண்ணி, அவன் திருவடிகளிலே சேர்த்து, * அறியாதன வறிவித்து, ஸ்வாமியாய், என்றுமொக்க வடிமைகொள்ளும் மஹோபகாரகனென்று ஆசார்யனை நினைப்பான்.

(௮). நம்முடைய ஸர்வாபராதத்தையும் பொறுப்பித்து, ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்தையுங் குலைத்து, அவனுடைய காருண்ய வாத்ஸல்யாதி குணங்களைக்கிளப்பி, நமக்கு புருஷகார ஹூதையாய், மாதாவாய், ஸ்வாமிநியாய், ப்ராப்யையா யிருக்குமென்று பிராட்டியை நினைப்பான்.

(௯). ஸ்ருஷ்டிகாலத்திலே ஶரீரத்தையும் இந்த்ரியங்களையுந்தந்து, அந்தர்யாமியாய் நின்றுஸத்தையை நோக்கி, அத்வேஷத்தையும் ஆபிமுக்யத்தையும் ஸத்ஸங்கதிதுடக்கமான ஆத்மகுணங்களையும் பிறப்பித்து ஸதாசார்யனோடே சேர்த்து, நம்முடைய ஸர்வாபராதங்களையும் பொறுத்து, ஸம்ஸார ஸம்பந்தத்தையுங்கழித்து, அர்ச்சிராதி மார்க்கத்தையும் பரமபதத்தையும் குணாநுஹவத்தையுந்தந்து, யாவதாத்மஹாவி நித்யகைங்கர்யங் கொள்ளும் ஸ்வாமியென்று ஸர்வேஶ்வரனை நினைப்பான்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

நவரத்நமிதி நாமேயம் ஸூக்தி ரத்நாவளீ ஸதா ஹ்ருதி।
ஸுதியா யேந தாரிதா ஸோயம் ஜகதி குணாஶ்ரயோ பவேத்॥

நவரத்நமாலை முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம꞉

நவவிதஸம்பந்தம்.

(பிதா ச ரக்ஷக ஶ்ஶேஷீ ஹர்தா ஜ்ஞேயோ ரமாபதி꞉ - ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச ஹோக்தா சாத்யமநூதித꞉) என்கிறபடியே—அகாரத்தாலே - பிதாபுத்ர ஸம்பந்தஞ்சொல்லி, (௧). (அவ-ரக்ஷணே) என்கிறதாதுவினாலே- ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தஞ்சொல்லி, (௨). லுப்தசதுர்த்தியாலே - ஶேஷஶேஷி ஸம்பந்தஞ்சொல்லி, (௩). உகாரத்தாலே - ஹர்த்ருஹார்யா ஸம்பந்தஞ் சொல்லி, (௪). மகாரத்தாலே - ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தஞ்சொல்லி, (௫). நமஸ்ஸாலே - ஸ்வஸ்வாமி ஸம்பந்தஞ்சொல்லி, (௬). நாரபதத்தாலே -

* போரப்பொலிய - மிகவும் பூர்ணமாக.

ஶரீரஶரீரி ஸம்பந்தஞ்சொல்லி, (எ). அயநபதத்தாலே - ஆதாராதேய ஸம்பந்தஞ் சொல்லி, (அ). ஆயபதத்தாலே - போக்த்ருபோக்ய ஸம்பந்தஞ்சொல்லி, (கூ). ஆக, திருமந்த்ரத்தால் - நவவித ஸம்பந்தங்களைச் சொல்லித் தலைக்கட்டுகிறது.

நம்மாசார்யர்கள், ப்ரதமரஹஸ்ய தாத்பர்யமான நவவித ஸம்பந்தம் ஸ்வரூபஜ்ஞனுக்கு நித்யாநுஸந்தேயமென்று அநுஸந்தித்தும் உபதேஶித்தும் போருவார்கள்.

அவையெவையென்னில். (க). விஶேஷண விஶேஷ்ய ஸம்பந்தம், (உ). ரக்ஷ்ய ரக்ஷகஸம்பந்தம், (ங). ஶேஷஶேஷி ஸம்பந்தம், (ச). பர்த்ருபார்யா ஸம்பந்தம், (ரு). ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தம், (சா). ஸ்வஸ்வாமி ஸம்பந்தம், (எ). ஶரீரஶரீரி ஸம்பந்தம், (அ). தார்யதாரக ஸம்பந்தம், (கூ). போக்த்ருபோக்ய ஸம்பந்தம்.

(க). இதில், விஶேஷண விஶேஷ்ய ஸம்பந்தமாவது - [1]. ப்ரக்ருத்யர்தஶங்கா நிவர்தகமாய், [2]. ஆஶ்ரயாஶ்ரயியாய், [3]. வ்யாவர்தக வ்யாவர்த்யமா யிருப்பதொன்று.

[1]. ப்ரக்ருத்யர்த ஶங்கா நிவர்தக மாகையாவது - ஸமஸ்தஶப்தகாரணமான அகாரஸ்வபாவத்தாலே தத்வாச்யனும், ஸமஸ்தஶப்த வாச்யமான சிதசித்துக்களுக்குக் காரணமாமிடத்தில் 'நித்யங்களானவை கார்யமாமிடத்தில் அநித்யங்களாமே' என்கிற ஶங்கையுதிக்க, அவை நித்யஸூக்ஷ்மவிஶேஷணமாகையாலே அநித்யத்வம் ஶங்கநீயமன்றென்று பரிஹரிக்குமதாகை.

[2]. ஆஶ்ரயாஶ்ரயியாவது - ஶௌக்ல்யம் படத்தைப்பற்றியல்லதுநில்லாதப்போலே, சிதசித்துக்கள் பகவத்ஸ்வரூபத்தைப் பற்றியல்லது ஸத்தையற்றிருக்கை.

[3]. வ்யாவர்தக வ்யாவர்த்ய மாகையாவது - இவை பகவத் ஸ்வரூபத்துக்குண்டான இதர வ்யாவ்ருத்திக்கு ப்ரகாஶகமாய், வ்யாவர்த்யமான பகவத்ஸ்வரூபம் வ்யாவர்த்தக மான விவற்றையொழிய ப்ரகாஶியாத படியுமாயிருக்கை. ஆக, நித்யகார்யா நாதித்வ ஸூசகமிந்த ஸம்பந்தம்.

(உ). ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்த மாகையாவது - [1]. தாதுஸித்தமாய், [2]. ப்ரக்ருத்யர்தாநந்தர பாவியாய், [3]. உபயஸ்வரூபோசிதமா யிருப்பதொன்று.

[1]. தாதுஸித்த மாகையாவது - (அவ - ரக்ஷணே) என்கிற தாத்வர்தமான ரக்ஷணம் - நிர்விஷயமாயும் நிராஶ்ரயமாயும் நில்லாமையாலே, (யேந ஜாதாநி ஜீவந்தி) இத்யாதி ப்ரஸித்தமான ரக்ஷ்ய ரக்ஷகஸ்வரூப ப்ரதர்ஶநமாகை.

[2]. ப்ரக்ருத்யர்தாநந்தர பாவித்வ மாகையாவது - (மூவாத்தனிமுதலாய் மூவுலகுங் காவலோன்) என்கிறபடியே, ப்ரக்ருத்யர்தமான காரணத்வத்துக்கநந்தரம் வேண்டுவதொன்றாகை.

[3]. உபயஸ்வரூபோசித மாகையாவது - ரக்ஷ்யரக்ஷக ஸ்வரூபமான பாரதந்த்ர்ய ஸ்வாதந்த்ர்யங் களுக்குச் சேருகை. பரதந்த்ரனுக்கு ஸ்வரக்ஷணான்வயங் கூடாமையைக் காட்டுமிந்த ஸம்பந்தம்.

(௩). சேஷசேஷி ஸம்பந்தமாவது - [1]. விபக்திஸித்தமாய், [2]. தாத்வர்த்தபரார்த்ததா ப்ரகாசகமாய், [3]. ஸோமாநுரூபதாதர்சகமா யிருப்பதொன்று.

[1]. விபக்திஸித்த மாகையாவது - அகாரத்திலேறிக்கழிந்த சதுர்த்தியிலுதித்த சேஷத்வம் - (யஸ்யாஸ்மி) இத்யாதிப்ரஸித்தமானசேஷ சேஷிகளைக்காட்டுகை.

[2]. தாத்வர்த்த பரார்த்ததாப்ரகாசக மாகையாவது - தாத்வர்த்தமான ரக்ஷணம் சரீரியான சேஷிப்ரயோஜந மத்தனையென்று காட்டுகை.

[3]. ஸோமாநுரூபதாதர்சக மாகையாவது - சேஷவஸ்து ஸ்வரூபம் சேஷிவிநியோமாநு குணமா யிருக்கையாயிற்று நிலைநின்ற வேஷமென்றுகாட்டுகை. அதாவது - சேஷி சேஷத்வத்தை யழியமாறி விநியோகிக்கு மிடத்தில் பிற்காலியாத முறையுணர்த்தி, ஸ்வமதஸ்வரூபகுணத்தையும் ஸஹியாததொரு ஸம்பந்தம்.

(௪). ஸர்த்ருஸார்யா ஸம்பந்தமாவது - [1]. உகாரஸித்தமாய், [2]. விபக்த்யர்த்தசோதகமாய் [3]. ஸ்வரூப ப்ராப்தமா யிருப்பதொன்று.

[1]. உகாரஸித்த மாகையாவது - உகாரார்த்தம் அவதாரணார்த்தமாயிருக்கை. அதாவது - ரக்ஷகனான புருஷோத்தமனுக்கே ரக்ஷ்யமான ஆத்மஸ்வரூபம் அற்றுத்தீர்ந்திருக்குமென்று தோற்றுகை.

[2]. விபக்த்யர்த்தசோதக மாகையாவது - பதிவ்ரதையினுடையசேஷத்வம் அநந்யார்ஹமா யிருக்குமாபோலே, லுப்தசதுர்த்யர்த்தமான பகவச்சேஷத்துவமும் அநந்யார்ஹமென்று மறுக்களைந்திருக்கை.

[3]. ஸ்வரூபப்ராப்த மாகையாவது - ஸர்த்ருத்வ ஸார்யத்வங்கள் பும்ஸ்த்ரீத்வத்துக் கீடாமாபோலே, ஸர்த்ருஸார்யா ஸம்பந்தம் ஸ்வாதந்த்ர்ய பாரதந்த்ர்யங்களுக் கீடாகை. அந்யார்ஹப்ரஸங்காஸஹமிந்த ஸம்பந்தம்.

(ரு). ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்த மாகையாவது - [1] மகாரநிருக்தமாய், [2] உகாரார்த்தாநு ஸந்தாநா பேக்ஷிதமாய், [3] அசித்வ்யாவ்ருத்தி வேஷமா யிருப்பதொன்று.

[1] மகாரநிருக்த மாகையாவது - (மந-ஜ்ஞாநே) என்கிற ஜ்ஞாநவாசியான மகாரம் காட்டுகிற ஜ்ஞாத்ருத்வத்துக்கு ஜ்ஞேயம் பகவத்ஸ்வரூபாதிகளாய்த் தோன்றுகை.

[2] உகாரார்த்தாநு ஸந்தாநாபேக்ஷித மாகையாவது - உகாரார்த்தமான ஸர்த்ரு ஸார்யா ஸம்பந்தாநு ஸந்தாநத்துக்கு ஜ்ஞாத்ருத்வமபேக்ஷிதமாகை.

[3] அசித்வ்யாவ்ருத்தி வேஷமாகையாவது - இந்த ஸம்பந்தங்களை யறிகையும், ஜ்ஞேயமும், ஜ்ஞாதாவாகையும். ஜ்ஞேயாதீநமுமாய், தத்ப்ர யோஜநமுமா யிருக்குமிந்த ஜ்ஞாத்ருத்வமென்று காட்டுமிந்த ஸம்பந்தம்.

(சு). ஸ்வஸ்வாமி ஸம்பந்தமாவது - [1] நமஸ் ஶப்தார்த்தாத்பர்யமாய், [2] மகாரார்த்த நிபந்தந நிரமநாஶகமாய், [3] ஸ்வாபாவிகமா யிருப்ப தொன்று.

[1] நமஸ் ஶப்த தாத்பர்யமாகையாவது-நமஸ் ஶப்தார்த்த மான அஹம் மமதா நிவ்ருத்தி, ஶேஷித்வாதி மாநித்வங்களையும் 'ஸ்வமதமன்று, பரமதம்' என்றுகாட்டி, ஶேஷியுமாய் அதிமாநியுமான வெம்பெருமானுடைமையுமாய்த் தோன்றுகை.

[2] மகாரார்த்த நிபந்தநநிரம நாஶகமாகையாவது - மகாரார்த்தமான ஜ்ஞாத்ருத்வ நிபந்தநமாய் வந்தகர்த்ருத்வ நிரமத்தை யறுக்குமதாகை. அதாவது-பராதீநமான ஸ்வரூபத்தின் குணவிஶேஷங்களும் பராதீநமெ ன்று ஸ்வாதீநதாப்ரதிபத்தியைக்கெடுக்கை.

[3] ஸ்வாபாவிக மாகையாவது - அஹங்காராதிகளைப்போலே வந்தே றியன்றிக்கே, (ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்) என்கிறபடியே ஜீவபரர்களுடைய ஸ்வஸ்வாமிஸம்பந்தம் ஸ்வதஸ்ஸித்தமாய்ப் போருகை. ஸ்வத்துக்கு ஸ்வரக்ஷண கர்த்ருத்வ மில்லையென்றும், ஸ்வாமிக்கே யதுதொழிலென்றுங் காட்டுகிற திந்தஸம்பந்தம்.

(எ). ஶரீரஶரீரி ஸம்பந்தமாவது - [1] நாராயணபதத்தில் ஸமாஸ விஶேஷஸித்தமாய், [2] நமஸ் ஶப்தார்த்த ஸ்வரூபப்ரகாஶகமாய், [3] ஸா மாநாதிகரண்யயோக்யமா யிருப்பதொன்று.

[1] ஸமாஸ விஶேஷஸித்த மாகையாவது - நாராயணபதத்தில் பஹுவ்ரீஹி ஸமாஸத்திலே வ்யாப்யமான நாரங்கள் ஶரீரமாய், அந்தர்வ்யாப்தி யாலே வ்யாபகஸ்வரூபம் ஶரீரியாய்த் தோன்றுகை.

[2] நமஸ் ஶப்தார்த்த ஸ்வரூபப்ரகாசக மாகையாவது - நமஸ் ஶப்தார்த்த மான ஸ்வஸ்வாமி ஸம்பந்தம், பூருஹ க்ஷேத்ராதி ஸம்பந்தங்கள் போலன் றிக்கே அப்ருதக்ஸித்தமா யிருக்குமென்று காட்டுகை.

[3] ஸாமாநாதிகரண்ய யோக்யமாகை யாவது - ஸ்வரூபபேதத்தாலே பிந்நப்ரவ்ருத்தி நிமித்தமான ஜீவபரஸ்வரூபம் ஶரீரஶரீரியான ஐக்யத்தா லே யொன்றென்னலாகை. விஶிஷ்டாத்வைத ப்ரகாஶகமிந்த ஸம்பந்தம்.

(அ). தார்யதாரக ஸம்பந்த மாவது - [1] ஸமாஸாந்தர ஸித்தமாய், [2] ஶரீரஶரீரி ஸம்பந்தி லக்ஷணமாய், [3] அசித்விஶேஷ ஸ்திதி ஹே துவா யிருப்பதொன்று.

[1] ஸமாஸாந்தர ஸித்தமாகையாவது - நாராயணபதத்தில் தத்புருஷ ஸமாஸஸித்தையான பஹிர்வ்யாப்தியாலே நாரபதவாச்யங்கள் தார்யமாய், அயநபதவாச்யன் தாரகனுப்த் தோன்றுகை.

[2] ஶரீரஶரீரி ஸம்பந்தைக லக்ஷணமாகையாவது-ஆதேயத்வ விதேயத்வ ஶேஷத்வரூபமான ஶரீரலக்ஷணங்களிலும், ஆதாரத்வ விதாயகத்வ ஶேஷித்வரூபமான ஶரீரிலக்ஷணங்களிலும், ப்ரதாநமான ஆதேயத்வ ஆதாரகத்வரூபலக்ஷண மொன்றுமாய்த் தோன்றுகை.

[3] அசித்விஶேஷ ஸ்திதிஹேதுவாகையாவது - (அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி) என்று அந்தர்வ்யாப்திபோலே வேதநஸ்திதி ப்ரதாநமாகை யன்றியே பஹிர் வ்யாப்தியாலே சேதநாசேதநங்களிரண்டினுடையவும் வ்யவஸ்திதஸ்வரூபஸ்திதிவ்யாபாரங்களுக்குக்காரணமாய்த் தோன்றுகை. சிதசிந்நித்யஸ்திதிகாரணமிந்த ஸம்பந்தம்.

(கூ). போக்த்ரு போக்ய ஸம்பந்தமாவது - [1] சரமவிபக்தி வேத்யமாய், [2] பூர்வஸம்பந்தப்ரயோஜந ப்ரதர்ஶகமாய், [3] ப்ரதிஸம்பந்தி போகாநுரூபமா யிருப்பதொன்று.

[1] சரமவிபக்தி வேத்யமாகையாவது - (ஆய) என்கிற சதுர்த்தி விபக்தியிலே அநந்யார்ஹ ஶேஷபூதனான மகாரவாச்யனுடைய ஸஹஜஶேஷவ்ருத்திதோன்ற, அதில் கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் ஶரீரியான பரமஶேஷிக்கேயாய், ஶரீரமான ஶேஷபூதனுக்கன்றென் றிருக்கை.

[2] பூர்வஸம்பந்தப்ரயோஜந ப்ரதர்ஶக மாகையாவது - ஸர்பவிஷவத்தார்யதாரகத்வங்கள் நிஷ்ப்ரயோஜநமாய்விடாதே, ரஸநாரஸவஸ்துவத்தார்யதாரகங்களுக்கு அநுகூல க்ராஹ்யக்ராஹகரூப ப்ரயோஜநத்தைக்காட்டுமதாகை.

[3] ப்ரதிஸம்பந்தி போகாநுரூப மாகையாவது - கைங்கர்யப்ரதி ஸம்பந்தியான ஶேஷியினுடைய கைங்கர்ய ரஸாநுபவத்துக்கும், கைங்கர்யாஶ்ரயமான ஶேஷபூதனுடைய ஶேஷிபோகவிருத்தரஸத்வராஹித்யத்துக்கு மிடமாயிருக்கை. ஶேஷித்வத்திலும் ஶேஷத்வத்திலும் மறுக்களைந்ததிந்த ஸம்பந்தம்.

இதில், (க) விஶேஷண விஶேஷ்ய ஸம்பந்தஜ்ஞாநம் பிறக்கவே காரணாந்தரஶங்கையறும். (உ) ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தஜ்ஞாநம் பிறக்கவே ரக்ஷகாந்தர ஶங்கையறும். (ங) ஶேஷ ஶேஷிஸம்பந்த ஜ்ஞாநம் பிறக்கவே ஶேஷ்யந்தர ஶங்கையறும். (ச) பர்த்ருபார்யா ஸம்பந்த ஜ்ஞாநம் பிறக்கவே அந்யார்ஹ ஶங்கையறும். (ரு) ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்த ஜ்ஞாநம் பிறக்கவே ஜ்ஞேயாந்தர ஶங்கையறும். (சா) ஸ்வஸ்வாமி ஸம்பந்தஜ்ஞாநம் பிறக்கவே ஸ்வாதந்த்ர்ய ஶங்கையறும். (எ) ஶரீரஶரீரி ஸம்பந்தஜ்ஞாநம் பிறக்கவே ஸ்வரூபைக்ய ஶங்கையறும். (அ) தார்யதாரக ஸம்பந்த ஜ்ஞாநம் பிறக்கவே தாரகாந்தர ஶங்கையறும். (கூ) போக்த்ரு போக்ய ஸம்பந்தஜ்ஞாநம் பிறக்கவே போக்த்ருத்வஶங்கையறும்.— ஆக, நவவித ஸம்பந்தமு மறிந்து ஆநந்தித்திருக்கவும்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

நவவிதஸம்பந்தம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

யாத்ருச்சிகப்படி.

திருமந்த்ரப்ரகரணம்.

யாத்ருச்சிக பகவத் கடாக்ஷத்தாலே பகவதபிமுக்யம் பிறந்து ஸதாசார்ய ஸமாஶ்ரயணம் பண்ணின முமுக்ஷுவுக்கு ரஹஸ்யத்ரயமு மநுஸந்தேயம். அதில், ஸ்வரூபஶோதநார்த்தமாக ப்ரவ்ருத்த மாகையாலே ப்ரதமத்திலே யநுஸந்தேயமான திருமந்த்ரம் - ஸ்வரூபத்தையும், ஸ்வரூபாநுரூபமான பரம புருஷார்த்தத்தையும் ப்ரதிபாதிக்கிறது.

அப்பரம புருஷார்த்தத்துக் கநுரூபமான சரமோபாய ஸ்வீகாரத்தை விதிக்கிறது - சரமஶ்லோகம்.

விஹிதோபாய பரிக்ரஹத்தையும், ஸப்ரகார புருஷார்த்த ப்ரகாரத்தையும் ப்ரதிபாதிக்கிறது - த்வயம்.

அதில் திருமந்த்ரம் - எட்டுத்திருவக்ஷரமாய், மூன்று பதமாயிருக்கும். அதில் முதல் பதமான ப்ரணவம் - மூன்று பதமாயிருக்கும். அதில் ப்ரதம பதமான அகாரம் - ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வப்ரகாரத்தாலும் ஸர்வாத்மாக்களையும் ரக்ஷித்துக்கொண்டு போருகிற ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷமென்கிறது. இரண்டாம் பதமாய், அவதாரணார்த்தமான உகாரம் - வேறே சிலர்க்கு ஶேஷமன்றென்கிறது. மூன்றும் பதமாய், இருபத்தஞ்சாமக்ஷரமாய், ஜ்ஞாநவாசியாயிருந்துள்ள மகாரம் - கீழ்ச்சொன்ன அநந்யார்ஹ ஶேஷத்வத்துக் காஶ்ரயம் தேஹாதி விலக்ஷணமான ஆத்மவஸ்து வென்கிறது.

இரண்டாம் பதமான நமஸ்ஸு 'ந' - என்றும் 'ம' என்றும் இரண்டு பதமாயிருக்கும். 'ந' என்றது-அன்றென்றபடி. 'ம:' என்றது - எனக்கென்றபடி. இரண்டுங் கூடி எனக்கன் றென்றபடி. எனக்கன் றென்கையாவது - எனக்கு நான் கடவனல்லனென்றிருக்கை.

மூன்றும் பதமான நாராயணபதம் - 'ஸர்வஶேஷியான நாரயணனுக்கு நித்யகைங்கர்யம் பண்ணவேணும்' என்று ப்ரார்த்திக்கும் படியைச் சொல்லுகிறது. நாராயணனென்றது - நாரங்களுக் கயநமென்றபடி. நாரங்களாவன- நஶியாதவஸ்துக்களினுடைய திரள். அவையாவன - திவ்யாத்மஸ்வரூபத்தை யொழிந்த ஸர்வவஸ்துக்களும். அயநமென்றது - இவற்றுக் காஶ்ரயமென்றபடி. அங்ஙனன்றிக்கே, இவைதன்னை ஆஶ்ரயமாகவுடைய னென்னவுமாம். இத்தால்-மேன்மையும் நீர்மையும் சொல்லிற்றாய்த்து. இதில்- 'சதுர்த்தி ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வப்ரகார கைங்கர்யங்களையுங் கொண்டருள வேணும்' என்று ப்ரார்த்திக்கும் படியைச் சொல்லுகிறது.

ஆக, 'ஸர்வரக்ஷகனான ஸர்வேஶ்வரனுக்கு அநந்யார்ஹ ஶேஷபூதனாய் எனக்குரியனன்றிக்கே யிருந்துள்ள நான், ஸர்வஶேஷியான நாராயணனுக்கே நித்யகைங்கர்யம் பண்ணப் பெறுவேனாக வேணும்' என்று ப்ரார்த்தித்ததாய்த்து.

சரமஶ்லோகப்ரகரணம்.

[ஸர்வதர்மாந்] - கர்ம ஜ்ஞாந பக்திகளை ஸப்ரகாரமாக வுபதேஶிக்கக்கேட்ட அர்ஜுநன், அவற்றினருமையாலும், தன் ஸ்வரூபத்துக்குச் சேராமையாலும், ஸாத்யலாப நிமித்தமாக ஶோகிக்க, 'நான் முன்புபதேஶித்தவற்றை ஸவாஸநமாகவிட்டு என்னையொருவனையுமே உபாயமாக பரிக்ரஹி, நானுன்னுடைய ஸர்வ விரோதிகளையும் போக்குகிறேன், நீஶோகியாதேகொள்' என்று இவனுடைய ஶோகத்தை நிவர்த்திப்பிக்கிறான்.

[ஸர்வதர்மாந்] - எல்லா தர்மங்களையும். கீழ்ச்சொன்ன ஸபரிகரங்களான வெல்லாவுபாயங்களையும். (பரித்யஜ்ய]-ருசிவாஸநைகளோடே விட்டு. [மாம்] - உன்கார்யத்திலே அதிகரித்துக்கொண்டு நிற்கிறவென்னை. [ஏகம்] - ஒருவனையுமே. [ஶரணம்] - உபாயமாக. [வ்ரஜ] - அத்யவஸி. [அஹம்] - ஸர்வஶக்தியான நான். [த்வா] - என்னையொழிந்த உபாயோபேயங்களை விட்டிருக்கிறவுன்னை. [ஸர்வபாபேப்ய:] - என்னைக்கிட்டுகைக்கு விரோதியாயிருந்துள்ளவை யெல்லாவற்றில் நின்றும். [மோக்ஷயிஷ்யாமி] - விடுவிக்கக்கடவேன். [மாஶுச:] - நீ ஶோகியாதேகொள்.

ஆக, 'ஸாங்கமான ஸர்வோபாயங்களையும் ஸவாஸநமாக விட்டு, வாத்ஸல்யாதி கல்யாணகுண விஶிஷ்டனானவென்னை யொருவனையுமே, நிரபேக்ஷஸாதநமாகஸ்வீகரி, ஸர்வஶக்தித்வாதி கல்யாணகுண விஶிஷ்டனான நான், என்னையே யுபாயமாகப் பற்றியிருக்கிற வுன்னை, ஸமஸ்தப்ரதிபந்தகங்களில் நின்றும் முக்தனாக்குகிறேன், நீ ஶோகியாதேகொள்' என்று அர்ஜுநனுடைய ஶோகத்தை நிவர்திப்பிக்கிறான்.

த்வயப்ரகரணம்.

த்வயம், உபாய பரிக்ரஹத்தையும், உபேயப்ரார்த்தநத்தையும் ப்ரதிபாதிக்கிறது. இரண்டர்த்தத்தையும் ப்ரதிபாதிக்கையாலே யிரண்டு வாக்யமாயிற்று. இரண்டு வாக்யமாகையாலே த்வயமென்று திருநாமமாயிற்று. இதில் பூர்வவாக்யம் மூன்று பதமாய், உத்தரவாக்யம் மூன்று பதமாய், ஆக ஆறுபதமாயிருக்கும்.

இதில் முதல்பதம் - பெரிய பிராட்டியாருடைய புருஷகார பாவத்தையும், ஈஶ்வரனுடைய வாத்ஸல்யாதிகுண சதுஷ்டயத்தையும், திவ்யமங்கள விக்ரஹயோகத்தையுஞ் சொல்லுகிறது.

இதில் [ஸ்ரீ] ஶப்தம் - (ஸ்ரீயதே, ஶ்ரயதே) என்கிற வ்யுத்பத்தி த்வயத்தாலும், பெரிய பிராட்டியாருடைய மாத்ருத்வப்ரயுக்தமான ஸம்பந்த விஶேஷத்தாலே இவர்கள் குற்றம் பாராதே யெல்லார்க்கு மொக்கவாஶ்ரயணீயையாயிருக்கு மிருப்பையும், பத்நீத்வமாகிற ஸம்பந்தவிஶேஷத்தாலே ஸ்வரூபவஸித்த்யர்த்தமாகவும் சேதநரக்ஷணார்த்தமாகவும் ஈஶ்வரனை யாஶ்ர

யித்துக்கொண்டிருக்கு மிருப்பையுஞ் சொல்லுகிறது. [மது] ப்பாலே - ஈஶ்வரனுக்கும் பிராட்டிக்கு முண்டான நித்ய ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. [நாராயண] ஶப்தம் - பிராட்டி தானே அபராதங்களையிட்டகற்றப் பார்த்தாலும், (என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்) என்று நோக்கக் கடவனான ஈஶ்வரனுடைய வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யங்களைச் சொல்லுகிறது. [சரண] ஶப்தம் - ஸ்வரூபகுணங்களிலுங் காட்டில் தானே கார்யஞ்செய்யக் கடவதான விக்ரஹவைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது. [ஶரணம்] - உபாயமாக. உபாயமாகிறது - அநிஷ்ட நிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் பண்ணித்தருமது. [ப்ரபத்யே] - பற்றுகிறேன். பற்றுகையாவது - மாநஸாத்யவஸாயம்.

[ஸ்ரீமதே] - பெரிய பிராட்டியாரோடே ஸம்ஶ்லிஷ்டனானவனுக்கு. இத்தால் - கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தி மிதுநமென்னு மிடத்தைச் சொல்லுகிறது. [நாராயணாய] - ஸர்வஶேஷியா யிருந்துள்ளவனுக்கு. இத்தால் - கைங்கர்யம் பண்ணுகைக்கு வகுத்த விஷயமென்கிறது. இதில் சதுர்த்தி - தேஶ காலாவஸ்தாப்ரகார நியம ரஹிதமான நித்யகைங்கர்ய ப்ரார்த்தநத்தை ப்ரதிபாதிக்கிறது. [நம] ஶ்ஶப்தம் - கீழ்ச்சொன்ன கைங்கர்யத்தில் விரோதி நிவ்ருத்தியைச் சொல்லுகிறது. கைங்கர்யத்துக்கு விரோதியாகிறது - போக்த்ருத்வப்ரதி பத்தியும், மதீயத்வப்ரதி பத்தியும்.

ஆக, ஶ்ரிய:பதியாய் ஸர்வஸுலபனான நாராயணன் திருவடிகளையே அபிமதஸித்திக்கும் தத்விரோதி நிவ்ருத்திக்கு முபாயமாக அத்யவஸிக்கிறேன்; ஶ்ரிய:பதியாய் ஸர்வஸ்வாமியான நாராயணனுக்கு நித்யகைங்கர்யம் பண்ணப்பெறுவேனாக வேணும், அதுக்கு விரோதியான அஹங்கார மமகாரங்களும் நிவ்ருத்தமாகவேணும் என்று ஸப்ரகார ஸாதந ஸ்வீகார பூர்வகமாக ஸ்வரூபாநுரூபமான நித்யகைங்கர்ய ப்ரார்த்தநத்தை ப்ரதிபாதிக்கிறது.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

யாதிருச்சிகப்படி முற்றிற்று.

*நிகமநப்படி.

தனியன்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

திருமந்த்ரப்ரகரணம்.

திருமந்த்ரம், எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாயிருக்கும். எங்ஙனேயென்னில்?—'ஓம்' என்றும், 'நம:' என்றும், 'நாராயணாய' என்றும் மூன்றுபதமா யிருக்கும். அதில் முதற்பதம் ஏகாக்ஷரமான ப்ரணவம். இது அகாரமென்றும், உகாரமென்றும், மகாரமென்றும் மூன்றுபதமாயிருக்கும். இரண்டாம்பதம் நமஸ்ஸு. இது 'ந' என்றும், 'ம:' என்றும் இரண்டு திருவக்ஷரமாய், இரண்டு பதமாயிருக்கும். மூன்றும்பதமான நாராயணபதம் அஞ்சு திருவக்ஷரமாய், 'நார' என்றும், 'அயந' என்றும் இரண்டு பதமாய், மேல் 'ஆய' என்று சதுர்த்தியாயிருக்கும்.

எம்பெருமானுடைய ஸர்வரக்ஷகத்வமும் ஸர்வசேஷித்வமும் ஸ்ரீய:பதித்வமும் இவை, அகாரார்த்தம். அந்யசேஷத்வ நிவ்ருத்தியும் அநந்யார்ஹ சேஷத்வமும் இவை, உகாரார்த்தம். ஆத்மாவினுடைய ஜ்ஞாநாநந்தத்வமும், ஜ்ஞாநகுணகத்வமும், நித்யத்வமும், அணுத்வமும், ஏகரூபத்வமும், ஸ்வஸ்மைஸ்வயம் ப்ரகாசத்வமும், ப்ரக்ருதே: பரத்வமும் இவை, மகாரார்த்தம்.

ஸ்வாஹங்கார மமகார நிவ்ருத்தியும், நிவ்ருத்தமான ஸ்வரூபத்தினுடைய அத்யந்த பாரதந்த்ர்யமும், பாரதந்த்ர்ய பராகாஷ்டையான ததீயசேஷத்வமும், பரதந்த்ரனுக்கு அநுரூபமான உபாயத்வமும் இவை, நமஸ் சப்தார்த்தம்.

சேதநாசேதநங்களுடைய நித்யத்வமும், அவற்றினுடைய ஸமூஹத்வமும், ஸமூஹாஸங்க்யாதத்வமும் இவை, நாரசப்தார்த்தம். ஈச்வரனுடைய ஆதாரத்வமும், வ்யாபகத்வமும், நியந்த்ருத்வமும், ஸர்வவிஷயஸங்கல்பத்வமும், ப்ராப்யத்வமும், ப்ராபகத்வமும், ஸகலஜகத்காரணத்வமும் இவை, அயநசப்தார்த்தம். நித்யகைங்கர்ய ப்ரார்த்தனை – ஆயசப்தார்த்தம்.

* பரந்தரஹஸ்யத்திற்கு நிகமந மாகையாலே நிகமநப்படி என்று பேர்பெற்றது.

எம்பெருமானை யொழிய ரக்ஷகாந்தரப்ரதிபத்தி நடையாடிற்றாகில், அகாரார்த்தம் நெஞ்சிற்பட்ட தில்லையாகக்கடவது. அந்யஶேஷத்வம் நடையாடிற்றாகில், உகாரார்த்தம் நெஞ்சிற்பட்டதில்லையாகக்கடவது. அநாத்மாவான தேஹத்தில் ஆத்மபுத்தி நடையாடிற்றாகில், மகாரார்த்தம் நெஞ்சிற்பட்டதில்லையாகக்கடவது. ஸ்வஸ்வாதந்த்ர்யமும், ஸ்வரக்ஷண ப்ரதிபத்தியும், ஸ்ரீவைஷ்ணவ ஸமத்வபுத்தியும், உபாயாந்தரமும் நடையாடிற்றாகில், நமஶ்ஶப்தார்த்தம் நெஞ்சிற்பட்ட தில்லையாகக்கடவது. ஈஶ்வரஶரீர பூதங்களான சேதநாசேதநங்களோடே ராகத்வேஷம் நடையாடிற்றாகில், நாரஶப்தார்த்தம் நெஞ்சிற்பட்ட தில்லையாகக்கடவது. அபந்துக்கள் பக்கலிலே பந்துத்வப்ரதிபத்தி நடையாடிற்றாகில், அயநஶப்தார்த்தம் நெஞ்சிற்பட்ட தில்லையாகக்கடவது. அபோக்யமான ஶப்தாதிவிஷயங்களிலே போக்யதாபுத்தி நடையாடிற்றாகில், ஆயஶப்தார்த்தம் நெஞ்சிற்பட்ட தில்லையாகக் கடவது.

திருமந்த்ரத்துக்குத் தாத்பர்யார்த்தம் எது? வாக்யார்த்தம் எது? ப்ரதாநார்த்தம் எது? அநுஸந்தாநார்த்தம் எது? என்னில்:—தாத்பர்யார்த்தம்—ஸகலவேதஶாஸ்த்ர ருசிபரிக்ருஹீதத்வம். வாக்யார்த்தம் - ப்ராப்ய ஸ்வரூப நிரூபணம். ப்ரதாநார்த்தம் - ஆத்மஸ்வரூப நிரூபணம். அநுஸந்தாநார்த்தம்- ஸம்பந்தாநு ஸந்தாநம்.

ஸம்பந்தமேது? என்னில்:— அகாரத்தாலே பிதாபுத்ர ஸம்பந்தஞ்சொல்லி, 'அவ-ரக்ஷணே' என்கிற தாதுவினாலே ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தஞ்சொல்லி, லுப்தசதுர்த்தியாலே ஶேஷ ஶேஷி ஸம்பந்தஞ் சொல்லி உகாரத்தாலே பர்த்ருபார்யா ஸம்பந்தஞ் சொல்லி, மகார பதத்தாலே ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தஞ் சொல்லி, நமஃபதத்தாலே ஸ்வஸ்வாமி ஸம்பந்தஞ் சொல்லி, அயநபதத்தாலே ஆதார ஆதேய ஸம்பந்தஞ் சொல்லி, ஆயபதத்தாலே போக்த்ருபோக்ய ஸம்பந்தஞ்சொல்லி ஆக திருமந்த்ரத்தால் நவவித ஸம்பந்தஞ் சொல்லித்தலைக்கட்டுகிறது.

நைநாரச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

த்வயப்ரகரணம்.

த்வயம், இரண்டுவாக்யமாய், ஆறுபதமாய் பத்தர்த்தமாய், இருபத்தஞ்சு திருவக்ஷரமா யிருக்கும். அதில் பூர்வவாக்யம் பதினஞ்சு திருவக்ஷரமாய், உத்தரவாக்யம் பத்துத்திருவக்ஷரமா யிருக்கும். எங்ஙனே? என்னில்:—'ஸ்ரீமந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே' என்றும், 'ஸ்ரீமதே நாராயணாய நமஃ' என்றும் இரண்டுவாக்யமா யிருக்கும். 'ஸ்ரீமந்நாராயணசரணௌ' என்றும், 'ஶரணம்' என்றும், 'ப்ரபத்யே' என்றும், 'ஸ்ரீமதே' என்றும், 'நாராயணாய' என்றும், 'நமஃ' என்றும் ஆறுபதமாய், 'ஸ்ரீ' என்றும் 'மதுப்' என்றும்.

'நாராயண' என்றும், 'சரணௌ' என்றும் 'ஶரணம்' என்றும், 'ப்ரபத்யே' என்றும், 'ஸ்ரீமதே' என்றும், 'நாராயண' என்றும், 'ஆய' என்றும் 'நம:' என்றும் பத்தர்த்தமா யிருக்கும்.

'ஸ்ரீ' என்கையாலே எம்பெருமானுக்கே மறக்கவொண்ணாத பெரிய பிராட்டியாருடைய புருஷகாரத்வஞ்சொல்லி, 'மதுப்' என்கையாலே அப்புருஷகாரத்தினுடைய நித்யயோகஞ்சொல்லி, 'நாராயண' என்கையாலே இப்படி புருஷகாரபூதையான பெரியபிராட்டியார்தாம் குறைசொல்லிலும், "என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்" என்னும்படியான வாத்ஸல்யாதிகுணயோகஞ்சொல்லி, 'சரணௌ' என்கையாலே, அக்குணங்களுக்கும் பெரியபிராட்டியாருக்கும் ஆஶ்ரயணீயமான விலக்ஷணவிக்ரஹயோகஞ்சொல்லி, 'ஶரணம்' என்கையாலே அவ்விக்ரஹமே உபாய மென்னுமிடஞ்சொல்லி 'ப்ரபத்யே' என்கையாலே உபாயஸ்வீகாரம் பண்ணின அதிகாரியினுடைய அத்யவஸாயஞ்சொல்லி, 'ஸ்ரீமதே' என்கையாலே மிதுநமே ப்ராப்யமென்னுமிடஞ் சொல்லி, 'நாராயண' என்கையாலே எம்பெருமானுடைய ஸர்வஸ்வாமித்வஞ்சொல்லி, 'ஆய' என்கையாலே அவன் திருவடிகளிலே பண்ணும் வ்ருத்திவிஶேஷஞ்சொல்லி, 'நம:' என்கையாலே அவ்வ்ருத்திக்கு விரோதியான ஸ்வாஹங்கார மமகாரநிவ்ருத்தியைச் சொல்லித் தலைக்கட்டுகிறது.

இனி இஷ்ட ப்ராப்தியாவது ப்ராபியாதத்தை ப்ராபிக்கை. அதா வது பரஹிம்ஸை நிவ்ருத்தி பூர்வகமாகக் கைங்கர்ய மெல்லையாக ஸ்வரூ பாநுரூபமாக இவ்வதிகாரிக்கவன் பிறப்பிக்கும் பர்வங்கள்; அவையா வன, தேஹாத்மாபிமாநத்தைப் போக்கி ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநத்

தைப் பிறப்பித்து, உபாயாந்தர நிவ்ருத்திபூர்வகமாக ஸித்தோபாயத்திலே நிஷ்டையைப் பிறப்பித்து, விஷயப்ராவண்யத்தைப் போக்கி, தன்பக்கலிலே ப்ராவண்யத்தை யுண்டாக்கி, லோகப்ராப்தியைப் பண்ணிக்கொடுத்து, ஸ்வரூபப்ரகாஶத்தையும் பிறப்பித்து, பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தியையும் பிறப்பித்து, இவைபூர்வகமாக பகவதநுபவத்தையும் பிறப்பித்து, பகவதநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்யத்தையுங் கொடுத்துவிடுகை, இவன் பற்றின உபாயத்தின் க்ருத்யம். (நிரஞ்ஜநः பரமம் ஸாம்யமுபைதி) என்கிறது இவற்றிலே அந்தர்கதம்; அபஹதபாப்மத்வாதி குணஸாம்யமும், ஜ்ஞாநபலைஶ்வர்யாதி குண ஸாம்யமும், போகஸாம்யமும், இவையிறே ஸாம்யாபத்திகள். (பரஞ்ஜ்யோதிருப ஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே) என்கிறபடியே கைங்கர்யமும் அபஹத பாப்மத்வாதி குணங்களும் பரபக்த்யாதி குணங்களும் ஸ்வரூப ப்ராப்திகளிலே அந்தர்கதமாய் ப்ரகாஶிக்குமவை. இனி பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளும் நித்யமாயிருக்கும், ஸ்வரூபத்தோடே ஸஹஜமாயிருக்கையாலே. ஆனாலிவை நித்யமாகிறபடி யெங்ஙனே யென்னில், ஒருக்காலநுபவித்த குணங்கள் ஒருக்காலநுபவியா நின்றால் நித்யாபூர்வமாய் வருகையாலே பரபக்த்யாதி குணங்கள் நித்யமா யிருக்கும். ஸாலோக்ய ஸாரூப்ய ஸாயுஜ்யமானவை கைங்கர்யோப யோகியாகையாலே கைங்கர்யத்திலே அந்தர்கதம். (அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸஸ் ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்பः). [அபஹதபாப்மா] வென்றது-போகப்பட்ட பாபத்தை யுடையவன், [விஜரः]-விடப்பட்ட ஜரையையுடையவன், [விம்ருத்யுः]-விடப்பட்ட ம்ருத்யுவை யுடையவன், [விஶோகः] - விடப்பட்ட ஶோகத்தை யுடையவன், [விஜிகத்ஸः]-போகப்பட்ட பஶியையுடையவன், [அபிபாஸः]-போகப்பட்ட பிபாஸையை யுடையவன், [ஸத்யகாமः]-நினைத்தவை அப்போதேயுண்டாயிருக்கை, [ஸத்யஸங்கல்பः]- உண்டானவற்றைக் கார்யங் கொள்ளுமாபோலே யில்லாதவற்றை யுண்டாக்க வல்லனாகை. இவை தான் ஸ்வதः அன்றிக்கே யிருக்கிற விஷயத்தைச் சொல்லுவா னென்னென்னில், கர்மவஶ்யனுக்குள்ளது அகர்மவஶ்யனான ஈஶ்வரனுக் கில்லையென்று இவனுக்கு ஜ்ஞாநம்பிறக்கைக்காக. குணங்கள்தான் ஶேஷபூதனான சேதநனுக்கு முண்டாய் அவனுக்கு முண்டாயிருக்கும். இவை எட்டுகுணமும் சேதநனுக்கு உபாயகதம். நிஷ்க்ருஷ்ட வேஷத்திலில்லை யென்கை. அவனுக்கு விநியோகம் ரக்ஷணத்திலே, சேதநனுக்கு ஸத்யஸங்கல்பங்களாகிறது அவன் நினைத்த கைங்கர்யமுண்டாயிருக்கை. இனி ஜ்ஞாநஶக்த்யாதி குணங்கள் அவனுக்கு ஜகத் ரக்ஷணத்திலே, இவனுக்கு கைங்கர்யத்திலே.

அவனுக்கு [ஜ்ஞாந] மாவது (யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்ய க்ஷேண) என்கிறபடியே எல்லாவற்றையு மறிந்துகொண்டிருக்குமா போலே யிவன் செய்யக்கடவ கைங்கர்யங்களை யொருபோகியாகவறிய வல்லனாயிருக்கும், [பல மாவது - அவனித்தை யரித்து ரக்ஷிக்குமாகில் அவன் கைங்கர்யத்துக்கு பாரணஸாமர்த்யத்தை யுடையனாயிருக்கும், [ஐஸ்வர்ய] மாவது - அவன் ஸ்வவ்யதிரிக்தங்களை நியமித்துக் கொண்டிருக்குமாகில் அவனுக்கு கரணங்களை நியமித்துக்கொண்டு அடிமை செய்ய வல்லனாயிருக்கும் அதாவது, கைங்கர்யத்துக் கநுரூபமாக அநேக ஶரீரபரிக்ரஹங்கள் நியமிக்க வல்லனாயிருக்கை, [வீர்ய] மாவது- அவனிவற்றை ரக்ஷிக்குமிடத்தில் விகாரரஹிதனாய் ரக்ஷிக்குமாகில் இவனும் கைங்கர்யங்களைச் செய்யாநின்றால் ஒரு விகாரமின்றிக்கே யிருக்கை, [ஶக்தி] யாவது - அவன் சேராதவற்றைச் சேர்ப்பித்து ரக்ஷிக்குமாகில், இவனும் அநேகமடிமைகளை யெக்காலத்திலும் செய்யவல்ல அவடிதவடநா ஸாமர்த்யத்தை யுடையனாகை, [தேஜஸ்ஸா] வது - அவன் அநபிபவநீயனாயிருக்குமாகில், இவனும் கைங்கர்யங்களை யொருபோகியாகச் செய்கிற தேஜஸ்ஸையுடையனா யிருக்கும்.

இனி விக்ரஹத்தி லவனுக்கு மிவனுக்கு மொக்கும். குணங்களும் அவனுக்கு மிவனுக்கு மொக்கும். ஜ்ஞாநஶக்த்யாதிகளு மவனுக்கு மிவனுக்கு மொக்கும். ஆகையாலே பரமஸாம்யா பத்தியைப் பண்ணிக் கொடுக்குமென்கிறது. ஶேஷித்வ ஶேஷத்வங்கள் கிடக்கச்செய்தே ஸாம்யாபத்தியு முண்டாகிறது. ஸஜாதீயங்கலந்தாலல்லது ரஸவிஶேஷ முண்டாகாது. இரண்டு தலைக்கும் போக்யம் பிறக்கைக்காக ஸாம்யாபத்தி யுண்டாய்த்தென்றால் ஶேஷஶேஷித்வங்க ளென்கிற முறை மாறாது. எங்ஙனே என்னில், இவனை கிஞ்சித்கரிப்பித்துக்கொண்டு அவனுக்கு ஶேஷித்வம்; அவனுக்கு கைங்கர்யத்தைப் பண்ணிக்கொண்டு இவனுக்கு ஶேஷத்வம். இருவர்க்கு மிரண்டும் வ்யவஸ்திதம். அவனோடு ஸமமென்ன வொண்ணாது.

இஷ்டப்ராப்தி பண்ணிக்கொடுக்கையாவது - இவன் ஸ்வீகரித்த உபாயத்தில் நிலை நின்றவனுடைய வதிகாராநுகுணமாக அவன் பண்ணிக்கொடுக்குமவை.

ஆக இந்த ஶரணஶப்தம் உபாய பாவத்தைச் சொல்லுகையாலே கீழ்ச்சொன்ன நாராயண ஶப்தந்தொடங்கி இவ்வளவும் உபாயபரமாக வநுஸந்தேயம். இவனுடைய உஜ்ஜீவநார்த்தம் லக்ஷ்மீஸம்பந்தமுமநுஸந்தேயம்.

இப்படி உபாயம் ஸித்தமாயிருக்க அநாதிகாலம் பலியா தொழிந்தது இவனுடைய ப்ரபத்தி யில்லாமையிறே. அந்த ப்ரபத்தியைச் சொல்லுகிறதுமேல், (ப்ரபத்யே) என்கையாலே. (ப்ரபத்யே) என்றது அடைகிறேனென்றபடி. அதாவது - அங்குற்றை வ்ரஜையினுடைய வநுஷ்டாநம். (மத்யர்தா பாஹ்யர்தா:) என்கிறபடியே அர்த்தவ

ஸாயமான ஜ்ஞாநவிஶேஷத்தைச் சொல்லுகிறது. (ப்ரபத்யே) இப்ப்ரபத்திதான் மாநஸமோ வாசிகமோ காயிகமோ வென்னில், மூன்றுமாம், ஒன்றுமாம். ஒன்றமையுமாகி லிரண்டுமில்லை, மூன்றும் வேணுமாகில் ஒன்று போராது; ஆனலென் சொல்லுகிற தென்னில் - ஒன்றுள்ள விடத்திலும் ஃபலஸித்தி கண்டோம். மூன்றுள்ள விடத்திலும் ஃபலஸித்தி கண்டோம். ஆகையாலே இதுவறில் ஒரு நிர்ப்பந்தம் பெரிசன்று. ஒன்றிலும் ஸாதநபாவமில்லை; மூன்றிலும் ஸாதநபாவமில்லை. அவனுடைய அநுக்ரஹமே ஹேதுவாமித்தனை. ஜ்ஞாநாந்மோக்ஷமாகையாலே மாநஸமாகக் கொள்ளக்கடவோம். ஆனல் ஃபலத்துக்கு ஸாதநமன்றாகில்இவை வேண்டுகிறதென்னென்னில், இவ்வதிகாரி முமுக்ஷுவென்றறியும்போது ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தி வேணும். சேதநனென்றறியும்போது அசித்வ்யாவ்ருத்தி வேணும். இனி அசித்வ்யாவ்ருத்தமான ஜ்ஞாநம், சேதநதர்மமாகையாலே, ஸ்வரூபமாமித்தனை. ஸ்வரூபாதிரேகியான ஈஶ்வரன் பக்கலிலே உபாயபாவங்கிடக்குமித்தனை. (ப்ரபத்யே)என்கிறபதம் மாநஸத்தைக் காட்டுமோவென்னில், (பத்லு கதௌ) என்கிற தாதுவிலே ஒரு கதிவிஶேஷமாய் கத்யர்த்தமாய், புத்த்யர்த்தமாகிறது. புத்தியாகிறது, (வ்யவஸாயாத்மிகா புத்திஃ) என்றும், (புத்திரத்யவஸாயிநீ) என்றும், சொல்லுகையாலே, மநோவ்யாபாரமான அத்யவஸாயத்தைச் சொல்லுகையாலே ப்ரபத்திக்கு மாநஸமே அர்த்தம். இம்மாநஸஜ்ஞாந மிருக்கும்படியென்னென்னில், க்ரியாரூபமான கர்மமாதல், கர்மத்தாலே க்ஷீணபாபனாய்ப் பிறக்கும் ஜ்ஞாநமாதல், கர்மஜ்ஞாந ஸஹக்ருதையான அநவரத பாவநாரூபையான பக்தியாதல், இவை மூன்றும், கைங்கர்யத்துக்கு முபயோகியாய் ஸாதநதயாவிஹிதமா யிருக்கையாலே, இவற்றி லுபாய புத்தியயா த்யாகபூர்வகமாய், தான் உபாயமன்றியிலே ஸித்தோபாய ஸ்வீகாரமுமாய், அதிகாரிக்கு விஶேஷணமுமாய், அத்யவஸாயாத்மகமுமாய் இருப்பதொரு ஜ்ஞாநவிஶேஷம் ப்ரபத்தியாகிறது. (ப்ரபத்யே) என்கிற வர்த்தமாநம், போஜநஶயநாதிகளிலே அந்யபரனனபோதொழிய, ஶரீரமும் பாங்காய், ஸத்த்வோத்தரனாய் முமுக்ஷுவாகையாலே அவனை விஸ்மரித்து இருக்கும்போதில்லையிறே; ஆகையாலே தானுணர்ந்திருந்தபோது அவனே உபாயமென்றிருக்கிற நினைவு மாறாதிருக்குமிறே, அத்தைச்சொல்லுகிறது. ஸம்ஸாரபயமும் ப்ராப்யருசியும் கனக்கக்கனக்க, (த்வமேவோபாயபூதோ மே பவேதிப்ரார்த்தநாமதிஃ) என்கிற லக்ஷணவாக்யத்துக் குறுப்பாய் ப்ரார்த்தனை உருவச் செல்லவேணும். நினைக்கிறது அவனையாகையாலே நெஞ்சுவிட்டுப் போம்படியாம்; பரத்வம் எட்டாது; வ்யூஹம் கால்கடியார்க்கு; அவதாரம் அக்காலத்திலுதவினர்க்கு; அர்ச்சாவதாரம் உகந்தருளின நிலங்களிலே புக்கபோது, திருவடிகளைப் பிடித்துக்கொண்டு கிடக்கவும் போகாதே; இனி இவனுக்கெங்குமொக்கச் செய்யலாவது ஜ்ஞாநாநுஸந்

யாநமிறே; அத்தைச் சொல்லுகிறது வர்த்தமாநம்; இதுவுமப்படியே அநுவர்தநமாகிறதாகில் ஃபலஸித்தியளவும் செல்ல அநுவர்த்திக்கிற உபாஸநத்திற் காட்டி விதுக்குவாசி யென்னென்னில், ரூபத்தில் ஹேதுக்கலாவ தொன்றில்லை, ஹேதுவை விஶேஷிக்குமத்தனை. (நிதிய் யாஸிதவ்ய:) என்று விபிபரமாய் வருவ தொன்றது; இவ்வநுஸந்தாநம் ராகப்ராப்தம்; அது ஸாதநதயா விஹிதமாகையாலே அநுஸந்தாந விச்சேதம் பிறந்தால் ஃபலவிச்சேதம் பிறக்கும்; ராகாநுவர்த்தநமாகையாலே அநுஸந்தாநவிச்சேதம் பிறந்தால் ஃபலவிச்சேதமில்லை ப்ரபந்நனுக்கு, ஸாதநமவனுகையாலே. இதுக்கு வேதாந்தத்தில் ந்யாயம் ஓராசரிக்கிறவிட மெங்ஙனே யென்னில் "ஸம்போகப்ராப்திரிதி சேந்ந வைஶேஷ்யாத்" என்று ஜீவாத்மாவோபாதி பரமாத்மாவுக்கும் அவிஶேஷ்யாவ்ருத்தி யொத்திருக்கச் செய்தே, இத்தோட்டை ஸம்பர்க்கத்தாலே வரும் து:கஸுகாதியநுபவங்க ளவனுக்கு வாராது. ஸ்பர்ஶமொத்திருக்கச்செய்தே, வாராதொழிவானென்னென்னில், உபாயந்தன்னில் ராகம் பிறக்கிறது விஷயவைலக்ஷண்யத்தாலேயிறே; அவ்வோபாதி இந்த ஸாதநத்தாலே லக்ஷ்மீபதியாய் ஶாணயிகமுமாய் விக்ரஹோபேதமுமாய் ஸித்தரூபமுமாயிருப்பதொன்றுகையாலே அசேதநக்ரியாகலாபமுமாயிருக்கிற ஸாதநத்திற்காட்டி விதிலே ராகம் பிறக்கச் சொல்லவேணுமோ. திரைமேல் திரையான மிறுக்குக்கள் மேல்வந்து குலைக்கப் பார்த்தாலும், ப்ரமாணங்கள் வந்து குலைக்கப்பார்த்தாலும், அவன் தானே வந்து குலைக்கப்பார்த்தாலும் குலைக்க வொண்ணுதபடியான நிஷ்டையைச் சொல்லுகிறது க்ரியாபதம்; பிள்ளை திருநறையூரரையரைப்போலே. ஆக பூர்வார்யமுபாயத்தைச் சொல்லுகிற தென்றதாய்த்து.

[பூர்வவாக்யம் முற்றிற்று.]

[இதின் ஒட்டுதாத்பர்யம்.]

இந்த உபாயந்தான், ஐஶ்வர்யாதியுபேயாஸங்களுக்கும் பொதுவா யிருக்கையாலே, அவற்றினுடைய த்யாகபூர்வகமாக மேல் நிரதிஶயமான உத்தமபுருஷார்யத்தை விவக்ஷிக்கிறது (ஶ்ரீமதே) என்று.

இவ்வைஶ்வர்யாதிபுருஷார்யங்களை ஶாஸ்த்ரம் ஆதரியாநிற்க உபேயாஸ மென்று கழிப்பானென்னென்னில், இவைதான் அல்பாஸ்யிரத்வாதிதோஷதூஷிதங்களாயிருக்கையாலும், ஸ்வரூபப்ராப்தமல்லாமையாலும், த்யாஜ்யம். தேஹாத்மாபிமாநிக்கு புத்ர பஶ்வந்நாதிகள் புருஷார்யமா யிருக்கும். தேஹம் அஸ்யிரமென்னும் ஜ்ஞாநம் பிறந்தவாறே, அவையவனுக்கு த்யாஜ்யமா யிருக்கும். இனி பரலோக புருஷார்யங்களில் வந்தால் நரகமநிஷ்டமா யிருக்கையாலே அதில் ருசி

யே பிறந்ததில்லை. ஐஶ்வர்யமாகிற ஸ்வர்காநுபவத்தில் வந்தால் ஊர்வஶீஸாலோக்யத்திலே ஸுகவிஶ்ராந்தி கிடக்கையாலே ருசியுண்டாயிருக்கும். அத்தை லபித்தநுபவிக்கப் புக்கில் தேவதை துஶ்ஶீல தேவதையாகையாலே தன்னை உபாஸித்துத் தான் கொடுத்த பலத்தை யநுபவிக்கும் ஸாம்யாபத்தி பொறுக்க மாட்டாமையாலே யயாதியை (யீவஂஸ) என்று தள்ளினாற்போலே தள்ளும். இது தப்பியநுபவிக்கப் புக்கன்றோ,(க்ஷீணே புண்யே மர்த்யலோகஂ விஶந்தி)என்று புண்யக்ஷயம் பிறந்து நரகத்திலே விழப்புகுகிறோமென்கிற பயத்தோடேயிருந் தநுபவிக்கையாலே, உயிர்க்கழுவில் ஸுகம்போலே து:க்கவிஶேஷமாயிருக்கு மத்தனை. ஸுகலவமுண்டானாலும், வகுத்த புருஷார்த்தமல்லாமையாலே ஸ்வரூபப்ராப்தமன்று. லோகவிநாஶமுண்டாகையாலே அஸ்திரம். இனி ப்ரஹ்ம லோகப்ராப்தியில் வந்தால் அநுபவஞ் செல்லா நிற்கச் செய்தே க்ஷுத்பிபாஸையாலே ஸ்வமாஂஸத்தை பக்ஷித்துப் பின்னையும் போயிருக்கு மென்று சொல்லுகையாலும், பூர்ணமான நிஷ்க்ருஷ்டஸுக மல்லாமையாலும், ஸ்வரூப ப்ராப்த மல்லாமையாலும் த்யாஜ்யம். இங்ஙனொத்த துரிதபரம்பரைகளு மின்றியிலே, அசித்வ்யாவ்ருத்தி விஶேஷணமான ஆத்மவஸ்து, விலக்ஷண மாகையாலே, ப்ராப்தியிலே ருசி யுண்டா யிருக்கும். அத்தை லபித்தநுபவிக்கப் புக்கால், பகவதநுபவமும் அங்குள்ளாருடைய பரிமாற்றமும் ப்ரகாஶியாநிற்க, அவ்வநுபவத்துக்கு யோக்யதையுண்டாயிருக்கக் கிடையாமையாலே கீழ்ச்சொன்னவற்றிற் காட்டில் தனக்குண்டான ஸுகமடைய, வியவாலங்காரம்போலே அவத்யமாய், து:க்கமாய், முடிவில்லாத நரகஸமானமாயிருக்கையாலே அதுவும் த்யாஜ்யம். கீழ்ச்சொன்னவைபோலே அல்ப மன்றியே நிரதிசயமுமாய், அஸ்திரமன்றியே நித்யமுமாய், ஸ்வரூபத்துக் கநநுரூப மன்றியே அநுரூபமுமாய், 'புநராவ்ருத்தி யின்றியே அபுநராவ்ருத்தி லக்ஷண மோக்ஷமுமான, உத்தமபுருஷார்த்தத்தை விவக்ஷிக்கிறது உத்தரவாக்யம்.

[உத்தரவாக்யத்தின் ஓட்டுதாத்பர்யம் முற்றிற்று.]

[உத்தரவாக்யத்தின் ப்ரதிபதவ்யாக்யாநாரம்பம்.]

[ஶ்ரீமதே] என்றது கீழ் புருஷகார பூதையானாற்போலே, நித்ய ப்ராப்ய மென்கிறது.

இவள் ப்ராப்யை யென்னுமித்தை இச்ஶப்தங் காட்டுமோவென்னில், [ஶ்ரீமதே] என்கிற விபக்தியாலும், [ஆய] வென்கிற சதுர்த்தியாலும், தாதர்த்யத்தைக் காட்டுமித்தனை. இரண்டும் ஏகவிபக்தியாகையாலே நாராயணபதத்துக்கு ஶ்ரீமச்ஶப்தம் விஶேஷண மாகையாலே ஶ்ரீமந் நாராயணன் பொருட்டென்று ஆய்த்து ஶ்ரீஶப்தங்காட்டுவது. ப்ராப்யை யென்று இச்ஶப்தங் காட்டாதாகில், அவனோபாதி

ப்ராப்யை யென்று சொல்லுகிறவர்ஸம் சேருகிறபடி. யெங்ஙனே யெ ன்னில ; அவன் ப்ரயாநப்ராப்யனுய்த்ததும் ஸ்வாமி யாகையாலே யிறே. இவளும் இவனுக்கு மஹிஷியென்றும், இவர்களைக் குறித்து ஸ்வாமிநி யென்னுமிஸ் ஸப்தமே, இவளுடைய ப்ராப்யதையைச் சொல்லத்தட்டில்லை. எங்ஙனே யென்னில், கீழ் ஸ்ரீஸப்தத்திலே இவர் களைக்குறித்து ஸ்வாமிநி யென்றும், வ்யுத்பத்தியாலும் * விஷ்ணுபத்நி என்கிற ப்ரமாணத்தாலும் ஸித்தமான வர்ஸத்துக்கு வாசகமான ஸ்ரீமச்ஸப்தத்தை இங்கே ப்ரயோகிக்கையாலே, இஸ்ஸப்தமே இவளுடைய ப்ராப்யதையைச் சொல்லுகிறது. தன்னை யொழிந் தாற்கு ப்ராப்யஸித்தியிகளிவளுடைய கடாக்ஷமாயிருக்கும், இது தன் னை நம்மாழ்வார் (கோலத்திருமாமகளோடுன்னைக்கூடி) என்றும் இளை யபெருமாளும்(ஹவாஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநுஷு ரஂஸ்யதே) என்று பெருமாள் ப்ராப்யரான வோபாதி பெரிய பிராட்டியார் ப்ராப் யை யென்றருளிச் செய்தார்கள். இவ்வடிமை கொள்ளச் சேரவிருக் கிற விருப்பை (ஸ்ரியா ஸார்யஞ் ஜமத்பதிঃ) இத்யாதிகளாலே இவள் ப்ராப்யதை யெங்கு மொக்க வ்யாப்தம். அவனுடைய ப்ராப்யதை ஸ்வ தஸ்ஸித்யம். அதுக்கு ஏகாயநனு மிசையுமே. இவளுடைய ப்ராப் யதையைச் சொல்லுகையாலே யிறே யிதுக்கு ப்ராயாங்யம். மாதாபி தாக்க ளிருவரையும் ஸேரவநுவர்த்திக்கும் புத்ரனைப்போலே ஸ்வாமி யும் ஸ்வாமிநியும் சேர்ந்த சேர்த்தியிலே அடிமைசெய்கை ஸேஷஹூத னுக்கு ஸ்வரூபம். ஸாயநஉலையில் புருஷகாரத்தை யபேக்ஷித்த வோ பாதி, ஸாய்யஉலையிலும் இருவருமான சேர்த்தி யபேக்ஷிதம். (ஸ்ரீம தே) யென்கிற மதுப்பாலே கீழில் மத்பஉத்தி லர்ஸம்போலே இங்குமிரு வருமான சேர்த்தியால் வந்த ஹோதியதை நித்யமென்கிறது. இப்படி யி ச்சேர்த்தி யொழியத் தனித்தவளை ப்ராப்யையென்று பற்றுதலும், அ வனே ப்ராப்யமென்று பர்றுமதுவும் விநாஸம். எங்கே கண்டோமென் னில், பிராட்டியொழிய பெருமாள் பக்கலிலே ஹோதியவூதியி பண் ணின ஸூர்பணகி நஸித்தாள். பெருமாளைப்பிரித்து பிராட்டி பக்கலி லே ஷோதியவூதியி பண்ணின ராவணன் நஸித்தான். உடலையும் உயி ரையும் பிரித்தார்க்கு விநாஸமில்லாதில்லையிறே. (அநந்யா ராவவேணு ஹம் ஹாஸ்கரேண ப்ரஹா யயா) (அநந்யாஹி மயா ஸீதா ஹாஸ்கரேண ப்ரஹா யயா) என்றிருவருடைய ஸதிஹாவமு மிதுவானபின்பு இனி இவர்களைப் பிரிக்கையாவது வஸ்துவினுடைய ஸதிஹாவத்தை யிசையா மலித்தனையிறே. இவ்வஸ்துஸதிஹாவத்தை யிசைந்தார்க்கு மியூநமே யிறே ப்ராப்யம்.

நாராயணனென்று எல்லாவழியாலும் வகுத்த ஸர்வாத்ம ஸ்வாமி யென்கிறது. கீழ் பற்றுகைக்கு ஸௌலஹ்யம் ப்ரயாநமான வோபாதி, இங்கும் அடிமை செய்கைக்கு வகுத்த ஸப்தஉ மபேக்ஷித மாகையா லே ஸ்வாமித்வத்திலே நோக்கு. வகுத்த ஸ்வாமி என்கையாலே இவ

ஊனையொழிந்த அஸேவ்யஸேவை அபுருஷார்த்தமென்கிறது. திருமந்த்ரத்தில் நாராயண ஶப்தவாச்யமான அர்த்த விஶேஷங்கள் இந்த நாராயண ஶப்தத்திலுபதேஶியாதொழிவானென்னென்னில், அங்கு ஸ்வரூபஞ் சொல்லுகிறதாகையாலே சேதநாசேதநமான நித்யபதார்த்தங்களினுடைய ஸமூஹங்கள் பலவற்றுக்கும் ஆவாஸஸ்தாநமாயிருக்கிறானென்று ஸர்வஸ்வாமித்வஞ் சொல்லிற்று. இங்கு அசித்வ்யாவ்ருத்தனான சேதநனுக்கு ப்ராப்யஞ் சொல்லுகையாலே ஸர்வாத்மஸ்வாமித்வஞ் சொல்லிற்று. கீழ் நாராயணபதத்தில் சொன்ன குணங்களும் இப்பதத்திலே ப்ராப்யபரமாக வநுஸந்தேயம். அவன்தான் நிற்கும் நிலையிலே குணங்கள் நிற்பது. ப்ராப்யமான வாகாரமும் ப்ராபகமான வாகாரமும் அவன் தனக்குண்டானாப்போலே அவன் குணங்களுக்குமுண்டு. அங்கும் தன்குணங்களை ப்ராப்யபரமாகச் சொல்லுகிறது. (ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ, ப்ரஹ்மணா விபஶ்சிதேதி) என்றும் (பிணங்கி யமரர் பிதற்றுங் குணம்) என்றும் குணாநுபவமே ப்ராப்யமாகச் சொல்லிற்றிறே.

நித்யஸூரிகளநுபவிக்கக்கடவ குணங்களை நித்யஸம்ஸாரியை முக்தனாக்கி யிதீ குணங்களை யிவர்களளவிலே மட்டஞ் செய்துகொடுத்து ஸாக்ஷாத்கரித் தநுபவிப்பிக்கையாலே ஸௌலப்யம் ப்ராப்யம். சேறுதோய்ந்தவிவனை ப்ராமல்ஸ்யமேயாயிருக்கிறநித்யஸூரிகளுடைய கோர்வையிலே ஒருவனாக்கி யநுபவிப்பிக்கையாலே ஶீலகுணம் ப்ராப்யம். அநுபவிக்கிறவிவனுடைய தோஷம்பார்த்தல், தன் வைலக்ஷண்யம் பார்த்தல் செய்யாதே யிவனை யநுபவிப்பிக்கையாலே வாத்ஸல்யம் ப்ராப்யம். இவனுடைய அஸேவ்யஸேவைகளைத்தவிர்த்து ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைக்கொடுத்து அடிமைகொள்ளுகையாலே வகுத்த ஸ்வாமித்வம் ப்ராப்யம். இந்த ஜ்ஞாநஶக்த்யாதி குணங்களை யநுபவிக்கிற விவனுக்கு போக்த்ருத்வஶக்தியையுங்கொடுத்து அநுபவிப்பிக்கையாலே யவைத்தோடு இவைத்தினுடைய கார்யாவஸ்தையான ஶீலாதி குணங்களோடு வாசியற எல்லாம் கட்டடங்கவிவனுக்கு ப்ராப்யம். ஈஶ்வரந்தான் ப்ராப்யனாகிறது இதீ குணங்களுக்காஶ்ரயபூதனென்றிறே. நித்யஸம்ஸாரியை முக்தனாக்கி யநுவிப்பிக்கையாலே வேறே குணங்கள் ப்ராப்யமாய்த்தென்னில், ஸ்வேநரூபேண குணங்களடைய ப்ராப்யமென்னுமிடம் கண்டோமிறே. நித்யஸூரிகள் குமிழிநீருண்கையாலே ஸம்ஸாரிசேதநனை யிதுக்கு நிலவனாக்கி யநுபவிப்பிக்கிற உபகாரஸ்ம்ருதிக்காக விட்ட பாசுரங்களிறேயிவை. ஒன்றுஞ் செய்யாதபோதும் போக்யதையிறே குணங்களுக்கு வேஷம். அவன் குணமென்று இவை போக்யமான பின்பு குணநாமாஶ்ரயமானவன் ஸ்வரூபத்துக்கு போக்யதையே நிரூபகமென்னுமிடம் சொல்லவேண்டாவிறே. நாராயண ஶப்தத்தில் அநந்தரத்தில் விக்ரஹத்தையே ஸ்பஷ்டமாகச் சொல்லாதொழிவானென்? விக்ரஹம் ப்ராப்யமா யிருக்க

வென்னில், இதுக்கு ஸாயநமான பூர்வார்யத்திலே விதிரஹவைலக்ஷண்யத்தைச் சொல்லுகையாலே ப்ராபகமான வஸ்துதான் ப்ராப்யமாகையாலே, இங்கு ஶப்தேந சொல்லிற்றில்லையேயாகிலும், இங்குண்டென்னுமிடம் அர்த்தாத் ஸித்தம். விதிரஹத்துக்கு ஹோதியதையே வேஷமாயிருக்கையாலே யிங்கு ஸித்யமாயிருந்தது, அதிகாரியினுடைய மதிஶூந்யதையாலே உபாயமாக வேண்டுகிறது. அதுவுமவனுக்கு அபாஶ்ரயமாம்படி உபதேஶிக்க வேண்டுகையாலே ஶப்தேந சொல்லிற்று. ப்ரஸித்தமான விதிரஹத்துக்கு பூரிக்கவேண்டாதே யிந்தவிதிரஹத்துக்கு இங்ஙனே யிருப்பதொரு ஏற்றமுண்டு, மாணிக்கச்செப்பிலே பொன்னையிட்டு வைத்தாப்போலே ஸ்வரூபகுணங்களுக்கு ப்ரகாஶகமாயிருக்கையாலே. இதிகுணங்களினுடைய ஹோதியதை யெல்லையறிந்து விதிரஹத்தளவும் செல்லப்பெற்றதில்லை. விதிரஹத்தை யவன்தான் ஆவிஷ்கரித்து ஸஜாபஸந்திக்கு விஷயமாக்கினபோது அநுபவிக்குமத்தனை. ஆக இந்நாராயணஶப்தத்தாலே ஸர்வாத்மஸ்வாமித்வஞ் சொல்லிற்றாய்த்து.

(ஆய) வென்கிறவிது சதுர்த்தியாகையாலே நித்யகைங்கர்யத்தைப் ப்ரார்த்திக்கிறது. இச்சதுர்த்திக்கு தாதர்த்யமர்த்தமா யிருக்க நித்யகைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறதென்கைக்கு கைங்கர்யத்தைக் காட்டுமோவென்னில், "வ்ருக்ஷாய ஜலம்" என்றால் வ்ருக்ஷத்தின் பொருட்டென்னுமாபோலே "நாராயணாய" என்றால் நாராயணனுக்கு ஶேஷமென்று காட்டுமத்தனை யன்றோவென்னில், ஸ்வரூபம் தாதர்த்யமானபோதே ஸ்வரூபாநுபந்தியாய் வரும் ஸ்வபாவங்களும் தாதர்த்யமாகக் கடவதிறே. ஶேஷபூதனுக்கு ஶேஷவ்ருத்தியிறே ஸ்வரூபம்; புஷ்பம் பரிமளத்தோடே யலருமாபோலே. ஸ்வரூப ப்ராப்தியாவது - கைங்கர்யப்ராப்தியாகக் கடவது, கைங்கர்யம் ஸஹஜமாகையாலே. தாதர்த்யமாவது ஶேஷத்வஞ் சொன்னவிடத்திலே ஶேஷவஸ்துவைச் சொல்லிற்றாய், அது சொன்ன விடத்திலே ஶேஷவ்ருத்தியைச் சொல்லிற்றாய். அவ்வழியாலே கைங்கர்யஞ் சொல்லிற்றாகக்கடவது.

ஆனால் ஸர்வதேஶஸர்வகாலஸர்வாவஸ்தோசிதமான ஸகல கைங்கர்யங்களையும் பண்ணப்பெறுவேனாக வேணுமென்கிற ப்ரார்த்தனையைக்காட்டுமோ விஸ் ஶப்தமென்னில்,—இந்தஸ்வரூபஸ்வபாவந்தான் ஒரே காலத்திலேயாய், வேறொரு காலத்திலின்றிக்கே யிருக்குமோவென்னில், எல்லாதேஶத்திலுமுண்டென்று வந்து புகுந்து (உடனாய்) என்கிறபடியே, இதிதேஶங்களில் ஒரோரவஸ்தைகளில் ஒரோரிடங்களிலேயாய், ஒரோரடிமையின்றிக்கேயிருக்குமோ வென்னில் ஸகல கைங்கர்யங்களுமுண்டென்று வந்து புகுந்து (வழுவிலாவடிமை) என்கிறபடியே ப்ரணவத்தாலும், நமஸ்ஸாலும், ஶேஷியஸ்வரூபரான நமக்கென்று ஹோமாயிகாரியைச் சொல்லுகிறது. அவ்விடத்திலே (செய்யவேண்டு நாம்) என்று திருப்பாவாடை யினிதென்று சொல்லுமா

போலே யிவன் கைங்கர்யமினிதென்று இவனெல்லா வடிமையையும் பாரித்தால் அவன் கொள்ளுமோ, உத்துங்கதத்வமன்றோ வென்னில், இவனிருந்து ப்ரார்யிக்கவே யவன் கொள்ளுமிடத்தைப் பற்றவே ப்ரார்யநை புகுந்தது.

இஸ் ஸம்ஶ்லேஷத்துக்கு ஶேஷத்வம் அர்யமாயிருக்க, கைங்கர்யத்தைக் காலக்ஷேபங்களையிட்டுப் பெருக்கி யநுஸந்யிக்கிறதற்கு ப்ரயோஜந மென்னென்னில், கலியன் பைபைய்யாகக் குவிக்கவேணுமென்னுமா போலே தனக்கு ஸ்வரூபாநுரூபமுமாய் ஸர்வாயிகாரமுமான கைங்கர்யத்திலேயிறே ஹோதீயதையில் வைஹவத்தாலே வந்த வஹிநிவேஶம்.

ஹவஉநுஹவமும் கைங்கர்யமா யிருக்கச்செய்தே அது ஈஶ்வரனுக்குமொத்து தனக்கும் ப்ரீதியுண்டாகையாலே யிப்ரீதிகாரிதமான கைங்கர்ய முண்டாய்த்து. இனி கைங்கர்யத்துக்கு அவ்வருகில்லையே ப்ராப்யம்.

கீழ்ச்சொன்ன பிராட்டியும், ஶுணங்களும், விஶ்ரஹமும், ஈஶ்வரனும் ப்ராப்யமன்றோ வென்னில், இக் கைங்கர்யத்துக்கு வர்யகராகையாலே ப்ராப்யராணர்களித்தனை. கைங்கர்யமே ப்ராப்யம். அச்சிரஷிஸா லோக்யாஷி பரஹக்தயாஷிகள் ப்ராப்யமானவொபாதி ஹவல்லாஹமும் ப்ராப்யமான வாகாரம். கைங்கர்யமே ப்ரயாநப்ராப்யம். ஸாலோக்யாஷிகளில் ஸாயுஜ்யம் ப்ரயாநமாகச் சொல்லுகிறது கைங்கர்யமாகையாலேயிறே. (ஸாயுஜ்யம்ப்ரதிபந்நா யே தீவ்ரஹக்தாஸ்தபஸ்விநஃ, கிங்கரா மம தே நித்யம் ஹவந்தி நிருபஷ்ரவாஃ)என்கிறபடியே. ஸாயுஜ்யமாவது கூட்டரவு; கூடினலல்லது கைங்கர்யம் ஸிஷ்யியாது. ஸ்த்ரீ புமாங்க ளொன்றானர்களென்றால் ஏகஷ்ரவ்யமானர்களென்றன்றிறே. ஒரு மிடரானர்களென்று பொருளாய்த்து. அப்படியே யிக்கைங்கர்யங் கொள்ள விருக்கிற ஶேஷியுடைய நினைவும், கைங்கர்யஞ்செய்து ஸ்வரூபம் பெறவிருக்கிற ஶேஷஹூதனுடைய நினைவும், ஒன்றாய், அதாவது ஶேஷியினுடைய நினைவு தனக்கு நினைவாய் அவனுடைய ஹோதீயமே தனக்கு ஹோதீயமாய்த் தலைக்கட்டுகை. ஒரு மியநம், ஹோதீயம் மிக்கு உந்மஸ்தக ரஸமாய் கலவாநின்றால், பிறக்கு மினிமை யிருவர்க்கு மொக்குமிறே. அதில் பரதந்த்ரனான இவனுக்குப் பிறக்குமினிமை பாரதந்த்ர்யத்தோடே சேர்ந்திருக்கவேணுமிறே. அதாவது இவன் செய்யு மடிமைகண்டு அவனுகந்தால், பின்னையவனுகந்தபடி கண்டுகக்கையிறே இவனுக்கு ஸ்வரூபம். கைங்கர்யவிஷயமாக வங்கி புரத்துநம்பி பணிக்கும்படி - (கிங்கர்மஷிதிகைங்கர்யம்) என்று ஹவஉநுஹவப்ரீதியாலே தடுமாறி யென்செய்வோ மென்றிருக்கை யென்று. அங்ஙனன்றிக்கே மாநஸமாயும் வாசிகமாயும் காயிகமாயுமிறே செய்யு மடிமைகள். (ஸோஉஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ, ப்ரஹ்மணா விபஶ்சிதா)என்று மாநஸமானவடிமை. (ஹாவு ஹாவு ஹாவு, அஹமந்ந மஹ

மந்நமஹமந்நம், அஹமந்நாதோ௨ஹமந்நாதோ௨ஹமந்நாத:) என்றும் (நமஇத்யேவவாதிந:) என்றும், இவை வாசிகமான வடிமை; (யதாதருணவத்ஸா வத்ஸம், வத்ஸோவா மாதரம், சாயாவா ஸத்த்வம் அநுகச்சேத், கச்சந்தமநுவ்ரஜேத், தயாப்ரகாரமிதிவத்) என்றும் (யேநயேந யாதா கச்சதி தேநதேந ஸஹ கச்சதி) என்றுமிவை காயிகமானவடிமை.

ஆக இவையாய்த்து கைங்கர்யம். இவை செய்யுமிடத்தில் (தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே) என்கிறபடியே ஸ்ரக்சந்தநாதிகளைப் போலே யவனுக்குக் கைதொடுமானமாயிருக்கை. அதாவது, விநியோகங்கொள்ளுமவனுக்கேயுறுப்பாய் தனக்கென்ன வேறொரு ஆகாரமின்றிக்கே யிருக்கை. அப்படி (படியாய்) என்கிறபடியே அசித்ஸமாயியிலே யாம்படி தன்ஸ்வரூபத்தை ஶிக்ஷித்தால், பின்னை, அவனுகந்தபடி கண்டுகேக்குமென்னத்தட்டில்லையிறே புருஷார்த்தமாகைக்கு.

இதுக்கு வரும் விரோயிநிவ்ருத்தியைச் சொல்லுகிறது - நமஸ்ஸு. (நம:) என்கிறது - கைங்கர்யத்தில் நானென்கிற விரோயியைப் போக்கித் தந்தருளவேணுமென்கிறது. அஹங்கார கர்஭மான கைங்கர்யம் புருஷார்த்த மன்றே. ஆகையாலே அவ்வளவுஞ்செல்ல வுள்ள அஹங்கார மமகாரங்களைப் போக்கித் தந்தருளவேணுமென்கிறது. அஹங்காரத்தை நிஶேஷிக்கையாலே அத்தால் வந்த மமகாரமும் இந்நமஸ்ஸிலே நிஶேஷியமாய்த்து. அஹங்கார மமகாரங்களாகிற சேற்றிலே அநாதிகாலம் புடையுண்டுகிடந்த சேதநனை நமஸ்ஸாகிற நீரிலே கழுவுகையாலே யாசுமாசு மற்றபடி.

இவன் முக்தனாய் ப்ராப்யாநுபவம் பண்ணும்போதும் எனக்கென்னுமது அங்குண்டோவென்னில், அங்கில்லை, இக்கைங்கர்யம் பெறவேணுமென்றபேக்ஷிக்கிறவன் விரோயியோடே யிருந்தபேக்ஷிக்கிறவனாகையாலே, தேஹாத்மாபிமாநந் துடக்கமாக கைங்கர்யத்திலஹங்கார கர்஭மீறாக நடுவுண்டான விரோயிகளைப் போக்கித் தந்தருளவேணுமென்று உபாஸநவேளை யாகையாலே யபேக்ஷிக்கிறான். திருமந்த்ரத்தில் நமஸ்ஸிலே ஸ்வரூப விரோயி நிவருத்தியைச் சொல்லிற்று. இந்நமஸ்ஸிலே ப்ராப்யவிரோயியான ஸ்வப்ரயோஜநத்தைத் துடைத்தது.

கைங்கர்யமாவது— (ப்ரஹர்ஷயிஷ்யாமி) என்றும், (படியாய்க்கிடந் துன்பவளவாய் காண்பேனே) என்றும், (உன்றன்திருவுள்ளமிடர் கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும்) என்றும், (தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே) என்றும், (உனக்கே நாமாட்செய்வோம்) என்றும், (தூயனவேந்தி) என்றும், (நீத: ப்ரீதிபுரஸ்க்ருத:) என்றும், (சாயாவா ஸத்த்வமநுகச்சேத்) என்றும், (ப்ரியதேஸ

ததஃராமஃ) என்றும், (முகப்பே கூவிப்பணிகொள்ளாய்) என்றும், (க்ரியதாமிதிமாஂவத) என்றும், (ஏவ மற்றமரராட்செய்வார்) என்றும் (ரமமாணுவநேத்ரயஃ) என்றும், இவையிறே இவனடிமை செய்யும் போது இருக்கும்படி. இத்தால்சொல்லுகிறது பாரதந்த்ர்யகாஷ்டைகள்.

ஆக புருஷகாரஞ்சொல்லி, அதினுடைய நித்யத்வஞ்சொல்லி, அப்புருஷகாரம் மிகையென்னும்படியான வாத்ஸல்யாதிகுணயோகஞ் சொல்லி, விக்ரஹவைலக்ஷண்யஞ்சொல்லி, இஷ்டப்ராப்திக்கு மநிஷ்ட நிவாரணத்துக்கும் நிரபேக்ஷமான உபாயஞ்சொல்லி, தத்ஸ்வீகாரஞ் சொல்லி, ஸ்வாமித்வ பூர்த்திசொல்லி, கைங்கர்ய ப்ரார்த்தனை சொல்லி, கைங்கர்ய விரோதி போனபடி சொல்லித் தலைக்கட்டுகிறது.

ஷட்குணரஸாந்தமான அஹமந்தத்திலே நெஞ்சுவையாதே ஸ்வாமிக்காக்குகை. (தேனும்பாலுங் கன்னலும முதுமாகித் தித்திப்ப) (அங்கண்ணனுண்ட வென்னருயிர்க்கோதிது) என்று பின் பாதரணீயம்.

தனித்வயம் முற்றிற்று.

உலகாசரியன் திருவடிகளே ஶரணம்.

ஜீயர்திருவடிகளே ஶரணம்.

ஜீயர்திருவடிகளே ஶரணம்.

தனிவரமம். (அவதாரிகை.)

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே... *
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நமஃ.......... *
[வாழியுலகாசரியன் வாழியவன் மன்னுகுலம்... *
வாழிமுடும்பை யென்னுமாநகரம்-வாழி . ... *
மனஞ்சூழ்ந்தபேரின்ப மல்குமிகுநல்லார் ..... *
இனஞ்சூழ்ந்திருக்கு மிருப்பு] .... *

ஸர்வேஶ்வரன், ஜகத்ஸ்ருஷ்டி பண்ணி, வேதோபதேஶத்தைப் பண்ணியருளி, தத்த்வாரா சேதநருடைய ருசியநுகூலமாக புருஷார்த்தங்களையும் தத்ஸாதநங்களையும்காட்டி, அவ்வழியாலே தானேஸாத்யமும் ஸாதநமுமென்கிற ஶாஸ்த்ரத்தையு முபதேஶித்து விடுகையன்றிக்கே, பரவ்யூஹவிபவார்ச்சாவதாரங்களினாலும் அதிமாநுஷ சேஷ்டிதங்களாலும் தானே ரக்ஷகனென்னுமிடத்தைக் காட்டி, இத்தனையுஞ் செய்தவிடத்திலும் (ஆஸுரீம்யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி, மாமப்ராப்யைவகௌந்தேய ததோயாந்த்யதமாம்கதிம்) என்று ஆஸுரப்ரக்ருதிகளாய் இவ்வாத்மாக்கள் ப்ரக்ருதிப்ராக்ருதங்களையே புருஷார்த்தங்

களாகவும் அவை ஸம்பாதிக்குமிடத்திலும் தாங்களே ஸம்பாதித்துக் கொள்ளுவதாகவும் கோலி, அவை பெற்றபோது ப்ரியப்பட்டும் பெருதபோது வெறுத்தும் இங்ஙனே அநுதாபப் படுகிறபடியைக்கண்டு * க்ருபயாபரயாவிஷ்டனாய், அவர்கள்செய்தபடி செய்கிறார்களென்று தன்குணங்கள் தன்னையிருக்க வொட்டாமையாலே, நாம்செய்த குறையிறே சேதநர் நல்வழிவராதொழிகிற தென்று பார்த்து, (க்ருஷ்ணம் தர்மம்ஸநாதநம்) (பவித்ராணாம்ஹி கோவிந்த: பவித்ரம்பரமுச்யதே) புண்யாநாமபி புண்யோஸௌ மங்கலாநாம்சமங்கலம்) என்று இங்ஙனே தானே ஸாதநமும் ஸாத்யமுமென்கிற ஶாஸ்த்ரத்தைக் காட்டிக் கொடுப்போமென்று பார்த்தருளி, (தர்மஸம்ஸ்தாபநார்த்தாயஸம்பவாமி) என்றும், (ததோऽகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா, தேவகீ பூர்வஸந்த்யாயாமாவிர்பூதம்மஹாத்மநா) என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீமதுரையிலே திருவவதாரம் பண்ணியருளி பூதநாஶகடயமலார்ஜுநாதிகளாகிற ப்ரதிகூலவர்க்கம் மண்ணுண்ணும்படியாகவும், அக்ரூரமாலாகாராதியநுகூல ஜநங்கள் வாழும்படியாகவும் இப்படி ஸர்வாத்மாக்களினுடைய பாஹ்யாப்யந்தர தமோநிரஸநம் பண்ணி வளர்ந்தருளுகிற காலத்திலே, பாண்டவர்களுக்கும் துர்யோதநாதிகளுக்கும் பரஸ்பரம் பிறந்த வைரஸ்யத்தை, யுத்தவ்யாஜத்தாலே ஶமிப்பிப்பதாகப் பார்த்தருளி, யுத்தார்த்தமாக ஸர்வலோகத்தையும் குருக்ஷேத்ரத்திலே கூட்டி, அர்ஜுநஸாரதியாய்நிற்க; அவனும் (ஸேநயோருபயோர் மத்யே) என்று உபயஸேனையிலுமுள்ள தன் பந்துவர்க்கத்தைப் பார்த்து, இவர்களை ஹிம்ஸித்து நாம் ஜீவிக்கையாவதென்னென்று தளும்பின வர்ஜுநனுக்கு, அவனுடைய தளும்பு நிமித்தமாக ப்ருக்ருத்யாத்மவிவேகத்தையும், ஆத்மாவினுடைய நித்யத்வாதிகளையும், தத்ப்ராப்தியினுடைய ஹேதுதையையும், தத்ப்ராப்திஸாதநம் கர்மஜ்ஞாநங்களென்னுமிடத்தையும் அருளிச்செய்ய; அவனுமவ்வளவிலே அஸந்துஷ்டனாக; (ஏஷதுவா அதிவததி, யஸ்ஸத்யேநாதிவததி) என்கிற ஶ்ருதிபோலே, தானே, தன்னுடைய ஸ்வரூபஸ்வபாவங்களையும், தத்ப்ராப்தி வைலக்ஷண்யத்தையும், தது பாயமான கர்மஜ்ஞாநஸாத்ய பக்தியோகவைபவத்தையு மருளிச்செய்ய, கீழ் உக்தமான புருஷார்த்தத்தில் விலம்பாஸஹையான ருசியாலும், ததுபாயத்தினுடைய துஷ்கரதையாலும், ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வரூபபாரதந்த்ர்யத்தாலும், துஷ்கரமுமாய், விலம்பித பலப்ரதமுமாய், ஸ்வரூபவிருத்தமுமாய் இருக்கிற உபாயத்தாலே எம்பெருமானைப்பெற வென்பதொன்றில்லை, இனி யிழந்துபோமித்தனையாகாதே! என்று ஶோகித்த வர்ஜுநனைக்குறித்து, பரமகாருணிகனான கீதோபநிஷதாசார்யன், வேதாந்தஸித்தமாய் பரமரஹஸ்யமுமாய், ஸர்வாதிகாரமுமாய், ஸுஶகமுமாய், அவிலம்பித பலப்ரதமுமாயிருந்துள்ள பரம ரஹஸ்யமான சரமோபாயத்தை அர்ஜுநவ்யாஜத்

தாலே ஸர்வாத்மாக்களுக்கு மருளிச் செய்தருளினதுசரமஸ்லோக மாகிறது.

ப்ரயமஸ்லோகமென்று கீழொன்றுண்டாய் அத்தைப்பற்றச் சரமஸ்லோகமென்கிறதோ வென்னில், அதன்று, சரமார்யத்தைச் சொல்லுகையாலே சரமமென்னில், (ஸக்ருதேவ) இத்யாதிகளிலும் சரமஸ்லோகத்வ ப்ரஸங்ஂமுண்டாம்; இங்கு, கர்மாதியுபாயங்களைச் சொல்லி அநந்தரமித்தைச் சொல்லுகையாலே இதுக்கவ்வருகொரு உபாயமில்லாதபடியான உபாய விசேஷத்தைச் சொல்லுகையாலே இத்தை சரமஸ்லோகமென் ருசார்யர்கள் சொல்லுவர்கள்.

(மா ஶுசஃ) என்று ஶோகநிவ்ருத்தியைச் சொல்லுகையாலே, ஶோகஹேது வுண்டாகவேணும். அதாவதென்னென்னில், கீழே (ஶோக ஸம்விக்நமாநஸஃ) என்றதுக்கு (மா ஶுசஃ) என்கிறதாய், ஏகவாக்ய மாகிறதல்ல; (நாநுஶோசந்தி பண்டிதாஃ) என்று துடங்கி ப்ரக்ருத்யாத்ம விவேகம் பண்ணிவித்தருளினபோதே அந்த தத்த்வவிஷய ஶோகம்போயிற்று. இனி கர்மாதியுபாயங்களைப்பற்றி ஶோகிக்க, அந்த ஹித விஷய ஶோகத்தைப் பற்றச்சொல்லுகிறதிங்கு. அதாகிறது, புருஷார்யாலாஹத்தாலும், உபாயமௌரவாதிஶயத்தாலும், நாமயிகாரிகளாய் இவ்வுபாயத்தை யநுஷ்டித்து இப்புருஷார்யம் பெறுகையென்பதொன்றில்லையென்றும், ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத நமக்கு ஸ்வாதந்த்ர்யமர்ஹமான உபாயங்களை யநுஷ்டிக்க ப்ராப்தியில்லையென்றும், ஶோகிக்க உபாயாந்தரவியாநம் பண்ணுகிறதென்றபடி. ஆகையாலே ப்ரபத்திக்கு இவ்வளவுபிறந்து ஶோகிதத‌வன் அயிகாரியென்கை. இவ்வளவு பிறவாதவனுக்கு இவ்வர்யஞ் சொல்லுகையாகிறது, பறிப்பான்கையில் சிற்றருவாள் கொடுக்குமோபாதியென்று திருக்கோட்டியூர் நம்பி யருளிச்செய்வர்.

(ஸர்வயர்மாந்) இத்யாதி. ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸாதிசோதிதமான நித்யநைமித்திக காம்ருபமான யர்மங்களையும் மோக்ஷோபயோகி யர்மங்களையும் ஸவாஸநமாக விட்டு என்னையே ஸஹாயாந்தர நிரபேக்ஷமான உபாயமாகப்பற்று. நானுன்னை ஶோகவிஷயமான ஸர்வ பாபத்தில் நின்றும் விடுவிப்பேன்; நீ ஶோகியாதே கொள்ளென்றபடி.

வேதங்கள் யர்மங்களைச் செய்யச்சொல்லாநிற்க விடச்சொல்லுகிறவிது வேதங்களெல்லாத்தோடும் விருத்யம்; ஆதலால் இதுக்கு,வேறொருபடி அர்யங்கொள்ளவேணுமென்று பார்த்து, விஹிதயர்மங்களை விட்டவனுக்கு ப்ராயஶ்சித்தமாக ஶரணாமதியை வியிக்கிறதென்றார்கள், அது கூடாது, எங்ஙனேயென்னில், ஶாஸ்த்ரவிரோயமில்லாமையாலே. அதாவது யாமம்பண்ணும்போது மற்றை ஸ்நாநஹோமாதி கர்மங்களை விலக்கினாப்போல ஶரணாமதிக்கங்ஂமாக மற்றை யர்மங்

களை விலக்குகைக்கு விரோயமில்லை, இவ்வியி மோக்ஷார்யமாதலால் ஸ்வர்கார்யமான வியிகளோடு விரோயமில்லை. அவற்றை இங்குவில க்காமையால் மோக்ஷார்யமான கர்மஜ்ஞாந ஹக்திகளோடும் விரோய மில்லை. அவையாதல் இதுவாத லென்கையாலும், அர்ஜுநன் முன்பு யர்மங்களை விட்டு நின்றுமொருவனல்லாமையாலும், அவனை நோக்கி ப்ராயஶ்சித்த வியியாகவுங்கூடாது

வேறேசிலர், யர்மஶப்தத்தாலே ஹலத்தைச் சொல்லுகிறதாக்கி யர்மத்தை யநுஷ்டியாநின்றே ஹலத்திலிச்சையை விடவே, அது மோக்ஷத்துக்கு ஸாயநமாமென்றார்கள்; அதுவுங்கூடாது யர்மஶப்தம் ஹலத்தைக்காட்டாமையாலும், ஶரணாகதிவியியோடு அதுக்கு ஸங்கதியில்லாமையாலும், ஶோகியாதே கொள்ளென்கிறவிது கூடாமை யாலும், [அதுவும் பொருளன்று,]

வேறேசிலர், யர்மத்திலயிகாரமில்லாத ஸ்த்ரீஶூத்ராதிகளுக்கு மோக்ஷோபாயமாக ஶரணாகதியை வியிக்கிறதென்றார்கள், அது வுங்கூடாது- அவர்களுக்கு யர்மப்ராப்தி யில்லாமையாலே த்யாகம் வியிக்கக்கூடாமையாலும், அர்ஜுநனை நோக்கி யருளிச் செய்கை யாலும் [அதுவுமர்யமன்று.]

வேறேசிலர் தேவதாந்தரங்களைச் சொல்லிகிறதாக்கி அவற்றை விட்டு எம்பெருமானையே ஆஶ்ரயிக்கை மோக்ஷோபாயமென்று ஐகாந்த்யம் வியிக்கிறதென்று சொன்னார்கள்; அதுவுங்கூடாது, யர் மஶப்தம் அப்படி ப்ரஸித்யமல்லாமையாலும், ஶரணாகதியாவது ஸமா ஶ்ரயணமாத்ரமல்லாமையாலும் [அதுவும் பொருளன்று.]

வேறேசிலர், ஶரணாகதியோடு விரோயித்த யர்மங்களை விட்டு ஶரணாகதியைப்பண்ண வடுக்குமென்று சொல்லுவர்கள்; அப்படி யாகில் "ஸர்வயர்மங்களையும்" என்னக்கூடாது. விரோயித்தவையை விடுகைக்கு ஒரு வியிவேண்டுவதில்லை, விரோயித்த யர்ம மென்கை க்கு ஒரு ஶப்தமுமில்லை. ஆதலாலதுவும் பொருளன்று,

வேறேசிலர், எல்லாயர்மங்களையும் விட்டாகிலும் ஶரணாகதி யைப் பண்ணுவானென்று ஶரணாகதியை ப்ரஶம்ஸிக்கிறது, யர்மத்யா கத்தில் தாத்பர்யமில்லையென்றார்கள்; அதுவும் பொருளன்று.

இப்படி இவ்வாக்யத்தில், [ஆகிலும்] என்கிற ஶப்தமில்லாமை யாலும், [ஶோகியாதே கொள்ளே]ன்கிற ஶப்தம் கூடாமையாலும். [இதுவும் பொருளாக மாட்டாது.]

வேறே சிலர் ஜ்ஞாநமே மோக்ஷஸாயநமாவது, அதுக்கு விரோயி கர்மம், ஆதலால் கர்மத்தை யெல்லாம் விட்டு ஆத்மஜ்ஞாநத்திலே யத் நம்பண்ண வடுக்குமென்று சொல்லுகிறதென்றார்கள்; அதுவும் கூடா து, கர்மமும் மோக்ஷஸாயநமென்று பலஶாஸ்த்ரங்களிலும் சொல்லு

கையாலும், (ஶரணம் வ்ரஜ) என்கிற ஶ்லோகம் ஆத்மஜ்ஞாநத்தைக் காட்டாமையாலும், மற்றிங்கு ஆத்மஜ்ஞாநத்தை விதிக்கிற தொரு ஶ்லோகமும் காணாமையாலும், ஆத்மஜ்ஞாநத்தாலே மோக்ஷம் பெருகிறவனை நோக்கி, நானுன்னை எல்லாபாபங்களி நின்றும் முக்தனாக்குகிறேனென்று எம்பெருமான் தானே மோக்ஷங்கொடுக்கிறானாகச் சொல்லுகிறசொல் கூடாமையாலும், [அதுவும் பொருளன்று.]

ஆகையாலிஶ்லோகத்தால் தோற்றுகிற பொருளொழிய மற்றுச் சொல்லுகிற பொருள்கள் பொருளல்ல வென்னுமிடம் * ப்ரஹ்மபுராணத்திலே தெளியச் சொல்லிற்று - (ஶரணம் த்வாம் ப்ரபந்நா யே த்யாநயோகவிவர்ஜிதா:, தேऽபி ம்ருத்யுமதிக்ரம்ய யாந்தி தத் வைஷ்ணவம் பதம்) என்று.

ஶரணாகதிமோக்ஷஸாதந மென்னுமிடம். ஶ்வேதாஶ்வதரோபநிஷத்திலும் சொல்லிற்று. (யோ ப்ரஹ்மாணம் விதயாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை) (தம் ஹ தேவமாத்மபுத்திப்ரஸாதம், முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே.) யாவனொருத்தன்பண்டு ப்ரஹ்மாவைப் படைத்தான், யாவனொருத்தன் அந்தப்ரஹ்மாவுக்கு வேதங்களைக் கொடுத்தான், அந்ததேவனை - என்புத்திக்குத் தேற்றத்தைப் பண்ணினவனை, மோக்ஷார்த்தியான நான் ஶரணம் புகுகிறேனென்றவாறு.

தைத்திரீயோபநிஷத்திலே, திருநாராயணத்திலே, இவ்வர்த்தஞ் சொல்லப்பட்டது. (ஸத்யம் தபோ தமஶ் ஶமோ தாநம் தர்ம: ப்ரஜநநமக்நயோऽக்நிஹோத்ரம் யஜ்ஞோ மாநஸம் ந்யாஸ:) என்று ஒன்றுக்கொன்று ஶ்ரேஷ்டமாகச் சொல்லி, மாநஸஶப்தத்தாலே ஆத்மஜ்ஞாநவைபவத்தைச்சொல்லி, எல்லாத்துக்கும் மேலாக ந்யாஸஶப்தத்தாலே ஶரணாகதியைச் சொல்லிற்று.

இவ்வர்த்தம் இதிஹாஸ புராணங்களிலே ஸுஸ்பஷ்டம்.

ஆகையாலே வேதவிருத்தமென்று ஶங்கிக்கைக்குபாயமில்லை.

இங்கே சிலர் இங்ஙனே சோத்யம்பண்ணினார்கள்; ஏதென்னில், தர்மங்களை யெல்லாம் த்யஜித்து ஶரணாகதியைப் பண்ணவே மோக்ஷம் பெறலாமாகில், அநேக ஜந்மங்கள் கூடிப்பண்ணவேண்டி ஒருக்கால் செய்து முடிக்கவொண்ணாத வருத்தங்களை யுடைத்தா யிருந்துள்ள மஹா தபஸ்ஸுக்களாலும், வைராக்யத்தாலும், இந்த்ரிய ஜயத்தாலும், யோகாப்யாஸத்தாலும் பிறந்த ப்ரஹ்மஜ்ஞாநத்தால் பெறவேண்டுவதாகச் சொல்லுகிற மோக்ஷஶாஸ்த்ரம் வேண்டாதொழியும்; அறவெளியதாக ஸாதிக்கலா மர்த்தத்தை வருந்தி ஸாதிப்பாருமில்லை; ஆதலால்

* ப்ரஹ்மாண்ட.

மோக்ஷோபாயமாகச் சொல்லுகிறது வஹ்வாயாஸ ஶாஸ்த்ர ஸங்நியா நத்திலே அல்பயத்நமாயிருக்கிற ஶரணாகதிஶாஸ்த்ரம் ஜீவியா தென்ரூர்கள்.

இதுக்குத்தரம், லோகத்தில், அர்யார்ஜநத்துக்கு ஸாயநமாக அல்பயத்நமான ரத்நவாணிஜ்யாதிகளும், மஹாயத்நமான க்ருஷ்யாதிகளும் உளவாகக்கண்டோம்; மஹாயத்நங்களுக்கு அல்பஃபலமாகவும் கண்டோம், அல்பயத்நங்களுக்கு மஹாஃபலமாகவுங் கண்டோம். இவ்விடத்தில் தந்தாம் பூர்வபுருஷர்கள் செய்து வரும்படிக்குத் தக்கபடியும், தந்தாம் ஸாமீயத்துக்குத்தக்க ருசிகளாலும், அல்பயத்நத்தாலே மஹாயத்நஃபலம் பெறுவர்கள் சிலர்.

இப்படியே வேதத்திலும், மஹாயத்நமான ஸத்ரயாகாதிகளாலும், தபஶ் சாந்தீ ராயணாதிகளாலும், பஶுபுத்த்ராதிகளான அல்பஃபலங்களைச் சிலர் கொள்ள சிலரவற்றினாலே யாதல் அதிஅல்பயத்நமான கர்மாதிகளாலே யாதல் மஹாஃபலமான மோக்ஷத்தைப்பெறுவர்கள்.

அப்படியே தந்தாம் ஸாமீயத்துக்குத்தக்க ருசிபேதங்களாலே, சிலர்க்கு ஶரணாகதியே உபாயமாகலாம், சிலர்க்கு யோகாதியாஸாதிகளே உபாயமாகலாம். அந்த ப்க்ருதிபேதங்களுக்குத்தக்க ருசிபேதங்கள் லோகத்திலே காண்பதும் செய்யாநின்றோம். ஶரணாகதிதானும் எல்லாருஞ் செய்யலாமத்தனை யெளிதாமோ வென்ன—; ஜந்மாந்தர ஸஞ்சித மஹாபுண்யங்களை யுடையரல்லாதார்க்கு இந்த ருசியும் மஹாவிஶ்வாஸமும் பிறக்கமாட்டாமையாலே எல்லார்க்கு மெளிதன்று.

ஶரணாகதிஸ்வரூபம் (ஆநுகூல்யஸ்ய ஸங்கல்பஃ ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம், ரக்ஷிஷ்ய தீதி விஶ்வாஸோ கோப்த்ருத்வவரணந் தயா, ஆத்மநிக்ஷேபகார்பண்யே ஷடீவியா ஶரணாகதிஃ.)

(ஆநுகூல்யஸ்யஸங்கல்பஃ) ஆநுகூல்யமென்றது ப்ரியத்வம், அதாவது - (ப்ரியோஹி ஜ்ஞாநிநோ த்யர்த மஹம் ஸச மம ப்ரியஃ) என்கிறபடியே அநந்யப்ரயோஜநனாகை.

(ப்ராதிகூல்யஸ்யவர்ஜநம்,) என்றது அதிப்ரவ்ருத்திவ்யவஸாய நிவ்ருத்தி.

(ரக்ஷிஷ்யதீதிவிஶ்வாஸஃ,) என்றது, த்ரிவியஶங்காரஹிதமான ஸமவதீ ஈணவத்தாய் யவஸாயம்

(கோப்த்ருத்வவரண)மாவது அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமான இஷ்டப்ராப்திக்கு அவ்யவஹிதோபாயமாக ஸ்வீகரிக்கை.

(ஆத்மநிக்ஷேப)மென்றது ரக்ஷ்யத்வேந ஸமர்ப்பிக்கை; அதாகிறது-ஆத்மாத்மீயமான நிகில ஹரஸமர்ப்பணம்.

(கார்ப்பண்ய)மாவது க்ருபாஜநக க்ருபணவ்ருத்தி நிரதத்வம்.

ஏவம்வியமான ஶரணாகதிதன்னையே ஶ்ருதி ஆத்மயாகமாக வர்ணித்தது.—(தஸ்யைவம் விதுஷோ யஜ்ஞஸ்யாத்மா யஜமாநஶ் ஶ்ரத்தா பத்நீ ஶரீரமித்மமுரோ வேதிர்லோமாநி பர்ஹிர்வேதஶ் ஶிகா ஹ்ருதயம் யூபஃ காமஆஜ்யம் மந்யுஃ பஶுஸ்தபோ அக்நிர் தமஶ்ஶமயிதா தக்ஷிணா வாக்கோதா ப்ராண உத்காதா சக்ஷுரத்வர்யுர்மநோ ப்ரஹ்மா ஶ்ரோத்ரமக்நீத் யாவத் த்ரியதே ஸா தீக்ஷா யதஶ்நாதி யத்பிபதி தத்ஸ்ய ஸோமபாநம் யத்ரமதே ததுபஸதோ யத்ஸஞ்சரத்யுபவிஶத் யுத்திஷ்டதேச ஸப்ரவர்க்யோ யந்முகம் ததாஹவநீயோ யதஸ்ய விஜ்ஞாநம் தஜ்ஜுஹோதி யத்ஸாயம் ப்ராதரத்தி தத்ஸமிதோ யத்ஸாயம் ப்ராதர்மத்யந்திநஞ்சதாநி ஸவநாநி யே அஹோராத்ரே தே தர்ஶபூர்ணமாஸௌ யே அர்தமாஸாஶ்ச மாஸாஶ்ச தே சாதுர்மாஸ்யாநி யருதவஸ்தே பஶுபந்தா யே ஸம்வத்ஸராஶ்ச பரிவத்ஸராஶ்ச தே ஹர்கணாஸ் ஸர்வவேதஸம் வா ஏதத்ஸத்ரம் யந்மரணந்ததவப்ருத ஏதத்வை ஜராமர்யமக்நிஹோத்ரம் ஸத்ரம் ய ஏவம் வித்வாநுதகயநே ப்ரமீயதே தேவாநாமேவ மஹிமாநங்கத்வாதித்யஸ்யஸாயுஜ்யங்கச்சத்யத யோ தக்ஷிணே ப்ரமீயதே பித்ருணாமேவ மஹிமாநங்கத்வா சந்த்ரமஸஸ்ஸாயுஜ்யங்கச்சத்யேதௌ வை ஸூர்யாசந்த்ரமஸோர்மஹிமாநௌ ப்ராஹ்மணோ வித்வாநபிஜயதி தஸ்மாத் ப்ரஹ்மணோ மஹிமாநமாப்நோதி தஸ்மாத்ப்ரஹ்மணோ மஹிமாநமித்யுபநிஷத்) என்றுகொண்டு ஶ்ருதி ஶரணாகதியை யொருயஜ்ஞமாக ஸங்கல்பித்து இதுக்குவேண்டு முறுப்புகளும் யஜமாநனும் பத்நியும் முதலாகவுள்ளவற்றை ஶரணாகதன்பக்கலிலே யுளவாகக் காட்டுகிறது. (யே அஹோராத்ரே) யென்றவிடமே தொடங்கி, (யந்மரணம்) என்கிறவிதுக்குக் கீழெல்லாம், ஶரணாகதிதன்னையே யெல்லா யாகங்களுமாகச் சொல்லுகிறது. (யந்மரணந்ததவப்ருதஃ) என்று ஶரணாகதியாகிற யாகத்துக்கு அவப்ருதமாக மரணத்தைச் சொல்லுகிறது. (யஏவம்வித்வாந்) என்கிறவிடந்துடங்கி, இவன் போம்வழியேபோனால், எம்பெருமானுடைய பெருமை யெல்லாத்தையும் அநுபவிக்குமென்கிறது. (தஸ்யைவம் விதுஷோயஜ்ஞஸ்ய) என்கிறவிதுக்குக் கீழில் ஓரிடத்தில் ந்யாஸமென்கிற பேரால் சொன்ன ஶரணாகதியை யறியும் வித்வானுடைய வேற்றமென்றபடி.

ஆக ஶரணாகதியாகிற யஜ்ஞத்துக் குறுப்புக்களிவை யென்றதாய்த்து.

(ஏதம்ஹவாவநதபதி, கிமஹம்ஸாதுநாகரவம், கிமஹம்பாபமகரவமிதி) ஶரணாகதி ஜ்ஞாநமுடைய புருஷனையே எந்தப்புண்யம் பண்ணதொழிகிறோமோ, எப்பாபம் பண்ணுகிறோமோவென்கிற பாதியிபீடியாது.

(தஸ்மாந்ந்யாஸமேஷாந் தபஸாமதிரிக்தமாஹுஃ) ஃ யாநபர்யந்தமான வெல்லாத் தபஸ்ஸுக்களிலும் ந்யாஸமதிரிக்தமென்றபடி. ந்யாஸமாவது, ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளிலே பண்ணப்பட்ட ஆத்மாத்மீய அகிலபர ஸமர்ப்பணம். ஆகையாலே ஸ்ரீமானான நாராயணனையே சரணமாகவுடைய ஸர்வயோகக்ஷேமாவஹனாக வநுஸந்தித்து, நிர்பரத்வாநுஸந்தாநம் ஸர்வதா பண்ணவேணும்.

ஸ்வநிர்பரத்வாநுஸந்தாந ப்ரீத்யுதயதியாலே பண்ணப்பட்ட ஸம்ப்ரதாயாதி வர்த்தநமுண்டாய்த்தாகிலும், முன்பு பகவதி பண்ணின விச்வாஸாதிசயத்தாலே தீருஷசித்தனுவானென்றுகொண்டு, ஆசார்யபரம்பராப்ராப்தமான ரஹஸ்யம். (இதந்தே நாதபஸ்காய நாபக்தாயகதாசந, நசாசுஸ்ரூஷவே வாச்யம் நசமாம்யோஷப்யஸூயதி) என்று இவ்வர்த்தம் சொன்னபடியே ரக்ஷித்த நுஷ்டித்து முடிக்கைக்கீடான தாதீய மில்லாதார்க்கும், குருவானவன் பக்கலிலே பக்தராய் இராதார்க்கும், உனக்கு சுச்ரூஷை பண்ணாதார்க்கும், சொல்ல வேண்டா; என்பக்கலிலே அஸூயையைப் பண்ணுவார்க்குஞ் சொல்ல வேண்டா வென்கிறது. (ய இதம்பரமம் குஹ்யம் மத்பக்தேஷ்வபியாஸ்யதி, பக்திம் மயி பராம் க்ருத்வா மாமேவைஷ்யத்யஸம்சயஃ) என்று இப்பரம குஹ்யமான வர்த்தத்தை யென்பக்தர்பக்கலிலே யாவனொருத்தன் சொல்லுகிறான், அவன் அதுவேகாரணமாகத் தானுமென்பக்கலில் பரமபக்தியையுடையனாய் ஒரு ஸம்சயமின்றியே யென்னையே வந்தடையுமென் றிவ்வர்த்தஞ் சொல்லுகைக்கு, ஆகாத விஷயத்தையும், யோக்யபாத்ரத்திலே சொன்னாலுண்டான நன்மையையும், சொல்லிற்று.

திருமந்த்ர முகத்தாலே ஸ்வரூபஜ்ஞாநத்தை யுடையராய், ஸ்வரூபாநுரூபபுருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்திலே ருசியுடையராய், விடப்பட்ட கர்மஜ்ஞாநபக்தியோகத்தையு முடையராய் ஆநுகூல்யமாத்ரமுடையரான ஜந்துக்களைப்பார்த்து பரமகாருணிகனான ஸர்வேச்வரன் தானே, பாண்டுபுத்ரவ்யாஜத்தாலே சதுர்த்யோபாயத்தை வெளியிட்டது, சரமச்லோகமாகிறது.

[ச்லோகவைபவ ரூபாவதாரிகை முற்றிற்று.]

[ப்ரதிபதவ்யாக்யாநாரம்பம்.]

(க) (ஸர்வதர்மாநி)த்யாதி. இச்லோகத்துக்கு க்ரியாபதம் (மாசுசஃ) என்கிறதாகையாலே, சோகநிவ்ருத்தி சொல்லுகையிலே தாத்பர்யம். இந்தச்லோகந்தான் ப்ரபத்திவிதாயகவாக்யமாகையாலே, இந்த சோகமும் ப்ரபத்திக்குபயுக்தமாகிறது. எங்ஙனேயென்னில், இப்ப்ரபத்திக்கதிகாரமும், பலமும் சொல்லவேண்டுகையாலே சோகமதிகாரமென்றும், சோகநிவ்ருத்தி பலமென்றுஞ் சொல்லுகிறது.

இதில், பூர்வார்யத்தாலே அயிகாரிக்ருத்யஞ் சொல்லுகிறது; உத்தரார்யத்தாலே ஈஸ்வரக்ருத்யத்தையும், அயிகாரிக்ருத்ய ஶேஷத்தையுஞ் சொல்லுகிறது.

அயிகாரிக்ருத்யமாவது, இதரோபாய த்யாமபூர்வகமான ஸிதீயோபாயஸ்வீகாரம். ஈஸ்வரக்ருத்யமாவது, இப்படி ஸ்வீக்ருதோபாயனுக்கு அநிஷ்டநிவ்ருத்திபூர்வகமான இஷ்டப்ராப்தியைப் பண்ணிக்கொடுக்கை. அயிகாரிக்ருத்யஶேஷமாவது, ஸ்வீக்ருதோபாயனுன பின்பு யாவத்ப்ராப்தியளவும் நிஸ்ஸம்ஶயனுமாய் நிர்ஹரனுமாய் அதஎவ ஹ்ருஷ்டமாநஸனுமாயிருக்கை. (வ்ரஜ)என்கிற வியியோபாதி (மாஶுசஃ) என்கிறதும் வியியாகையாலே, ஸ்வீகரியாதவனுக்கு உபாய ஸிதீயியில்லாதவோபாதி, ஸ்வீகரித்தபின்பு நிர்ஹரனுயிராதவனுக்கும் ஹலஸிதீயியில்லை யென்கை. இத்தைப்பற்றவிறே "த்யாமம் மேலிட்டு நரகம் வஸ்தவ்யமூமியாதல், ஸ்வீகரித்த உபாயம் மேலிட்டுப் பரமபதமென் சிறுமுறியாதல் ஆம்படி காணேன் அயிகாரமிருப்பது" என்று நஞ்ஜீயரருளிச்செய்தது.

ஸிதீயோபாய ஸ்வீகாரத்துக் கிதரோபாயத்யாமமங்மமாகையாலே த்யாமவிஷயமான யர்மங்களைச் சொல்லுகிறது- (ஸர்வயமாந்) என்கிறவித்தாலே.

யர்மமாவது, (சோதநாலக்ஷணோஉர்யோ யர்மஃ) என்கிறபடியே, ஶாஸ்த்ரங்களிலே நித்யநைமித்திககாம்யரூபமாய் அநுஷ்டேயதயா விஹிதமானது. அதுதான் வர்ணாஶ்ரம விஹிதயர்மமென்றும், ப்ரவ்ருத்தி யர்மமென்றும் நிவ்ருத்தியர்மமென்றும் ஸிதீயயர்மென்றும் நாலுவகைப்பட்டிருக்கும்.

(க) வர்ணாஶ்ரமவிஹிதயர்மமாவது, (க்ரியமாணம் நகஸ்மைசிதீய உர்யாய ப்ரகல்பதே, அக்ரியாவநர்யாய தத்து கர்ம ஸமாசரேத், ஏஷா ஸா வைதிகீ நிஷ்஠ா ஹ்யுபாயாபாயமயீ யமா) என்கிறபடியே பண்ணினல் ப்ரயோஜனமின்றிக்கே, பண்ணுதபோது அநர்யத்தின் பொருட்டாயிருக்குமது.

(உ) (ஶ்ருணுயீவம் பரமங் கர்ம திவியங் தநிஹோச்யதே,ஏகம் ப்ரவர்த்கம்ப்ரோக்தங் நிவர்த்தகமதஃபரம், ப்ரவர்த்தகஞ்ச ஸ்வர்மாதிஹலஸாயநமுச்யதே, நிவர்த்தகாவீயங் ஷேவர்ஷே விஜ்ஞேயம் மோக்ஷஸாயநம்) என்கிறபடியே, ப்ரவ்ருத்தி யர்மமாவது, ஸ்வர்மாதிஹலஸாயநமான ஜ்யோதிஷ்டோமாதிகள்.

(௩) நிவ்ருத்தியர்மமாவது,மோக்ஷஸாயநமான கர்மயோமாதிகள்.

(௪)ஸிதீயயர்மமாவது, (யேசவேதவிதோவிப்ராயேசாயீயாத்மவிதோஜநாஃ,தேவதந்தி மஹாத்மாநங் க்ருஷ்ணங் யர்மம் ஸநாதநம்)என்கிற பரமயர்மஸ்வீகாரம். (ந்யாஸ இதி ப்ரஹ்மா) (ந்யாஸஇத்யாஹுர்

மநீஷிணோ ஸ்ரஹ்மாணம்) என்று ஸ்வீகாரத்தி லுபாயத்வப்ரஸங்மமில் லாமையாலே, ஸ்வீகாரத்தையும் ஸ்வீகார்யனுகச் சொல்லக் கடவது.

இவ்விடத்தில் மோக்ஷோபாய ப்ரகரணமாகையாலே, ஸ்வர்மாதிஃபலஸாயநமான ஜ்யோதிஷ்டோம மல்லவென்னுமிடம் ஸிஂயம். மேலே ஸிஂயயர்மம் ஸ்வீகார்யமாகச் சொல்லுகையாலே அதுவுமன்று. இனி இவ்விடத்தில் மோக்ஷோபாயமாய், வர்ணாஶ்ரமயர்மங்களை இதில் கர்தவ்யமாக உடைத்தாய் ஸாயஂயமா யிருந்துள்ள நிவ்ருத்தியர்மங்களைச் சொல்லுகிறது. இதுதான் யர்மமும் வஹுவசநமும் ஸர்வஶஂஉமுமாய் த்ரிவியமாயிருக்கும். யர்மஶஂஉத்தாலே மொக்ஷத்துக்கவ்யவஹித ஸாயநத்தைச் சொல்லுகிறது. அதாகிறது, (ஃக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவஂவிமோऽர்ஜுந) (மஂஃக்திஂலஃதேபராம்) என்று சொல்லுகிற பரமஃக்தி. வஹுவசநத்தாலே அங்மஸாயநங்களைச் சொல்லுகிறது. அதாகிறது (ஜ்ஞாநே பரிஸமாப்யதே) என்றும் (கர்மணைவ ஹி ஸஂஸிஂயிமாஸ்யிதா ஜநகாஉயஃ) என்றும் சொல்லுகிற கர்மஜ்ஞாநங்களும், (ஜந்மகர்மச மே திவ்யம் ஏவஂ யோவேத்தி தத்த்வதஃ, த்யக்த்வா ஞெஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந) என்றும் சொல்லுகிற வவதாரரஹஸ்யஜ்ஞாநமும், (ஏதஂவுஂயிவா வுஂயிமாந் ஸ்யாத் க்ருதக்ருத்யஶ்ச ஃாரத) என்றுசொல்லுகிற புருஷோத்தம விஂயையும் (ஞேஶோऽயஂ ஸர்வகாமயுக்) என்று சொல்லுகிற க்ஷேத்ரவாஸமும், (யாதி ஸ்ரஹ்ம ஸநாதநம்) என்று சொல்லுகிற திருநாமஸங்கீர்த்தநமும். இவைதன்னை *ஃமவத் ப்ரஃாவத்தாலே ஸ்வதந்த்ரோபாய மென்றுஞ் சொல்லுவர்கள். இவைதான் அங்மஸாயநமா யிருக்கச்செய்தே யர்மஶஂஉத்தாலே சொல்லுகிறது, இவைதானும் தனித்தனியே ஃலஸாயநங்களா யிருக்கையாலே. சேதநஃேஉத்தோபாதியும் போருமிறே, ருசிஃேஉத்தாலேஉபாயஃேஉமும். (நெறியெல்லா மெடுத்துரைத்த) வென்னக்கடவதிறே. ஸர்வஶஂஉத்தாலே ஆஶ்ரமங்கள் ஃேஉித்தாலும் ஃேஉியாத ஸந்யாவந்உநபஞ்சமஹாயஞ்ஜமுள்ளிட்ட யர்மங்களும், லோகஸங்ஂரஹதயா கர்த்தவ்யமான ஶ்ரேஷ்ஂஸமாசாரமும், பரார்யமாக புத்ராஉிகளைக் குறித்தநுஷ்டிக்கும் புஂஸவநாஉிகர்மங்களையுஞ் சொல்லுகிறது. ஆக ஸர்வஶஂஉத்தாலே ப்ரத்யவாய பரிஹாரமுமாய் யோஂயதாபாஉகங்களுமாயிருந்துள்ள யர்மவிஶேஷங்களைச் சொல்லுகிறது. யர்மத்யாமத்தைச் சொன்னபோது யோஂயதாபாஉகங்களுமா யிருந்துள்ள யர்மவிஶேஷங்களைச் சொல்லுகிறது.

ஸர்வஶஂஉத்துக்கு ஸாகல்யம் பொருளானாலோ என்னில், வஹுவசநத்திலே உபாயங்களையடையச் சொல்லுகையாலும், ஸர்வஶஂஉத்துக்கு வேறேவிஷயமுண்டாகையாலும் ஸாகல்யவாசியன்று. ஆனால் (ஸாய யாஃாவே மஹாவாஹோ ஸாயநைஃ கிம் ப்ரயோஜநம்) என்

* ஃமவத்ப்ரஸாஉகத்வத்தாலே யென்றும் பாமம்.

று "யோதீயதாபாஷகயர்மங்களை யொழிய ஷலஸாயநங்களுக்கு உஷ யமின்றியிலே யிருக்கையாலே யர்மத்யாகத்தைச்சொன்னபோதே யோதீயதாபாஷகயர்மம் உஎரதோ நிரஸ்தமன்றோ; இதினுடைய த்யாக மிப்போது சொல்லவேணுமோ" என்னில்;—(ஸந்யீயாஹீநோஉஸஃசிர் நித்ய மநர்ஹஸ் ஸர்வகர்மஸு) என்று ஸந்யீயாஹீநனான வஸஃசிக்கு, ஒரு கர்மத்திலு மயிகாரமில்லை யென்கையாலே, இவ்வுபாயத்துக் கிப்படியிருப்பதொரு நிர்வந்யமுண்டோ வென்னில், இவ்வுபாயத்திக் கிப்படியிருப்பதொரு யோதீயதாஸாபேக்ஷதை யில்லாமையாலே விஶேஷித்து உபாதாநம் பண்ணுகிற உபாயத்துக்கு உபயுக்தமன்றாகிலும் (விஹிதத்வாச்சாஶ்ரமகர்மாபி) என்கிறபடியே விஹிதத்வேநாநுஷ்டேயமானலோவென்னில், யஜ்ஞத்திலே தீக்ஷித்தவனுக்கு விஹிதாஂஶமும் த்யாஜ்யமான வோபாதி, இங்கு (ஸர்வயர்மாந்பரித்யஜ்ய) என்கையாலே விஹிதாஂஶமும் த்யாஜ்யம்.

இனி யிவ்வுபாயத்துக்கு அயிகாரம் அஶக்தியும் அப்ராப்தியும் விலம்பாஸஹத்வமும். (இதஂ ஶரணமஜ்ஞாநாமிதமேவ விஜாநதாம், இதஂ திதீர்ஷதாம் பார மிதமாநந்த்யமிச்சதாம்) (அவித்யாதோ தேவேபரிவ்ருடதயா வா விதிதயா ஸ்வஹக்தேர்ஹும்நா வா ஜமதி மதிமந்யாமவிதஃஷாம், மதிர் மம்யஶ்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ ரஹஸ்யஂ வ்யாஜஹ்ரே ஸ வது ஹமவாஞ் ஶௌநகமுநிஃ)· இப்படியன்றாகிலிதுவும் அயிக்ருதாயிகாரமாமிறே.

ஆக இத்தால் த்யாஜ்யஸ்வரூபஞ் சொல்லிற்று.

த்யாஜ்யமான யர்மந்தான் (இதஂகுரு. இதம்மாகார்ஷீஃ) என்று வியிநிஷேயாத்மகமாயிருக்கும். விஹிதாநுஷ்டாநத்தோபாதி நிஷித்யபரிஹாரமும் த்யாஜ்யமானபோது அடைத்த கதவைத் திறந்தால் நிஹீநபதார்யங்கள் புகுருமாபோலே நிஷித்யப்ரவ்ருத்தி யுண்டாகாதோ வென்னில், ஸ்வீகார்யமான வுபாயம், ஒன்றையும் ஸஹியாது. ஶாஸ்த்ரஸித்யமான யர்மம் த்யாஜ்யமாவது ஸ்வீகார்யமானவுபாயம் ஒன்றையும் பொறுமையாலேயிறே, பொறுப்பது நிவ்ருத்தியையிறே. இதுவும் நிவ்ருத்யந்தர்கதமாகிலும் ப்ரவ்ருத்தி ரூபமாயிருக்கையாலே உபாயம் ஸஹாயாந்தர ஸஹமல்லாமையாலும் நிஷித்யாநுஷ்டாந மிவனுக்கு கர்தவ்யமன்று. நிஷித்யாநுஷ்டாநம் ஈஶ்வரஹ்ருதயத்துக்கு நிக்ரஹமாகையாலும் இவனுக்கீஶ்வரனை அதிஶயிப் பிக்கை ஸ்வரூபமாகையாலும் இவனுக்கவை யநுஷ்டேயமன்று. ப்ராப்ய மிவனுக்கவனுடைய ப்ரீதியேயா யிருக்கையாலே இவ்வாகாரத்தாலும் அவை அநுஷ்டேயமன்று. ஆகையால், உபாயத்தைப் பார்த்தாலுமாகாது, ஸ்வரூபத்தைப் பார்த்தாலுமாகாது, புருஷார்யத்தைப் பார்த்தாலு மாகாது.

ஆனால் ஸர்வ ப்ரகாரத்தாலு மிவனுக்கு த்யாஜ்யமா யிருக்குமாகில் நிஷித்ய பரிஹாரத்தை யர்மஶ்லோகத்திலே ப்ரஸங்கிக்கிறதற்கு ப்ர

யோஜந மென்னென்னில், இவனுக்கு விஹிதமா யிருப்பதொன் றில்லாமையாலே, அவஶமாகப் புகுந்தாலும் இவனுக்கவை பந்தகமாக மாட்டாது என்னு மாகாரந் தோற்றுகைக்காகச் சொல்லுகிறது. அதவா மோக்ஷோபாயத்வேந விதிநிஷேதாத்மகமான, ஸகல தர்மத்தையுஞ் சொல்லுகிறதென்று சொல்லுவர்கள். ஆகையாலே நரகபதநஹேதுவாய், ஸகல ஜந்துக்களுக்கும் த்யாஜ்யமுமாய் புத்தி பூர்வகமுமாயிருந்துள்ள பாகவதாபசாராதிகளும் ப்ரஹ்ம ஹத்யாதிகளும், பரிஹரணீயமென்றதாய்த்து.

ஶரணாகதிப்ரபாவத்தாலே அவை பந்தகமின்றியிலே யொழிந்தாலும் ஶரணாகதனுக்கிவை கர்தவ்யமன்றென்னுமிடம் சொல்லித்தாய்த்து.

(2) (பரித்யஜ்ய), த்யாகப்ரகாரத்தைச் சொல்லுகிறது. இதுவும், த்யாகமும் ல்யப்பும் உபஸர்கமுமாய் மூன்று ப்ரகாரத்தோடே கூடியிருக்கும். இங்குச் சொலுகிற த்யாகம் ஸ்வரூபேண த்யாகத்தைச் சொல்லுகிறதோ, உபாயபுத்தியா த்யாகத்தைச் சொல்லுகிறதோ, பலத்யாகத்தைச் சொல்லுகிறதோ வென்னில், (மா பலேஷு கதாசந) என்று கீழ் பலத்யாகத்தைச் சொல்லுகையாலே கேவல மதுவுமாகமாட்டாது. இனி உபாய புத்தியித்யாகமாதல் ஸ்வரூபத்யாகமாதலாகக் கடவது. உபாயபுத்தியித்யாக மென்றபோது, நிஜகர்மாதி பக்த்யந்தம் அவஶ்யமநுஷ்டேயமாய்விடும். இப்படி யநுஷ்டேயமாம் பக்ஷத்தில் ப்ரபத்தி ஸ்வதந்த்ரோபாய மாகமாட்டாது. ஆகையாலிவை ஸ்வரூபேண த்யாஜ்ய மாகக்கடவது.

இனி யிவற்றில் நம்மாசார்யர்கள் அநுஷ்டிக்கிறவை, ஶிஷ்யபுத்ரர்களுடைய உஜ்ஜீவநார்த்தமாக வாத்ஸல்யத்தாலே அநுஷ்டிக்கிறார்களித்தனை. இப்படி யநுஷ்டியாதபோது, பகவத்விபூதிபூதரான சேதநர்க்கு நாஶஹேது வாகையாலே ஈஶ்வரனுக்கநபிமதரராவர். ஆகையாலே, யாதோரளவாலே லோகஸங்க்ரஹம் பிறக்கும்; யாதோரளவாலே ஶிஷ்யபுத்ரர்களுக்குஜ்ஜீவநமுண்டாம், அவ்வளவு மநுஷ்டேயமென்ற தாய்த்து. ப்ரவ்ருத்திதர்மந்தானே, அபிஸந்திபேதத்தாலே நிவ்ருத்தி தர்மமானவோபாதி, நிவ்ருத்திதர்மமும் ப்ராப்யதர்மமாகக்கடவது. இவ்விடத்தில் வர்ணாஶ்ரமதர்மம், லோகஸங்க்ரஹதயா அநுஷ்டேயமாயிருக்கும். வைஷ்ணவதர்மம் ப்ராப்யதயா வநுஷ்டேயதமமாயிருக்கும். இவ்விடத்தில் அகரணே ப்ரத்யவாயமும் எம்பெருமானுடைய வநபிமதத்வமும் தன்னுடைய புருஷார்த்த ஹாநியுமாகக்கடவது.

ஆகையாலே (விஹிதத்வாச்சாஶ்ரமகர்மாபி) (ஸஹகாரித்வேந ச) என்கிற உபயப்ரகாரத்தாலும் அநுஷ்டிக்கிறார்களல்லர்.

பரிஶப்தத்தாலே த்யாகத்தின் மிகுதியைச் சொல்லுகிறது. இப்பரிஶப்தம் (பரி ஸாகல்யே) என்று ஸகலத்தையும் விடச்சொல்லுகிறதானாலோவென்னில், அது ஸர்வஶப்தத்தில் உக்தமாகையாலே, இவ்விடத்தில் வேறே அர்த்தமாகவேணும். அதாவது, ஸவாஸந த்யாகத்தைச் சொல்லுகிறது. ஸவாஸநமாகவிடுகையாவது, 'ஶுக்திகையிலே ரஜதபிரமம்போலே அநுபாயங்களிலே உபாய புத்தியிபண்ணினோமாகாதே' என்று கொண்டு லஜ்ஜாபுரஸ்ஸரமாக விடுகை. இப்படி விடுகைக்கு ஹேது, ஸ்வரூபத்தினுடைய பரமவத்பாரதந்த்ர்யாநுஸந்தானத்தாலே, ஸ்வரக்ஷணத்தில் தனக்குப் பிறந்த அநந்வயம். ஸ்வரூபத்தில், தன்னோடும் பிறரோடும் ப்ராப்தியுண்டாமன்றாய்த்து, தானும் பிறரும் ரக்ஷகராகைக்கு ப்ராப்தியுள்ளது. இனி, ஸ்வரக்ஷணத்தி விழிகையாவது, தாய் முலைப்பாலுக்குக்கூலி கேட்குமாபோலே, தன்னுடைய ஶேஷத்வத்தையுமழித்து அவனுடைய ஶேஷித்வத்தையுமழிக்கை. உபாயங்களை விடுகையாகிறது, இவை நமக்குபாயமன்றென்கிற நைராஶ்யம். நைராஶ்யத்துக்கு ஹேது, அஶக்தியும், அப்ராப்தியும்.

(த்யஜ்ய) என்கிற ல்யப்பாலே, (ஸ்நாத்வா புஞ்ஜீத) என்கிறபடியே, உபாய ஸ்வீகாரத்துக்கு உபாயாந்தரத்யாகத்தினுடைய அங்கத்வஞ் சொல்லுகிறது. யாகத்திலிழியுமவனுக்கு தத்விபரீதஸர்வதர்மத்யாக மங்கமாகிறாப்போலே யிதுவுமாத்ம யாகமாகையாலே தத்விபரீத ஸர்வதர்மத்யாகமங்கமாகக்கடவதென்று முன்பே சொல்லிற்று. இத்தால் ஶாஸ்த்ரவையர்த்யமும் பரிஹரிக்கப்பட்டது.

விட்டே பற்றவேணுமாகில் ஸர்வாதிகாரத்வபங்கம் வாராதோவென்னில், அஶக்தனுமாய் அயோக்யனுமானவன் ஸ்வரூபஜ்ஞாந வைஶத்யத்தாலே விட்டுப் பற்றக்கடவன். அல்லாதவர்களும் உக்தலக்ஷணத்தாலே அஶக்தராயிருக்கு மத்தனைபோக்கி ஸர்வத்திலுமஶக்தராயிருப்பாரொருத்தருமில்லையே. அவர்களும் விஶ்வஸவிலம்பாஸஹயமுடையராகில், யதாயோக்யம் விட்டுப் பற்றக்கடவர்கள். ஆகையாலே ஸர்வாதிகாரபங்கம் வாராது. இப்படி கொள்ளாதே ஸர்வோபாயஶூந்யனுக்கிது உபாயமென்னும் பக்ஷத்தில், ஸர்வோபாய ஶூந்யராயிருப்பாரொருத்தருமில்லை யாகையாலே, அந்தபக்ஷத்துக்கு மிந்த தூஷணம் வரும். ஆகையாலே, த்யாகம் அங்கமென்கிறவிது, உபபந்நம்.

ஆக இத்தால் த்யாகப்ரகாரஞ் சொல்லிற்று.

இவ்விடத்திலே பிள்ளைபருளிச்செய்து போருவது ஒருவார்த்தையுண்டு. அதாவது, "பதர்க்கூட்டை விட்டுப் பர்வதத்தை அண்டைகொள்வாரைப்போலே பற்று என்கிறான்" என்று. அது எங்ஙனேயென்னில், அவை ஸாத்யங்களாகையாலும், பலவாகையாலும். அசேதநங்க

ளாகையாலும், பதர்க் கூட்டிறே. இவன் விதியஸ்வரூபனுகையாலும், ஒருவனுகையாலும் பரமசேதந னுகையாலும் பர்வதம்.

(ங) அநந்தரம், பற்றும் விஷயத்தையும், பற்றும் ப்ரகாரத்தையுஞ் சொல்லுகிறது. (மாம்) என்று, ஸ்வீகார்யமான உபாயத்தைச் சொல்லுகிறது. உபாயமாவது, இஷ்டப்ராப்த்யநிஷ்டநிவ்ருத்தி ஸாயநமாயிருக்கையாலே, இஷ்டப்ராப்த்யநிஷ்டநிவ்ருத்த்யுபயோகியான பரத்வ ஸௌலப்யங்கள், (மாம்) என்கிறபதத்திலே விவக்ஷிதம்.

எங்ஙனேயென்னில், (ஏஷ நாராயணஸ் ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:, நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்) என்கிறபடியே, (மாம்) என்கிறவன் ஸ்ரீமானுமாய் நாராயணனுமா யிருக்கையாலே.

ஸ்ரியப்பதித்வ நாராயணத்வங்கள் பரத்வஸௌலப்யஹேதுவாகிறபடி யெங்ஙனே என்னில், ஸ்ரீயாகிறாள்,—ஸர்வருடையவும் ஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்தி ஸித்தியர்யமாக ஆஸ்ரயணீயையா யிருக்கையாலே. "இவளுக்குப் பதி" என்கையாலே, பரத்வம் சொல்லிற்று. (ஸ்ரத்தயா தேவோ தேவத்வமஸ் நுதே), (அப்ரமேய•ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா) (திருவுடையடிகள்)(திருமகளார் தனிக்கேள்வன் பெருமையுடையபிரான்) என்னக்கடவதிறே. ஸ்ரீயாகிறாள் ஜகந்மாதாவாயிருக்கையாலே. "இவளுக்குப் பதி" என்கையாலே ஸௌலப்யஞ் சொல்லிற்று. (மாயவோ ஹக்தவத்ஸல:) (கோலமலர்ப்பாவைக்கன்பாகிய வென்னன்பேயோ) என்றும் நாராயணஸப்தத்துக்கர்யம் ஜகத்காரணத்வமும் ஜகதந்தராத்மத்வமு மாகையாலே, ஜகத்காரணத்வப்ரயுக்தமான பரத்வமும், ஜகதந்தராத்மத்வ ப்ரயுக்தமான ஸௌலப்யமும் சொல்லப்பட்டது.

ஆக, (மாம்) என்று, "ஸ்ரீமானுமாய் நாராயணனுமாயிருந்த வென்னை" என்றபடி. இத்தாலநுஸந்தாந வாக்யத்தில் ஸ்ரீமச்சப்தத்தையும் நாராயண ஸப்தத்தையும் ஸ்மரிப்பிக்கிறது. இதுக்கு ஹேது விதியநுஷ்டாநங்களிரண்டும் ஏகார்யமாக வேண்டுகையாலே. ஆக,இத்தால் ஸ்ரீமந்நாராயணனே ஸரண்யனென்றதாய்த்து. நாராயணஸப்தந்தானே அவனைப் பரிபூர்ணனாகக் காட்டச்செய்தே ஸ்ரீமச்சப்தத்தாலே விஸேஷித்தது,இவர்கள் அஞ்சாதே சென்று ஆஸ்ரயிக்க வல்லராகைக்கும், அவனிவர்களைத் தன்பேறாக ரக்ஷிக்கைக்கும்உறுப்பாகச்சொல்லுகிறது. ஆனால் ஸ்ரீமச்சப்தந்தானே, அவனைப் பரிபூர்ணனாகக் காட்டச்செய்தே, நாராயணஸப்தத்தாலே விஸேஷிக்கிறது, பிராட்டியை விடிலும் நிலமங்கை கைவிடிலும் கைவிடாதஸ்வபாவனென்னுமிடமும், அந்யநிரபேக்ஷமாக ஸரணாகதபரிபாலநம் பண்ணவல்லனென்னுமிடமுஞ் சொல்லுகிறது. ஆகையால் இவ்விஸிஷ்டவேஷத்திலாஸ்ரயித்தாலாய்த்து

ஃலஸிதி யியுள்ளது. பிரிவிலாஶ்ரயிக்கையாவது, தேவதாந்தர ஸமாஶ்ர யணதுல்யமாம்.

"அன்று உன்முவங்காணில் முடிவேன்" என்கையாலே முவந் தோன்றாமல் நடத்தினேன்; இன்று, "உன் முவங்காணுவிடில் முடிவேன்" என்கையாலே "முவம் தோற்றநின்று நடத்தினேன்" என்று, தன் வ்யாபாராதிகளைக் காட்டுகிறான். அதாகிறது, "என்கையில் மடல் உன்கையிலே வரும்படியாகவும்,என் தலையில் முடி உன் தலையிலே வரும்படியாகவும் வேணுமென்றாசைப்பட்டு, உன்காலென்தலையிலே படும்படி தாழநின்றேன்" என்று தன்ஸௌலப்யத்தைக் காட்டுகிறான் (மாம்) என்று. "நீ ஶப்தாதிவிஷயங்களிலே மண்டித்திரிகையாலே யுன்னுடம்பில் புகரைப்பாராய், உன்னை விநியோகங்கொள்ளப் பெறாமையாலே உடம்பு வெளுத்திருக்கிற வென்னைப்பாராய்" என்று தன் வ்யாமோஹகுணத்தை சட்டையவிழ்த்துவிட்டுக் காட்டுகிறான் என்றதாய்த்து.

